श्री सुब्रह्मण्य भुजङ्ग स्तोत्रम्
अनुवाद सहितम्

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்ரம்
தமிழில் பொருளுடன்

பொருளடக்கம்

1) ஸுப்ரமண்ய புஜங்கம் – முதல் ஸ்லோகம் – முருகனை துதிக்க கணபதியே காப்பு 4
2) ஸுப்ரமண்ய புஜங்கம் – இரண்டாவது ஸ்லோகம் – அறுமுக குமர சரணம் என அருள்பாடி 10
3) ஸுப்ரமண்ய புஜங்கம் – மூன்றாவது ஸ்லோகம் – வேதப் பொருளாக விளங்கும் முருகன் 17
4) ஸுப்ரமண்ய புஜங்கம் – நான்காவது ஸ்லோகம் – முக்தி தரும் முருக தரிசனம் 24
5) ஸுப்ரமண்ய புஜங்கம் – ஐந்தாவது ஸ்லோகம் – முருக தரிசனம் மனக் கவலைகளை போக்கும் 30
6) ஸுப்ரமண்ய புஜங்கம் – ஆறாவது ஸ்லோகம் – சரவணபவ எனும் திருமந்திரம் 35
7) ஸுப்ரமண்ய புஜங்கம் – எழாவது ஸ்லோகம் – ஏகமக்ஷரம் ஹ்ருதி நிரந்தரம் பாஸதே ஸ்வயம் லிக்யதே கதம் 40
8) ஸுப்ரமண்ய புஜங்கம் – எட்டாவது ஸ்லோகம் – பள்ளியறை தரிசனம் 47
9) ஸுப்ரமண்ய புஜங்கம் – ஒன்பதாவது ஸ்லோகம் – உனதாள் அணியார் அரவிந்தம் 52
10) ஸுப்ரமண்ய புஜங்கம் – பத்தாவது ஸ்லோகம் – மனதுக்குகந்தது முருகனின் ரூபம் 58
11) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினொன்றாவது ஸ்லோகம் – வள்ளியம்மை நாயகனே வா வா வா 62
12) ஸுப்ரமண்ய புஜங்கம் – பன்னிரண்டாவது ஸ்லோகம் – வீர மாது மருவிய ஈராறு தோளும் 68
13) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதிமூன்றாவது ஸ்லோகம் – ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும் 73
14) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினான்காவது ஸ்லோகம் – இருபதமுமறுமுகமும் யானோத ஞானமதை அருள்வாயே 77

15) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினைந்தாவது ஸ்லோகம் – அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே 84

16) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினாறாவது ஸ்லோகம் – கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே 89

17) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினேழாவது ஸ்லோகம் – முருகா! எனது முன் ஓடி வரவேணும்! 95

18) ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினெட்டாவது ஸ்லோகம் – மகதேவர் மனமகிழவேயணைந்து ஒருபுறமதாக வந்த மலைமகள் குமார 100

19) ஸுப்ரமண்ய புஜங்கம் – பத்தொன்பதாவது ஸ்லோகம் – முருக நாம ஜபத்தால் மனமும் இந்த்ரியங்களும் அடங்கும் 108

20) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபதாவது ஸ்லோகம் – கணத்தில் என் பயமற மயில் முதுகினில் வருவாயே 114

21) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஒன்றாவது ஸ்லோகம் – உயிர் மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை வரவேணும் 121

22) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி இரண்டாவது ஸ்லோகம் – நின் ஞான சிவமான பதம் அருள்வாயே 126

23) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி மூன்றாவது ஸ்லோகம் – முருக பக்தியே மனக்கவலைக்கு மருந்து 133

24) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி நான்காவது ஸ்லோகம் – மனக்கவலை ஏதுமின்றி உனக்கடிமையே புரிந்து 138

25) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஐந்தாவது ஸ்லோகம் – நோய்கள் எனை நலியாதபடி உன தாள்கள் அருள்வாயே 145

26) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஆறாவது ஸ்லோகம் – தலையே நீ வணங்காய் 149

27) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி எழாவது ஸ்லோகம் – என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட பன்னிரு தடந்தோள் வள்ளல் 157

28) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி எட்டாவது ஸ்லோகம் – சகல செல்வ யோக மிகக் பெருவாழ்வும் சிவஞான முக்தியும் நீ குடுத்து உதவ வேண்டும் முருகா 164

29) ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஒன்பதாவது ஸ்லோகம் – அயிலும் மயிலும் அழகும் உடைய பெருமாளே 170

30) ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பதாவது ஸ்லோகம் – எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ 180
31) ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பத்து ஒன்றாவது ஸ்லோகம் – குஹ! ஸ்கந்த! நமஸ்தே நமோஸ்து 187
32) ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பத்து இரண்டாவது ஸ்லோகம் – வெற்றி வேல் முருகனுக்கு, ஹர ஹரோ ஹர 193
33) ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பத்து மூன்றாவது ஸ்லோகம் – தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய் 196

ஸுப்ரமண்ய புஜங்கம் – முதல் ஸ்லோகம் – முருகனை துதிக்க கணபதியே காப்பு

ஸித்தி விநாயக மூர்த்தி கீ ஜய்

வெற்றி வேல் முருகனுக்கு ஹரஹரோ

நம் ஆச்சார்யாள் ஆதிசங்கர பகவத் பாதாள் நிறைய பக்தி கிரந்தங்கள் இயற்றிக் கொடுத்து இருக்கா. அதுல ஸுப்ரமண்ய புஜங்கம் ன்னு ஒரு ஸ்தோத்ரம். முருகனுடைய பெருமைகளை ரொம்ப அழகா சொல்றது. ஒரு வாட்டி ஆசார்யாளுக்கு யாரோ ஆபிசாரம் பண்ணினதாகவும், உடம்புல ரொம்ப ஸ்ரமங்கள் வந்ததுனால, கோகர்ணத்துல இருக்கிற ஸ்வாமி கனவுல "நீ போய் ஸ்ரீ ஜெயந்திபுரம் என்கின்ற திருச்செந்தூர் முருக பெருமானை வேண்டிக்கோ, அவருடைய சன்னிதியில கொடுக்கிற விபூதியை இட்டுண்டா, எல்லா உபாதைகளும் போய் விடும். பிசாசுகள் எல்லாம் கூட ஓடிப் போய் விடும்" ன்னு ஸ்வாமியே சொன்னதாகவும் கதை.

ஆச்சார்யாள் யோக மார்கமாக திருச்செந்தூர் வந்து முருகப் பெருமானை தரிசிக்கிறார். அவர் காத்தால வந்து ஸ்வாமி தரிசனம் பண்ணும் போது, ஆதிசேஷன் ஸுப்ரமண்யருக்கு பூஜை பண்ணிண்டு இருந்தார், அதனால புஜங்க வ்ருத்தம் ஞாபகம் வந்தது. அதைத் தவிர திருச்செந்தூர் கடற்கரையில இருக்கறதுனால, அலைகளுக்கும் புஜங்கம்ன்னு பேரு, அப்படி புஜங்க வ்ருத்தத்துல அவரோட வாக்குல இருந்து ஒரு அழகான ஒரு ஸ்தோத்ரம் வந்தது என்று சொல்வார்கள்.

இந்த ஸுப்ரமண்ய புஜங்கந்தை மஹா மந்த்ரமாக மஹான்கள் நினைச்சு இருக்கா. ஸ்வாமிகள் இந்த கீழ்கண்ட நிகழ்ச்சியை பல தடவைகள் சொல்லி இருக்கார். ஒரு நாள் சாயங்காலம் மஹா பெரியவா விஸ்ராந்தியா பூஜையெல்லாம் முடிச்சிட்டு, கால்களை நீட்டிண்டு relaxed-ஆக உட்கார்ந்து இருந்தாளாம். ஒரு தம்பதி தன்னுடைய ரெண்டு குழந்தைகளை கூட்டிண்டு வந்து “இவாளுக்கு சங்கர ஸ்தோத்ரங்கள் சொல்லி வைச்சுருக்கோம்” ன்னு சொன்ன உடனே, பெரியவா ” சொல்லச் சொல்லு” ன்னாளாம்.

“முதாகராத்த மோதகம்” ன்னு அந்த ரெண்டு குழந்தைகள் சொல்லித்தாம். பெரியவா கேட்டுண்டே இருந்தாளாம். அப்பறம் அதை முடிச்ச உடனே ‘ஸதா பால ரூபாபி” ன்னு ஸுப்ரமண்ய புஜங்கத்தை அவா ஆரம்பிச்ச உடனே, relaxed-ஆ உட்கார்ந்து இருந்த பெரியவா, ரொம்ப பயபக்தியோட தண்டத்தை நிமிர்த்தி வெச்சிண்டு, கையை கூப்பிண்டு, கால்களை மடக்கிண்டு ஸுப்ரமண்ய புஜங்கந்தை அந்த முப்பத்தி மூணு ஸ்லோகங்களையும் கேட்டார், ன்னு ஸ்வாமிகள் சொல்வார். ஒவ்வொரு வாட்டியும் இதை அபிநயம் பண்ணி காண்பிப்பார். ஸ்வாமிகள் மஹா பெரியவா மாதிரியே இருப்பார், அவர் relaxed-ஆ ஒரு pose, அப்பறம் பயபக்தியோட கால்களை மடக்கிண்டு கையை கூப்பிண்டு அந்த தண்டத்தை நிமிர்த்தி வெச்சிண்டு ஒரு pose கொடுப்பார். அப்படியே நேரா பெரியவாளை பார்க்கற மாதிரியே இருக்கும். அப்படி இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்துக்கு மஹா மந்த்ரம்-னு பெரியவா மதிப்பு கொடுத்தா ன்னு ஸ்வாமிகள் சொல்வார்.

தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் ன்னு ஒரு பெரிய மஹான் இருந்தார். அப்பைய தீட்சிதர் வம்சம். அவர் இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்துக்கு எழுவது வருஷங்களுக்கு முன்னாடி, தமிழ்ல அர்த்தங்கள் சொல்லி இருக்கார். அந்த புஸ்தகத்தை வெச்சுண்டு தான் நான் அர்த்தம் சொல்ல போறேன். சந்திரசேகர

பாரதி ன்னு ஸ்ருங்கேரி ஆச்சார்யாள் இருந்தார், அவா தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகளுக்கு வேதமூர்த்தி ன்னு பிருது கொடுத்தா. நம்ம மஹா பெரியவா சாஸ்த்ர ரத்னாகரா ன்னு அவருக்கு பிருது கொடுத்தா. அப்பேற்பட்ட படிப்பு. அதுக்கும் மேல அம்பாள் பக்தி, அவர் சங்கர பாஷ்யத்துல authority. அப்படி தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் வேதாந்தத்துல வித்வானாக இருந்தாலும், ஆச்சார்யாளுடைய ஸ்தோத்ரங்களிலேயும் ரொம்ப பிரியம் வெச்சு, இந்த சௌந்தர்யா லஹரி, ஸுப்ரமண்ய புஜாங்கத்துக்கெல்லாம் அர்த்தம் எழுதி இருக்கார். அதனால பெரிய பாக்கியமா அது கிடைச்சியிருக்கு. அதுல முதல் ஸ்லோகம்

सदा बालरूपाऽपि विघ्नाद्रिहन्त्री महादन्तिवक्त्राऽपि पञ्चास्यमान्या ।

विधीन्द्रादिमृग्या गणेशाभिधा मे विधत्तां श्रियं काऽपि कल्याणमूर्तिः ||

ஸதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ

மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா |

விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே

விதத்தாம் ச்ரியம் காபி கல்யாண மூர்த்திஹி |

ன்னு ஒரு ஸ்லோகம். நான் இதுக்கு பதம் பதமா அர்த்தம் சொல்றேன். 'ஸதா' னா எப்பொழுதும், 'பாலரூபாபி' குழந்தை வடிவராக இருந்தாலும், இந்த முதல் ஸ்லோகம் பிள்ளையார் மேல. 'பிள்ளையார் எப்பவுமே குழந்தை வடிவம். வடிவம் மட்டும் இல்லை, அவருடைய மனசும் குழந்தை மாதிரி, நெட்டில கூட பிள்ளையார் பண்ணுவா, அவ்வளவு light hearted ஆக இருக்குற ஸ்வாமி. அவருக்கு பந்தா கிடையாது, விசேஷமா கோவில் கூட கட்ட வேண்டியது இல்லை, ஒரு அரசமரத்து அடியில உட்கார்ந்து இருப்பார். ஒரு அபிஷேகம் பண்ணி, இடுப்புல ஒரு துண்டை சுத்தி, ஒரு தேங்காயை நைவேத்தியம் பண்ணினாலே, அபாரமான வரங்கள் கொடுப்பார்' ன்னு அவருடைய எளிமைய பத்தி மஹாபெரியவா ரொம்ப பேசியிருக்கா. அப்பேற்பட்ட குழந்தை ஸ்வாமி அவர், அவர் இப்பவுமே குழந்தை ஒரே stage-தான் அவருக்கு. வளர்ந்து பெரியவர் ஆனார்-ங்கிறது கிடையாது, 'ஸதா ஸதா பாலரூபாபி'

குழந்தைனா ஒரு அளவுக்குத் தான் strength வலிமை இருக்கும் ன்னு நினைப்போம். ஆனா இவர் என்ன பண்றார்ன்னா ‘விக்னாத்ரிஹந்த்ரீ’ விக்னம் என்ற மலைகளையே ‘ஹந்த்ரீ’-ன பொடி பொடி ஆக்குபவர். மலையையே பொடி பொடியாக்க கூடிய அளவுக்கு power இருக்கு. குழந்தையாக இருக்கார், ஆனா நமக்கு வர மலை போன்ற விக்னங்களை எல்லாம் பொடி பொடி ஆக்கிடறார். ஆதி ஆச்சார்யாள், தான் ஸுப்ரமண்யரை ஸ்தோத்ரம் பண்ண போறோம் என்று ஆரம்பிக்கும்போது, அந்த ஸ்தோத்ரம் நல்ல படியாக முடியணும்ங்கிறதுக்கு, பிள்ளையாரை வேண்டுகிறார். எந்த பூஜை பண்ணினாலும், முதல்ல பிள்ளையார் பூஜை பண்ணிட்டு அப்பறம் தான் ஒரு வெங்கடேச சமாராதனை, ஒரு நவராத்திரி பூஜை ன்னு பண்ணுவா இல்லையா, அப்படி தெய்வங்களை வேண்டிக்கிறதுக்கே, முதல்ல பிள்ளையார வேண்டிக்கறது என்ற அந்த ஒரு ஸம்ப்ரதாயத்தையும் கொண்டு, முதல் ஸ்லோகத்துல, இந்த ஸுப்ரமண்யரை நான் ஸ்தோத்ரம் பண்ண விரும்புகிறேன், அது நல்லபடியா முடியறத்துக்கு ஒரு காப்பு செய்யுள் போல இந்த ஸ்லோகம் இருக்கு.

‘மஹாதந்தி வக்த்ராபி’ பெரிய ஒரு தந்தம் இருக்கு, அப்படீன்னா என்ன அர்த்தம் யானை முகம்னு அர்த்தம். ‘மஹாதந்தி வக்த்ராபி’ யானையினுடைய வக்த்ரம், முகத்தவராக இருந்தாலும் ‘பஞ்சாஸ்யமான்யா’ பஞ்ச பாத்ரம்னு சொல்றோம் இல்லையா, ‘பஞ்ச’னா அகன்ற ன்னு அர்த்தம். ஆஸ்யம் னா வாய், பஞ்சபாத்ரம்-னா பெரிய வாய் இருக்கிற பாத்திரம். ‘பஞ்சாஸ்யமான்யா’ இந்த இடத்துல பஞ்சாஸ்யம் னா சிங்கம்னு ஒரு அர்த்தம். சிங்கத்தை கனவுல கண்டாக் கூட யானை பயந்து போய் பிளிறிண்டே இருக்கும் ன்னு சொல்லுவா. அப்படி சிம்ம சொப்பனம் அப்படீம்பா. ஆனா இவர் யானையாக இருந்தாலும், சிங்கங்கள் எல்லாம் இவரை மதிக்கறதுன்னு அழகா சொல்றார். இந்த இடத்துல இவர் கணபதியா இருந்தாலும் பஞ்சாஸ்யம்-ங்கிறதுக்கு இன்னொரு அர்த்தம் ஆஸ்யம்னா முகம், பஞ்சாஸ்யம்-ங்கிறதுக்கு இன்னொரு meaning ஐந்து முகங்களை படைத்தவர்-ன்னு அர்த்தம். ஐந்து முகங்களை படைத்தவர் யாரு? சிவபெருமான். சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசான்யம், ன்னு ஐந்து முகங்களை படைத்த, சிவபெருமானும் வணங்கும், மதிக்கும் கணபதி ன்னு இந்த பாதத்துக்கு அர்த்தம்.

சிவபெருமான் த்ரிபுர ஸம்ஹாரம் பண்ண போறார், அப்போ இவர் போடற அஸ்த்ரங்கள் எல்லாம், அந்த அசுரர்களை ஒண்ணுமே பண்ணலயாம். ஏன்னா அவா ஒரு விக்ன யந்த்ரம் ஸ்தாபிச்சு, இந்த அஸ்த்ரங்களை எல்லாம் பலிக்காம பண்ணிண்டே இருக்கா. அப்போ சிவபெருமான் பிரணவ ஸ்வரூபமா கணபதியை த்யானம் பண்ணி, பூஜை பண்ணின உடனே, பிள்ளையார் வந்து அந்த விக்ன யந்த்ரத்தை உடைச்சு போட்டுடறார், அதுக்கப்புறம் சிவபெருமான் த்ரிபுர ஸம்ஹாரம் பண்ணார். அப்படி அப்பாவினாலேயே மான்ய னா மதிக்கப்பட்ட, பூஜை செய்யப்பட்ட பிள்ளை இவர். அதனாலதான் அவருக்கு அர் விகுதி கொடுத்து, பிள்ளையார் னு மரியாதையா கூப்பிடுறோம். அப்படி யானை சிங்கத்துக்கு பயப்படும், ஆனா இந்த கணபதியை பஞ்சாஸ்ய பஞ்ச முகம் கொண்ட சிவபெருமானே வழிபடுகிறார். 'விதீந்த்ராதிம்ருக்யா' விதி-ன்னா ப்ரம்ம, இந்திரன் னா இந்த்ரன் 'விதீந்த்ராதிம்ருக்யா' இந்திரன், ப்ரம்மா எல்லாரும், தேடி வந்து இந்த பிள்ளையாரை நமஸ்காரம் பண்ரா. 'கணேசாபிதா' கணேசன் என்ற பேர் கொண்டவர், 'விதத்தாம் ச்ரியம்' எனக்கு செல்வங்களை, மங்களங்களை அருளட்டும்.

'காபி' ஏதோ ஒண்ணு-ன்னு ஸம்ஸ்க்ருதத்துல அர்த்தம், இந்த எடத்துல அளவற்ற மஹிமையோடு கூடிய ன்னு அர்த்தம். 'கல்யாண மூர்த்தி' பரம மங்களகரமான வடிவினரான, எப்போ நினைச்சாலும் சந்தோஷத்தை கொடுக்ககூடிய ஒரு ரூபம் கணபதியுனுடைய ரூபம். அந்த பிள்ளையாரை நித்ய கல்யாண மூர்த்தியான கணேசரை எங்களுக்கு, எனக்கு மங்களங்கள் கிடைக்கும் பொருட்டு வேண்டுகிறேன்.

'கணேசாபிதாமே விதத்தாம் ச்ரியம்' அவர் எங்களுக்கு மங்களங்களை கொடுக்கட்டும், ஐஸ்வர்யங்களை கொடுக்கட்டும் ன்னு ஒரு ஸ்லோகம்.

இந்த நல்ல கார்யங்கள் எல்லாம் ஆரம்பிக்கும் போது 'ஷ்ரேயாம்ஸி பஹு விக்னானி' ன்னு ஷ்ரேயஸான ஒரு கார்யம் நடக்கணும்னா அதுக்கு, நிறைய விக்னங்கள் வரும். அப்போ, நம்ம பிள்ளையாரை வேண்டிண்டு ஆரம்பிக்கணும்ங்கிற அளவில், இந்த ஸுப்ரமண்ய புஜங்கதுக்கு அர்த்தம் சொல்லுறதுங்கிறது எனக்கும் உங்களுக்கும் ரொம்ப ஒரு ஸ்ரேயஸை கொடுக்கக் கூடிய ஒரு விஷயம், இது நல்ல படியாக முடியணும்ன்னு

வேண்டிண்டு இந்த முதல் ஸ்லோகத்தை இன்னோரு வாட்டி சொல்லி இதை இன்னைக்கு பூர்த்தி பண்ணிகிறேன்.

ஸதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ

மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா

விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே

விதத்தாம் ச்ரியம் காபி கல்யாண மூர்த்தி

இங்க 'விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதா (மே)' ன்னு நிறைய புஸ்தகங்கள்ல பாடம், ஸ்வாமிகள் எனக்கு, 'விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதா(நா)' ன்னு ஒரு பாடம் சொல்லி இருக்கார். அதனால நான் அதை பழக்கிண்டு இருக்கேன்.

நம: பார்வதி பதயே… ஹர ஹர மஹாதேவ.

ஸுப்ரமண்ய புஜங்கம் – இரண்டாவது ஸ்லோகம் – அறுமுக குமர சரணம் என அருள்பாடி



நேற்றைக்கு ஸுப்ரமண்ய புஜங்கதுல இருந்து முதல் ஸ்லோகம்.

सदा बालरूपाऽपि विघ्नाद्रिहन्त्री

महादन्तिवक्त्राऽपि पञ्चास्यमान्या ।

विधीन्द्रादिमृग्या गणेशाभिधा मे

विधत्तां श्रियं काऽपि कल्याणमूर्तिः ||

ஸதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ

மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா |

விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே

விதத்தாம் ச்ரியம் காபி கல்யாண மூர்த்திஹி ||

அப்படீங்கிற ஸ்லோகத்தை எடுத்து, அதோட அர்த்தத்தை பார்த்தோம். இன்னைக்கு, ரெண்டாவது ஸ்லோகம். ஸ்லோகத்தை படிக்கிறேன்.

न जानामि शब्दं न जानामि चार्थं

न जानामि पद्यं न जानामि गद्यम् ।

चिदेका षडास्या हृदि द्योतते मे

मुखान्निःसरन्ते गिरश्चापि चित्रम् ।।2।।

ந ஜானாமி சப்தம் ந ஜானாமி சார்த்தம்

ந ஜானாமி பத்யம் ந ஜானாமி கத்யம் |

சிதேகா ஷடாஸ்யா ஹ்ருதி த்யோததே மே

முகாந்நிஸ்ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம் ||

ஆசார்யாளுக்கு தன்னுடைய முகத்துலேர்ந்து வெளிப்பட்ட முதல் ஸ்லோகத்தை கேட்டு, "ஆஹா நான் எவ்வளவு ஸாஹஸத்தோட, தைரியத்தோடு உங்களை ஸ்தோத்ரம் பண்றேன் ன்னு வந்து நிக்கறேனே, எனக்கு ஒண்ணுமே தெரியாதே! இப்படி ஒரு ஸ்லோகம் என் வாக்கில் வந்துதே" ன்னு ஆச்சர்யப் பட்டு சொல்றார், "நான் உங்களை ஸ்தோத்ரம் பண்ண போறேன், ஆனா இது நான் பண்றது கிடையாது. 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' ன்னு சொல்றா மாதிரி, உங்களுடைய அருளால் எனக்கு இந்த வாக்கு வர்றது. நான் இதைக் கொண்டு உங்களை ஸ்தோத்ரிக்கிறேன்" ன்னு சொல்றார். அதை இந்த ஸ்லோகத்துல சொல்றார்.

'ந ஜானாமி சப்தம்' எனக்கு ஒரு பதத்தைக் கூட சரியான பொருள் தெரிஞ்சு பேச தெரியாது. 'ந ஜானாமி சார்த்தம்' இது இன்ன அர்த்தம்-ன்னு தெரியாது. எனக்கு vocabulary-யும் இல்லை, semantics ம் தெரியாது. வார்த்தைகளுக்கு சரியான அர்த்தங்களும் சொல்ல தெரியாது. 'ந ஜானாமி பத்யம்' எனக்கு ஒரு கவிதை எழுதறதுக்கும் தெரியாது. யாப்பிலக்கணம் னா என்ன, என்ன rules, எவ்வளோ அக்ஷரங்கள் இருக்கணும், எவ்வளோ பாதத்துல இருக்கணும், ஹ்ரஸ்வம் னா குறில், தீர்க்கம் னா நெடில், இதெல்லாம் எப்படி அமையணும், தளை தட்டாம இருக்கணும். அப்படியெல்லாம் rules, அது ஸம்ஸ்க்ருத்துலேயும் இருக்கு. அதுலேர்ந்து தான் தமிழ்லயும் வந்து இருக்கு, அந்த rules எல்லாமும் எனக்கு தெரியாது."

"சரி, கவிதை எழுத தெரியாது, ஏதோ prose மாதிரி, 'கத்யம்'னா prose, ஸம்ஸ்ருதத்துல சூர்ணிகைன்னு சொல்றா. தண்டாகாரமா, line-ஆ

சொல்லிண்டே போறது. ஷ்யாமளா தண்டகம் மாதிரி, அப்படி ஏதாவது சொல்ல தெரியுமான்னா, அது கூட எனக்கு சொல்லத் தெரியாது. எழுத்தே தெரியாதுங்கிற போது வார்த்தைகளே தெரியாதுங்கிற போது நான் எப்படி உங்களை ஸ்தோத்திரிக்க முடியும்?” ன்னு சொல்லிட்டு,

“ஆனால் என்னுடைய மனசுல, ‘மே ஹ்ருதி’ என்னுடைய ஹ்ருதயத்தில், ‘சிதேகா ஷடாஸ்யா’ ஒரு ஆறுமுகங்களோடு கூடின ஒரு ‘சித்’, ஒரு ஒளி, ‘த்யோததே’ பிரகாசிக்கறது. ஆறுமுகங்களோடு கூடின ஒரு ஒளி, ரொம்ப நிகரற்ற ஒரு தேஜஸோட என் மனசுல பிரகாசிக்கறது. அதுனால ‘முகாத்’ என்னுடைய வாக்கில் இருந்து, முகத்தில் இருந்து, ‘கிரஸ்சாபி சித்ரம்’ ரொம்ப ஆஸ்ச்சரியமான வார்த்தைகள் எல்லாம் ‘நிஸ்ஸரந்தே’ வெளியில வந்து அருவி மாதிரி கொட்டறது”, ன்னு சொல்றார்.

மஹான்கள் எல்லாருக்குமே வாக் என்கிறது பகவான் கொடுத்தது, அப்படீங்கிறதை அவா ரொம்ப feel பண்றா, நிறைய அருட்கவிகள் அந்த மாதிரி சொல்றா, இது humility, ஆனா தெய்வம் நினைக்கலேன்னா இந்த மாதிரி அருமையான வாக்கு வந்து விழ முடியுமா? வால்மீகியே தன்னுடைய காவியத்தை ரசனம் பண்ணிட்டு சொல்றார்…

तदुपगतसमाससन्धियोगं सममधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ।।

தது3பக3த ஸமாஸஸந்தி4 யோக3ம் ஸமமது4ரோபநதார்த2 வாக்ய ப3த்3த4ம்|

ரகு4வர சரிதம் முநிப்ரணீதம் த3ஸஸிரஸச்ச வத4ம் நிஸாமயத்4வம்||

இதுல இருக்கக்கூடிய ஸமாஸங்கள், ஸந்திகள் இதெல்லாம் ரொம்ப மதுரமா இருக்கு, இதுல ராவண வதம், ராமரோட சரித்திரம், சீதையோட சரிதம், ‘ஸீதாயா: சரிதம் மஹத்’ எல்லாம் இருக்கு. இதை ‘நிஷாமய’ எல்லாரும் பாருங்கோன்னு சொல்றார், கேளுங்கோன்னு சொல்லலை. அப்படி நேரா பார்க்கற மாதிரி இந்த காவ்யம் அமைஞ்சு இருக்குன்னு வால்மீகியே வியக்கறார்.

மூக கவி நிறைய இந்த மாதிரி சொல்லி இருக்கார். என்னைப் போன்ற ஊமைகளையும் சர்வக்ஞனா அம்பாள் பண்ணிடுவான்னு

आरम्भलेशसमये तव वीक्षणस्स

कामाक्षि मूकमपि वीक्षणमात्रनम्रम् ।

सर्वज्ञता सकललोकसमक्षमेव

कीर्तिस्वयंवरणमाल्यवती वृणीते ॥

ஆரப்பலேஷஸமயே தவ வீக்ஷணஸ்ய

காமாக்ஷி மூகமபி வீக்ஷணமாத்ரநம்ரம் |

ஸர்வஜ்ஞதா ஸகலலோகஸமக்ஷமேவ

கீர்திஸ்வயம்வரணமால்யவதீ வ்ருணீதே ||

உன்னுடைய கடாக்ஷம் ஒருத்தன் மீது பட ஆரம்பிச்சாலே 'ஆரப்பலேஷஸமயே தவ வீக்ஷணஸ்ய' அவன் ஊமையா இருந்தாலும், அவன் சர்வக்ஞனாகி, உலகத்தில் கீர்த்தியோடு விளங்குவான் ன்னு சொல்றார், தன்னுடைய அனுபவத்தை சொல்றார்.

முருகப்பெருமானோட அருளால வாக்கு வந்ததுனா இன்னும் அருணகிரிநாதர் இருக்கார். அருணகிரி, உடம்பு வியாதி வந்து, ரொம்ப நொந்து போய், திருவண்ணாமலையில கோபுரத்துல இருந்து விழுந்து தற்கொலை பண்ணிக்கனும்னு நினைச்ச போது, பகவான் அவரை கையில தாங்கி உயிரைக் காப்பாற்றி "சும்மா இரு சொல் அற" ன்னு உபதேசம் பண்றார். அவர் அந்த மண்டபத்துலேயே, உக்காந்துண்டு ஒரு கார்யமும் பண்ணாமல், ஒரு பேச்சும் பேசாமல், அந்த முருகப் பெருமானுடைய தரிசனத்தையும், அந்த முருக நாமத்தையுமே த்யானம் பண்ணிண்டு, பன்னிரண்டு வருஷம் தபஸ் பண்ணினார் ன்னு சொல்லுவா. அப்ப முருகப் பெருமான் திரும்பவும் தரிசனம் கொடுத்து "அருணகிரி முத்து முத்தா என்னை பாடு"ன்னு சொல்றார்.

முத்தைத் தருபத்தித் திருநகை

அத்திக்கிறை சத்திச் சரவண

முத்திக்கொரு வித்துக் குருபர எனஓதும்

ன்னு ஆரம்பிச்சு சந்தத்தமிழ்ல, அருணகிரி ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடறார். அந்த மாதிரி, இந்த ஸ்லோகத்துல தெரிஞ்சிக்க வேண்டியது என்னென்னா, முருகப் பெருமானுடைய அருள் இருந்தா பாண்டித்யம் வரும். நல்ல வாக்கும் வரும்கிறது தெரியறது.

அதே மாதிரி முத்துஸ்வாமி தீக்ஷிதர். சிதம்பரநாத் யோகிங்கிறவர் இவருடைய அப்பாகிட்ட கேட்டு, இந்த முத்துஸ்வாமியை காசிக்கு கூட்டிண்டு போய், ஸ்ரீவித்யை எல்லாம் சொல்லிக் கொடுக்கறார். பல வருஷங்கள் முத்துஸ்வாமி அவருக்கு service பண்ணிண்டு இருக்கார். ஒரு நாளைக்கு அந்த சிதம்பரநாத் யோகி "நான் அம்பாள் கிட்ட போக போறேன், நீ ஊருக்கு போ. உனக்கு மந்த்ர சித்தி ஆயிடுத்து" ங்கறார், இவருக்கு ஆஸ்ச்சர்யமா இருக்கு. "எனக்கு எப்படி மந்தர சித்தி ஆச்சு? எனக்கு தெரியலேயே-ன்னா போது, என்னோட வான்னு சொல்லி, கங்கைக்கு கூட்டிண்டு போறார். 'நான் போயிடுவேன். நீ கங்கைக்குள்ள இறங்கி, கங்கா மாதா என்ன கொடுக்கிறாளோ அதை எடுத்துக்கோ" ன்னு சொல்றார். இவர் உள்ள போய் இறங்கி கங்கைகுள்ள கையை வைக்கறார், அதுல ஒரு வீணை வர்றது. அதுல ராம நாமம் பொறிச்சு இருக்கு, அந்த வீணை இன்னைக்கும் அவா குடும்பத்துல இருக்கு. பிற்பாடு அந்த யோகி கங்கைல இறங்கி கங்கைகுள்ளவே போயிடுறார். ஜல சமாதி ஆயிடறார். முத்துஸ்வாமி வீணையை எடுத்துண்டு, குரு சித்தி ஆயிட்டாரேன்னு வருத்தத்தோடு இருக்கார். குருவுக்கு அதிஷ்டானம் அமைத்து விட்டு, தன் ஊர், எட்டயபுரத்துக்கு வந்து சேருகிறார்.

அப்பறம் அவர் ஒரு தடவை திருத்தணி போறார். மலையேறிப் போய் ஸ்வாமி தரிசனம் பண்ணிட்டு, மலை இறங்கி திரும்ப வரும் போது, ஒரு கிழவர் முத்துஸ்வாமின்னு கூப்பிடறார், திரும்பிப் பார்த்த உடனே, இந்தான்னு ஒரு கல்கண்டை வாயில் குடுக்கறார். அந்த கல்கண்டை இவர் சாப்பிட்ட உடனே முருகனோடு தரிசனம் கிடைக்கிறது. அப்போ ஆரம்பிச்சு 'ஸ்ரீநாதாதி குருகுஹோ ஜயதி' ன்னு ஒரு க்ருதி பண்றார். அப்படி அந்த முதல் க்ருதி. அப்பறம் எட்டு விபக்தியிலயும் முருகன் மேல க்ருதிகள் பண்றார். அப்புறம், தேசம் முழுக்க எல்லா க்ஷேத்ரத்துலேயும் போய், எல்லா ஸ்வாமியையும், அற்புதமான ஸம்ஸ்க்ருதத்துல, அழகழகான ராகங்கள்ல க்ருதிகள் பண்ணி

இருக்கார். மஹாபெரியவாளுக்கு, ஸ்வாமிகளுக்கெல்லாம் முத்துஸ்வாமி தீக்ஷிதர் க்ருதிகள்னா தேன். ஏன்னா, அவாளுக்கு ஸம்ஸ்க்ருதமும் பிடிக்கும், சங்கீதமும் பிடிக்கும், “முத்துஸ்வாமி தீக்ஷிதர் க்ருதிகள் பாடுங்கோ”, ன்னு கேட்டு கேட்டு ஸ்வாமிகள் பாடச் சொல்லுவார். அந்த முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு இனிமையான வாக்கு, பாண்டித்யம் முருகபெருமான் கொடுத்தார்.

அப்படி “அந்த முருகனுடைய அருளால் நான் இந்த, ஸுப்ரமண்யரை ஸ்தோத்ரம் பண்ணப் போறேன், புஜங்கத்தை பாட போறேன்”, ன்னு ஆச்சார்யாள் சொல்றார். எல்லா வார்த்தைகளுக்கு பொருள் பகவான் போட்டது, ‘ஹிமம் ‘ அப்படீன்னா பனி, ‘கிரி’, அப்படீன்னா மலை, ‘ஹிமகிரி’ அப்படீன்னா Himalayas, அங்கே வடக்கே இருக்கிற அந்த பனி மலைக்கு அந்த வார்த்தை. ‘ஹிமகிரிதனயா’ ன்னா, பார்வதி தேவி, அம்பாள், அப்படி ஒவ்வொரு வார்த்தையை சொன்ன உடனே, அந்தந்த விஷயம் நமக்கு ஞாபகம் வரதில்லையா? ‘ஹிமம் ‘ன்னா பனி ஞாபகம் வரது, ‘கிரி-ன்னா மலை ஞாபகம் வரது, ஹிமகிரி ஹிமவான்னா வடக்குல இருக்கிற ஒரு பெரிய பனி மலை ஞாபகம் வரது, ‘ஹிமகிரிதனயா’-ன்னா அம்பாள் ஞாபகம் வரது. இப்படி வார்த்தைகளுக்கு பொருள்கள்-ங்கிறது பகவான் போட்டது, ன்னு சாஸ்த்ரத்துல இருக்கு.

அதோட ஒவ்வொரு காலத்துல பொருள் கொஞ்சம், கொஞ்சம் மாறுகிறது, connotation ன்னு சொல்லுவா. இந்த இடத்துல இந்த பொருள் எடுத்துக்கணும், அப்படிங்கிறது, அது அழகா அமையணும். மஹான்களோட வாக்கு தான் என்றைக்கு எடுத்தாலும் அந்த மாதிரி சந்தோஷப் படும் படியா, எல்லா காலத்துலேயும் மங்களகரமான அர்த்தங்களே வரும் படியான வாக்கு, மஹான்களுக்கு இறையருளால் கிடைச்ச வாக்குல தான் அந்த மாதிரி இருக்கும். அப்பேற்பட்ட இந்த ஸுப்ரமண்ய புஜங்கம். இந்த ஸ்லோகத்தை இன்னோரு வாட்டி படிச்சு முடிக்கறேன்.

“ஹ்ருதய கமலமாகிய குஹையில வசிக்ககூடிய முருகப்பெருமானுடைய அருளால், நான் இந்த ஸ்லோகத்தை பண்ணி, இந்த ஸ்லோகத்துடைய கர்த்தா, அப்படீங்கிற கீர்த்தி எனக்கு வர போறது. ஆனா, எதிர்ல நிற்கிற இந்த

ஸ்வாமிதான் என்னை பேச வைக்கிறார்", ன்னு சங்கரரும் ஆஸ்ச்சர்ய படறார், இதை கேட்கறவாளும் ஆஸ்ச்சர்ய படறா. இன்னைக்கும் நாம ஆஸ்ச்சர்யபட்டு இந்த ஸ்லோகத்தை படிச்சிண்டு இருக்கோம். அப்பேற்ப்பட்ட முருகனுடைய அருள். இந்த ஸ்லோகத்துல ஆசார்யாளோட வினயம், முருகபெருமானுடைய அருள் ரெண்டும் வெளிப்படறது.

न जानामि शब्दं न जानामि चार्थं

न जानामि पद्यं न जानामि गद्यम् ।

चिदेका षडास्या हृदि द्योतते मे

मुखान्निःसरन्ते गिरश्चापि चित्रम् ।।2।।

நாளைக்கு 'மயூராதிரூடம்' என்கிற ஸ்லோகத்தை பார்க்கலாம்.

வெற்றிவேல் முருகனுக்கு ஹரஹரோ ஹரா.

ஸுப்ரமண்ய புஜங்கம் – மூன்றாவது ஸ்லோகம் – வேதப் பொருளாக விளங்கும் முருகன்

ஆதி சங்கர பகவத் பாதாள் அருளிய ஸுப்ரமண்ய புஜங்கத்துல ஒவ்வொரு ஸ்லோகமா பார்த்துண்டு இருக்கோம். முதல் ஸ்லோகம் 'ஸதா பாலரூபாபி விக்னாத்ரி ஹந்த்ரீ' என்கிற ஸ்லோகத்துல, குழந்தை வடிவினராக இருந்தாலும், முழுமுதற் கடவுளாகிய பிள்ளையார், மலை போன்ற விக்னங்களையும் போக்கிடுவார். மங்கள வடிவானவர்ங்கிற ஸ்லோகம். அந்த 'காபி கல்யாண மூர்த்தி'என்கிற பதத்தையும், 'விக்னாத்ரி ஹந்த்ரீ' என்கிற பதத்தையும் சேர்த்து பார்க்கும் போது, நமக்கு முருகருடைய கதையிலேயே வள்ளி கல்யாணம் நடக்கறதுக்கு பிள்ளையார் தான் ஸஹாயம் பண்ணினார் இல்லையா, அது ஞாபகம் வரது. முருகன்வள்ளி கிட்ட கிழவனா போனார். விளையாட்டு

பண்ணி, “என்னை கல்யாணம் பண்ணிக்கோ” ன்னு சொன்னார், அப்போ “போ தாத்தா, உன்னைப் போய் யார் கல்யாணம் பண்ணிப்பா” ன்னு சொல்றா வள்ளி. அப்போ சுப்பிரமண்ய ஸ்வாமி அண்ணா கணபதியை வேண்டிக்கிறார், அப்போ பிள்ளையார் யானை மாதிரி வந்த உடனே, வள்ளி பயந்து போய் முருக தாத்தாவை கட்டிக்கிறா. அப்பறம் முருகர் காட்சி கொடுத்து, வள்ளியை திருத்தணிக்கு கொண்டு போய் கல்யாணம் பண்ணிக்கிறார் ன்னு ஒரு கதை.

‘ அத்துயர் அதுகொடு சுப்பிரமணி படும் அப்புனம் அதனிடை இபம் ஆகி

அக் குறமகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணம் அருள் பெருமாளே”

ன்னு இதைத்தான் அருணகிரிநாதர் பாடறார்.

அடுத்த ஸ்லோகத்துல ஆசார்யாள் “எனக்கு ஸ்லோகமெல்லாம் பண்ணத் தெரியாது, இந்த ஷண்முக பெருமானுடைய வடிவம், அந்த ஒளி என் மனசுல இருக்கறதுனால, தானா என் வாக்குலேர்ந்து இந்த ஸ்லோகம் வர்றது” ன்னு வினயமா சொல்றார்.

மூணாவது ஸ்லோகம் இன்னிக்கு

मयूराधिरूढं महावाक्यगूढं मनोहारिदेहं महच्चित्तगेहम् ।

महीदेवदेवं महावेदभावं महादेवबालं भजे लोकपालम् ॥ ३॥

மயூராதிரூடம் மஹாவாக்யகூடம்

மனோஹாரிதேஹம் மஹத்சித்தகேஹம் |

மஹீதேவதேவம் மஹாவேதபாவம்

மஹாதேவ பாலம் பஜே லோகபாலம் ||

எட்டு பதங்களும் ‘ம’ அப்ப்டீங்கிற எழுத்துல ஆரம்பிக்கிற அந்த ஒரு அழகு. இந்த புஜங்க வ்ருத்தம்.

‘மயூராதிரூடம்’-ன்னா, மயூரம்-னா மயில், அதிரூடம்-ன்னா ஏறி அமர்ந்து இருக்கார். முருகப் பெருமான் மயில் வாகனத்தில் ஏறி அமர்ந்து இருக்கிறார். பரம்பொருள் பூமியில ராமனா அவதாரம் பண்ணின போது, வேதம் வால்மீகி முனிவர் வாயிலாக ராமாயணமாக வெளிப்பட்டது ன்னு ஒரு ஸ்லோகம்

இருக்கு. அந்த மாதிரி, பரம்பொருள் முருகப்பெருமானாக அவதாரம் பண்ணின போது, வேதமே மயிலாக வந்து முருகப் பெருமானை தாங்கி, ரொம்ப சந்தோஷபட்டது ன்னு ஸ்காந்த புராணத்துல வர்றது.

मयूरभावं निगमा: तपसा प्राप्य षण्मुखम् ।

उद्वाह्य तृप्तिं परमां सम्प्रापु: सर्वदा भुवि ।।

மயூரபாவம் நிகமா: தபஸா ப்ராப்ய ஷண்முகம் |

உத்வாஹ்ய த்ருப்திம் பரமாம் ஸம்ப்ராபு: ஸர்வதா புவி ||

ன்னு ஒரு ஸ்லோகம் இருக்கு. வேதம் தான் மயில் என்கிறதுக்கு இது ப்ரமாணம். அப்படி ‘மயூராதிரூடம்’

‘மஹாவாக்ய கூடம்’ நான்கு வேதங்கள்ல நான்கு மஹா வாக்யங்கள் ன்னு இருக்கு, ‘ப்ரக்ஞானம் ப்ரம்மா’ ‘அயமாத்மா ப்ரம்மா’ ‘தத்வமஸி’ ‘அஹம் ப்ரம்மாஸ்மி’ என்கிற இந்த நாலும் மஹாவாக்யங்கள். ‘ப்ரக்ஞானம் ப்ரம்மா’ என்கிறது லக்ஷண வாக்யம்ன்னு சொல்றா. ‘அயமாத்மா ப்ரம்மா’ என்கிறது ப்ரமாண வாக்யம்ன்னு சொல்றா. ‘தத்த்வமஸி’ அப்படீங்கிறது, உபதேச வாக்யம், ‘அஹம்ப்ரமம்மாஸ்மி’ என்கிறது (फल) பல வாக்யம். அப்படி மஹா வாக்யங்களுடைய லக்ஷிய பொருளே ஸுப்ரமண்ய சுவாமி தான். இது ரஹஸ்யமான விஷயம், அர்த்தத்தை பார்க்கிறோம். ஆனா இதோட பொருளாக, அனுபவமாக விளங்குவது யாருன்னா முருகப் பெருமான் தான்ன்னு ஆதி சங்கரரே சொல்றார். அவர் உபநிஷத் பாஷ்யம் எழுதினவர், இது நாலும் ஒவ்வொரு வேதத்துல இருக்கற உபநிஷத்துல இருக்கற வாக்கியங்கள். ‘கூடம்’ மஹாவாக்ய மறை பொருளாக விளங்குவது முருகப் பெருமான் தான்ன்னு ஆதி சங்கரரே சொல்றார்ன்னா அந்த பரப்ரம்மம், நமக்காக முருகப் பெருமான வடிவம் எடுத்து வந்து இருக்கு, எங்கிறதை உணர்ந்து சொல்றார். ‘மஹாவாக்ய கூடம்’

‘மனோஹாரி தேஹம்’, அந்த பரம்பொருள் எதுக்காக இந்த மாதிரி உருவம் எடுத்து வந்து இருக்குன்னா, உலகத்துல இருக்கிறவா எல்லாம் மனசை உலக விஷங்கள்ல கொடுத்து, அந்த பற்று ஜாஸ்தியா இருக்கறதுனால, ரொம்ப பந்தம் ஜாஸ்தியாகி கஷ்டப் பட்டுண்டு இருக்கா. மனசை இந்த உலக

விஷயங்கள்லேர்ந்து எடுத்து, பரப்பிரம்மதுல வெச்சா தான், மோக்ஷம் ஏற்படும். அப்படி மோக்ஷம் குடுக்கறதுக்காக, கருணையினால் அந்த பகவான் பூமியில அவதாரம் பண்றார். அதுல இந்த முருகப் பெருமானோட அவதாரம் ரொம்ப அழகா, கோடி மன்மத லாவண்யத்தோட முருகனாக வந்து இருக்கார். அந்த குமார வடிவமான அந்த முருகனோட அழகுல மனசைக் கொடுத்தா, உலக விஷயங்கள்லேர்ந்து தானா மனசு விலகி, அந்த முருகனோடு அழகு மூலமாவே, அழகே அருள், அது மூலமாவே அந்த பரப்பிரம்மத்து கிட்ட போகலாம் என்பதால், 'மனோஹாரி தேஹம்' அப்படி மனத்தை கொள்ளை கொள்ளும் அழகு படைத்த உருவத்தோட முருக பெருமான் இருக்கார்.

'மஹத்சித்த கேஹம்' இந்த உண்மையை உணர்ந்த மஹான்கள், தன்னுடைய மனசையே, முருகனுடைய இருப்பிடமாக, வீடாக கொடுத்துட்டாளாம். முருகனை இங்க வந்து தங்கிக்கோன்னு சொல்லி, 'மஹத் சித்த கேஹம்' மஹான்களுடைய, சித்தத்தை வீடாக, 'கேஹம்'-னா வீடுன்னு அர்த்தம், வீடாக கொண்டு இருக்கிறார் முருகர். மஹான்கள் தன்னுடைய மனத்தை முருகனுக்கு அர்ப்பணித்து விட்டார்கள் ன்னு அர்த்தம்.

'மஹீதேவதேவம்' 'மஹீதேவஹன்னா பூமியில் இருக்கக் கூடிய தேவர்கள் ப்ராஹ்மணர்கள். ப்ராஹ்மணர்களுடைய தெய்வம் ஸுப்ரமண்ய ஸ்வாமி, ன்னு ஆதிசங்கரர் சொல்றார். அவர் ஷண்மத ஸ்தாபனாசார்யாள், "ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மஹேஸ்வரம்" ன்னு அந்த அஞ்சு தெய்வங்களோடு முருகனையும் இணைத்து, முருக வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மஹா பெரியவாகூட இந்த பஞ்சாயதன பூஜையில ஒரு வேலை வெச்சுண்டு முருகனையும் வழிபடணும் ன்னு சொல்லியிருக்கா. அப்படி அந்த 'மஹீதேவதேவம்' ஸுப்ரமண்யம் அப்படீங்கிற வார்த்தைக்கே, ப்ராஹ்மணர்களுடைய தெய்வம், ப்ரம்மண்ய தேவ: ன்னு தானே பொருள். அப்படி ப்ராஹ்மணர்கள் முக்கியமா முருகனை வழிபட வேண்டும். சிவபூஜை பண்றது ப்ராஹ்மண லக்ஷணம், அந்த சிவகுமாரனான ஸுப்ரமண்யர் கிட்டயும், ப்ராஹ்மணர்கள் பக்தியோட இருக்க வேண்டும்.

'மஹாவேத பாவம்' நான்கு வேதங்களுடைய தாத்பர்யமும் இந்த முருக பெருமான் தான் என்று சொல்றார்.

‘மஹாதேவ பாலம்’ மஹாதேவ பாலம்- ன்னா பரமேஸ்வரனுடைய புத்திரன்-னு ஒரு அர்த்தம், ‘महादेवोपि बाल: कदाचित् यस्य’ ‘மஹாதேவோபி பாலஹ கதாசித் யஸ்ய’ அப்படீங்கிற ஒரு ஸமாஸம் பண்ணி, பரமேஸ்வரன் கூட பிரணவத்தின் பொருளை தெரிந்து கொள்வதற்கு, ஸுப்ரமண்ய ஸ்வாமி சன்னதில வந்து பணிவோடு கத்துண்டார்ங்கிற அந்த கதை இருக்கு இல்லையா, மஹாதேவரும், எவருக்கு குழந்தையாக ஆகிவிட்டாரோ, ‘अज्ञं हि बालमित्याहु: पितेत्येव च मन्त्रदं’ ‘அக்ஞம் ஹி பாலமித்யாஹு: பிதேத்ஏவ ச மந்த்ரதம்’ எவர் மந்த்ரத்தை கொடுக்கிறாரோ அவர் பிதா, எவன் அக்ஞானியாக இருந்து அதை தெரிஞ்சுக்கறானோ அவன் பாலன். அப்போ இந்த இடத்துல சிவபெருமான் தான் பாலன், முருகப் பெருமான் தான் பிதா. ஸ்வாமிமலையில தகப்பன் ஸ்வாமின்னு சொல்லுவா இல்லையா.

‘மஹாதேவ பாலம்’ங்கிற பதத்துக்கு சிவபெருமானுடைய குழந்தை அப்படிங்கிறது நேர் அர்த்தம், சிவபெருமான் தன்னுடைய நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகளை ஆறு தேஜஸை கொடுத்தார், அதை அக்னி பகவான் கங்கை கிட்ட கொடுக்க, கங்கை சரவண பொய்கையில சேர்த்து, ஆறு தாமரை பூக்கள்ல ‘ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய’ ன்னு கச்சியப்பர் பாடுகிறார் இல்லையா. அப்படி ‘மஹாதேவ பாலம்’ன்னா பரமேஸ்வரனுடைய குழந்தை.

ஆனால் மஹாதேவரும், எவருக்கு குழந்தையாக ஆனாரோ, அந்த கதை தெரிஞ்சு இருக்கும், இருந்தாலும் ஸ்வாரஸ்யமா இருக்கறதுனால இன்னொரு வாட்டி சொல்றேன். கைலாசத்து வாசல்ல ஸுப்ரமண்ய ஸ்வாமி, வீரபாஹு அவாளோட விளையாடிண்டு இருக்கார். அப்போ ப்ரம்மா கைலாசத்துக்கு பரமேஸ்வர தரிசனத்துக்காக வரார். வந்த போது இந்த குழந்தைளை பார்த்த உடனே, அலக்ஷியமா உள்ள போயிடுறார். உள்ள போயிட்டு வெளியில வரார். வெளியில வரும் போது, “எங்க கிட்ட உத்தரவு வாங்காம ஏன் நீங்க கைலாசத்துக்கு உள்ள போனேள்?” ன்னு முருகப் பெருமான் பிரம்மாவை கேக்கறார், “நீ யாரு சின்ன பையன், என்னை கேள்வி கேட்கிறாயே? நான் யார் தெரியுமா, நான்கு முகங்களால் நான்கு வேதங்களையும் ஓதி, உலகத்தையே

ஸ்ருஷ்டி பண்ணற ப்ரம்மா" ன்னு கர்வமா சொல்றார். "இவ்வளோ கர்வமா உங்களுக்கு, "சரி எங்கே வேதத்தை சொல்லுங்கோ " ன்ன உடனே, அவர் ஓம்-னு ஆரம்பிக்கிறார், "நீங்கள் இப்போ சொன்ன ப்ரணவத்துக்கு அர்த்தம் சொல்லுங்கோ" ன்னு கேட்கறார் முருகப் பெருமான். பிரம்மாவுக்கு அதுக்கு அர்த்தம் தெரியலை. "அர்த்தமே தெரியாம நீங்க என்ன ஸ்ருஷ்டி பண்ணப் போறேள்"ன்னு, முருகப் பெருமான் ப்ரம்மாவை குட்டி, அவரை சிறையில போட்டுடறார். அப்பறம் தானே ஸ்ருஷ்டி பண்றார்.

இதை நந்திகேஸ்வரர் பரமேஸ்வரன் கிட்ட போய்ச் சொல்றார். பரமேஸ்வரன் குழந்தை கிட்ட வந்து "ஏன் நீ ப்ரம்மாவை சிறையில போட்ட?", அப்படீன்ன உடனே முருகப் பெருமான், "அவருக்கு ப்ரணவத்துக்கு பொருள் தெரியல, அதுனால தான்" என்கிறார். உடனே, பரமேஸ்வரன் குழந்தையை தூக்கி வெச்சிண்டு, "எனக்கு ப்ரணவத்துக்கு பொருள் சொல்லு"ன்னு கேட்கறார். "எனக்கும் தெரியல எனக்கு சொல்லு" ன்ன உடனே, முருகப் பெருமான் பிரணவத்தின் பொருளை சிவபெருமானுடைய காதுல ஓதறார். அந்த கதையை இங்க ஞாபக படுத்திக்கணும். அப்படி "மஹாதேவ பால:" என்கிறதுக்கு, மஹாதேவரும் எவருக்கு குழந்தையாக ஆனாரோ, எந்த முருகப் பெருமான் பிதாவைப் போல இருந்து, சிவபெருமான் குழந்தையாக இருந்து, பிரணவ மந்திரத்துக்கு அர்த்தம் சொன்னாரோ அந்த ஸ்வாமி.

'லோகபாலம்' உலகங்களை எல்லாம் காப்பவர் முருகர் தான். இந்த ஸுப்ரமண்ய பதமே ப்ராம்மணர்களுடைய தெய்வம் என்று பொருள். "கோ ப்ராம்மணேப்ய: சுபம் அஸ்து நித்யம் லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" னு இருக்கு இல்லையா! பிராம்மணர்கள் முருகனை வழிபட்டு அது மூலமாக மழை பெய்து, பயிர்கள் பசுக்கள் எல்லாம் செழித்து, தான தர்மங்கள் வ்ருத்தி ஆகி உலகமே சுபிக்ஷமாக இருக்கும். அப்படி 'லோகபால:' 'பஜே' இந்த ஸ்வாமியை நான் வழிபடுகிறேன் என்று ஆதி சங்கரர் சொல்றார்.

मयूराधिरूढं महावाक्यगूढं मनोहारिदेहं महच्चित्तगेहम् ।
महीदेवदेवं महावेदभावं महादेवबालं भजे लोकपालम् ॥ ३॥

மயூராதிரூடம் மஹாவாக்யகூடம்

மனோஹாரிதேஹம் மஹத்சித்தகேஹம் |

மஹீதேவதேவம் மஹாவேதபாவம்

மஹாதேவ பாலம் பஜே லோகபாலம் ||

நாளைக்கு ‘யதா ஸந்நிதானம் கதா மானவா மே’ என்கிற நாலாவது ஸ்லோகத்தை பாப்போம்.

வெற்றிவேல் முருகனுக்கு ஹரஹரோ ஹரா.

ஸுப்ரமண்ய புஜங்கம் –நான்காவது ஸ்லோகம் –முக்தி தரும் முருக தரிசனம்

நேற்றைக்கு,

मयूराधिरूढं महावाक्यगूढं मनोहारिदेहं महच्चित्तगेहम् ।

महीदेवदेवं महावेदभावं महादेवबालं भजे लोकपालम् ॥ ३

மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்

மனோஹாரிதேஹம் மஹத்சித்த கேஹம் |

மஹீதேவதேவம் மஹாவேத பாவம்

மஹாதேவ பாலம் பஜே லோகபாலம் ||

அப்படீங்கிற அழகான ஸ்லோகத்தை பார்த்தோம். இன்னைக்கு,

यदा सन्निधानं गता मानवा मे भवाम्भोधिपारं गतास्ते तदैव ।

इति व्यञ्जयन्सिन्धुतीरे य आस्ते तमीडे पवित्रं पराशक्तिपुत्रम् ॥ ४॥

யதா ஸந்நிதானம் கதாமானவா மே

பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ |

இதி வ்யஞ்ஜயன் ஸிந்து தீரேய ஆஸ்தே

தமீடே பவித்ரம் பராசக்தி புத்ரம் ||

ன்னு ஒரு ஸ்லோகம், முருகப் பெருமானோட சன்னிதி விசேஷத்தை சொல்றது. ஆச்சார்யாள், திருச்செந்துர்ல கடற்கரையில, முருகப் பெருமானை தரிசனம் பண்ணி ஸ்தோத்ரம் பண்ண ஆரம்பிக்கிறார். அப்போ அவருக்கு 'முருகப் பெருமான் எதுக்கு இந்த கடற்கரையில குடி கொண்டு இருக்கார்?' ன்னு ஒரு ஸந்தேஹம் வந்ததாம்.

புராணங்கள்ல என்ன வரதுன்னா, சூரபத்மன் கடலுக்குள்ள வீரமஹேந்திர பட்டணம்ன்னு ஒண்ணை கட்டிண்டு அங்க வசிக்கிறான். அப்போ ஸுப்ரமண்ய ஸ்வாமி, இந்த கடற்கரையில ஒரு படை வீடு அமைச்சு, அந்த சூரபத்மனை போரிட்டு ஜெயிச்சார். அதனால இங்கயே குடியிருக்கார்ன்னு ஸ்கந்த புராணத்துல வர்றது. ஆனா, ஆச்சார்யாள் சொல்றார்,

'யதா' எப்பொழுது, 'மானவா' மனிதர்கள், 'மே ஸந்நிதானம் கதாஹா', என்னுடைய இந்த சந்நிதியை வந்து அடைகிறார்களோ, 'தே' அந்த மனிதர்கள், 'ததைவ' அப்பொழுதே, 'பவாம்போதி பாரம் கதாஹா' ஸம்ஸாரம் என்னும் சமுத்திரத்தின் அக்கரையை அடைந்தவர்களாக ஆவார்கள், 'இதி வ்யஞ்ஜயன்' ன்னு ஒரு விஷயத்தை புரிய வெச்சுண்டு, சூசனை பண்ணிண்டு, 'ஸிந்து தீரே' இப்படி கடற்கரையிலே 'ய ஆஸ்தே' எந்த பகவான் இருக்காரோ, பூரண சான்னித்தியதோடு விளங்குகிறாரோ, 'பவித்ரம்' மஹா பவித்ரமானவரும் 'பராசக்தி புத்ரம்' பராசக்தியின் புத்திரரும் ஆன அந்த ஸுப்ரமண்யரை 'ஈடே' நான் ஸ்தோத்ரம் பண்றேன், ன்னு இந்த ஸ்லோகம்.

அதாவது, ஆச்சார்யாள் சொல்ற காரணம் என்னன்னா, “உங்களுக்கு ஸ்கந்தகிரி-ன்னு அழகான ஒரு இடத்தை கைலாசத்துக்கு பக்கத்துல விஸ்வகர்மா நிர்மாணம் பண்ணி கொடுத்து இருக்கான். அப்பாவோட கைலாசம் இருக்கு, அம்மாவோட மணித்வீபம் இருக்கு. ஆனா இந்த கடற்கரையில ஏன் இருக்கேள் ன்னு நான் தெரிஞ்சுண்டுட்டேன். “பக்தர்கள் என்னை வந்து தர்சனம் பண்ணின மாத்திரத்தில், பிறப்பு இறப்பு முதலிய துக்கங்கள் கொண்ட இந்த, சம்சார பந்தத்தில் இருந்து அவாளை கரை சேர்ப்பேன். அவாளை பரமானந்த பரிதர்களாக ஆக்குவேன்” ன்னு “என்னை வந்து திருச்செந்தூர்ல தர்சனம் பண்ணா, ஒரு ஸ்ரமமும் இல்லாம முக்தர்களா ஆயிடுவா”, ன்னு காண்பிக்கறதுக்காகத் தான் இங்க நின்னுண்டு இருக்கேள்ன்னு சொல்லி முருகப் பெருமானுடைய அபார கருணையையும் அந்த திருச்செந்தூர் க்ஷேத்ரத்தோட மஹிமையும் சொல்றார்.

இப்படி ஆசார்யாள் நம்மளை கொஞ்சம் கொஞ்சமாக ஆற்றுப் படுத்தறார். இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்துடைய பெருமை என்னென்னா அதோட நிர்வாஹம். ஸ்வாமி தர்சனம் பண்ணின ஆசார்யாள் முக்தர் ஆகி விடுறார். “இப்படி நீங்க சுலபமா எனக்கு முக்தி கொடுத்தேளே, உங்களுக்கு நான் எப்படி நன்றி பண்ணுவேன்?” ன்னு சொல்லி, அவர் ஒரு அழகான ஒரு ஸ்தோத்ரம் பண்ணறார். அது தான் இந்த ஸுப்ரமண்ய புஜங்கம்.

எல்லாராலேயும் எல்லா நேரத்துலேயும் கிளம்பி திருச்செந்தூர் போக முடியுமா? நாம எங்க இருக்கோமோ அங்கேயே இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தை பாராயணம் பண்ணினா, அங்கேயே அந்த ஸுப்ரமண்ய தரிசனமும், திருச்செந்தூர் க்ஷேத்ரத்துல இருக்கிற அந்த புண்யமும் பலனும் நமக்கு கிடைச்சுடும். அப்படி ஒரு அனுக்கிரஹத்தை ஆச்சார்யாள் பண்றார். இது ஸ்வாமிகளுடைய ஒரு பாங்கு. அவர் மட்டுமல்ல. மஹான்கள் எல்லாம் சொன்னது தான். ஸ்வாமிகள் அதை stress-பண்ணி சொல்லுவார், “நந்ததி மம ஹ்ருதி காசன மந்திரயந்தீ நிரந்தரம் காஞ்சீம்’ ன்னு மூகபஞ்ச சதி, ஆர்யா சதகம் அம்பத்தி ரெண்டாவது ஸ்லோகம், ‘காசன மந்திரயந்தீ நிரந்தரம் காஞ்சீம் ‘ காஞ்சிபுரத்தில், ஒரு மந்திரத்துல, ஒரு கோவில்ல, நிரந்தரமா காமாக்ஷி குடி இருக்கா, ன்னு சொல்றா. ஆனா ‘நந்ததி மம ஹ்ருதி’ என் மனத்தில் அவள் மிகவும் சந்தோஷமாக வசிக்கிறாள்ன்னு மூக கவி சொல்றார். இந்த மூகபஞ்ச

சதியை படிச்சா அங்க காமாக்ஷி இருக்கா, ராமாயணத்தை படிச்சா அங்க ராமர் இருக்கார் ன்னு ஸ்வாமிகள் சொல்லுவார். அந்த மாதிரி, இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தை எங்கே பாராயணம் பண்ணினாலும், அங்கே திருச்செந்தூரில் ஸுப்ரமண்யர் சன்னதியில் என்ன அனுக்கிரஹம் கிடைக்குமோ, அது கிடைக்கும்ன்னு ஸ்வாமிகள் சொல்வார்.

ஆனாலும் முடிஞ்ச போது ஸுப்ரமண்ய ஸ்வாமியை அந்த க்ஷேத்ரத்திலேயே போய் நாம தர்சனம் பண்ணனும். எங்களுடைய அப்பா திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அதனால திருச்செந்தூர் முருகப் பெருமான் எங்களுக்கு குல தெய்வம். குழந்தைகளுக்கெல்லாம் முடி இறக்கறதுக்கு, அப்படி இப்படி ஒரு இருபது வாட்டி போயிருப்போம். அந்த க்ஷேத்ரத்துக்கு போனா அந்த ஸன்னிதியோட சந்தோஷம் தனி தான். அதைத் தான் இந்த மஹானும் உணர்ந்து சொல்றார்.

இந்த இடத்துல 'பராசக்தி புத்ரம்' ன்னு சொல்றார். எனக்கு தோணித்து, இப்படி சன்னிதில வந்து நின்ன உடனே தன் பக்தர்களை முக்தர்களாக ஆக்கணும்னா, அவ்வளோ கருணை முருகப் பெருமானுக்கு எங்கயிருந்து வந்ததுன்னா, அவர் பராசக்தி புத்ரனா இருக்கறதுனால வந்தது ன்னு எனக்கு சந்தோஷமாக தோண்றது. அந்த

भवानि त्वं दासे मयि वितर दृष्टिं सकरुणामिति स्तोतुं वाञ्छन् कथयति भवानि त्वमिति यः ।

तदैव त्वं तस्मै दिशसि निजसायुज्यपदवीं मुकुन्दब्रह्मेन्द्रस्फुटमकुटनीराजितपदाम् ॥

'பவானி த்வம் தாஸே மயி விதர திருஷ்டிஸ் ஸகருணாம்

இதி ஸ்தோதும் வாஞ்ச²ன் கத²யதி ப⁴வானி த்வமிதி ய: ।

ததை³வ த்வம் தஸ்மை தி³ஶஸி நிஜஸாயுஜ்யபத³வீம்

முகுந்த³ப்³ரஹ்மேந்த்³ரஸ்பு²டமகுடனீராஜிதபதா³ம் ॥

ன்னு ஒரு ஸ்லோகம் இருக்கு ஸௌந்தர்ய லஹரில, 'பவானி த்வம்' ஹே பவானி, பவனுடைய மனைவியே, 'தாஸே மயி' தாஸனான என்னிடத்திலே, உன்னுடைய கருணை கூர்ந்த கடாக்ஷத்தை காண்பிக்க வேண்டும் என்று, ஸ்தோத்ரம் பண்ண விரும்பி, ஒரு பக்தன் வந்து, 'பவானித்வம்' ன்னு ஆரம்பிச்சானாம். ஸம்ஸ்க்ருதத்துல, 'பவானி' ன்னா ஆக விரும்புகிறேன் ன்னு

ஒரு அர்த்தம், 'த்வம் பவானி' ன்னா நீயாக ஆக விரும்புகிறேன், னு சொல்றான் என்று அம்பாள் நினைச்சுண்டு அவனுக்கு 'நிஜ சாயுஜ்ய பதவீம்', தானாகவே ஆகும்படியா, அம்பாளாகவே அந்த பக்தனை ஆக்கிட்டாளாம், அவ்வளோ அபார கருணை, ன்னு அங்கே ஆதி சங்கரர் சொல்றார். அப்பேற்பட்ட பராசக்தி புத்ரனா இருக்கறதுனால தான், இவரும் தன் ஸன்னிதியில் வந்து நின்னவாளுக்கு மோக்ஷத்தை கொடுத்துடுறார், முக்தர்களா ஆக்கிடுறார், அவாளை ஸம்ஸார பாந்ததுலேர்ந்து விடுவிச்சுடுறார், ன்னு இந்த ஸ்லோகத்துல ஆச்சார்யாள் சொல்றார்.

அருணகிரிநாதர், நிறைய அம்பாள் பரமா சொல்லுவார். அப்படி வரும் போதெல்லாம் மடமடமட ன்னு அம்பாளோட நாமாவளியெல்லாம் அடுக்கி இப்பேற்பட்ட அம்பாளுடைய குழந்தைன்னு சொல்வார். 'நாம பாராயண ப்ரீதா' ன்னு அம்பாளுக்கு ஒரு பேர் இருக்கு இல்லையா! அந்த மாதிரி திருப்புகழை எடுத்தாலே அம்பாளுடைய நாமங்கள் அழகழகா இருக்கும். அதுல ஒன்றை சொல்லிட்டு இன்னைக்கு பூர்த்தி பண்ணிக்கிறேன். யுவதி, பவதி, பகவதி, மதுர வசனி, பைரவி, கௌரி, உமையாள், த்ரிஸுலதரி, வனபஜை, மதுபதி, அமலை, விஜயை, திரிபுரை, புனிதை, வனிதை, அபினவை, அனகை, அபிராம நாயகி தன் மதலை, மலைகிழவன், அனுபவன், அபயன் உபய சதுர் மறையின் நடுமுடிவில் மணநாறு சீரடியே' ன்னு சீர்பாத வகுப்பு-ன்னு ஒண்ணு இருக்கு அதோட கடைசி வரிகள். அப்படி அந்த பராசக்தி புத்ரனா இருக்கறதுனால முருகப் பெருமான், அவ்வளோ கருணையினால அவரை வணங்குபவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கிறார்.

यदा सन्निधानं गता मानवा मे

भवाम्भोधिपारं गतास्ते तदैव ।

इति व्यञ्जयन्सिन्धुतीरे य आस्ते

तमीडे पवित्रं पराशक्तिपुत्रम् ॥ ४॥

யதா ஸந்நிதானம் கதாமானவா மே

பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ

இதி வ்யஞ்ஜயன் ஸிந்து தீரேய ஆஸ்தே

தமீடே பவித்ரம் பராசக்தி புத்ரம்

“இந்த கருணைக்கு பிரதியாக என்னால என்ன பண்ண முடியும்? நான் ‘ஈடே’ ன்னா ஸ்தோத்ரம் பண்றேன்னு அர்த்தம். இப்பேற்பட்ட இந்த கருணா மூர்த்தியை நான் ஸ்தோத்ரம் பண்றேன்னு பீடிகை போட்டு, நம்மளை அந்த திருச்செந்தூருக்கு அழைச்சுண்டு வந்து இருக்கார். அடுத்தடுத்த ஸ்லோகங்கள்ல அந்த க்ஷேத்ரத்தோட மஹிமை, ஸ்வாமியோட பாதத்துலேர்ந்து கேசம் வரைக்கும், ரூப வர்ணனை பண்ணிட்டு, ‘என் முன்னாடி வந்து நில்லுங்கள்’ ன்னு வேண்டிண்டு, அதுக்கப்பறம் சில ப்ரார்த்தனைகள், இந்த ஸ்தோத்திரத்துல அப்படி ஒரு நிர்வாகம் பண்ணியிருக்கார்.

நாளைக்கு ‘யதாப்தேஸ்தரங்கா:’ என்ற அஞ்சாவது ஸ்லோகத்தை பார்ப்போம்.

வெற்றிவேல் முருகனுக்கு ஹரஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் –ஐந்தாவது ஸ்லோகம் –முருக தரிசனம் மனக் கவலைகளை போக்கும்</u>

ஸுப்ரமண்ய புஜங்கதுல நாலு ஸ்லோகம் பார்த்து இருக்கோம். அஞ்சாவது ஸ்லோகம்

यथाब्धेस्तरङ्गा लयं यान्ति तुङ्गास्तथैवापदः सन्निधौ सेविनां मे ।

इतीवोर्मिपङ्क्तीर्नृणां दर्शयन्तं सदा भावये हृत्सरोजे गुहं तम् ॥ ५॥

யதாப்தேஸ்தரங்கா லயம் யாந்தி துங்கா:

ததைவாபத: ஸந்நிதௌ ஸேவினாம் மே |

இதீவோர்மிபங்தீர் ந்ருணாம் தர்சயந்தம்

ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம் ||

ன்னு ஒரு ஸ்லோகம், 'அப்தி'-ன்னா கடல், தரங்கங்கள்-ன்னா அலைகள், 'யதா(2)' எப்படி, 'அப்தேஸ்தரங்கா' கடலின் அலைகள், 'துங்காஹா' பெரிய அலைகள், பெரிய அலைகள் திருச்செந்தூர்-ல கடற்கரைக்கு வந்த உடனே,

‘லயம் யாந்தி’ அலைகள் எல்லாம் அடங்கி, கரையில ஒதுங்கிடறது இல்லையா? எப்படி அந்த மாதிரி அலைகள் லயம் அடைகிறதோ, ‘ததை(2)வ’ அப்படியே, என்னுடைய தரிசனத்தை செய்யும் ஜனங்களுக்கு, ‘ஆபாதஹ’ எல்லா விதமான ஆபத்துகளும், ‘ஸந்நிதௌ’ என்னுடைய சன்னிதியில் ‘லயம் யாந்தி’ லயத்தை அடைந்து விடும் ‘இதி’ என்று ‘ஊர்மிபங்திஹி’ அலைகளை, கடற்கரையிலே வரிசையா அலைகள் வந்து மோதி கொண்டே இருக்கிறது. அந்த அலைகளை ‘தர்சயந்தம்’ காண்பிச்சிண்டு இந்த ஸுப்ரமண்ய ஸ்வாமி கடற்கரையில இருக்கார். ஏன் கடற்கரையில இருக்கார் அப்படீங்கிறதுக்கு நேற்று ஒரு காரணத்தை சொன்னார் ஆதி ஆசார்யாள். இன்னிக்கு ஒரு காரணம் சொல்றார், நேத்து சொன்னது ‘பவாம் போதி’ சம்சார கடலையே நான் தாண்ட வைத்து விடுவேன், முக்தி அளிப்பேன், என்று கடற்கரையிலே இருந்ததுண்டு சூசகமா சொல்லிண்டு இருக்கார், ன்னு சொன்ன மாதிரி, இன்னிக்கு கடல் அலைகளை காண்பிச்சு, எவ்வளோ பெரிய அலையா இருந்தாலும், இந்த கரையில வந்த உடனே ‘லயம் யாந்தி’ இல்லாம போயிடறது. அப்படி என்னுடைய பக்தர்கள், என்னை வந்து சேவிப்பவர்களுடைய, ஆபத்துகள் எல்லாமே லயம் அடைந்துவிடும் என்பதை காண்பிச்சுக் கொண்டு ப்ரஸித்தமாக விளங்கும் ‘தம் குஹம்’ முருகனுக்கு குஹப்பெருமான்-னு ஒரு பேரு, அந்த குஹனை ‘ஸதா’ இப்பொழுதும், ‘ஹருத்ஸரோஜே’ என் ஹ்ருதய தாமரையில், ‘பாவயே’ த்யானம் செய்கிறேன்”, ன்னு இந்த ஸ்லோகம்.

ஆபத்துக்கள்ன்னு சொல்லும் போது, மூணு விதமான ஆபத்துகள், ஆத்யாத்மீகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம். ‘ஆதி(4)’ ன்னா, மனோ வியாதின்னு அர்த்தம், அதுனால வர உடம்பு வியாதி. வியாதிகளுக்கு காரணம், ஆயுர்வேதத்துல மூன்று விதமா சொல்றா. ‘ஆத்மீகம்’ நம்மளே உண்டு பண்ணிக்கறது. கண்டதை திங்கறதுனாலயோ, இல்ல மனச போட்டு குழப்பிண்டு, பலவிதமான குருட்டு யோஜனையாலயோ, உடம்பு வியாதி வர வைச்சிக்கிறோம், மனக் கவலைகளை ஏற்படுத்திக்கறோம். வேற வெளியில இருந்துன்னு இல்லாமல், நம்மளே நமக்கு கொடுத்திக்கறதுக்கு ‘ஆத்யாத்மீகம்’-ன்னு பேரு. ‘ஆதிதைவிகம்’ அப்படீன்னா இந்த பூர்வ வினைகள்னால, அது

பலவிதமாக வரது. fate ன்னு சொல்ற மாதிரி, கிரஹங்கள் மூலமாக, பகவான் நமக்கு கொடுக்கக்கூடிய வினைப் பயன்கள், அதுனால வரக்கூடிய கஷ்டங்கள். ‘ஆதிபௌதிகம்’ இந்த பஞ்ச பூதங்கள் மூலமாக வரது. திடீர்னு வெயில் ஜாஸ்தியாறது, திடீர்னு குளிர் ஜாஸ்தியாறது, அது மூலமா வரக் கூடிய கஷ்டங்கள், வ்யாதிகள். இந்த மூணு விதமான ஆபத்துகளும், முருகப் பெருமானை தரிசனம் பண்ணினால் வேரோடு நசிச்சுப் போயிடும், ன்னு இந்த ஸ்லோகத்துல சொல்றார்.

போன ஸ்லோகத்துல முருகனுடைய தர்சனத்துனால முக்தி கிடைக்கும்னு சொன்னார். இந்த ஸ்லோகத்துல முருகனுடைய தர்சனத்துனால உடல், மனோ வ்யாதிகள் எல்லாமே போயிடும்ன்னு சொல்றார்.

இந்த ஸ்லோகத்தை சொல்லும் போது, பகவானை தர்சனம் பண்ணி, ஜீவன் முக்தனாக ஆன பின்ன, என்ன கஷ்டம்? ன்னு தோணும். அப்படி ஜீவன்முக்தி அடைந்த பின்னையும், மஹான்கள் கொஞ்ச காலம் பாக்கி பூமியில இருக்கா இல்லையா, அதை ப்ராரப்த கர்மான்னு சொல்றா. அந்த ப்ராரப்த காலத்தை, கர்மாவை அனுபவிச்சு தீர்க்கக்கூடிய அந்த காலத்தில், அவா ஞானத்துனால அவா, அவா பூர்வ கர்மாவை எல்லாத்தையும் எரிச்சுண்டுட்டா, மிஞ்சி இருக்கிற ஒரு சொட்டு, அதை இந்த ஜென்மாவுல அனுபவிச்சு தீர்க்கறா. ஆகாமி, சஞ்சிதம் எல்லாத்தையும் எரிச்சுண்டுட்டா, ப்ராரப்தம் ன்னு பலன் கொடுக்க ஆரம்பித்து விட்ட அந்த கர்மா மட்டும் பாக்கி இருக்கு, அதை அனுபவிக்கிறா. அந்த நேரத்தில அவாளுக்கு கர்ம பந்தம் ஒண்ணும் கிடையாது, அவா பண்ண கூடிய பாப புண்யங்கள் அவாளை ஒட்டாது. அவாளை போய் நமஸ்காரம் பண்ணினா அவாளோட புண்யம் கிடைக்கும், அவாளை தூஷணை பண்றவாளுக்கு அவாளோட பாபம் போகும் ன்னு இருக்கு. அந்த வேளையில மஹான்கள் பாபமே பண்ண மாட்டா, புண்யம் தான் பண்ணி இருப்பா. அவாளை நமஸ்காரம் பண்ணினா நமக்கு அந்த புண்யம் கிடைக்கும்.

அவாளுக்கு என்ன கஷ்டம், என்ன ஆபத்து? போன ஸ்லோகத்துல முருக தரிசனத்தால் முக்தி கிடைச்சதுன்னு சொன்னவர், அடுத்த ஸ்லோகத்துல மனோ வியாதிகளும் உடம்பு வியாதிகளும் போகும்னு சொல்றாரே ன்னா, மஹான்கள், தெய்வத்தோட அனுக்ரஹத்தால ஞானம் அடைஞ்ச பின்ன அவாளே

தெய்வமாக ஆகிடறா. தெய்வத்தோட ஒரு அபாரமான, ஆச்சர்யமான குணம் கருணை. அந்த கருணையினால் மஹான்கள் தங்களுடைய சிஷ்யர்களுக்கு, பக்தர்களுக்கு வரக்கூடிய உடல் வியாதி மனோ வியாதிகளை போக்கறா. அந்த பிராரப்தத்தை அவா ரெண்டு விதமாக கழிக்கறா. பகவானுடைய கதைகளை பேசிண்டு, கேட்டுண்டு, பக்தி பண்ணிண்டு கழிக்கறா. அதை தவிர, வந்து நமஸ்காரம் பண்றவா, அதாவது கஷ்டம் னு சொன்னா, அந்த கஷ்டத்தை கேட்டு அவாளுக்கு ஆறுதல் சொல்றது, இந்த ரெண்டுமே அவா equally important தெய்வ காரியமாக நினைச்சு பண்றா. இதை நான் என்னுடைய வாழ்க்கையில் நேரே ஸ்வாமிகள் கிட்ட அனுபவிச்சு இருக்கேன். மஹா பெரியவாளும் அதைத் தான் பண்ணிண்டு இருந்தா.

ஸ்வாமிகள் 75 வருஷங்கள் ஜீவியவந்தராக இருந்தார். கடைசி வருஷம் அவர் சித்தி அடையறதுக்கு ஒரு மூணு மாசம் முன்னாடி ஒரு நாள் சொன்னார் ‘கார்த்திகை இருபத்தி எட்டாம் தேதி நாராயணீயம் day னு சொல்றா. அந்த நாராயணீயத்துல நூறு தசகங்கள். கார்த்திகை இருபத்தி எட்டாம் தேதி அவர் நூறாவது தசகத்தை எழுதி முடிச்சவுடன் நாராயண பட்டத்திரிக்கு ஶ்ரீ குருவாயூரப்பன் தரிசனம் கிடைச்சது, அவருடைய வியாதிகள் எல்லாம் போச்சு, ன்னு சொல்லுவா. அதுனால, அதுக்கு முன்னாடி நூறு நாட்கள் எண்ணிண்டு, இன்னிலேர்ந்து ஆரம்பிச்சு, தினமும் ஒரு தசகம் வீதமாக ஒரு ஆவர்த்தி பண்றது வழக்கம். நான் இன்னிக்கு ஆரம்பிச்சு இருக்கேன்’ ன்னு ஸ்வாமிகள் சொன்னார். அதுலேர்ந்து நூறாவது நாள் முடிஞ்ச பின்ன, ஒரு இருபது நாட்களில் ஸ்வாமிகள் coma ல போயிட்டார். அப்பறம் சித்தி ஆகி விட்டார். என்னோட நம்பிக்கை என்னவென்றால், ஸ்வாமிகள் ‘எனக்கு எப்ப கிருஷ்ண தரிசனம் கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருந்தார். அவர் அந்த நூறு தசகங்களை படிச்சு முடிச்ச போது அவருக்கும் குருவாயூரப்பனுடைய தரிசனம் கிடைச்சு, பகவானோடு இரண்டறக் கலந்து ஜீவன் முக்தராக ஆயிட்டார். அதுக்கப்பறம் இந்த உடம்பை வெச்சுக்கறதுல ஆர்வம் போயிடுத்து. அதுனால சித்தி ஆகி விட்டார், ன்னு நான் நினைப்பேன்.

அப்படி ஜீவன் முக்தராக அவர் இருந்த அந்த காலத்தில், அவருடைய வாழ்க்கையின் கடைசீ இருபது நாட்களில், எனக்கு குழந்தை பிறந்து இருந்தான். அந்த குழந்தைக்கு ரகுராமன் னு பேர் வெச்சார். ஏன் ரகுராமன் னு

பேர் வெச்சார் னு தனியாக ஒரு இடத்தில் பேசி இருக்கேன். எங்க அப்பா பேர் சுந்தரம். அப்பா ஆசீர்வாதம் பண்ணி எனக்கு குழந்தை பிறந்ததுனால, ரகு வம்சத்தில் வந்த ராமன் என்பது போல, சுந்தர மாமாவின் பேரன், அந்த நல்ல குணங்களோட அவன் இருக்கட்டும்", னு சொல்லி ரகுராமன் னு பேர் வெச்சார். அதுக்கப்பறம் அடுத்த பத்து நாட்களில் குழந்தைக்கு, பிறந்த குழந்தைகளுக்கு வரக்கூடிய ஒரு mild jaundice வந்தது. அப்ப நான் ஸ்வாமிகள் கிட்ட போய் சொன்ன போது, விபூதி வெச்சுண்டு, இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தை ஜபிச்சு குடுத்தார். அதைக் குழந்தைக்கு இட்டவுடன் அந்த ஜுரம் போய்விட்டது. அப்படி ஜீவன் முக்தர்களாக ஆன பின்னும், ஸுப்ரமண்ய புஜங்கத்தை வியாதிகளையும் மனக் கவலைகளையும் போக்கறதுக்கு சிஷ்யர்களுக்காக உபயோகப் படுத்தினா என்பதை நான் அனுபவித்து சொல்றேன். அதுனால முதல் ஸ்லோகத்துல முருக தரிசனத்துனால முக்தி கிடைக்கும்னு சொல்லிட்டு அதுக்கு அடுத்த ஸ்லோகத்துல, வியாதிகளும் மனக் கவலைகளும் போகும்னு சொல்றாரே என்று கேட்டால், நம்மைப் போன்ற சித்யர்களுக்காக ஆசார்யாள் சொல்லி இருக்கார்னு இன்னிக்கு தோணித்து. இதோட பூர்த்தி பண்ணிக்கறேன்.

यथाब्धेस्तरङ्गा लयं यान्ति तुङ्गास्तथैवापदः सन्निधौ सेविनां मे ।

इतीवोर्मिपङ्क्तीर्नृणां दर्शयन्तं सदा भावये हृत्सरोजे गुहं तम् ॥ ५॥

நாளைக்கு 'கிரௌ மந்நிவாஸே' னு ஆரம்பிக்கற ஆறாவது ஸ்லோகத்தை பார்ப்போம்.

நம: பார்வதீ பதயே… ஹர ஹர மஹாதேவா

ஸுப்ரமண்ய புஜங்கம் – ஆறாவது ஸ்லோகம் – சரவணபவ எனும் திருமந்திரம்

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல அஞ்சாவது ஸ்லோகம்.

यथाब्धेस्तरङ्गा लयं यान्ति तुङ्गा-

स्तथैवापदः सन्निधौ सेविनां मे ।

इतीवोर्मिपङ्क्तीर्नृणां दर्शयन्तं

सदा भावये हृत्सरोजे गुहं तम् ॥ ५

யதாப்தேஸ்தரங்கா லயம் யாந்தி துங்கா

ததைவாபத: ஸந்நிதௌ ஸேவதாம் மே |

இதீவோர்மிபங்தீர் ந்ருணாம் தர்சயந்தம்

ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம் ||

ன்னு இந்த ஸ்லோகத்தை பார்த்தோம். எந்த பக்தர்கள் முருகப் பெருமானை திருச்செந்தூர்ல சேவிக்கறாளோ, அவாளுக்கு எல்லா விதமான ஆதி வியாதிகளும் நிவர்த்தி ஆயிடும்-னு இதற்கு அர்த்தம். இன்னிக்கு லோகம்

गिरौ मन्निवासे नरा येऽधिरूढा-

स्तदा पर्वते राजते तेऽधिरूढाः ।

इतीव ब्रुवन्गन्धशैलाधिरूढः

स देवो मुदे मे सदा षण्मुखोऽस्तु ॥

கிரௌ மந்நிவாஸே நரா யேSதிரூடா

ததா பர்வதே ராஜதே தேSதி ரூடா |

இதீவ ப்ருவன் கந்தசைலாதி ரூட:

ஸதேவோ முதேமே ஸதா ஷண்முகோஸ்து ||

ன்னு ஒரு ஸ்லோகம். ஆசார்யாள், திருச்செந்தூர் க்ஷேத்ர மஹிமையெல்லாம் சொல்லிண்டே வர்றார். அங்க பக்கத்துல கந்த மாதன பர்வதம் ன்னு ஒண்ணு இருக்கு. இப்ப வள்ளி குஹை-ன்னு ஒண்ணு காண்பிக்கிக்கறா. அதுதான் கந்தமாதன பர்வதம்-னு சொல்றா. முருகப் பெருமான் மலையில குடியிருப்பார், மலைதோறும் முருகன்னு சொல்லுவா இல்லையா? இவரோட அப்பா, பரமேஸ்வரன் கைலாச மலையில இருக்கார் இல்லையா? அதனால பிள்ளையும் மலைகளை ரொம்ப விரும்பற ஸ்வாமி. அப்படி அந்த கந்தமாதன பர்வதத்துல விளங்கக் கூடிய முருகனை, அந்த வள்ளி குஹையில முருகனும், வள்ளியுமா இருக்கற ஒரு சன்னிதி இருக்கு. திருச்செந்தூர் போனா அங்கேயும் போய் அவசியம் ஸ்வாமி தர்சனம் பண்ணணும். பண்ணிணா அதோட பலன் என்னன்னு இந்த ஸ்லோகத்துல சொல்றார்.

'யே நராஹா' எந்த மனிதர்கள் 'மந்நிவாஸே' என்னுடைய வாசஸ்தானமாகிய இந்த கந்தமாதன மலையில் 'அதிரூடாஹ' ஏறுகிறார்களோ, கோவில்ல ஸ்வாமி கடலை பார்த்துண்டு இருப்பார். முன்னாடி போய் தர்சனம் பண்ணணும். பக்கத்துல கொஞ்சம் தூரம் நடந்து போனா அங்க கந்தமாதான மலை, வள்ளி

குஹை இருக்கும். அங்க கொஞ்சம் படி ஏறுகிற மாதிரி இருக்கும். அங்க போய் 'அதிரூடாஹ பவந்தி', யார் அந்த மலையில ஏறுகிறாளோ, அங்க ஸ்வாமி தர்சனம் பன்றாளோ, 'தே' அவர்கள் அப்போதே, 'ராஜதே பர்வதே' ராஜதம்னா வெள்ளினு அர்த்தம். கைலாச மலை, வெள்ளி மலை. கைலாச மலையில் 'அதிரூடாஹ' ஏறி வாசம் பண்ணுகிறவர்களாக, அதவாது கைலாசத்துக்கு போன புண்யம் கிடைக்கும் ன்னு ஒரு அர்த்தம்.

இன்னொரு அர்த்தம், பகவானோட சாலோக்யம்ன்னு, பகவான் எந்த உலகத்துல இருக்காரோ அந்த உலகத்துலேயே நாம போயி இருக்கறது ஒரு பெரிய பாக்யம். அதனால் தானே ஓடி ஓடிப் போய் பெரியவாளை தரிசனம் பண்றோம். அந்த அதிஷ்டானத்துக்கு போனாலே அந்த ஒரு vibration இருக்கு. அனுக்ரகம் கிடைக்கும், என்கிற மாதிரி, அந்த முருகப் பெருமானோட பக்கத்துல இருக்கறதுங்கறது, பக்தர்கள் வேண்டும் ஒரு பாக்யம். அப்படி இந்த திருச்செந்தூர்ல வந்து இந்த கந்தமாதான மலையில ஏறி ஸ்வாமியை தர்சனம் பண்ணினா, கைலாசத்துல ஸ்வாமி பக்கத்துல இருப்பா, ன்னு சொல்றார் ஆதி ஆச்சார்யாள். 'இதி ப்ருவன் இவ' சொல்லுகிறவர் போல், அந்த கடற்கரையில முருகப் பெருமான் இருக்கார். மலை பக்கத்துல இருக்கார்ன்னா என்ன அர்த்தம்? இந்த மலையில ஏறினா கைலாசத்துல ஏறி முருகப் பெருமான் பக்கத்துலேயே நித்யவாசம் பண்ணலாம்ன்னு அர்த்தம்-னு சொல்றார்.

'கந்த சைலாதிரூடாஹா' கந்த சைலத்திலிருக்கும் 'ஷண்முக:' ஆறுமுகத்தோடு கூடிய 'தேவஹ' இந்த தெய்வமான ஸுப்ரமண்ய ஸ்வாமியை தரிசித்தேன். அவர் எனக்கு 'ஸதேவோ முதே மே ஸதா ஷண்முகோஸ்து' 'முதமே அஸ்து' ன்னா எனக்கு எப்போதும் அவர் சந்தோஷத்தை கொடுக்கட்டும்ன்னு அர்த்தம். இந்த 'ஷண்முக:' என்கிற இடத்துல தேதியூர் சாஸ்த்ரிகள் ஆறு முகங்களை எடுத்துண்டு முருகப்பெருமான் ஆறு பேருக்கு ஷடக்ஷர மந்தரத்தை உபதேசம் பண்ணினார்ன்னு சொல்லியிருக்கார். அதவாது ஸநத்குமாரர், நாரத மஹரிஷி, அகஸ்தியர், ப்ரம்மா, தேவேந்திரன், சரஸ்வதி தேவி, இந்த ஆறுபேருக்கும், ஒரே காலத்துல ஷடக்ஷரி உபதேசம் பண்றதுக்காக ஆறு முகத்தை கொண்டார்ன்னு சாஸ்திரங்கள் இருக்குன்னு சொல்றார்.

அதுல ஷடக்ஷரி என்கிறது 'சரவணபவ' அப்படீங்கிற மந்த்ரம். தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் பெரிய மஹான். அதனால நாம அவரை ஒரு குருவா

நினைச்சுண்டு, அவர் புஸ்தகத்துல எழுதியிருக்கறதுனால, அந்த ஷடக்ஷரி மஹிமையை நான் படிக்கிறேன். முதல் எழுத்தான ச-காரத்தால் லக்ஷ்மியும், இரண்டாவது ர-காரத்தால் வித்தையையும், மூன்றாவது வ-காரத்தால் போக மோக்ஷத்தையும், நான்காவது ண-காரத்தால் சத்ரு ஸம்ஹரமும், ஐந்தாவதான ப-காரத்தால் ம்ருத்யுவை ஜெயிப்பதும், ஆறாவதான வ-காரத்தால் நோயற்ற வாழ்வும் கிடைக்கும். அதனால இந்த ஷண்முகராக பூஜை பண்ணினா, தர்சனம் பண்ணா, இந்த ஆறுமே கிடைக்கும். இப்படி எல்லாமே கிடைச்சிடுதுன்னா சந்தோஷம்தானே. நமக்கு சந்தோஷத்தை கொடுக்கிறார்ன்னு இருக்கு. எனக்கு இந்த ஷடக்ஷரிங்கிறதை படிச்சா உடனே அருணகிரிநாதர் ஒரு பாட்டு சொல்லியிருக்கார், அது ஞாபகம் வரது.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்

ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி

ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி

யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்

ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது

ஈசஎன மானமுன தென்றுமோதும்

ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை

யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ

ன்னு சொல்றார் இந்த ஆறுமுகம், ஆறுமுகம்-னு அந்த சரவணபவன்னு ஜபிச்சு அனுபூதி-ஆனவர்கள் ன்னு ஒரு அர்த்தம். ஜபிச்சு விபூதி இட்டுக்க கூடியவர்கள் னு இன்னொரு அர்த்தம். அந்த மாதவர்கள், தபஸ் பண்றவாளோட அடியார்களுக்கு நான் அடியவனா இருக்கேன்ன்னு சொல்றார். அப்படி இருக்கும் என்னோட கஷ்டத்தை நீ கேட்க கூடாதா முருகா? உனக்கு அதுல ஒரு குறையா? வேதங்களே நீ சொல்றதை கேட்குமே. அதனால என் கஷ்டங்களை போக்கு. எனக்கு சந்தோஷத்தை கொடு’ ன்னு அழகான ஒரு திருப்புகழ் பாட்டு இருக்கு.

நமக்கு மந்த்ரங்கள் எல்லாம் முறையா ஜபிக்க முடியுமா தெரியலை, அடியார்க்கு அடியனா இருக்கலாம்ன்னு இந்த ஸ்லோகத்துல நான் புரிஞ்சுண்டேன். ஷடக்ஷரியோட பெருமை அபாரம். அந்த மந்த்ரங்களை ஜபிச்சு, முருகப் பெருமானுக்கு அடியவர்களா இருக்கறவர்களுக்கு நாம் அடியவர்களா இருப்போம்.

நம: பார்வதீ பதயே… ஹர ஹர மஹாதேவா

ஸுப்ரமண்ய புஜங்கம் –எழாவது ஸ்லோகம் – ஏகமக்ஷரம் ஹ்ருதி நிரந்தரம் பாஸதே ஸ்வயம் லிக்யதே கதம்

ஸுப்ரமண்ய புஜங்கத்துல இது வரைக்கும் ஆறு ஸ்லோகங்களை பார்த்து இருக்கோம். ஆறாவது ஸ்லோகத்துல,

गिरौ मन्निवासे नरा येऽधिरूढा-

स्तदा पर्वते राजते तेऽधिरूढाः ।

इतीव ब्रुवन्गन्धशैलाधिरूढः

स देवो मुदे मे सदा षण्मुखोऽस्तु ॥

கிரௌ மந்நிவாஸே நரா யேதிரூடா:

ததா பர்வதே ராஜதே தேதிரூடா: ||

இதீவ ப்ருவன் கந்தசைலாதி ரூட:

ஸதேவோ முதேமே ஸதா ஷண்முகோஸ்து ||

'மந்நிவாஸே' என்னுடைய திருச்செந்தூர் க்ஷேத்ரத்துல 'கந்தசைலாதிரூட:' கந்தசைலம்-ன்னு இருக்கு. அந்த மலையில் யார் ஏறுகிறார்களோ அவர்கள், கைலாசத்துல ஏறி என்னோடேயே (முருகப் பெருமானோடு) நித்ய வாசம் பண்ணுவார்கள்ன்னு சொல்லுவது போல, இந்த கடற்கரையில், மலைக்கு பக்கத்துல நீங்க வசிக்கிறேள்ன்னு அந்த ஸ்லோகம், இன்னிக்கி ஏழாவது ஸ்லோகம்.

महाम्भोधितीरे महापापचोरे

मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले ।

गुहायां वसन्तं स्वभासा लसन्तं

जनार्तिं हरन्तं श्रयामो गुहं तम् ॥ ७॥

மஹாம்போதிதீரே மஹாபாபசோரே

முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்யசைலே |

குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்

ஜனார்திம் ஹரந்தம் ச்ரயாமோ குஹம்தம் ||

ன்னு ஒரு ஸ்லோகம், இதுலேயும் அந்த கந்தசைலத்தை பத்தி வர்றது. 'ஸுகந்தாக்யசைலே'-னு வர்றது, இதுல ஒவ்வொரு பதத்துக்கும் நான் அர்த்தம் சொல்றேன்.

'மஹாம்போதி தீரே' 'அம்போதின்னா' -கடல், பெரிய கடலின் கரையில், 'மஹாபாபசோரே' மஹாபாபங்கள்னு ஒரு அஞ்சு இருக்கு. அந்த மஹாபாபங்களை திருடிடறார். நம்முடைய பாபங்கள் எப்படி போச்சுன்னு நமக்கே தெரியாத மாதிரி நம்முடைய பாபங்களை எல்லாம் திருடிடறார் முருகப் பெருமான். முதல்ல பதம் பதமாக அர்த்தம் சொல்றேன். ஆனா அதுல சூக்ஷ்மமான ஒரு அர்த்தம் இருக்கு, அதை அடுத்து சொல்றேன்.

‘முனீந்த்ரானுகூலே’ முனிவர்களுக்கு அனுகூலமாக இருக்கக் கூடிய, முனிவர்கள் தவம் செய்ய ரொம்ப சௌகர்யமா இருக்கக்கூடிய ‘ஸுகந்தாக்யசைலே’ ஆக்யம்-னா பெயர்ன்னு அர்த்தம். கந்தமாதனம் என்ற பெயர் பெற்ற ஒரு மலையில், நிறைய தபஸ்விகள், முனிவர்கள், எல்லாம் தபஸ் பண்ணிண்டு இருக்கா. அதற்கு அனுகூலமாக்க இருக்கும் அந்த மலையில் ‘குஹாயாம் வஸந்தம்’ ஒரு குஹையில் முருகப் பெருமான் வசிக்கிறார். ‘ஸ்வபாஸா லஸந்தம்’ குஹைன்னா இருட்டா இருக்கும், இந்த குஹை கோடி ஸூர்ய ப்ரகாசமா இருக்கு. ஏன்னா அந்த குஹைக்குள்ள தன்னுடைய ஒளியினாலேயே பிரகாசிக்கக் கூடிய ஸ்வாமி குஹன். அவர் பேரும் குஹன். குஹைக்குள்ள வசிக்கிற அந்த குஹனை ‘ஜனார்திம் ஹரந்தம்’ ஜனங்களுடைய ‘ஆர்த்தி’ன்னா கஷ்டம், கஷ்டங்களை போக்கும், ‘தம் குஹம்’ அந்த முருகப் பெருமானை ‘ஸ்ராயமஹ’ நாங்கள் ஆஸ்ரயித்திருக்கிறோம்’ ன்னு இந்த ஸ்லோகத்துக்கு அர்த்தம்.

இங்கே தேதியூர் சாஸ்திரிகள் அர்த்தம் சொல்லும் போது ஒண்ணு சொல்றார். “இந்த ஸ்லோகத்தில் சொல்லப்படும் விஷயமோ அதி ரஹஸ்யமானது”ன்னு சொல்றார். ஆனா அது என்னன்னு அவர் சொல்லலை. குஹைக்குள்ள இருக்க கூடிய முருகப் பெருமானை போய் தர்சனம் பண்ணிணால், அவாளுடைய மஹா பாபங்களும் போயிடும். ‘ஆர்த்தி’ எல்லாவிதமான கஷ்டங்களும் விலகிடும்ன்னு சொல்லியிருக்கார். இதுல இருக்க கூடிய விஷயம் அதி ரஹஸ்யமானதுன்னு சொல்றார்.

எனக்கு என்னனு தோண்றதுன்னா, இந்த ‘குஹாயம் வஸந்தம்’ எங்கறது, நம்முடைய ஹ்ருதய குஹைக்குள்ள பகவான் வசிக்கிறார். ‘ஸ்வபாஸா லஸந்தம்’ மத்த வெளிச்சத்துக்கு எல்லாம், சந்திரனுக்கு ஸூர்யன் source, ஸூர்யனுக்கு அம்பாள் source-ன்னு, அது மாதிரி எல்லா வெளிச்சங்களும் வேற ஒரு source-லேர்ந்து வர light. ஆனா ஆத்மாங்கிறது தானே ஒளி விடுகிறது. அப்படி’ ஹ்ருதய குஹையில் வசிக்கும், ஆத்ம ஸ்வரூபமாக விளங்குபவர் முருகப் பெருமான். அந்த முருகப் பெருமானை தர்சனம் செய்தவர்கள்’, மஹாம்போதி தீரே’ ன்னு இருக்கு. அதாவது ஸம்ஸார கடலில் இருந்து கரை ஏறினா தான் ஞானத்தை அடைய முடியும். ‘முனீந்த்ரானுகூலே’ இந்த ஞானம்ங்கறது முனிவர்களுக்குத் தான், அதாவது மௌனமாக இருப்பவர்களுக்கு முனிவர்கள்-

ன்னு பேரு. ரொம்ப உலக விஷயங்கள்-ல பற்று வைக்காம, அதிலேர்ந்து விலகி வந்த பின்ன தான் இந்த ஞான மார்கத்துல போய், மதி, சித்தம் எல்லாம் தெளிவடைஞ்சு அந்த ஒளியை பார்க்க முடியும். அப்பேற்பட்ட அந்த ஒளி தர்சனம் கிடைச்சா தான், பண்ண கர்மாக்கள் எல்லாம் நசிச்சு போயிடும். ‘மஹாபாபசோரே’ முந்தைய பாபமே, இப்போ பாபத்தை தூண்டறது, அப்படி திரும்ப திரும்ப இந்த கர்ம சூழல்ல இருக்கோம். அதெல்லாம் தீடீர்னு எப்படி போச்சு. இவ்வளவு கோடிக் கணக்கான ஜென்மத்துல பண்ண பாபங்களும் பகவான் போக்கிட்டாரே-ன்னு ஞானிகள் வியக்கிறார்கள்-னு ஒரு ஸ்லோகம் இருக்கு. அந்த மாதிரி பாபங்களையெல்லாம் திருடிடறார் ‘மஹாபாபசோரே’-னு அந்த முருகப் பெருமான் உள்ளத்துல ஒளியாக இருக்கார். அதை யார் தர்சனம் பண்ணறாளோ அவாளுக்கு பாபங்கள் போயிடும். அந்த முருகப்பெருமானை ‘தம் ஷ்ரயாமஹ’ ஆஸ்ரயிக்கிறோம்.

இந்த இடத்துல ஹ்ருதய குஹையில வசிக்கும் ஒளின்னு வரும்போது, ரமண பகவான் கிட்ட ஒருத்தர், “எனக்கு இந்த புஸ்தகத்துல கையெழுத்து போட்டு கொடுங்கோ” ன்னு கேட்டாராம். அப்போ ரமணர் பதில் சொன்னாராம்.

एकमक्षरं हृदि निरन्तरम् | भासते स्वयं लिख्यते कथम् ||

‘ஏகம் அக்ஷரம் ஹ்ருதி நிரந்தரம் பாஸதே ஸ்வயம் லிக்யதே கதம்?’ ன்னு ஒரு ஸ்லோகம் சொல்லியிருக்கார். அவர் கேட்கறது கையெழுத்து. அதனால் அந்த அக்ஷரம்ங்கிற வார்த்தையை உபயோகப்படுத்தறார். ஆனா ‘ஏகம் அக்ஷரம்’ ஒரு எழுத்துன்னு ஒரு அர்த்தம். இன்னொரு அர்த்தம் அழிவற்ற மாறாத ஒரு பொருள். ‘ஹ்ருதி’ என்னுடைய ஹ்ருதய குஹையில் ‘நிரந்தரம்’ இடையறாது ‘பாஸதே’ பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ‘ஸ்வயம்’ தானே பிரகாசிக்கிறது. அதுக்கு self-தான் source. self- sourced ம்பா ஆனா self தான் source அந்த ஒளிக்கு ஆதாரம். அப்படி தானாக ஒளி விட்டுக் கொண்டிருக்கும் அதை, பேச முடியமா, எழுத முடியுமான்னு, தொனிக்கும் படி ‘லிக்யதே கதம்?’ அதை எப்படி எழுத முடியும்ன்னு கேட்கறார். அப்போ அந்த பக்தர் இதையே எழுதி கொடுங்கோ-ன்னு சொன்னாராம். அதை எழுதி கொடுத்தார்ன்னு இருக்கு. நாம பக்தர்கள் இப்படி தான் இருப்போம்னு சிரிப்பா தோணித்து எனக்கு. ஆனா அவர் எழுதிண்டதுனால தான் நமக்கு இந்த அருமையான வரி கிடைச்சிருக்கு. ‘ஏகம் அக்ஷரம் ஹ்ருதி நிரந்தரம் பாஸதே ஸ்வயம் லிக்யதே கதம்’.

ரமணரை நினைக்கும் போது, ரமண பகவான் முதல்ல அவருக்கு சமாதி அனுபவம் கூடின உடனேயே வீட்டை விட்டுட்டு கிளம்பி திருவண்ணாமலைக்கு வந்துடறார். திருவண்ணாமலையில கோயிலுக்குள்ள பாதாள லிங்க சன்னிதி ஒண்ணு இருக்கு. அதுக்குள்ள இருக்கார். சில பேர் சிரமப்படுத்தறா. சில பசங்க அவர் மேலே கல்லெல்லாம் தூக்கி போடறா. அப்போ ஷேஷாத்ரி ஸ்வாமிகள், தன்னுடைய ஒரு பக்தரை கூப்பிட்டு "என் குழந்தை அங்க இருக்கான் பாரு. அவனை காப்பாத்து"ன்னு சொல்றார். அப்பறம் ரமணரை கூட்டிண்டு போய் மலையில ஒரு இடத்துல வெச்சு காப்பாத்தறா. அந்த சேஷாத்ரி ஸ்வாமிகளை காமாக்ஷின்னும், ரமணரை ஸுப்ரமண்ய ஸ்வாமின்னும் சில பக்தர்கள் புரிஞ்சிண்டு சொல்லியிருக்கா. இந்த இரண்டு மஹான்களும் பேசாம இருந்து அதை ஆமோதிச்சு இருக்கா. அப்படி இந்த ஸுப்ரமண்ய புஜங்கம் சொல்லும் போது ரமணரை த்யானம் பண்றது ரொம்ப பொருத்தமா இருக்கு.

அப்படி ஹ்ருதய குஹையில் ஒளி விடும் முருகப் பெருமான் இந்த ஸுப்ரமண்ய வடிவம் எடுத்துண்டு கையில வேலும், கொடியும் வச்சுண்டு 'ஜனார்திம் ஹரந்தம்' வந்து நமஸ்காரம் பண்றவா, கொடுத்த நைவேத்தியத்தையும், பலியையும் வாங்கிண்டு, அவாளோட கஷ்டத்தை போக்கற அந்த ஸகுண வடிவமாகவும் விளங்குகிறார் ன்னு ஆதிசங்கரர் பார்த்து, அதை இந்த ஸ்லோகத்துல பேசறார்.

महाम्भोधितीरे महापापचोरे मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले ।

गुहायां वसन्तं स्वभासा लसन्तं जनार्तिं हरन्तं श्रयामो गुहं तम् ॥ ७॥

மஹாம்போதி தீரே மஹாபாபசோரே

முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்யசைலே |

குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்

ஜனார்திம் ஹரந்தம் ச்ரயாமோ குஹம்தம் ||

நேத்திக்கு தேதியூர் சாஸ்திரிகள் 'சரவணபவ'ன்னு இந்த மஹா மந்த்ரத்தை புஸ்தகத்துல எழுதியிருக்கார்-ன்னு நான் சொன்னேன். அப்புறம் யோசிச்ச போது தான், இந்த சரவணபவ, ராம இதெல்லாம் நாம மந்த்ரங்கள். மஹா பெரியவா ஒரு சபையில 'சிவாயநமஹ', பதினோரு ஆவர்த்தி ஜபம்

பண்ணுங்கோ. ஜபம் பண்ணிட்டு, அப்பறம் பத்து நிமிஷம் கழிச்சு போய் சந்த்யாவந்தனம் பண்ணுங்கோன்னு சொல்லியிருக்கார். அப்படி மஹான்கள் நாம மந்த்ரங்களை வெளிப்படுத்தி இருக்கா. ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே எங்கிற மஹா மந்த்ரத்தை சைதன்ய மஹாப்ரபு தேசம் முழுக்க போய் பஜனை பண்ணினார். 'குரு மூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி' ன்னு 'என் குரு வடிவில், மஹாபெரியவா வடிவில், நான் காமாக்ஷியை தரிசித்து நமஸ்காரம் பண்றேன்' என்று மூக பஞ்ச சதியில் வரும் இந்த வரியை ஸ்வாமிகள் எல்லோருக்கும் சொல்வார் நாலு தடவை சொல்வார். ஏன்னா சன்யாசிகளுக்கு நாலு நமஸ்காரம்ன்னு நாலு தடவை இதைச் சொல்லி நமஸ்காரம் பண்ணுவார்.

ஒரு தடவை ஸ்வாமிகளோட பூர்வாஸ்ரம பிள்ளை ராமநாதன்-ங்கிறவர் பெரியவா கிட்ட இந்த வரியை ஒரு புஸ்தகத்துல எழுதிண்டு போயிருந்தார். பெரியவா என்னதுன்னு வாங்கி, பெரியவா ரெண்டு வாட்டி அதை சொன்னாளாம். 'குரு மூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி' 'குரு மூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி' ன்னு சொல்லியிருக்கா. ரெண்டு வாட்டி சொன்னான்னு ஆத்துல வந்து அவர்சொன்ன போது, ஸ்வாமிகள் "உனக்கு ஒரு தடவை, எனக்கு ஒரு தடவை"-னு சொன்னார். "ஒரு வாட்டி சொன்னதை உனக்குன்னு வச்சுக்கோ, ஒரு வாட்டி சொன்னதை எனக்குன்னு வச்சுக்கறேன்"-னு ஸ்வாமிகள் சொன்னார். இந்த சரவணபவ என்கிறதெல்லாம் நாம மந்த்ரங்கள்ன்னு அப்பறம் கேட்டு தெரிஞ்சுண்டேன்.

"சரவணபவ சிவா ராம கோவிந்த நாராயண மஹாதேவா" "शरवणभव शिव राम गोविन्द नारायण महादेव" ன்னு இருபத்தியொரு அக்ஷரங்கள் கொண்ட இந்த நாம மந்த்ரம் மஹா ரோகங்களையும் மஹா பயங்களையும் போக்கும்" ன்னு பெரியவா சொல்லிருக்கா. இதை ஸ்வாமிகள் தன் கிட்ட வந்தவா, உடம்புல வியாதி, ஏதாவது பயங்கள் ன்னு சொன்னா, இந்த ஸ்லோகத்தை எழுதிக் கொடுத்து நிறைய ஜபம் பண்ண சொல்வார். அதை பாத்துருக்கேன்.

போன ஸ்லோகத்துல அந்த ஷடக்ஷரி சரவணபவ என்கிறதை ஒவ்வொரு அக்ஷரத்துக்கும் விளக்கம் கொடுத்து தேதியூர் சாஸ்த்ரிகள் எழுதியிருக்கார். இந்த ஸ்லோகத்துல ஞான பரமான விஷயம் என்கிறதுனால ஹ்ருதய குஹையில் வசிக்கும் முருகப் பெருமானை அந்த ஒளியை தரிசனம் பண்ணுகிறவர்களுக்கு மஹாபாபங்களும் போயிடும். அதுக்கு முனிவர்களா

இருந்து தபஸ் பண்ணனும்ங்கிற விஷயத்தை அவர் விளக்கி எழுதல. இதை பேசலாம், எழுதலாம். ஆனா அது அனுபவம் தானே. கண்டவர் விண்டிலர் என்கிற மாதிரி இதை அவர் சூசகமா சொல்லியிருக்கார் ன்னு தோணித்தது.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – எட்டாவது ஸ்லோகம் – பள்ளியறை தரிசனம்

ஸுப்ரமண்ய புஜங்கத்துல நேத்திக்கு ஏழாவது ஸ்லோகம்

महाम्भोधितीरे महापापचोरे मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले ।

गुहायां वसन्तं स्वभासा लसन्तं जनार्तिं हरन्तं श्रयामो गुहं तम् ॥ ७॥

மஹாம்போதி தீரே மஹாபாபசோரே

முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்யசைலே |

குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்

ஜனார்திம் ஹரந்தம் ச்ரயாமோ குஹம்தம் ||

எங்கிற ஸ்லோகம் பார்த்தோம். இந்த ஸ்லோகத்துல, ஹ்ருதய குஹையில் வசிக்கும், ஆயிரம் சூரியர்களின் ஒளியோடு விளங்கும் முருகப் பெருமானை எவர்கள் தரிசிக்கிறார்களோ, அவர்கள் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டு, பவக் கடலையும் தாண்டுவார்கள். இந்த ஞான மார்க்கம் முனிவர்களுக்கு அனுகூலமான கார்யம். முனிவர்களால் எளிதில் அடையக் கூடிய விஷயம். நாம முருகப்பெருமானை தர்சனம் பண்ணுவோம்னு பார்த்தோம்.

இன்னிக்கி எட்டாவது ஸ்லோகம்

लसत्स्वर्णगेहे नृणां कामदोहे

सुमस्तोमसञ्छन्नमाणिक्यमञ्चे ।

समुद्यत्सहस्रार्कतुल्यप्रकाशं

सदा भावये कार्तिकेयं सुरेशम् ॥ ८ ॥

லஸத்ஸ்வர்ணகேஹே ந்ருணாம் காமதோஹே

ஸுமஸ்தோம ஸஞ்ச்சன்ன மாணிக்ய மஞ்சே |

ஸமுத்யத் ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாசம்

ஸதாபாவயே கார்த்திகேயம் ஸுரேசம் ||

ன்னு ஒரு ஸ்லோகம்.

இது ஸுப்ரமண்ய ஸ்வாமியோட பள்ளியறை வர்ணணை. கோவில்களில் எல்லாம் அர்த்த ஜாம பூஜைன்னு பண்ணுவா. ஸ்வாமியையும் அம்பாளையும் சேர்த்து பள்ளியறையில விட்டுட்டு புஷ்பங்கள், பழங்கள், தாம்பூலம் எல்லாம் வச்சு அறையை சாத்திட்டு வருவா. சிவன் கோவில்கள்ல திருவாசகத்திலிருந்து சிவபுராணம் சொல்லிண்டு அம்பாளை சன்னதியிலிருந்து கூட்டிண்டு போய் ஸ்வாமி சன்னிதியில விட்டுட்டு வர்றதுன்னு ஒரு வழக்கம்.

இங்கே ஆசார்யாள் திருச்செந்தூர்ல இருக்கிற முருகப் பெருமானோட பள்ளியறையை வர்ணனை பண்றார். ‘ஸ்வர்ணகேஹே’ தங்க கற்களால கட்டின ஒரு அறை. ஒரு க்ருஹம். ‘லஸத் ஸ்வர்ணகேஹே’, அது ஒளி விடுகிறது. அதுல ‘ஸுமஸ்தோம’ – நல்ல வாசனை பூக்களால் ‘ஸஞ்ச்சன்ன’ – அலங்கரிக்கப்பட்ட ‘மாணிக்ய மஞ்சே’ மாணிக்க கட்டில். அதைச் சுத்தி, தேவலோகத்துல இருந்து வந்த பாரிஜாத மலர்கள் போன்ற ரொம்ப வாசனையோடு கூடிய, அழகான

பூக்களைக் கொண்டு அலங்காரம் பண்ணியிருக்கா. அதுல 'ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாசம்' ஆயிரம் சூரியர்களுக்கு சமமான ப்ரகாசத்தோடு 'ஸமுத்யதி' பகவான் விளங்குகிறார். இந்த பள்ளியறை தர்சனம் நாம பண்ணினோமானால், 'ந்ருணாம் காமதோஹே' மனிதர்களுக்கு எல்லா விதமான காமனைகளும் பூர்த்தியாகும். 'ஸதா பாவயே கார்த்திகேயம் சுரேசம்' – கார்த்திகை பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்ட அந்த முருகப் பெருமானை 'ஸுரேஷம்' தேவர்களுக்கெல்லாம் தலைவனான அந்த ஸுப்ரமண்ய ஸ்வாமியை 'ஸதா பாவயே' – நான் எப்போதும் த்யானிக்கிறேன்-ன்னு இந்த ஸ்லோகம்.

நம்முடைய வேத மதத்துல தான் ரொம்ப அழகா இந்த கோவில்கள், வழிபாடுகள் எல்லாம் வச்சிருக்கா. அதுல இந்த அர்த்த ஜாம பூஜைன்னு, அம்பாளை கூட்டிண்டு போய் ஸ்வாமி சன்னிதியில சேர்க்கறதுன்னு ஒரு பூஜை. அருணகிரி நாதருடைய கந்தர் அனுபூதியில்

திணியான மனோ சிலை மீது, உனதாள்

அணியார், அரவிந்தம் அரும்பு மதோ?

பணியா? என, வள்ளி பதம் பணியும்

தணியா அதிமோக தயா பரனே

வள்ளியுடைய பாதத்துல முருகப் பெருமான் பணிந்து, நான் உன்னுடைய பணியாள்-னு சொல்றாராம். அதிமோகம் – இந்த அதி மோஹம் தான், அவருடைய தயை. ஜீவர்கள் கிட்ட அவர் காண்பிக்கற அந்த தயையைத் தான் இப்படி உருவகப் படுத்தி சொல்றா. மூகபஞ்ச சதியில கூட,

रणन्मञ्जीराभ्यां ललितगमनाभ्यां सुकृतिनां

मनोवास्तव्याभ्यां मथिततिमिराभ्यां नखरुचा ।

निधेयाभ्यां पत्या निजशिरसि कामाक्षि सततं

नमस्ते पादाभ्यां नलिनमृदुलाभ्यां गिरिसुते ॥

ரணன்மஞ்ஜீராப்யாம் லலிதகமனாப்யாம் ஸுக்ருதினாம்

மனோவாஸ்தவ்யாப்யாம் மதித திமிராப்யாம் நகருசா |

நிதேயாப்யாம் பத்யா நிஜசிரஸி காமாக்ஷி ஸததம்

நமஸ்தே பாதாப்யாம் நலிணம்ருதுலாப்யாம் கிரிஸுதே ||

ன்னு ஒரு ஸ்லோகம் வரும். அதுல ‘ஹே காமாக்ஷி, உன் பதியான பரமேஸ்வரன், உன்னுடைய பாதங்களை தலையில தாங்கறார் ன்னு மூககவி சொல்றார். ‘நிதேயாப்யாம் பத்யா நீஜ சிரஸி’ – உன் பதி தன்னுடைய சிரசில் இந்த பாதங்களை தாங்கிக் கொண்டிருக்கிறார் -னு சொல்றார். ஜயதேவர் அஷ்டபதியில கூட ராதா தேவியோட பாதங்களை கிருஷ்ணர் தன்னோட சிரஸ்ல வச்சிண்டார்ன்னு வர்றது, இல்லையா! அந்த மாதிரி, ஜீவனிடத்தில் பகவான் காண்பிக்கும் அந்தக் கருணையை மஹான்கள் பாடறா. சிவ சக்த்யைக்ய ரூபிணின்னு இந்த த்யானம் பண்ணா நம்ம மனசுல காமத்தை குறித்து இருக்கக் கூடிய விகல்பம், ஆபாசங்கள் எல்லாம் போய், அது பகவான் கொடுத்திருக்கிற ஒரு கடமைன்னு நாம அதைப் பத்தி ரொம்ப சலிக்காம, ரொம்ப சிரமப்படாம கடந்து போகலாம்.

நம்ம கலாச்சாரத்துல காலகாலத்துல கல்யாணம் பண்ணிண்டு இருந்தா. இருபது வயசுல எனக்கு இந்த விஷயங்கள்லாம் தெரியும் போது மஹா பெரியவளோட ஒரு lecture கேட்டேன். ‘சிவ சிவ பஷ்யந்தி ஸமம்’ என்கிற மூகபஞ்ச சதி ஸ்லோகத்துக்கு அவா அர்த்தம் சொல்லும் போது ‘உதடும், ஓட்டாஞ்சில்லியும் ஒண்ணு’ ன்னு சொல்லும் போது, ‘காமத்துல ஸ்த்ரீ, புருஷாள்ல முதல்ல வர விகாரம், முத்தம் இட்டுக்கணும்னு தோணும். காமம் எல்லாம் மறந்து போயிடுதுன்னா அப்புறம் ஓட்டாஞ்சில்லியைத் தானே இவன் முத்தம் இட்டுக்கணும்ன்னு வேடிக்கையா சொல்லுவா. அந்த அளவுக்கு மஹான்கள் அதை லைட்டா பண்ணி, இது ஏதோ சாப்பிடற மாதிரி, புலன் இன்பங்கள்ல ஒண்ணுன்னு ரொம்ப சுலபமா எடுத்துண்டு போயி, ‘கொஞ்ச நாள் இந்த தொந்தரவு, நீ தெய்வத்தை வேண்டிண்டு இரு’ ன்னு சொல்றா. ‘இதை சரியா வழிபடுத்திட்டா ஒரு கல்யாணம்ங்கற வழியில channelize பண்ணி அழகா கொண்டு போயிட்டா, இல்லறம் அல்லது நல்லறம் அன்றுன்னு அதை வழிபடுத்தினா அதனால நல்ல ப்ரஜைகள் உண்டாவா.’ பெரியவா இன்னும் சொல்றா, “இதுல நமக்கு ஒரு சுகம்னு நினைச்சுகிறோம், அதுவும் ஏமாத்தம் தான். இன்னொரு ஜீவன் இது மூலமா வந்து பொறந்ததுன்னா, அது கடைத் தேறதுக்கு ஒரு வழி. அது தான் அம்பாளோட மாயை. அவதான் இதுல இருந்து

நம்மை விடிவிக்கணும். அம்பாள் சரணத் த்யானம் பண்ணினா நாம குழந்தைகளா இருக்கலாம். இதெல்லாம் மறந்து போயிடும்” ன்னு பெரியவா ரொம்ப hope கொடுக்கற மாதிரி பேசியிருக்கா. அந்த மாதிரி நம்முடைய கலாசாரத்திலே தான் இதை சரியான ஒரு வழியில எடுத்துண்டு போறதுக்கு சொல்லிக் கொடுத்துருக்கா எங்கறது, இந்த ஸ்லோகத்தை படிச்ச போது தோணித்து.

நாளையிலிருந்து ஸுப்ரமண்ய ஸ்வாமியோட ரூப வர்ணணை. முதல் ஸ்லோகம் பாதாரவிந்தத்தை பத்தி

रणद्धंसके मञ्जुलेऽत्यन्तशोणे

मनोहारिलावण्यपीयूषपूर्णे ।

मनःषट्पदो मे भवक्लेशतप्तः

सदा मोदतां स्कन्द ते पादपद्मे ॥ १॥

ரணத்தம்ஸகே மஞ்சுளேத்யந்த சோணே

மனோஹாரி லாவண்ய பீயூஷபூர்ணே |

மனஷ்ஷட்பதோ மே பவக்லேசதப்த

ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே ||

அப்படீங்கிற ஸ்லோகத்தை நாளைக்கு பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் – ஒன்பதாவது ஸ்லோகம் – உனதாள் அணியார் அரவிந்தம்</u>

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல எட்டாவது ஸ்லோகம், ஸுப்ரமண்ய சுவாமியின் பள்ளியறை வர்ணனை, அர்த்த ஜாம பூஜையை யார் தர்சனம் பண்றாளோ அவாளுக்கு சகல காமங்களும் பூர்த்தியாகும்ங்கிற அந்த ஸ்லோகத்தை நேத்திக்குப் பார்த்தோம். இன்னிக்கு ஒன்பதாவது ஸ்லோகம்.

रणद्धंसके मञ्जुलेऽत्यन्तशोणे मनोहारिलावण्यपीयूषपूर्णे ।

मनःषट्पदो मे भवक्लेशतप्तः सदा मोदतां स्कन्द ते पादपद्मे ॥ ९॥

ரணத்தம்ஸகே மஞ்சுளேத்யந்த சோணே

மனோஹாரி லாவண்ய பீயூஷபூர்ணே |

மனஷ்ஷட்பதோ மே பவக்லேசதப்த

ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே ||

ன்னு அந்த ஸ்லோகம். ஹம்ஸபக்ஷிகள் சப்தம் பண்றதை ரணத் சப்தம் ன்னு சொல்றா. ‘ரணத்தம்ஸகே’ ஹம்ச பக்ஷிகள் சப்தம் பண்ணிண்டு இருக்கு. ஸுப்பிரமண்ய ஸ்வாமியினுடைய பாதங்களை தாமரை பூக்களாக வர்ணிக்கறார். தாமரை பூக்களை சுற்றி ஹம்ஸ பக்ஷிகள் இருக்கும். தாமரைப்பூவில் தேன் இருக்கும். அதெல்லாம் கொண்டு முருகனுடைய பாதாரவிந்தத்தை வர்ணிக்கிறார். தாமரைப்பூ செக்கச் செவேல்னு இருக்கும். ‘மஞ்சுளே’ மஞ்சுளேன்னா ரொம்ப அழகானதுன்னு அர்த்தம். ‘அத்யந்த சோணே’ நல்ல செக்கச் செவேல்னு இருக்கக் கூடியதாகவும், ஒரு தாமரைன்னா அதுல தேன் இருக்குமே. இதுல என்ன தேன்? ‘மனோஹாரி லாவண்ய பீயூஷ பூர்ணே’ மனதை கொள்ளை கொள்ளும் லாவண்யம்ங்கிற தேன் நிரம்பியிருக்கு. ‘தே பாதபத்மே’ உன்னுடைய பாதங்களில் ‘பவக்லேச தப்த:’ சம்சாரத்தில் தவித்து கொண்டிருக்கும் என்னுடைய ‘மே மனஷ்ஷட்பத:’ மனமாகிய வண்டு ‘ஹே! ஸ்கந்த’ ‘ஸதா’ எப்பொழுதும் ‘மோததாம்’ உன்னுடைய பாத பத்மங்களில் என்னுடைய மனமாகிய வண்டு எப்பொழுதும் ரமித்துக் கொண்டே இருக்கட்டும்னு, கேட்கறார்.

இந்த மனசுக்கு ஆறு குணங்கள் ஷமம், தமம், திதிக்ஷை, உபரதி, ஸ்ரத்தா, சமாதானம் என்கிற ஆறு குணங்கள் இருக்கறதுனால ஷட்பதி. ஷட்பதிங்கிறதுக்கு ஆறு கால்கள் கொண்ட வண்டுன்னு ஒரு அர்த்தம். இந்த ஆறு குணங்கள் இருக்கறதுனால மனசையும் ஷட்பதின்னு சொல்வா. ஷட்பதி ஸ்தோத்திரத்துல கூட ஆசார்யாள் இந்த உவமையை உபயோகப் படுத்துவார். அப்படி என் மனமாகிய வண்டு உன்னுடைய பாத பத்மங்களில் இடையறாது ரமிக்கட்டும்னு அழகான ஒரு பிரார்த்தனை. இதுல என்ன அழகுன்னா, தாமரை பூவைச் சுத்தி ஹம்ஸபக்ஷிகள் இருக்கு. அந்த மாதிரி முருகப் பெருமானுடைய பாத பத்மத்தை சுத்தி பரமஹம்சர்கள் எப்பொழுதும் இருந்துண்டு, மஹா வாக்யங்களை சொல்லிண்டே இருக்கான்னு தேதியூர் சாஸ்திரிகள் அர்த்தம் சொல்லி இருக்கார். அந்த பரமஹம்சர்களான முனிவர்கள் தான் அந்த பாதத்துக்கு பக்கத்துல போக முடியும்ங்கிறதை இந்த ஸ்லோகத்துல குறிப்பிடறார். ஆனால் பக்தர்கள் அந்த அழகுங்கிற, லாவண்யம்ங்கிற பீயூஷத்தை பருக முடியும். பக்தியினாலயும் அந்த முருகப் பெருமானின் பாதங்களுடைய அழகை நாம் பருகலாம். அப்படி நம்ம மனசை உலக விஷயங்கள்ல இருந்து எடுத்து, முருகனுடைய பாத பத்மங்களில் வெச்சு எப்பவும் ரமிக்கணும்னு பிரார்த்தனை பண்ணிக்கறார்.

நேற்றைய ஸ்லோகத்துல எல்லா காமங்களும் பூர்த்தியாகும்னு சொல்றார். இந்த உலக விஷயங்கள்ல, காமங்களை பூர்த்தி பண்ணிண்டா பூர்த்தியாச்சுன்னே கிடையாது இல்லையா? அது கிடைக்குமா கிடைக்காதாங்கிற ஒரு anxiety, ஒரு தவிப்பு. கிடைச்ச பின்ன நம்மோடேயே இருக்குமான்னு ஒரு கவலை. எதுவும் நம்மோட permanent ஆ இருக்கப் போறது இல்ல. அது போன பின்னே போயிடுத்தேன்னு, ஒரு வருத்தம். இப்படித்தான் உலக சுகங்கள் எல்லாமே இருக்கு. அதனால இதுல நாம சந்தோஷத்தை, தேடி அடைஞ்சோம் எங்கிறதே கிடையாது. நெய்யை ஊத்தினா, நெருப்பு வளருமே தவிர அணையாது என்கிற மாதிரி, உலக விஷயங்களை அனுபவிச்சா, மேலும் மேலும் அந்த வாசனை ஏறி, இன்னும் இன்னும் வேணும்னு தான் தோணுமே தவிர ஒரு த்ருப்தி என்கிறதே வர மாட்டேங்கிறது. அப்படி இந்த உலக விஷயங்கள்ல சுகத்தை தேடாமல் முருகப் பெருமான் கிட்ட பக்தி பண்ணோம்னா நமக்கு பேரானந்தம் கிடைக்கும்ங்கிற ஒரு கருத்தும் இந்த ஸ்லோகத்துல இருக்கு.

மூக பஞ்சசதியில இதே கருத்தை காமாக்ஷியினுடைய பாதங்களுக்கு பொருத்தி ஒரு ஸ்லோகம் இருக்கு. அதையும் சொல்றேன்

सुरागे राकेन्दुप्रतिनिधिमुखे पर्वतसुते

चिराल्लभ्ये भक्त्या शमधनजनानां परिषदा ।

मनोभृङ्गो मत्कः पदकमलयुग्मे जननि ते

प्रकामं कामाक्षि त्रिपुरहरवामाक्षि रमताम् ॥

ஸுராகே ராகேந்துப்ரதிநிதிமுகே பர்வதஸுதே

சிரால்லப்யே பக்த்யா ஶமதனஜனானாம் பரிஷதா |

மனோப்ருங்கோ மத்க: பதகமலயுக்மே ஜனனி தே

ப்ரகாமம் காமாக்ஷி த்ரிபுரஹரவாமாக்ஷி ரமதாம் ||

ன்னு ஒரு ஸ்லோகம்.

இந்துன்னா, சந்திரன். ராகா ன்னா பௌர்ணமி. பௌர்ணமி சந்திரனுக்கு பிரதிநிதி போன்ற முகம். அதாவது பூர்ண சந்திரனை போன்ற முகத்தினை உடைய காமாக்ஷி. 'ஜனனி' ங்கிறார், அம்மா, காமாக்ஷி! 'பர்வதஸுதே' பர்வத குமாரியே! 'திரிபுரஹரவாமாக்ஷி' திரிபுரத்தை முப்புரத்தை எரித்தவனுடைய

மனைவியே! 'ஸுராகே' ரொம்ப அழகா இருக்கக் கூடிய உன்னுடைய 'பதகமலே யுக்மே' உன்னுடய பாதங்கள் என்ற தாமரை, யுக்மம்னா இரண்டு. இரு தாமரைகள். உன்னுடைய இரண்டு பாத பத்மங்கள்ல, இந்த பாத பத்மங்கள் யாருக்கு கிடைக்கும்னா 'ஷம தன ஜனா:' சாந்தியை தனமாகக் கொண்ட முனிவர்கள். மனசாந்தியை மட்டுமே செல்வமாக, உலக செல்வங்கள் எதுவுமே இல்லாம "கௌபீனவன்தஹ கலு பாக்கியவன்தஹ" ன்னு சொல்றா மாதிரி, வெறும் சாந்த குணத்தை மட்டும் தனமாக கொண்ட முனிவர்கள், 'சிராத்' ரொம்ப நாள் முயற்சி செய்து பக்தியின் மூலம் அடைகிறார்கள். 'பக்த்யா லப்யே', அந்த பாத தாமரைகள் 'மத்க: மனோ ப்ருங்கஹ' என்னுடைய மனமாகிய வண்டு 'ப்ரகாமம்' ரொம்ப ஆசையோடு எப்பொழுதும் உன்னுடைய பாத தாமரைகளில் 'ரமதாம்', ரமிக்கிட்டும்-ன்னு இந்த ஒரு ஸ்லோகம், எனக்கு ரொம்ப பிடிச்ச ஸ்லோகம்.

सुरागे राकेन्दुप्रतिनिधिमुखे पर्वतसुते

चिराल्लभ्ये भक्त्या शमधनजनानां परिषदा ।

मनोभृङ्गो मत्कः पदकमलयुग्मे जननि ते

प्रकामं कामाक्षि त्रिपुरहरवामाक्षि रमताम् ॥

ஸ்வாமிகளுக்கு ஸன்யாசம் வாங்கிக்கணும்னு எண்ணம் வந்த போது, பக்கத்துல இருந்த சில மடங்கள், சன்யாசிகள் இருக்கக் கூடிய ஆஸ்ரமங்கள்லாம் இருந்தது. 'அங்க போய் கேட்டுண்டு வாங்கோ, அங்க சன்யாசிகள் வந்து தங்கணும்னா அவா rules and regulations என்ன? இடம் கொடுப்பாளா?' ன்னு கேட்க சொன்னார். கேட்ட இடங்களில் எல்லாம் 'அவர் என்ன contribution கொடுப்பார்? என்ன capital கொண்டு வருவார்?' ன்னு கேட்டா. ஸ்வாமிகள் சொன்னார் 'என் கிட்ட ஒண்ணும் பணம் இல்லையே, 'ஷமதன ஜனானாம் பரிஷத்' ன்னு இருக்கு. சாந்தியை தனமாக கொண்டவர்கள் சன்யாசிகள்ன்னு அந்த காலத்துல வச்சிருந்தா. இப்ப பணத்தை capitalஆக வெச்சிண்டிருந்தா தான் சன்யாசி ஆக முடியும் போலிருக்கேன்னு" வேடிக்கையா சொன்னார். அப்புறம் சிவன் சார் " நீங்க சன்யாசம் வாங்கிக்கோங்கோ, நீங்க அந்த வீட்டு மாடியிலேயே இருங்கோ" ன்னு சொல்லிட்டார். அப்படியே இருந்தார்

ஸ்வாமிகள். எங்களுக்கெல்லாம் அது ரொம்ப பாக்யமா இருந்தது. எங்கயாவது மடத்துல அவர் உட்கார்ந்து இருந்தா permission வாங்கிண்டு தான் உள்ள போக முடியும். நாங்க எல்லாம் ரொம்ப சுலபமா ஸ்வாமிகள் ஆத்துக்கே போய், எப்பொழுதும் அங்கே இருந்து, அவரோடு சாப்பிட்டு, தூக்கிண்டு நிறைய கத்துண்டு ரொம்ப சந்தோஷப்பட்டோம்.

இன்னொரு குறிப்பு – பரமஹம்ஸர்கள் ஸுப்ரமண்ய ஸ்வாமியினுடைய பாதத்துக்கு பக்கத்துல இருக்கா. பக்தர்கள் லாவண்யா பியூஷத்தை இடையறாது பருகி கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி இந்த ஸ்லோகத்துலேயும் 'ஷமதன ஜனாஹா சிராத் லப்யே' சன்யாசிகள் ரொம்ப நாள் முயற்சி பண்ணி அடைகிறார்கள். என்னுடைய மனமாகிய வண்டு இந்த பாத தாமரையில் இடையறாது ரமிக்கட்டும்ன்னு சொல்றார். அந்த மாதிரி பக்தர்களுக்கு ஒரு உரிமை இருக்கு.

ஆனா இந்த பக்தி, இவா சொல்றது ரொம்ப உத்தம பக்தி. உத்தம பக்தி பகவானை கட்டுப்படுத்தி, 'நாம ஒரு அடி எடுத்து வெச்சா பகவான் பத்து அடி வருவார்' ன்னு சொல்றாளே, அப்படி ராதா தேவி கிருஷ்ணர் கிட்ட கண்பிச்ச அன்பு, அப்படி ஒரு அன்பு உத்தம பக்தர்கள் கிட்ட பகவான் காண்பிக்கறார், 'ந மே பக்த ப்ரணஷ்யதி' 'என் பக்தன் வீண்போக மாட்டான்' பக்தனை கைவிடாம அவன் சொன்ன வார்த்தையை சத்தியமாக்கி பக்தனுக்காக எல்லாமே பண்றார். சுவாமி சிவன் கோயில்கள்லாம், இங்கே திருவல்லிக்கேணில எங்காத்து பக்கத்துல காமகலா காமேஸ்வரி கோவில் ன்னு ஒரு அழகான கோயில் இருக்கு. அங்க ப்ரம்மோத்சவம் பூர்த்தியாச்சு. நேத்திக்கு கடைசி நாள், ஸ்வாமி புஷ்ப பல்லாக்கு உத்சவம் முடிச்சிட்டு, திருஊடல் உத்ஸவம் ன்னு ஒண்ணு பண்றா. சுந்தரமூர்த்திக்காக ஸ்வாமி தூது போனதை ஒரு உத்ஸவமா கொண்டாடறா. தன்னோட பக்தர்களுக்கு கட்டுப்பட்டு அவ்ளோ தூரம் எல்லாம் பண்றார். ஆனா சுந்தரர்

மீளா அடிமை உமக்கே ஆள் ஆய், பிறரை வேண்டாதே,

மூளாத் தீப் போல் உள்ளே கனன்று, முகத்தால் மிக வாடி,

ஆள் ஆய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்

வாளா(ஆ)ங்கு இருப்பீர்; திரு ஆரூரீர்! வாழ்ந்துபோதீரே!

ன்னு சுந்தரர் பாடினார். மீளா அடிமை உனக்கே ஆளாய் பிறரை வேண்டாதேன்னு, உனக்கு அடிமை நான். மீளா அடிமை நீ என்னை விரட்டினாலும் நான் போக முடியாது. மீளவே முடியாது. ஜென்ம ஜென்மத்துக்கும் அடிமை. உமக்கே ஆளாய், பிறரை வேண்டேன். போய் இன்னொருத்தரை வேண்ட மாட்டேன் அப்படி ஒரு தீர்மானம். உலக விஷயங்கள்ல ஆசையும் கிடையாது. ஏதாவது அப்படி வேணும்னாலும் உன்னைத் தான் கேட்பேன். இன்னொருத்தரை போய் கேட்க மாட்டேன் அப்படீங்கற உத்தம பக்தி இருந்தது, அப்படி இருக்கறவாளுக்கு பகவானே 'யோகக்ஷேமம் வஹாம்யஹம்' ன்னு தானே எல்லாம் பண்ணார்.

அந்த மாதிரி ஸ்வாமிகளுக்கு நடந்தது. மந்திரத்துல மாங்கா விழுமான்னா விழுந்துது. அவர் 'நான் தெய்வத்தை நம்பியிருக்கேன்' ன்னு சொல்லி உலகத்துல ஒருத்தர் கிட்டயும் ஒண்ணும் கேட்காம இருந்ததை பார்த்ததுனால தான் 'ஓஹோ இதற்கு பேரு தான் பக்தி' ன்னு நாங்க தெரிஞ்சுண்டோம், அப்பேற்பட்ட பக்தி. அவா என்ன பண்றான்னா, கார்த்தால அஞ்சு மணிக்கு எழுந்தா ராத்திரி பத்து மணி தூங்கற வரைக்கும் அந்த பகவானுடைய பாதபத்மத்துல ரமிச்சிண்டிருக்கா. இடையறாது பஜனம். அப்பேற்பட்ட பக்தர்களை நாம அடிக்கடி நினைச்சு, அவாளோட த்யானத்துல கொஞ்சமாவது நாம ரமிப்போம். அப்போ, ஒரு நாளைக்கு நமக்கும் அந்த உத்தம பக்தி வரும்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸூப்ரமண்ய புஜங்கம் –பத்தாவது ஸ்லோகம் – மனதுக்குகந்தது முருகனின் ரூபம்

ஸூப்ரமண்ய புஜங்கத்துல இதுவரைக்கும் ஒன்பது ஸ்லோகங்கள் பார்த்து இருக்கோம். நேற்றைக்கு பாதாரவிந்த மஹிமையை பத்தி அழகான ஒரு ஸ்லோகம் பார்த்தோம். முன்னேயே சொன்ன மாதிரி, இந்த ஸ்தோத்திரத்துல ஒரு அமைப்பு இருக்கு. இந்த க்ஷேத்ரத்துக்கு அழைச்சிண்டு வந்து, ஸ்வாமி சன்னிதி, சுத்தி இருக்கக்கூடிய மத்த ஸ்வாமி சன்னிதிகள், அந்த கந்தமாதன பர்வதம், பள்ளியறை, அப்படி எல்லாத்தையும் காண்பிச்சுட்டு, அப்பறம் இப்ப சுவாமி சன்னிதியில நிறுத்தி, பாதாதி கேசம் ஸ்வாமியோட ரூபத்தை ஆச்சார்யாள் வர்ணனை பண்றார். இது ஒரு சம்ப்ரதாயம். ஸ்த்ரீ தெய்வமா இருந்தா கேசாதி பாதம், புருஷ தெய்வமா இருந்தா பாதாதி கேசம் ன்னு வர்ணனை பண்றா. பக்தி மார்கத்துல, இந்த ரூப த்யானத்தை முக்யமா சொல்லி இருக்கா. நாம சங்கீர்த்தனம், அந்த தெய்வத்தை பத்தின ஸத்கதா ச்ரவணம், அந்த தெய்வத்தோட ரூபத்தை த்யானம் பண்றது. இந்த மூணும், பக்தி

ஏற்படறதுக்கும், வளர்றதுக்கும் ரொம்ப முக்கியம்ன்னு மஹான்கள் சொல்லியிருக்கா. அவாளோட அனுபவத்தை அவா சொல்றா. அப்படி ஒரு ரூபத்தில் பகவான் அவாளுக்கு காட்சி கொடுத்துனால, இதுல மனசு ரொம்ப லயிக்கறதுனு புரிஞ்சிண்டு, அதையே அவா தன்னோட பக்தர்களுக்கும் சொல்லி கொடுத்துருக்கா. அருணகிரிநாதர் கூட தன்னுடைய நிறைய பாடல்கள்ல முருகப்பெருமானோட ரூபத்தை வர்ணனை பண்ணி, இந்த மாதிரி என் கண் முன்னாடி வந்து தர்சனம் தரமாட்டியான்னு பாடுவார்.

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்

தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்

தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்

சந்தொடம ணைந்துநின்றன்புபோலக்

கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்

கஞ்சமலர் செங்கையுஞ்சிந்துவேலும்

கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்

கண்குளிர என்றன்முன் சந்தியாவோ

ன்னு ஒரு பாட்டு. நீ நடமாடிண்டு என் முன்னாடி வரணும், அப்படி நிறைய பாடல்கள்ல என் முன்னாடி வந்து நீ தர்சனம் கொடுக்கணும், ன்னு அருணகிரிநாதர் பாடி இருக்கார்.

மஹா பெரியவாளும் ரூபவர்ணணையை சொல்லியிருக்கா. பெரியவா குருபக்தியை பத்தி பேசும் போது ஒண்ணு சொல்றா. பரமேஸ்வரனுடைய ரூபத்தை த்யானம் பண்ணோம்னா சந்திரன், மழு மான், கையில அக்னி அப்படியெல்லாம் யோசிக்கலாம். ஆனா மனசுல ஒண்ணை த்யானம் பண்றதுக்குள்ள இன்னொன்னு மறைஞ்சு போயிடறது, குரு பக்தி ரொம்ப சுலபம். நம்ம குருவை நாம தர்சனம் பண்ணியிருக்கோம். மஹா பெரியவாளை நினைச்சா அந்த ரூபம் வந்துடறது. தெய்வ அனுக்ரஹம் பெற்ற மஹான்கள் எப்படி இருக்கான்னா, அவாளோட physical features விஷயம் இல்லை. ஞானத்துனால அவா கிட்ட இருக்கற அந்த கருணையும், சாந்தமும், அந்த இனிமையும் பொங்கி வழியறது. அதை நம்மால feel பண்ண முடியறது. அந்த தேஜஸ். அதனால நாம அவாளை ஓடிப் போய் தர்சனம் பண்றோம். ஆனா

மஹா பெரியவா வேடிக்கையா சொல்லியிருக்கா "எங்க அப்பா ரொம்ப அழகா இருப்பாராம், எங்க அம்மாக்கு கண்ணுல கொஞ்சம் உபாதை உண்டு. எனக்கு அப்பாவோடஅழகு ஒண்ணும் வரலை. ஆனா எங்க அம்மாவோட கண்ணு உபாதை வந்துடுத்துன்னு" வேடிக்கையா பெரியவா சொல்றா. queue-ல நின்னு நாங்க எல்லாம் தர்சனம் பண்றோம். ஆனா வேடிக்கையா பெரியவா T V ஸ்வாமிநாதன்னு ஒரு IAS officer கிட்ட அப்படி சொல்லியிருக்கா. அந்த மாதிரியெல்லாம் ரொம்ப விளையாட்டா பேசுவா பெரியவா. ஆனா ஸாக்ஷாத் காமாக்ஷி தேவியே தர்சனம் கொடுக்கறா என்கறதை பாத்தவா எல்லாரும் உணர்ந்தா. செக்க செவேல்னு ஒரு glow-வோட, golden aura வோட மஹாபெரியவா தர்சனம் கொடுத்தான்னா ஒரு மாசத்துக்கு அந்த காட்சி கண்ணுல நிக்கும். அந்த மாதிரி ஒரு ரூபத்துல மனசு நிக்கறது. நமக்கு நம் குழந்தைகள், நம் ப்ரியமானவாளோட ரூபம் வந்து கண்ணுல நிக்கறது இல்லையா? அதுல ஒரு சந்தோஷம் ஏற்படறது. ஆனா இது மாறக் கூடிய அழகு. மாறக் கூடிய சந்தோஷம். அதனால மாறாத சந்தோஷத்தை தேடும் போது அந்த பாகவனோட ரூபத்தை த்யானம் பண்றதுங்கிறதை மஹான்கள் காண்பிச்சு கொடுத்திருக்கா. இப்படி இந்த முருகப் பெருமானுடைய பாதரவிந்தத்தை பத்தி நேத்திக்கு ஒரு ஸ்லோகத்துல பார்த்தோம். அடுத்தது 'கடீ' பிரதேசம்ன்னு இடுப்பை பத்தின ஒரு ஸ்லோகம்.

सुवर्णाभदिव्याम्बरैर्भासमानां क्वणत्किङ्किणीमेखलाशोभमानाम् ।

लसद्धेमपट्टेन विद्योतमानां कटिं भावये स्कन्द ते दीप्यमानाम् ॥ १० ॥

ஸுவர்ணாபதிவ்யாம்பரைர் பாஸமானாம்

க்வணத்கிங்கிணீ மேகலா சோபமானாம்

லஸத்தேம பட்டேன வித்யோதமானாம்

கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்ய மானாம்

ன்னு ஒரு ஸ்லோகம். ஸ்கந்தா! ன்னு கூப்பிடறார், 'தே தீப்யமானாம்' – உன்னோட ஒளி பொருந்திய 'கடீம்' கடீ ன்னா இடுப்பு. அதை 'பாவயே' நான் த்யானிக்கிறேன். அந்த கடீயோட வர்ணணை எப்படி இருக்குன்னா 'ஸுவர்ணாபதிவ்யாம்பரைஹி' தங்க மயமான வஸ்த்ரங்களால் அந்த இடுப்பு மறைக்கப்பட்டு இருக்கு. இடுப்புல தங்க மயமான ஜரிகையெல்லாம் வெச்சு வேஷ்டி கட்டிண்டு இருக்கார். 'க்வணத்கிங்கிணீ மேகலா சோபமானாம்'

சலங்கை கட்டின ஒரு மேகலை,மேகலைன்னா இடுப்புல கட்டிக்கற ஒரு ஆபரணம். கடீ ஸூத்ரம் மாதிரி. அந்த சலங்கையோட மணிகள் 'க்வணத்கிங்கிணீ'-ன்னு சத்தம் பண்ணிண்டு இருக்கு. அந்த மேகலைய போட்டுண்டு 'லஸத்தேம பட்டேன வித்யோதமானாம்' belt மாதிரி ஒரு பட்டம் ஒண்ணு கட்டியிருக்கு. அது தங்க மயமா இருக்கு. 'ஹேம பட்டேன வித்யோதமானாம்' ஒளிவிடும் உன்னுடைய இடுப்பு பிரதேசத்தை நான் த்யானம் பண்ணுகிறேன்ன்னு ஒரு ஸ்லோகம். இப்படி அடுத்து மார்பைப் பத்தி, அடுத்தது கரங்களைப் பத்தி, அடுத்தது முகத்தைப் பத்தி, அதுல இருக்கற அந்த புன்சிரிப்பு, அதிலிருக்கிற அந்த பன்னிரெண்டு கண்கள், அதோட கருணை பார்வை, இப்படி அந்த ரூபத்தை வர்ணிக்க போறார்.

இடுப்புல ஒட்டியாணத்தோட ஒரு ஸ்வாமியை நினைச்ச உடனே, மூக பஞ்சசதியில ஒரு ஸ்லோகம் வர்றது. ஸ்துதி சதகத்துல நூறாவது ஸ்லோகம், இது மஹாபெரியவாளுக்கு ரொம்ப இஷ்டமான ஸ்லோகம். 'இந்த ஸ்லோகத்தை மௌன விரதமா இருந்தா கூட உதடு அசைய ஜபிச்சிண்டே இருப்பா. நான் பார்த்திருக்கேன்' ன்னு வீழிநாதன் மாமா சொல்லியிருக்கா. அந்த ஸ்லோகத்தை சொல்லி பூர்த்தி பண்ணிக்கிறேன்.

क्वणत्काञ्ची काञ्चीपुरमणिविपञ्चीलयझरी-

शिरःकम्पा कम्पावसतिरनुकम्पाजलनिधिः ।

घनश्यामा श्यामा कठिनकुचसीमा मनसि मे

मृगाक्षी कामाक्षी हरनटनसाक्षी विहरतात् ॥

க்வணத்காஞ்சீ காஞ்சீபுரமணிவிபஞ்சீலயஜரீ-

சிர:கம்பா கம்பாவஸதிரனுகம்பாஜலனிதி: |

கனச்யாமா ச்யாமா கடினகுசஸீமா மனஸி மே

ம்ருகாக்ஷீ காமாக்ஷீ ஹர நடனஸாக்ஷீ விஹரதாத் ||

நம: பார்வதீ பதயே…ஹர ஹர மஹாதேவா

ஸுப்ரமண்ய புஜங்கம் –பதினொன்றாவது ஸ்லோகம் – வள்ளியம்மை நாயகனே வா வா வா

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல முருகப் பெருமானுடைய ‘கடீ’ பிரதேசம் அப்படிங்கற இடையைப் பத்தி ஒரு அழகான ஸ்லோகம் பார்த்தோம்.

ஸுவர்ணாபதிவ்யாம்பரைர் பாஸமானாம்

க்வணத்கிங்கிணீ மேகலா சோபமானாம் |

லஸத்தேம பட்டேன வித்யோதமானாம்

கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்ய மானாம் ||

ன்னு ஒரு ஸ்லோகம்.

இன்னிக்கு முருகப் பெருமானுடைய திருமார்பைப் பற்றிய ஒரு ஸ்லோகம்.

पुलिन्देशकन्याघनाभोगतुङ्गस्तनालिङ्गनासक्तकाश्मीररागम् ।
नमस्यामहं तारकारे तवोरः स्वभक्तावने सर्वदा सानुरागम् ॥११॥

புளிந்தேச கன்யா கநாபோக துங்க

ஸ்தனாலிங்கநாஸக்த காச்மீர ராகம் |

நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர:

ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸானுராகம் ||

ன்னு ஒரு ஸ்லோகம். முருகப் பெருமானுடைய மார்பு செக்கச் செவேல்னு இருக்காம். பரந்து விரிந்த அந்த மார்புகள், சிகப்பா இருக்கு. அதுக்கு ஆசார்யாள் ரெண்டு காரணங்கள் சொல்றார். 'ஹே தாரகாரே'' தாரகாசுரனுக்கு சத்ருவான ஸுப்ரமண்யப் பெருமானே! 'புளிந்தேச கன்யா கநாபோக துங்க ஸ்தனாலிங்க நாஸக்த காச்மீர ராகம்' புளிந்தன் என்ற வேடனுடைய பெண்ணான வள்ளியம்மையினுடைய கடினமான பெரிய ஸ்தனங்களை ஆலிங்கனம் செய்து கொள்ளும் பொழுது, அந்த ஸ்தனத்தில் அலங்கரிக்கப் பட்டுள்ள குங்குமம் உன்னுடைய மார்பிலும் வந்துட்டதனால சிகப்பா இருக்கு, ன்னு ஒரு காரணம்.

இன்னொரு காரணம், 'ஸர்வதா ஸ்வபக்தாவனே', எப்பொழுதும் உன்னுடைய பக்தர்களை காப்பாற்ற வேண்டும் என்று உன் மனசுக்குள்ள எப்பவும் 'ஸானுராகம்', அந்த அனுராகம், அந்த ஆசை இருந்துண்டே இருக்கிறதனால, 'ராகம்' என்கிற ஸமஸ்கிருத வார்த்தைக்கு சிகப்புனு ஒரு அர்த்தம். உள்ளிருக்கக் கூடிய அந்த கருணை வெளில சிகப்பா தெரியறது. 'தவ உர:', உன்னுடைய மார்பு செக்கச் செவேல்னு ஆயிடுத்து. கருணையினால சிவந்திடுத்து உன்னுடைய மார்பு. அதை 'அஹம் நமஸ்யாமி', நான் நமஸ்கரிக்கிறேன்.

புளிந்தேச கன்யா கநாபோக துங்க

ஸ்தனாலிங்க நாஸக்த காச்மீர ராகம்

நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர:

ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸானுராகம்!

வள்ளி தேவியை நினைக்கும் போது, இங்க திருத்தணிக்கு பக்கத்தில வள்ளிமலைனு ஒரு மலை இருக்கு. முருகப் பெருமான் அந்த வள்ளிமலைக்குப் போய், வள்ளி தேவியை தினைப் புனத்தில பார்த்து அப்புறம் நிறைய திருவிளையாடல்கள் இருக்கு. அதெல்லாம் பண்ணி முடிச்சு, திருத்தணிக்கு கொண்டு வந்து கல்யாணம் பண்ணின்டார்னு வரலாறு. அந்த வள்ளிமலைல ஒரு திருப்புகழ் சுவாமிகள், வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்னு ஒரு மஹான் பன்னிரண்டு வருஷம் தபஸ் பண்ணினார். தன் கையாலேயே ஒரு குகை பண்ணிண்டு, அதுக்குள்ள உட்கார்ந்துண்டு, அங்க வர்ற குறவர்கள் கொடுக்கக்கூடிய பழங்கஞ்சியை, ஒரு நாளைக்கோ, ரெண்டு நாளைக்கோ ஒரு தரம் சாப்டுண்டு தபஸ் பண்ணினார்.

திருவண்ணாமலைல சேஷாத்ரி சுவாமிகள்னு ஒரு மஹான் இருந்தார். அவர் ‘உனக்குத் திருப்புகழ் மந்திரம். நீ வள்ளி மலைக்குப் போ.’ ன்னு சொன்னார். அதையே தெய்வ வாக்கா எடுத்துண்டு வள்ளிமலைக்கு வந்து பன்னிரண்டு வருஷங்கள் திருப்புகழை மந்திரமா ஜெபிச்சார். அவருக்கு வள்ளி அம்மையுடைய அநுக்கிரகம் கிடைச்சுது. அவருக்கு எழுத்துப் படிப்பே தெரியாது. அ, ஆ, இ, ஈ கூட தெரியாது. ஒரு நாலாவது படிக்கிற பையன் கிட்ட இருந்து சிலேட்ல எழுதி, அ, ஆ, இ, ஈ .. கத்துண்டு, அப்புறம் திருப்புகழ் பாடல்கள் எல்லாம் கேட்டு கேட்டு கத்துண்டு, அதை எழுதித் தரச் சொல்லி, அந்த பக்கத்த தன் கழுத்தில மாலையாட்டம் தொங்க விட்டுண்டு, யாராவது படிக்கத் தெரிஞ்சவா இருந்தா, ‘இதப் படி, படி’ ன்னு சொல்லி, படிக்கிறத கேட்டு கத்துண்டாராம். அப்படி அவருக்கு திருப்புகழ் மேல ஆசை. அதற்கப்புறம் அவர் எல்லா திருப்புகழையும் கத்துண்டு, அவ்வளவு இனிமையா பாடுவார். ராக, தாள ஞானத்தோட அவர் திருப்புகழ் பாடுவார். ஏன்னா திருப்புகழ்ல ரொம்ப கடினமான சந்தங்கள் எல்லாம் இருக்கு. ஒரு மிருதங்க வித்வான், இவரை ரொம்ப இளப்பமா நினைச்சி ‘நான் வாசிச்சா, நீங்க பாடுவேளா?’ அப்படின்னாராம். சந்தக் கட்டோட இவர் பாடுற திருப்புகழைக் கேட்ட உடனே, நடுங்கிப் போய் நமஸ்காரம் பண்ணி ‘அபசாரம். மன்னிச்சிடுங்கோ’ சொல்லி ஓடிப் போய்ட்டார்னு சொல்லுவா. இவருக்கு ஒரு சங்கீதமும் தெரியாது. வள்ளி அம்மையினுடைய அநுக்கிரகத்தினால ரொம்ப சங்கீதத்தோட, ராக, தாள ஞானத்தோட ‘கணீர்’னு பாடுவார்.

வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் அப்படி திருப்புகழை, தமிழகம் முழுக்கப் போய், எல்லா இடத்திலயும் பாடினார். தேன் மாரியாக பொழிந்தார். ஒவ்வொரு தேசத்திலயுமாக பன்னிரண்டு சபைகள் நிறுவினார். அதிலிருந்து இன்னிக்கி உலகம் முழுக்க திருப்புகழ எல்லாரும் பாடுறா. நாம எல்லாரும் இன்னிக்கி திருப்புகழ பாடுறோம்னா வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளை நினைச்சே ஆகணும். அப்படி வள்ளியம்மையினுடைய அநுக்கிரகம் அவருக்கு இருந்தது.

இந்த திவ்ய தம்பதிகள், வள்ளியம்மையோடு கூடிய ஸுப்ரமண்ய ஸ்வாமியை நினைக்கும் போது, எனக்கு ஒண்ணு தோணறது. ஸ்வாமிகள் சந்நிதியில நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வரது. மஹான்கள் எல்லாரும் இக பர சௌபாக்யத்தத்தான் அநுக்ரகம் பண்ணியிருக்கா. இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தோட கடைசிப் பாட்டுலேயே

புஜங்காக்ய வ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம் ய:

படேத் பக்தியுக்த: குஹும் ஸம்ப்ரணம்ய |

ஸபுத்ரான் களத்ரம் தனம் தீர்கமாயுர்

லபேத் ஸ்கந்தஸாயுஜ்யமந்தே நரஸ்ஸ: ||

ன்னு நல்ல பிள்ளைகள், நல்ல மனைவி, பணம், தீர்க்காயுசு, தீர்க்காயுசா இருக்கணும்னா வியாதிகள் வரக்கூடாது இல்லையா, வியாதிங்கறதுதான் ஆயுச குறைக்கிறது. அதனால வியாதி இல்லாத நீண்ட ஆயுள், முடிவுல ஸ்கந்த சாயுஜ்யம், முருகனோடு ஒன்றாக கலக்கும் அந்த முக்தியும் இந்த ஸ்தோத்ரப் பாராயணம் கொடுக்கும் ன்னு ஆச்சார்யாள் சொல்றார். அந்த மாதிரி, வள்ளி அம்மையை முருகப்பெருமான், தேடித் தேடிப் போய், ஓடி ஓடிப் போய், தினைப் புனத்தில, நடையா நடந்து, காதல் பண்ணி கல்யாணம் பண்ணிண்டார் ன்னு வரது இல்லையா. எனக்கு அத படிச்சவுடன், ஸ்வாமிகள் கிட்ட நடந்த ஒரு நிகழ்ச்சி ஞாபகம் வருது.

என் வயசு பையன் ஒருத்தனுக்கு கல்யாணம் நிச்சயம் ஆச்சு. அவன் ஸ்வாமிகள் கிட்ட வந்து 'பொண்ணு ஒரளவு அழகு தான்' ன்னு சொன்னான். ஸ்வாமிகள் சொன்னார். 'உங்க அப்பா அம்மாவும், அவா அப்பா அம்மாவும், நீ ஒத்துண்ட பின்ன லக்னம் குறிச்சிருக்கா. ஒருத்தருக்கொருத்தர் வாக்கு குடுத்திருக்கா. இனிமே நீ இந்த மாதிரி வந்து பேசக் கூடாது. பொண்ணு ஒரளவு அழகுதான்

அப்படிங்கற எண்ணத்தையே விட்டுடு. இங்கிலீஷ்ல கூட சொல்லுவா இல்லையா. ‘ Beauty is in the eyes of the beholder’ ன்னு ஸ்வாமிகள் இங்கிலீஷ்லயே Quote பண்ணினார். அதனால அழகுங்கிறது நம்ம மனசுல இருக்கிறது தான். இவளை கடவுள் உனக்காக ஸ்ருஷ்டி பண்ணி குடுத்திருக்கார். உன்னுடைய அப்பா அம்மாவையும், உன்னையும், உன்னுடைய குழந்தைகளையும் நன்னா பாத்துப்பா. அன்பு தான் அழகு. நீ ஏதோ சினிமால பாத்துட்டு, அதெல்லாம் நினைச்சிக்காத. இவகிட்ட மனச வை. இவகிட்ட அன்பா இரு’ ன்னு சொல்லிக் கொடுத்தார் ஸ்வாமிகள். ‘அதே மாதிரி உன்னுடைய படிப்ப வைச்சுண்டு, அவளோட புத்திய எடை போடாத. அவளோட ப்ரியத்த புரிஞ்சுக்கோ. நீயும் அந்த மாதிரி ப்ரியமா இரு’ ன்னு சொன்னார். இந்த காலத்தில கல்யாணங்கள்ல நாள்பட ப்ரியம் குறைஞ்சு போயிடறதை நான் பாக்கிறேன். அதனால சொல்லணும்னு தோணித்து. கல்யாணாத்துக்கு முன்னாடி நமக்கும் கல்யாணம் ஆகாதான்னு, ஒரு டூ வீலர்ல யாராவது பின்னாடி ஒரு பொண்ண வைச்சுண்டு போகும் போது, இவன் ஏங்கி ஏங்கி, அப்புறம் ஒரு பொண்ணு வந்தா தலையை ஆட்டிட வேண்டியது. கல்யாணத்துக்கு அப்புறம் ‘நீ ஒண்ணும் அழகா இல்ல. நான் ரொம்ப புத்திசாலி. நீ அவ்ளோ புத்திசாலி இல்ல’ ன்னு ஏதாவது குத்திக் காமிக்கிறத பாக்கும் போது மனசு கஷ்டமா இருக்கு.

எதுக்கு இத சொல்றேன்னா, வள்ளி ஒரு வேடுவ குலப்பெண். முருகப் பெருமான் தேடிப் போய், அவளை ஆசையா கல்யாணம் பண்ணிண்டு, இன்னிக்கி நாம அந்த திவ்ய தம்பதிகளை நமஸ்காரம் பண்றோம். இதெல்லாம் நாம ஒரு பாடம் கத்துக்கிறதுக்காகத் தான். அவ மேல ஆசைய முருகப் பெருமான் மாத்திக்கவே இல்லையே. அவளுக்கு படிப்பா? அழகுங்கிறது இவர் மனசுல ஆசை. அது தான் அழகு. அம்பாளோட அநுக்கிரகம், அழகே அருள்.

நாம ஒரு கிருஹத்தில பொறந்தோம். நம்ம அம்மா அழகானு நாம பாக்க முடியுமா? அம்மா காமிக்கிற அந்த அன்பு தான் ப்ரதானம். அம்மா எப்படி இருந்தாலும் குழந்தைக்கு அது அம்மா தான். அழகா இருக்கிற ஒரு மாமி வர்றானா குழந்தை அவள்ட்ட ஓடிப் போகுமா ? அம்மா காலைத் தானே கட்டிக்கும். எப்படி அங்க அன்பு தான் அழகுன்னு புரிஞ்சிக்கிறோமோ, அதே மாதிரி வர்ற மனைவி கிட்டயும், நமக்காக கடவுள் இவளை ஸ்ருஷ்டி பண்ணி

அனுப்பிச்சிருக்கார்னு நினைக்கனும். எங்கயோ ஒரு காட்டுல போனா கூட, ஆண் பெண் மான் இணையாக இருக்கு. பட்டாம் பூச்சியோ ஒரு புறாவோ எல்லாம் ஜோடியாக பகவான் படைச்சிருக்கார். இவாளுக்காக இவானு அது பகவானோட ஸ்ருஷ்டி. அந்த மாதிரி கடவுள் நமக்கு கொடுத்த ஒரு வரமா மனைவிய நினைச்சு அன்பு பாராட்டணும்' ன்னு ஸ்வாமிகள் சொல்லிக் கொடுத்தது, அந்த பிள்ளை இன்னிக்கும் பதினெட்டு வருஷமா கல்யாணத்தில எந்த ஒரு கஷ்டமும் இல்லாம சௌக்கியமா இருக்கான்.

அதனால முருகப் பெருமானோட கூடியிருக்கிற இந்த வள்ளி தேவியை நினைக்கணும். அடிக்கடி அவாளை அருணகிரி நாதரும்

செண்ப காடவி யினுமித ணினுமுயர்
சந்த னாடவி யினுமுறை குறமகள்
செம்பொ னூபுர கமலமும் வளையணி ...... புதுவேயும்

இந்து வாண்முக வனசமு ம்ருகமத
குங்கு மாசல யுகளமு மதுரித
இந்த ளாம்ருத வசனமு முறுவலு ...... மபிராம

இந்த்ர கோபமு மரகத வடிவமு
மிந்த்ர சாபமு மிருகுழை யொடுபொரு
மிந்த்ர நீலமு மடலிடை யெழுதிய ...... பெருமாளே

என்றெல்லாம் அழகா பாடுவார். இந்த திவ்ய தம்பதிகளை நினைச்சு நம்முடைய மண வாழ்க்கையும் நன்னா இருக்கணும்னு வேண்டிப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் –பன்னிரண்டாவது ஸ்லோகம் – வீர மாது மருவிய ஈராறு தோளும்</u>

நேற்றைய ஸ்லோகம்,

पुलिन्देशकन्याघनाभोगतुङ्गस्तनालिङ्गनासक्तकाश्मीररागम् ।

नमस्यामहं तारकारे तवोरः स्वभक्तावने सर्वदा सानुरागम् ॥ ११॥

புளிந்தேச கன்யாகநாபோக துங்க

ஸ்தனாலிங்க நாஸக்த காச்மீரராகம் |

நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர

ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸானுராகம் ||

தன்னுடைய பக்தர்களைக் காப்பாத்தணுங்கற விஷயத்துல ஸ்வாமிக்கு இருக்கற அந்த ஆசை, உள்ளுக்குள்ள இருக்கற ஆசை, வெளியில அவருடைய மார்புல செக்கச் சேவேல்னு தெரியறதுன்னு சொன்னார். இன்னிக்கி பன்னிரண்டு திருக்கரங்களைப் பற்றி ஒரு ஸ்லோகம்.

विधौ कॢप्तदण्डान् स्वलीलाधृताण्डा-

न्निरस्तेभशुण्डान् द्विषत्कालदण्डान् ।

हतेन्द्रारिषण्डाञ्जगत्राणशौण्डान्

सदा ते प्रचण्डान् श्रये बाहुदण्डान् ॥ १२॥

விதௌக்லுப்த தண்டான் ஸ்வலீலாத்ருதாண்டான்

நிரஸ்தே பசுண்டான் த்விஷத்காலதண்டான் |

ஹதேந்த்ராரிஷண்டான் ஜகத்ராண சௌண்டான்

ஸதாதே ப்ரசண்டான் ச்ரயே பாஹுதண்டான் ||

பாஹு-ன்னா கைகள், முருகப் பெருமானுக்கு நல்ல நீளமான பன்னிரு கைகள். அதைப் பத்தி இந்த ஸ்லோகம்.

'வல்லீச நாத மம தேஹி கராவலம்பம்' – ன்னு மஹான்கள் எல்லாம் பாடியிருக்கா. அந்த கரங்களைக் கொண்டு என்னைக் கை தூக்கிவிடு, என் கையை பிடிச்சுக்கோ கராவலம்பம்-னா கையைப் பிடிச்சிண்டு ஆபத்துலேர்ந்து நம்மளை காப்பாத்தறது. அந்த மாதிரி அருணகிரிநாதர்கூட

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக …… மலராறும்
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள …… இருதாளும்
ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட …… முறைவாழ்வும்
ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்

ஞானாபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது ...... பெறவேணும்

சிறப்பான வீரலக்ஷ்மி குடிகொண்டிருக்கும் பன்னிரு தோள்கள்-னு பாடறார். அப்புறம் முழு ரூபத்தையும் வர்ணனை பண்ணி, இடப்புறமும், வலப்புறமும் தெய்வானை, வள்ளியம்மையோடு எனக்குக் காட்சி தரவேண்டும்-ன்னு அந்த ஒரு அழகான பாட்டு.

இந்த ஸ்லோகத்தோட அர்த்தம் சொல்றேன். விதௌக்லுப்த தண்டான் – விதி-ன்னா ப்ரம்மா, விதௌ-ன்னா ப்ரம்மாவிடத்தில், தண்டம்-ன்னா தண்டனை, க்லுப்த தண்டான்-னா தண்டனை கொடுத்தார். முருகப் பெருமான் தன் கைகளால் அவர் தலையில குட்டினார், அவர் ப்ரணவத்துக்கு அர்த்தம் தெரியாது-ன்னு சொன்ன போது. அந்தக் கைகள்-னு சொல்றார். ப்ரம்மாவுக்கு தண்டனை கொடுத்த கைகள்.

‘ஸ்வலீலாத்ருதாண்டான்’ அண்டங்களை எல்லாம் விளையாட்டாக ‘ஸ்வலீலா’ வெறும் விளையாட்டாக அண்டங்களை எல்லாம் தாங்கி கொண்டு இருக்கிறார். ‘த்ருத அண்டான்’

நிரஸ்தேபசுண்டான்’, இப:-ன்னா யானை, இபசுண்டம்-னா யானையோட தும்பிக்கையை, நிரஸ்த: யானையோட தும்பிக்கையை பிடிச்சு அதோட திமிரை அடக்கினார், மதத்தை அடக்கினார்-ன்னு இங்க வர்றது. ஒரு புராணத்துல, வள்ளியம்மை பயந்துண்டு, யானையை பார்த்தவுடனே முருகனை வந்து கட்டிக்கறா. அதற்கப்புறம், கணபதி யானையா வந்தபோது அவருடைய கோபத்தை அவராலேயே அடக்க முடியலைன்னும், முருகப் பெருமான் தான் அதன் தும்பிக்கையைப் பிடிச்சு அதனுடைய மதத்தை அடக்கினார்னும் இருக்காம். அதனால ‘நிரஸ்தேபசுண்டான்’ யானையினுடைய தும்பிக்கையைப் பிடிச்சு அதனுடைய மதத்தை அடக்கின அந்த கைகள்,

‘த்விஷத்காலதண்டான்’ எமனுக்கு சத்ருவா இருந்து எமனையே துவம்சம் பண்ற கைகள்-னு சொல்றார். மார்க்கண்டேயனை சிவபெருமான் எமன் கிட்டயிருந்து காப்பதினார் என்கிற கதை எல்லாருக்கும் தெரிஞ்சியிருக்கும். ஒரு புராணத்துல முருகப் பெருமானை கொண்டு அந்த எமனை விரட்டினார்-னு இருக்காம்.

அதனால எமனக்கும் சத்ருவாக அவனை அடக்கின கைகள்னு இதுக்கு சாஸ்த்ரிகள் அர்த்தம் சொல்லியிருக்கார்.

‘ஹதேந்த்ராரிஷண்டான்’ இந்திரனுக்கு அரி – இந்திரனுக்கு எதிரிகளான சூரபத்மன் முதலிய அசுரர்களை ‘ஹத:’ வதம் பண்ணினார்.

‘ஜகத்ராண சௌண்டான்’ இந்த கரங்கள் உலகங்களை எல்லாம் காப்பாத்தறதுல ரொம்ப சாமர்த்தியத்தோட, ரொம்ப சக்தி வாய்ந்த கைகளா இருக்கு.

‘ப்ரசண்டான்’ இந்த கைகள் எதிரிகளுக்கு ரொம்ப பயங்கரமா இருக்கு, அவர் கையில வேலை எடுத்தார்னா எல்லாம் பயந்து ஓடறா. அப்படி பயத்தை கொடுக்கக்கூடியதாக உள்ள ‘பாஹுதண்டான்’ உன்னுடைய தண்டம்-ன்னா நீண்டு தொங்கி கொண்டு இருக்கக் கூடிய, பன்னிரு கைகளையும் ‘சதா ஆச்ரயே’ நான் எப்பொழுதும் நம்பி இருக்கிறேன். நான் அவைகளை பற்றுக்கோடாக கொண்டிருக்கிறேன்-ன்னு, இந்த அழகான ஸ்லோகம்.

இந்த வள்ளி தேவியை பத்தி சொல்லும் போது, இங்க ஒரு புராண வரலாறு கொடுத்திருக்கார். விஷ்ணு பகவான் ஒரு ரிஷியாக இருந்த போது ஒரு மானை பார்த்தார். அந்த மான் ஒரு குழந்தையை ஈன்றுட்டு போனதாகவும், அந்த குழந்தை, வல்லி-ன்னா கொடின்னு அர்த்தம். கொடிகளுக்கு நடுவுல கிடந்த போது புளிந்தன் என்கிற வேடன் வந்து அந்த குழந்தையைப் பார்த்த உடனே எடுத்து “எனக்கு பிள்ளைகள் இருக்கா. ஆனா பெண் குழந்தைகள் இல்ல, எனக்குக் கிடைச்ச லக்ஷ்மி”-ன்னு எடுத்துண்டு போய் வளர்த்தாகவும், முதல்ல ரெண்டு பெண்கள் முருகப் பெருமானுக்காக தேவலோகத்துல தபஸ் பண்றா. அவா சுந்தரவல்லி, ஆனந்தவல்லி ன்னு. அதுல சுந்தரவல்லி, இந்திரனுக்கு பெண்ணாக பிறந்தாள். ஸ்வாமி ஸூரசம்ஹாரம் பண்ணின உடனே, இந்திரனே தேவசேனையை முருகருக்கு கல்யாணம் பண்ணி கொடுக்கறான். ஆனந்தவல்லிங்கிறவ இந்த பூமியில தினைப் புனத்துல பெண்ணா பிறக்கிறாள். முருகப் பெருமான் இவா சுந்தரவல்லியாகவும், ஆனந்தவல்லியாகவும் இருந்த போதே ஷடக்ஷரி மந்த்ரோபதேசம் பண்ணினார், அது இந்த மாதிரி பிறந்தபோதும் அவாளுக்கு ஞாபகம் இருந்தது. அதனால அந்த ஷடக்ஷரியை ஜபிச்சிண்டு தினைப்புனத்துல, இதை பறவைகள் எல்லாம் ஓட்டிண்டு இருந்த

போது, நாரதர் முருகப் பெருமான் கிட்ட இந்த வள்ளியோட அழகை சொல்றார். உடனே முருகப் பெருமான் தேடி வந்து இந்த வள்ளியை கல்யாணம் பண்ணிக்கறார் என்கிற வ்ருத்தாங்களும் இங்கே தேதியூர் சாஸ்திரிகள் விளக்கமா எழுதி இருக்கார். அப்படி சொல்லிண்டு வரும் போது, யானையா கணபதி வந்தார். முருகப் பெருமான், அவரோட மதத்தை அடக்கினார். 'நிரஸ்தேபசுண்டான்' ன்னு சொல்லும் போது அந்த வ்ருத்தாந்தத்தை சொல்லியிருக்கார்.

நாளைக்கு ஆறு முகங்களை பத்தி ஒரு ஸ்லோகம். அதை பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –பதிமூன்றாவது ஸ்லோகம் – ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும்

நேற்றைக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல பன்னிரண்டாவது ஸ்லோகம், முருகப் பெருமானுடைய பன்னிரண்டு திருக்கரங்களை பத்தி, அந்த தோள் வலிமையை பத்தி ஒரு ஸ்லோகம் பார்த்தோம். இன்னிக்கி முருகப் பெருமானுடைய ஆறு திருமுகங்களை பத்தி அழகான, கவித்துவமான ஒரு ஸ்லோகம். இந்த ஆறுமுகங்கள் அப்படி சொன்ன உடனே அருணகிரிநாதருடைய, எல்லாருக்கும் நன்னா தெரிஞ்ச ஒரு திருப்புகழ் பாட்டு ஞாபகம் வர்றது. அதை படிக்கிறேன்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே

ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே

குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே

மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே

வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே

ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்

ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

ன்னு ஒரு பாட்டு. இந்த பாட்டு எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும்.

ஆறுமுகங்களைப் பார்த்த உடனே, ஆச்சார்யாளுக்கு இதற்கு உவமை ஏதாவது சொல்லணும்னு தோணறது. கவிகள் எல்லாம் பொதுவா சந்திரன் போன்ற முகம் ன்னு சொல்வா இல்லையா, அந்த மாதிரி சந்திரன் போன்ற முகம் ன்னு சொல்லலாமா ன்னு அவர் யோசிக்கிறார். ஸ்லோகத்தை படிக்கிறேன்.

सदा शारदाः षण्मृगाङ्का यदि स्युः

समुद्यन्त एव स्थिताश्चेत्समन्तात् ।

सदा पूर्णबिम्बाः कलङ्कैश्च हीना-

स्तदा त्वन्मुखानां ब्रुवे स्कन्द साम्यम् ॥ १३॥

ஸதா சாரதா ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு:

ஸமுத்யந்த ஏவ ஸ்திதாச்சேத் ஸமந்தாத் |

ஸதா பூர்ணபிம்பா: கலங்கைஸ்ச ஹீனா

ததா த்வன்முகானாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம் ||

ன்னு சொல்றார்.

ஹே ஸ்கந்தா! நான் உன்னுடைய முகங்களுக்கு ஸாம்யமா சந்திரனை சொல்லணும்னு ஆசைப் படறேன். ஆனால் 'ஸதா' – எப்பொழுதும், 'சாரதா:' சந்திரன் சரத் காலத்துல இருக்கிற மாதிரி, சரத் காலத்துல சந்திரன் மேகங்கள்லாம் இல்லாம ரொம்ப ஸ்வச்சமாக அழகாக இருக்கும். அந்த சரத்காலத்துல இருக்கிற மாதிரி, 'ஷண்ம்ருகாங்கா:' ஷஷாங்கா: ம்ருகாங்கா: இதெல்லாம் சந்திரனுக்கு பெயர். ஷஷம்-ன்னா முயல். அந்த சந்திரன்ல ஒரு அடையாளம் இருக்கே, அது முயல் மாதிரி இருக்கு. ம்ருக: ன்னா மான், மான் போன்ற அடையாளம், கருப்பா ஒரு அடையாளம் இருக்கு இல்லையா சந்திரன்ல. அதனால அதுக்கு ம்ருகாங்கா: ன்னு பேரு. ''ஷண்ம்ருகாங்கா:' ஆறு சந்திரன்கள், 'பூர்ணபிம்பா:' பூர்ண சந்திரன்கள், பிறை சந்திரன்லாம் இல்லை. முழு நிலவாக ஆறு சந்திரன்கள், மான் மாதிரி அடையாளத்தை உடைய சந்திரன்கள், 'ஸமந்தாத்' – எல்லா பக்கங்களிலேயும் சேர்ந்து 'ஸமுத்யந்த ஏவ:' உதிச்சுதுன்னா 'ஸ்த்திதா: சேத் யதி ஸ்யு:' எப்பொழுதும் ஸ்திதமா அந்த ஆறு சந்திரன்களும் உதிச்சு, அது எல்லாம் முழுச் சந்திரனா இருந்து, அந்த ஆறும்

எப்பவும் பிரகாசிச்சிண்டு இருந்துதுன்னா, அப்ப உன்னுடைய முகத்துக்கு உவமை சொல்லலாமான்னு நான் நினைப்பேன். அது கூட உன் முகத்துல ஒரு கஸ்தூரி திலகமோ, அது மாதிரி உன் முகத்துலேயும் ஒரு அடையாளம் இருந்து, சந்திரன்லேயும் ஒரு களங்கம் இருக்குன்னா சரி. இது ஒரு உவமைன்னு சொல்லலாம் 'ஸாம்யம் ப்ருவே' ஸமமாக சொல்லலாம்னு ஆரம்பிப்பேன்.

உன்னுடைய முகத்துல கஸ்தூரி திலகம் மாதிரி எதுவும் இல்லாமலே, சாதாரணாமாவே, எப்பொழுதும் உன் முகம் பிரகாசிக்கறது. எந்த அலங்காரமும் இல்லாமல் இருக்கும் அந்த ஆறுமுகங்களுக்கு நான் ஏதாவது சொல்லணும்னா 'கலங்கைஸ்ச ஹீனா: பூர்ணபிம்பா:' சந்திரன் எப்பயாவது இந்த களங்கமே இல்லாம, பூர்ண சந்திரனாக, ஆறு சந்திரன்கள் உதிச்சுதுன்னா, அப்போ நான் அதை உவமையாக சொல்வேன். சந்திரனோ எப்பொழுதும் களங்கத்தோடு தான் இருக்கு, ஒரே ஒரு சந்திரன் தான் இருக்கு, அது மாசத்துக்கு ஒரு நாள் தான் பூரண சந்திரனாக இருக்கு, அதுவும் சரத்காலத்துல தான் நன்னா ப்ரகாசிக்கறது, மத்த காலங்கல்லாம் மேகத்துகுள்ள போயிடறது. இப்படி இருக்கும் போது உன்னுடைய முகத்துக்கு நான் எப்படி சந்திரனை உவமையாக சொல்ல முடியும்ன்னு வேடிக்கையா சொல்றார்.

உன்னுடைய முகம் உவமை சொல்ல முடியாத அளவுக்கு அழகா இருக்கு. நிருபமான முகங்களா இருக்குன்னு சொல்ல வரதை, இந்த மாதிரி ஆச்சார்யாள் வேடிக்கையா சொல்ற மாதிரியும், அவ்வளவு அழகு அந்த முகத்தினுடைய ஜோதி என்று அப்படி சொல்றார். முதல்ல இந்த ஸ்தோத்ரத்தை ஆரம்பிச்ச போதே 'என் மனதில் உன் ஆறுமுகங்களோடு கூடிய ஒரு ஜோதி, ஒரு ஒளி பிரகாசிப்பதனால் தான், ஒண்ணுமே தெரியாத எனக்கு, எழுத்தும் தெரியாது, சொற்களும் தெரியாது, பொருளும் தெரியாது, கவிதையும் தெரியாது, உரைநடையும் தெரியாது. என் வாக்குல ஸ்லோகம் வறது, நான் இந்த ஸ்தோத்ரத்தை பண்றேன்னு சொல்றார். அப்பேற்பட்ட அந்த ஆறுமுகங்களுக்கு சந்திரனையெல்லாம் உவமையா சொல்ல முடியாது ன்னு முடிச்சுடறார்.

எங்களுடைய இந்த திருமயிலாபுரிக்கு அருணகிரிநாதர் வந்திருக்கார். இங்கே சிங்காரவேலர் ஆறுமுக மூர்த்தி தான். அந்த சிங்காரவேலர் மேலே அருணகிரிநாதர் பாடின ஒரு திருப்புகழ் பாட்டு இருக்கு.

அறமி லாவதி பாதக வஞ்சத் ...... தொழிலாலே

அடிய னேன்மெலி வாகிம னஞ்சற் ...... றிளையாதே

திறல்கு லாவிய சேவடி வந்தித் ...... தருள்கூடத்

தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் ...... தருவாயே

விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப் ...... பொரும்வேலா

விமல மாதபி ராமித ருஞ்செய்ப் ...... புதல்வோனே

மறவர் வாணுதல் வேடைகொ ளும்பொற் ...... புயவீரா

மயிலை மாநகர் மேவிய கந்தப் ...... பெருமாளே.

ன்னு பாட்டு.

அறமிலாத அதி பாதக வஞ்சகத் தொழில்களை நான் பண்ணிண்டே இருக்கேன். அதனால என் மனம் ரொம்ப உலர்ந்து போயிடுத்து. ரொம்ப வாடியிருக்கு. உன்னுடைய பாதங்களை நெருங்கி வந்து எப்பொழுதும், உன்னை பாடக்கூடிய அந்த இன்பத்தை எனக்கு கொடு.

திறல்கு லாவிய சேவடி வந்தித் தருள்கூடத்

தினமு மேமிக வாழ்வுறு மின்பைத்தருவாயே

உன்னை தினமும் பாடினாத்தான் என் வாழ்வு இன்புறும், அந்த பாக்கியத்தை கொடுன்னு ஒரு அழகான பாட்டு.

सदा शारदाः षण्मृगाङ्का यदि स्युः

समुद्यन्त एव स्थिताश्चेत्समन्तात् ।

सदा पूर्णबिम्बाः कलङ्कैश्च हीना-

स्तदा त्वन्मुखानां ब्रुवे स्कन्द साम्यम् ॥ १३॥

இதோட இன்னிக்கி பூர்த்தி பண்ணிக்கிறேன். நாளைக்கும் ஆசார்யாள் இந்த ஆறு முகங்களை பத்தியே இன்னொரு ஸ்லோகம்சொல்றார். அதை நாளைக்கு பாப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –பதினான்காவது ஸ்லோகம் – இருபதமுமறுமுகமும் யானோத ஞானமதை அருள்வாயே



ஸுப்ரமண்ய புஜங்கத்துல பதிமூணு ஸ்லோகங்கள் பார்த்திருக்கோம். நேற்றைக்கு, ஆச்சார்யாள் ஸுப்ரமண்ய ஸ்வாமியோட ஆறுமுகங்களை வர்ணிக்கும் போது, சந்திரனைக் கூட இதற்கு உவமையா சொல்ல முடியாது. ஏன்னா சந்திரன் ஒரே சந்திரன், ஆனா ஆறுமுகங்கள் ஆறு சந்திரன்கள் போல இருக்கு. அதுவும் களங்கமில்லாத சந்திரனுக்கு நிகரான அழகுன்னு சொன்னார். இன்னிக்கும் இந்த ஆறு முகங்கள் பத்தி இன்னொரு ஸ்லோகம். இந்த ஆறு முகங்கள் பத்தி மஹான்கள் எல்லாம் ரொம்ப, திரும்ப திரும்ப அதை த்யானம் பண்ணி, தர்சனம் பண்ணி சந்தோஷப் பட்டிருக்கான்னு தெரியறது. கச்சியப்ப சிவாச்சாரியார் முருகனுடைய அவதாரத்தை சொல்லும் போது,

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்

பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்

கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே

ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகம் உய்ய

னு பாடறார்.

அருணகிரிநாதர் ஆறுமுகத்தை நிறைய பாடல்களில் பாடியிருக்கார்.

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்

தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்

புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்

தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.

நம்ம மாதிரி மஹா பெரியவாகிட்ட பக்தி இருக்கறவாளுக்குனே ஒரு கந்தர் அலங்காரப் பாடல் இருக்கு

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்

பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்

மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்

குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

ன்னு அந்த மருவடிவான வதனங்கள் ஆறும், மலர்க் கண்களும் குருவடிவாய் வந்து என் உள்ளத்தில் குடி கொண்டவே, வந்து தங்கியாச்சு, என் உள்ளத்துலதான் இருக்கார்ன்னு சொல்லியிருக்கார். முருகப் பெருமான் அருணகிரி நாதருக்கு முத்து முத்தா பாடுன்னு, முத்துங்கற வார்த்தையை எடுத்து கொடுத்தார். உடனே அருணகிரிநாதர் என்ன பாடறார்.

முத்தைத் தரு பத்தி திருநகை அத்திகிறை சக்தி சரவண ன்னு பாடறார். அந்த முத்து போன்ற வரிசையான பற்களில் விளங்கும் புன்சிரிப்பு, முத்தை தரு பத்தி திருநகை-ன்னு புன்சிரிப்பைத் தான் பாடறார்.

அப்படி பாகவனோட தர்சனம் கிடைச்ச உடனே மஹான்கள் எல்லாம் முகத்தினுடைய அழகை பார்த்து ரொம்ப லயிக்கிறா. இன்னொரு பாடல் இருக்கு. அந்த ஆறுமுகம் தான் எல்லாமே, எனக்கு கிடைச்ச எல்லா நன்மைகளும் அந்த ஆறுமுகம் தான்னு அந்த பாடல்ல வரும். எல்லாரும் முழுத்

திருப்புகழைப் பாடுங்கோ, எங்களுக்கு கேட்கணும்னு சொல்றா. அதனால முழுப்பாட்டையும் நான் பாடறேன்.

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள் மாயமதொ ழிந்து தெளியேனே

மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து மாபதம ணிந்து பணியேனே

ஆதியொடு மந்த மாகிய நலங்கள் ஆறுமுக மென்று தெரியேனே

ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்டதாடுமயி லென்ப தறியேனே

நாதமொடு விந்து வானவுடல் கொண்டு நானிலம லைந்து திரிவேனே

நாகமணி கின்ற நாதநிலை கண்டு நாடியதில் நின்று தொழுகேனே

சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற ஸோகமது தந்து எனையாள்வாய்

சூரர்குலம் வென்று வாகையொடு சென்று சோலைமலை நின்ற பெருமாளே.

இந்த பாட்டுல 'ஆதியோடு அந்தம் ஆகிய நலங்கள் ஆறுமுகமென்று தெரியேனே ன்னு பாடறார். அப்படி மஹான்கள் எல்லாம் அந்த ஆறுமுக தரிசனத்துல ரொம்ப சந்தோஷப் பட்டிருக்கா. ஆறுமுகம், ஆறுமுகம்-ன்னு இதே ஒரு மந்த்ரமா ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம்ன்னு ஒரு பாடல் இருக்கு. முன்னமே நாம அதைப் பார்தோம். ஆச்சார்யாள் ஆறு திருமுகங்களை பத்தி இன்னொரு ஸ்லோகம் சொல்றார் ன்னு சொல்ல வந்தேன். அதை இப்ப படிக்கிறேன்.

स्फुरन्मन्दहासैः सहंसानि चञ्च-

त्कटाक्षावलीभृङ्गसङ्घोज्ज्वलानि ।

सुधास्यन्दिबिम्बाधराणीशसूनो

तवालोकये षण्मुखाम्भोरुहाणि ॥ १४॥

ஸ்புரன் மந்தஹாஸை ஸஹம்ஸானி சஞ்சத்

கடாக்ஷாவலீப்ருங்க ஸங்கோ ஜ்வலானி

ஸுதாஸ்யந்தி பிம்பா தராணீச ஸூனோ

தவாலோகயே ஷண்முகாம் போரு ஹாணி

நேத்தி ஸ்லோகத்துல இந்த ஆறு முகங்களை சந்திரனோட ஒப்பிட முடியாதுன்னு ஒரு கவித்துவமா சொன்னார். இந்த ஸ்லோகத்துல ஆனா அவற்றை தாமரையோட ஒப்பிடலாம் ன்னு சொல்றார். 'ஹே ஈஷஸூனோ'

பரமேஸ்வரனுடைய புத்ரனான ஷண்முகக் கடவுளே 'ஸ்புரன் மந்தஹாஸை' உன்னுடைய முகத்துல மந்தஹாசம் ஒளிவிடுகிறது. மந்தஹாசம் என்றவுடன் எப்பயுமே மஹான்கள் வெண்மையா இருக்கு, வெள்ளையா சிரிக்கறது எங்கறதை வெச்சுண்டு, தூய்மையான புன்சிரிப்பு என்பதைப் பத்தி மூக கவி கூட காமாக்ஷியினுடைய மந்தஹாஸத்தை பத்தி நூறு பாடல்கள் எழுதியிருக்கார்.

அதுல வெண்மை, இனிமை, குளுமை இந்த மூணும் எடுத்து தான் பேசுவார். ஒரு ஐம்பது பாடல்கள்-ல வெள்ளையா சிரிக்கறது பத்தி வரும். அந்த மாதிரி அந்த தூய்மையான புன்சிரிப்புங்கறது எல்லாரும் சொல்றா. அதனால இங்க முகத்தை தாமாரைன்னு சொல்லும் போது இந்த ஜொலிக்கின்ற புன்சிரிப்புங்கற ஹம்ஸங்கள், தாமரைக்கு பக்கத்துல ஹம்சம் இருக்கும். அந்த மாதிரி இந்த முகமாகிய தாமரைக்கு பக்கத்துல அந்த புன்சிரிப்புங்கற வெண்மையான ஹம்ஸங்கள் இருக்குங்கறார்.

அடுத்தது 'சஞ்சத் கடாக்ஷாவலீ ப்ருங்க ஸங்கோ ஜ்வலானி' தாமரைன்னா அதுல வண்டுகள் இருக்கணும். முகத் தாமரையில் என்ன வண்டுன்னா, கடாக்ஷாவலீ, கடாக்ஷம்-ன்னா கண்கள் கிடையாது. அந்த கண்களிலிருந்து வர்ற பார்வை. அந்த பார்வை வந்து ஆவளி போல ஒரு வரிசையா கண்களிலேருந்து அந்த பார்வை வந்துண்டே இருக்கு. கறுப்பு தானே கண்ணோட பார்வைங்கறது. அது இப்படியும், அப்படியும் சலிக்கறது. 'சஞ்சத்க டாக்ஷாவலீ' கண்ணோட பார்வை இங்கேயும் அங்கேயும் போகும் இல்லையா? அது 'ப்ருங்கங்கள்' வண்டு போல இருக்கு. வண்டு தாமரை மேல வட்டமிடற மாதிரி, உன்னுடைய முகமாகிய தாமரையில இந்த கண்களில் இருந்து வெளி வரும் அந்த கடாக்ஷ வரிசைகளுடைய ப்ருங்கங்கள் இருக்கு, வண்டுகள் இருக்குங்கறார்.

அப்புறம் தாமரைன்னா தேன் இருக்கணுமே. இதுல 'ஸுதாஸ்யந்தி பிம்பா தராணீ' உன் பிம்ப அதரங்கள், கோவைப்பழம் போன்ற உன்னுடைய உதடு முகத்துல செக்க செவேல்னு இருக்கு. அதுல அந்த சிகப்பழகு தாமரையில இருக்கற தேன் மாதிரி அமிர்த ப்ரவாகமா, அந்த அழகு உதடுலேர்ந்து வந்துண்டிருக்கு. இப்பேற்பட்ட 'தவ ஷண்முகாம்போரு ஹாணி' உன்னுடைய

ஆறு முகங்கள் என்ற ஆறு தாமரைகளை ‘ஆலோகயே’ : நான் பார்க்கிறேன்னு இந்த அழகனா ஸ்லோகம்.

स्फुरन्मन्दहासैः सहंसानि चञ्चत्कटाक्षावलीभृङ्गसङ्घोज्ज्वलानि ।

सुधास्यन्दिबिम्बाधराणीशसूनो तवालोकये षण्मुखाम्भोरुहाणि ॥ १४॥

முகத்துக்கு அழகா இவ்வளவு உவமைகள் சொல்லி முகத்தை தாமரைன்னு சொல்றார். மூககவி காமாக்ஷியினுடைய முகத்தை பத்தி சொல்லும் போது ஒரு ஸ்லோகம் சொல்லியிருக்கார்.

ताम्राम्भोजं जलदनिकटे तत्र बन्धूकपुष्पं

तस्मिन्मल्लीकुसुमसुषमां तत्र वीणानिनादम् ।

व्यावृन्वाना सुकृतलहरी कापि काञ्चिनगर्याम्

ऐशानी सा कलयतितरामैन्द्रजालं विलासम् ॥

தாம்ராம்போஜம் ஜலதநிகடே தத்ர பந்தூகபுஷ்பம்

தஸ்மின்மல்லீகுஸுமஸுஷமாம் தத்ர வீணாநினாதம் |

வ்யாவ்ருன்வானா ஸுக்ருதலஹரீ காபி காஞ்சீநகர்யாம்

ஐஷானீ ஸா கலயதிதராமைந்த்ரஜாலம் விலாஸம் ||

ன்னு ஒரு ஸ்லோகம், காஞ்சிபுரத்துல, ஐந்திரஜாலம்ன்னா magic show. காஞ்சிபுரத்துல ஒரு magic show நடந்துண்டிருக்கு அப்படிங்கறார். என்னப்பா அதுன்னு கேட்டா.

‘தாம்ராம்போஜம் ஜலதநிகடே’ ஜலதம்னா மேகம். மேகத்துக்கு பக்கத்துல ஆகாசத்துல ஒரு பெரிய தாமரை தெரியறதாம். அந்த தாமரைக்குள்ள ‘தத்ர பந்துக புஷ்பம்’ அதுக்குள்ள செம்பரத்தை பூ தெரியறது. அந்த செம்பரத்தை பூக்குள்ள ‘தஸ்மின் மல்லி குஸுமஸுஷமாம்’அதுக்குள்ள ஒரு மல்லிகைச் செண்டு தெரியறது. அந்த மல்லிகைப் பூக்குள்ளேயிருந்து ‘தத்ர வீணாநினாதம்’ அதுக்குள்ளேயிருந்து வீணையோட இனிமையான நாதம் கேட்கறது. இப்படி magic பண்றார் ஒருத்தர், அப்படி யாருடா பண்றான்னு கேட்டா, காமாக்ஷி தேவிதான்னு சொல்றார். ‘ஐஷானீ’ ஈஷானனுடைய மனைவியான காமாக்ஷி தேவியினுடைய கூந்தல் மேகம் மாதிரி இருக்கு. முகம் தாமரையாட்டமாக இருக்கு . அந்த முகத்துல உதடு செம்பரத்தை பூ மாதிரி இருக்கு. அதற்குள்ள

பற்கள் மல்லிகை பூ மாதிரி இருக்கு, அதுக்குள்ள அம்பாளுடைய குரல், அந்த த்வனி வீணா நாதம் போல இருக்குன்னு, இப்படி ஒரு magic ஐந்த்ரஜாலம் பண்ணிண்டிருக்கா காமாக்ஷி ன்னு அழகான ஸ்லோகம். இந்த மந்தஸ்மிதத்தை மஹான்கள் எப்பவுமே வெண்மைக்கு ஒப்பிடுவாங்கறது இந்த மந்தஸ்மித சதகத்துலேர்ந்து ஒரு ஸ்லோகம்.

क्षीराब्धेरपि शैलराजतनये त्वन्मन्दहासस्य च

श्रीकामाक्षि वलक्षिमोदयनिधेः किञ्चिद्भिदां ब्रूमहे ।

एकस्मै पुरुषाय देवि स ददौ लक्ष्मीं कदाचित्पुरा

सर्वेभ्योऽपि ददात्यसौ तु सततं लक्ष्मीं च वागीश्वरीम् ॥

க்ஷீராப்தேரபி ஷைலராஜதனயே த்வன்மந்தஹாஸஸ்ய ச

ஸ்ரீகாமாக்ஷி வலக்ஷிமோதயநிதே: கிம்சித்பிதாம் ப்ரூமஹே |

ஏகஸ்மை புருஷாய தேவி ஸ ததௌ லக்ஷ்மீம் கதாசித்புரா

ஸர்வேப்யோऽபி ததாத்யஸௌ து ஸததம் லக்ஷ்மீம் ச வாகீஷ்வரீம் ||

ன்னு ஒரு ஸ்லோகம். மூக கவி சொல்றார் ‘காமாக்ஷியோட மந்தஸ்மிதம் வெள்ளை வெளேர்னு இருக்கறதுனால இதை பாற்கடலுக்கு ஒப்பிடலாம்னு நான் நினைச்சேன். ஆனா பாற்கடலுக்கும் காமாக்ஷியினுடைய மந்தஸ்மிதத்துக்கும் ‘கிஞ்சித் பிதாம் ப்ருமஹே’ ஒரு சின்ன வித்யாசம் இருக்கு. அதை நான் சொல்றேன்கறார்.

‘ஏகஸ்மை புருஷாய தேவி ஸ ததௌ லக்ஷ்மீம் கதாசித்புரா’ முன்ன எப்பயோ ஒரு தடவை ஒரே ஒரு புருஷனுக்கு லக்ஷ்மிதேவியை அந்த பாற்கடல் கொடுத்தது. இங்கே ‘ஏகஸ்மை புருஷ:’ ங்கறதுக்கு ஒரு புருஷனுக்குன்னு ஒரு அர்த்தம், தன்னிகரில்லாத விஷ்ணு பகவானுக்குன்னு இன்னொரு அர்த்தம். அவருக்கு பாற்கடல் லக்ஷ்மி தேவியை கொடுத்தது. ஆனால், ஹே காமாக்ஷி உன்னுடைய மந்தஸ்மிதம் என்ன பண்றதுன்னா ‘ ஸர்வேப்யோऽபி ததாத்யஸௌ து ஸததம் லக்ஷ்மீம் ச வாகீஷ்வரீம் ” இன்னிக்கும் என்னிக்கும் கொடுத்துண்டே இருக்கு. என்ன கொடுக்கறதுன்னா ஸததம் எப்பவும் கொடுக்கறது. லக்ஷ்மிம்ச வாகீஸ்வரிம், லக்ஷ்மியையும் கொடுக்கறது, சரஸ்வதியையும் கொடுக்கறது உன்னுடைய மந்தஸ்மிதம். கா மா க்ஷி

அப்படீங்கற பதத்துக்கே ‘கா’ன்னா சரஸ்வதி, ‘மா’ன்னா லக்ஷ்மி. அக்ஷி ன்னா கண்கள். பக்தர்களுக்கு தன்னுடைய கண்களால் படிப்பையும் பணத்தையும் கொடுப்பா காமாக்ஷி ன்னு சொல்வா. இந்த இடத்துல கவி, அந்த மதஸ்மிதமே ‘லக்ஷ்மிம்ச வாகீஸ்வரிம்’, லக்ஷ்மியையும் வாகீஸ்வரியையும் கொடுக்கறது-ன்னு அழகா சொல்றார்.

क्षीराब्धेरपि शैलराजतनये त्वन्मन्दहासस्य च

श्रीकामाक्षि वलक्षिमोदयनिधेः किञ्चिद्भिदां ब्रूमहे ।

एकस्मै पुरुषाय देवि स ददौ लक्ष्मीं कदाचित्पुरा

सर्वेभ्योऽपि ददात्यसौ तु सततं लक्ष्मीं च वागीश्वरीम् ॥

இந்த ஸ்லோகத்தை பாராயணம் பண்ணினா படிப்பு, பணம் ரெண்டையும் சேர்த்து கொடுப்பா காமாக்ஷி. ஏன்னா படிப்பு இருந்தா பணம் இருக்காது. அப்படீம்பா. அப்படி இல்லாம ‘கவித்வ ஸ்ரீ மிஷ்ரீ கரண நிபுநௌ’ இன்னொரு இடத்துல சொல்றார் மூககவி. கவித்துவத்தையும், ஸ்ரீ – செல்வத்தையும் மிஷ்ரீகரணம் பண்ணி, சேர்த்து கொடுக்கக்கூடிய நைபுண்யம் காமாக்ஷிக் கிட்ட இருக்குன்னு சொல்றார். அப்படி இந்த அழகான ஸ்லோகம். இன்னிக்கி முருகப்பெருமானுடைய முகத்தை பத்தி ஆதிசங்கரர் சொன்ன ஸ்லோகத்துலேர்ந்து ஆரம்பிச்சு, அந்த வெண்மையான முத்தை தரு அத்தி திருநகை, புன்சிரிப்பு ஹம்ஸங்களைப்போல இருக்குன்னு ஆச்சார்யாள் சொன்னதுனால, அதுலேர்ந்து மூககவிக்கு வந்து காமாக்ஷியினுடைய வெண்மையான சிரிப்பையும் பத்தியும், அது பண்ணுகிற அனுக்ரஹத்தை பத்தி ஒரு ஸ்லோகம் பார்தோம்.

நாளைக்கு முருகனுடைய கடாக்ஷத்தை பத்தி ஒரு ஸ்லோகம் அதை பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸூப்ரமண்ய புஜங்கம் –பதினைந்தாவது ஸ்லோகம் – அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே

ஸுப்ரமண்ய புஜங்கத்துல இன்னிக்கு பதினைந்தாவது ஸ்லோகம். முருகப்பெருமானுடைய கடாக்ஷ வீக்ஷணத்தின் மஹிமையை பத்தி ஒரு ஸ்லோகம்.

विशालेषु कर्णान्तदीर्घेष्वजस्रं दयास्यन्दिषु द्वादशस्वीक्षणेषु ।

मयीषत्कटाक्षः सकृत्पातितश्चेद्भवेत्ते दयाशील का नाम हानिः ॥ १५॥

விசாலேஷு கர்ணாந்த தீர்க்கேஷ்வஜஸ்ரம்

தயாஸ்யந்திஷு த்வாதசஸ் வீக்ஷணேஷு |

மயீஷத் கடாக்ஷ ஸக்ருத் பாதித ஸ்சேத்

பவேத்தே தயாசீல கா நாமஹானி ||

ன்னு ஒரு ஸ்லோகம். ‘ஹே தயாஷீல’, ஹே தயவே வடிவான ஸுப்ரமண்ய மூர்த்தியே, ‘விசாலேஷு’ உனக்கு பன்னிரண்டு கண்கள் இருக்கு. அதெல்லாம் விசாலமான கண்கள். எவ்வளவு விசாலமாக இருக்குன்னா ‘கர்ணாந்த தீர்க்கேஷு’ காது வரைக்கும் நீண்டிருக்கு உன் கண்கள். அதுல ‘அஜஸ்ரம்’ எப்பொழுதும் ‘தயாஸ்யந்திஷு’ தயை நிரமபி வழிந்து கொண்டிருக்கிறது. உன்னுடைய கடாக்ஷத்துலேருந்து கருணை பெருகி விழுந்துண்டே இருக்குங்கறார், ‘த்வாதசஸு வீக்ஷணேஷு’, உன்னுடைய பன்னிரண்டு கண்கள்லேர்ந்து, ஒரு கொஞ்சம் ‘ஈஷத் கடாக்ஷ:’ கொஞ்சம் உன் பார்வையை, கடைக்கண் பார்வையை ‘மயி’ என்னிடத்தில் ‘ஸக்ருத்’ ஒரே ஒரு தடவை, ‘பாதித:’ விழப் பண்ணினேனா, ஒரு தடவை கண்ணெடுத்து நீ என்னை பார்த்தாயேயானால், எனக்கு எல்லாமே கிடைச்சுடும். முருகா உனக்கு அதனால என்ன குறை வந்துடப் போறது? ன்னு சொல்றார். ‘பவேத்தே தயாசீல கா நாமஹானி’ உனக்கு இதுனால ஒரு ஹானியும் வராதே. அதனால கொஞ்சம் தயவு பண்ணு’ முருகா ன்னு கேட்கறார்.

முருகா, உனக்கு பன்னிரண்டு கண்கள் இருக்கு. எல்லா தெய்வங்களை விட அதிகமான கண்கள் உனக்குத் தான் இருக்கு. அதுவும் எல்லா கண்களும் விசாலமா காது வரை நீண்டு இருக்கு. அப்படி இருக்கும் போது, ஒரு கண்ணால, அது கூட முழு கண் இல்ல, கடைகண்ணால என்னை ஒரு பார்வை பார்த்தேயானால் நான் பிழைச்சு போயிடுவேன். உனக்கு அதனால ஒரு குறையும் இல்லையே ன்னு சொல்றார்.

பகவான் பூர்ண வடிவினர். அதனால ஒரு ஜீவனுக்கு அவர் அனுக்ரஹம் பண்ணதால ஒண்ணும் குறை ஏற்பட போறதில்லை . சௌந்தர்யலஹரில ‘த்ருசா த்ராகீயஸ்யா’ என்கிற ஸ்லோகத்துல கூட சங்கரர் ‘அம்மா, உன்னுடைய கடாக்ஷத்தை என் மேலே காட்டு. எனக்கு யோக்கியதை இல்லை தான். ஆனா உனக்கு அதுல ஒண்ணும் நஷ்டம் இல்லையே! சந்திர கிரணம் காட்டுலேயும், மாளிகையிலேயும் ஒரே மாதிரி தானே விழறது. அது மாதிரி தகுதி இல்லாத என் மேலும் உன் கடாக்ஷம் பட்டுதுன்னா ஏதோ நான் பிழைச்சு போவேன். உனக்கு ஒண்ணும் இதுல நஷ்டம் இல்ல. அதுனால ‘தவீயாம்ஸம் தீனம் ஸ்நபய க்ருபயா மாம்பி சிவே’ ரொம்ப தைன்யமா இருக்கக் கூடிய என் மேலேயும் கடாக்ஷம்

பண்ணும்மா' ன்னு கேட்ட மாதிரி, இங்கேயும் அதே மாதிரி கேட்கறார். 'உன்னுடைய பன்னிரண்டு கண்கள்ல ஏதாவது ஒரு கண்லேயிருந்து ஒரு கடைக்கண் பார்வையை நீ என் மேல விழப்பண்ணு' ன்னு சொல்றார்.

தேதியூர் சாஸ்த்ரிகள் எவ்வளவு படிச்சவர் எங்கறதுக்கு இங்கே மஹாபாரதத்துலேர்ந்து ஒரு ஸ்லோகம் quote பண்ணியிருக்கார். பன்னிரண்டு கல்யாண குணங்கள் ப்ரம்ம நிஷ்டர்கள் கிட்ட இருக்கு. அதையெல்லாம் பக்தர்களுக்கும் முருகனுடைய பன்னிரண்டு கண்கள் கொடுக்கும்ன்னு சொல்றார். மோக்ஷ சாதனமான ஆத்மஞானம், சத்யவசனம், மனோநிக்ரஹம், வேதாந்த விசாரம், பொறாமை இன்மை, அதர்மத்தில் லஜ்ஜை, சீதோஷ்ணாதிகளை ஸஹிப்பது, குணமுள்ள இடத்தில தோஷாரோபணம் செய்யாமல் இருப்பது, யாகம், ஸத்பாத்ர தானம், இந்த்ரிய நிக்ரஹம், சத்கர்மாவில் தைரியம், இந்த பன்னிரண்டு விதமான ப்ரம்ம நிஷ்டர்களுடைய கல்யாண குணங்களை தன் பக்தரிடத்தில் முருகப்பெருமான் வர்ஷிப்பார், ன்னு சொல்லி இந்த பன்னிரண்டு கண்களால் பன்னிரண்டு அனுக்கிரஹம் பண்ணுவார்-ன்னு பொருத்தமா ஒரு ஸ்லோகத்தை எடுத்து சொல்லி இருக்கார்.

நேத்திக்கு முருகனுடைய மந்தஸ்மிதம்-ன உடனே காமாக்ஷியினுடைய மந்தஸ்மிதத்தைப் பத்தி மூகபஞ்சசதியில இருந்து பார்த்தோம். அதேமாதிரி மூக கவி காமாக்ஷி கடாக்ஷத்தைப் பத்தியும் நூறு ஸ்லோகம் பண்ணியிருக்கார். அதுல ஒண்ணு, ரெண்டு ஸ்லோகம் சொல்றேன். இதே மாதிரி, என் மேல உன் கடாக்ஷத்தை விழப்பண்ணக் கூடாதான்னு கேட்கற மாதிரி ஒரு ஸ்லோகம் இருக்கு.

मातः क्षणं स्नपय मां तव वीक्षितेन मन्दाक्षितेन सुजनैरपरोक्षितेन ।

कामाक्षि कर्मतिमिरोत्करभास्करेण श्रेयस्करेण मधुपद्युतितस्करेण ॥

மாத: க்ஷணம் ஸ்னபய மாம் தவ வீக்ஷிதேன

மந்தாக்ஷிதேன ஸுஜனைரபரோக்ஷிதேன |

காமாக்ஷி கர்மதிமிரோத்கரபாஸ்கரேண

ச்ரேயஸ்கரேண மதுபத்யுதிதஸ்கரேண ||

ன்னு ஒரு ஸ்லோகம், 'மாத:', அம்மா 'க்ஷணம் ஸ்நபய மாம் தவ வீக்ஷிதேன', உன்னுடைய கடாக்ஷத்துனால என்னை ஒரு க்ஷணம், நனைப்பாயாக, 'ஸுஜனைரபரோக்ஷிதேன' உன்னுடைய கடாக்ஷம் புண்யசாலிகளால் தரிசிக்கப் பட்டது. ' மந்தாக்ஷிதேன' மந்தமா சலிச்சிண்டு இருக்கு. 'காமாக்ஷி கர்ம திமிரோத்கர பாஸ்கரேண' என்னுடைய வினைகள் என்ற இருளைப் போக்கும் பாஸ்கரனாக, ஸூரியனாக உன்னுடைய கடாக்ஷம் இருக்கு. 'ஸ்ரேயஸ் கரேண' எல்லா க்ஷேமமும் கொடுக்கக்கூடியது. 'மதுபத்யுதி தஸ்கரேன' மதுபஹன்னா வண்டு. அந்த வண்டினுடைய ஒளியை உன்னுடைய கண்கள் அபகரிக்கிறதுன்னு சொல்றார். அதாவது கண்கள் வண்டு மாதிரி இருக்குங்கறதை சொல்றார்.

இன்னொரு ஸ்லோகம் கடாக்ஷத்தை பத்தி மூககவி பண்ண ஸ்லோகத்துல எனக்கு இது ஒண்ணு பிடிச்ச ஸ்லோகம்.

संसारघर्मपरितापजुषां नराणां

कामाक्षि शीतलतराणि तवेक्षितानि ।

चन्द्रातपन्ति घनचन्दनकर्दमन्ति

मुक्तागुणन्ति हिमवारिनिषेचनन्ति ॥

ஸம்ஸாரகர்மபரிதாபஜுஷாம் நராணாம்

காமாக்ஷி ஷீதலதராணி தவேக்ஷிதானி |

சந்த்ராதபந்தி கனசந்தனகர்தமந்தி

முக்தாகுணந்தி ஹிமவாரிநிஷேசனந்தி ||

'சம்சாரகர்மம்', சம்சாரம், வாழ்க்கை தவிப்பு என்ற, கடுமையான வெயில், அந்த வெயில்ல வாடற ஜனங்களுக்கு, 'நரானாம்' 'காமாக்ஷி ஷீதலதராணி தவேக்ஷதானி' உன்னுடைய கடாக்ஷம் குளிர்ச்சின்னா, குளிர்ச்சியுடைய superlative, ஷீதலதமம், ஷீதலதரம், 'ஷீதலதரானீ தவேக்ஷிதானி'. எவ்வளோ குளிர்ச்சியா இருக்குன்னா 'சந்திராதபந்தி', சந்திரனைப் போல குளிர்ச்சியா இருக்கு. 'கன சந்தன கர்தமந்தி' சந்தனத்தை பூசிண்டா எப்படி குளிர்ச்சியா இருக்குமோ அதுமாதிரி இருக்கு. "முக்தாகுணந்தி' முத்து மாலையை

போட்டுண்டா உடம்புக்கு குளிர்ச்சிம்பா, அது மாதிரி முத்து மாதிரி குளிர்ச்சியா இருக்கு. 'ஹிமவாரி நிஷேசனந்தி' பனிமழை மேல பொழிஞ்ச மாதிரி அவ்வளோ குளிர்ச்சியா இருக்குங்குறார். அது மாதிரி காமாக்ஷியினுடைய கடாக்ஷம் நம்ம மனசை குளிரப் பண்ணும். அந்த காமாக்ஷியினுடைய பிள்ளையான ஸுப்ரமண்ய ஸ்வாமியினுடைய கடாக்ஷமும் நமக்கு எல்லாவிதமான அனுக்ராஹமும் பண்ணும்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – பதினாறாவது ஸ்லோகம் – கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே

இன்னிக்கி ஸுப்ரமண்ய புஜங்கதுல பதினாறாவது ஸ்லோகம். ஸுப்ரமண்ய ஸ்வாமியுடைய திருமார்புகளும், திருமுகங்களும், நேத்ர மஹிமையெல்லாம் சொல்லிண்டே வந்தார். இப்ப மஸ்தகம்ன்னு சொல்லக் கூடிய தலையை பத்தி ஒரு ஸ்லோகம்.

सुताङ्गोद्भवो मेऽसि जीवेति षड्धा

जपन्मन्त्रमीशो मुदा जिघ्रते यान् ।

जगद्भारभृद्भ्यो जगन्नाथ तेभ्यः

किरीटोज्ज्वलेभ्यो नमो मस्तकेभ्यः ॥ १६॥

ஸுதாங்கோத்பவோ மேஸி ஜீவேதி ஷட்தா

ஜபன்மந்த்ரமீசோ முதா ஜிக்ரதே யான் |

ஜகத்பாரப்ருத்யோ ஜகந்நாத தேப்ய

கிரீடோஜ்வலேப்யோ நமோ மஸ்தகேப்ய ||

ன்னு சொல்றார். பரமேஸ்வரன் தன் குழந்தையான முருகப்பெருமானை உச்சி முகர்ந்து ஆசிர்வாதம் பண்றாராம். 'ஸுதா' குழந்தை, 'அங்கோத்பவோமேஸி' என்னுடைய சரீரத்திலிருந்து நீ உண்டானவன். 'ஜீவ'. ரொம்ப தீர்காயுசா இருன்னு, 'ஷட்தா' ஆறு தடவைகள், ஒவ்வொரு சிரசையும் எடுத்து உச்சி முகர்ந்து, 'ஜிக்ரன்' ன்னா உச்சிமுகர்ந்து பார்க்கறது. அப்படி ஆறு தலைகளையும் முகர்ந்து பார்த்து ஆறு தடவை இந்த மந்த்ரத்தை சொன்னாராம். 'ஸுதாங்கோத்பவோமேஸி ஜீவ'-ன்னு ஒவ்வொரு தலையும் முகர்ந்து பார்த்து பரமேஸ்வரன் சந்தோஷத்தோடு சொல்றார். ஒரு பிள்ளையை பெற்ற அப்பாவுக்குத் தான் அந்த சந்தோஷம் தெரியும். தன் குழந்தை தன் கண் முன்னாடி வளரும்போது, எடுத்து உச்சி முகர்ந்து, 'என் உடம்புலேர்ந்து இவன் உண்டானவன்', 'ஆத்மாவை புத்ர நாமாஸி' ன்னு வேதத்துலேயே வர்றது. ஒருத்தன், தானே தான் தன்னோட குழந்தையா பிறக்கறான், என்கிற மாதிரி, தான் இந்த உலகத்துலேர்ந்து போனாலும் தான் இன்னும் இந்த உலகத்துல இருந்துண்டே இருக்கணும்ன்னு ஆசைப்படற இவன் தான் ஒரு குழந்தையை உண்டாக்கறான். தன் புத்ரன் மூலமா இந்த உலகத்துல இருக்கான்னு சொல்றா. அப்படி அந்த முருகக் குழந்தையை எடுத்து பரமேஸ்வரன் உச்சி முகர்ந்து சந்தோஷப்படறார்.

இந்த தலைகள் 'ஜகத்பாரப்ருத்ய:' உலகத்தோட பாரத்தையெல்லாம், உலகத்தின் யோக க்ஷேமத்தையெல்லாம் வஹிக்கக்கூடிய இந்த முருகப் பெருமானுடைய ஆறு தலைகள். 'கிரீடோஜ்வலேப்யா:' அப்படி உலகத்தையெல்லாம் காப்பாத்தறான்னா ராஜான்னு அர்த்தம். அதனால ராஜாவோட தலையில கிரீடம் இருக்கற மாதிரி, இந்த ஆறு ஆறு தலைகளிலேயும், ஆறு நவரத்ன கிரீடங்கள் இருக்கு. அந்த 'தேப்ய: மஸ்தகேப்ய:' உன்னுடைய அந்த ஆறு தலைகளுக்கு 'நம:' நான் நமஸ்காரம் பண்றேன்ன்னு ஆச்சார்யாள் சொல்றார்.

பரமேஸ்வரன் 'நீ என் உடம்புலேர்ந்து உண்டானவன்' ன்னு சொல்றதுல ஒரு விஷேஷம் இருக்கு. மஹா பெரியவா தெய்வத்தின் குரல் முதல் பகுதியில ஸனத்குமார யோகிதான் ஸுப்ரமண்ய ஸ்வாமியா அவதாரம் பண்ணார்ன்னு ஒரு கதை சொல்றா. ஸனத்குமார யோகிங்கறவர் ப்ரம்மஞானி, ப்ரம்ம நிஷ்டர். உலகத்துல எந்த விதமான பற்றும் இல்லாதவர். அவருக்கு ஒரு நாளைக்கு தான் தேவ சேனாதிபதியாக இருந்து அசுரர்களோட யுத்தம் பண்ற மாதிரி ஒரு ஸ்வப்னம் வந்துதாம். அவர் அப்பாவான ப்ரம்மா கிட்ட போய் கேட்டாராம். 'எனக்கு இப்படி ஸ்வப்னம் வந்துதே என்ன அர்த்தம்' ன்ன போது, "நீ அடுத்த ஜென்மத்துல, தேவ சேனாதிபதியாக இருந்து அசுரர்களோட யுத்தம் பண்ண போற. உன் கனவுல வந்தா, நீ ஞானிங்கறதுனால அது நடக்கும்னு' சொன்னாராம். 'ஓஹோ அப்படியா' ன்னு சொல்லி கேட்டுண்டு போயிட்டார். ஞானிகளுக்கு ஜன்மா எடுக்கறதை பத்தி வருத்தமும் இல்லை, சந்தோஷமும் இல்லை. அவாளுக்கு அது ஒரு பொருட்டு கிடையாது.

அப்போ பரமேஸ்வரன் பார்த்தாராம். இவர் ப்ரம்மஞானி, ஜன்மா எடுக்கறதை பத்தி அவர் ஒண்ணும் நினைக்கப் போறது இல்லை, அதுனால நாம தான் இதை ஆரம்பிக்கணும் ன்னு, பார்வதி பரமேஸ்வராள் போய், ஸனத்குமார யோகிக்கிட்ட, 'உன்னுடைய தபஸ்ல த்ருப்தியானேன், உனக்கு ஏதாவது வரம் வேணும்னா கேளு'ன்னாளாம். அவர் பார்வதி பரமேஸ்வராளைப் பார்த்து சிரிச்சிண்டு, 'எனக்கு ஒண்ணும் தேவைகளே இல்லையே. எனக்கு ஒண்ணும் வரம் வேண்டாம். ஏதோ இந்த வரம் சாபம் இதிலேல்லாம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கற மாதிரி தெரியறது. உங்களுக்கு ஏதாவது வரம் வேணும்னா கேளுங்கோ'ன்னாராம். பரமேஸ்வரன் அதுக்கு தான் காத்துண்டு இருந்தார். 'எனக்கு நீ குழந்தையா பொறக்கணும்' ன்னு வரம் கேட்டாராம். இந்த சனத்குமாரர் யோகி 'ஆகட்டும்' அப்டீன்னாராம். 'ஆனா நீங்க மட்டும் தான் என் கிட்ட கேட்டேள், அதனால நான் உங்களுக்கு மட்டும் குழந்தையா பொறக்கறேன்' ன்னு சொன்னாராம். அப்போ பார்வதி தேவி 'கணவர் கேட்டா அது மனைவிக்கும் தானே. நான் தனியா கேட்க முடியுமா? நீ இப்படி சொல்லலாமா?' ன்னு கேட்ட போது, இந்த ஸனத்குமார யோகி சொன்னாராம், 'என்ன இருந்தாலும் ஒரு ஸ்த்ரீ சம்பந்தத்துல, கர்ப்ப வாசம் பண்ணி, ஊர்த்வமுகமா பொறக்கறதுல எனக்கு இன்னும்கூட லஜ்ஜை இருக்கு, அதனால

நான் பரமேஸ்வரன் என்னை தன்னிடத்திலேயிருந்தே எப்படி உற்பத்தி பண்ணுவாரோ, அந்த மாதிரி நான் பொறக்கறேன்' னாராம். 'எனக்கு அம்மான்னு ஆக வேண்டாமா, அம்மான்னு இருந்து குழந்தையை கொஞ்ச வேண்டாமா' ன்னு பார்வதி கேட்டாளாம், அப்போ அவா ஒரு compromise பண்ணிண்டாளாம்.

பஸ்மாசுரன்னு ஒரு அசுரன் இருந்தான். அவன் யார் தலையைத் தொட்டாலும் அவா பஸ்மம் ஆயிடுவான்னு பரமேஸ்வரன் கிட்ட வரம் வாங்கிண்டு உன் தலையை தொடறேன்னு வந்தான்னு கதை இருக்கு இல்லையா! அப்பறம் விஷ்ணு பகவான் மோஹினியா வந்து விளையாட்டு காண்பிச்சு அந்த பஸ்மாசுரனை தன் தலையை தொட வச்சார்ங்கறது அப்புறம். அதுக்கு முன்னாடி 'உன் தலையையே தொட வர்றேன்' ன்னு சொன்ன போது அந்த இடத்துல பரமேஸ்வரன் அந்தர்த்யானம் ஆயிட்டாராம். மறைஞ்சு போயிட்டாராம். திடீர்னு பரமேஸ்வரன் மறைஞ்சு போயிட்டார் ன்ன உடனே பார்வதி தேவி, அம்பாள் எல்லாம் தெரிஞ்சவா தான், இருந்தாலும் விளையாட்டா இப்படி ஒரு கதை, அங்கேயே கணவனை காணோமேன்னு உருகி ஜலமா ஆயிட்டாளாம். அந்த ஜலம் சரவணப் பொய்கைன்னு இமயமலை அடிவாரத்துல ஒரு குளமாக இருந்தது. அந்த சரவணப் பொய்கையில முருகப் பெருமான் அவதாரம் பண்ணி, அந்த விதத்துல என் குழந்தைன்னு நான் சந்தோஷப் பட்டுக்கறேன்னு பார்வதி தேவியும் ஸனத்குமார யோகியும் ஒரு ராஜி (compromise) பண்ணிண்டாளாம். தெய்வத்தின் குரல்ல பெரியவா சொன்னதைத் தான் நான் அப்படியே திரும்பச் சொல்றேன்.

பரமேஸ்வரன் தன்னுடைய நெற்றியிலிருந்து அந்த ஸனத்குமார யோகியை ஆறு தீப்பொறிகளா ஆவிர்பவிச்சு, அதை அக்னி பகவான், கங்கைகிட்ட கொடுத்து, கங்கை தாங்க முடியாம அதை போய் சரவணப் பொய்கையில சேர்த்த போது, அங்க ஆறு தாமரைப் பூக்கள்ல ஆறு குழந்தைகளாக அவதரித்தார். அம்பாள் ஆறு குழந்தைகளையும் சேர்த்தணைத்த போது, ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும், ஒரு உடம்பு, ரெண்டு கால்களோட ஆறுமுகரா ஆனார்ங்கிற வரலாறு இருக்கு.

அப்படி பார்வதிக்கும் குழந்தை. ஆனா முருகப் பெருமானுடைய விசேஷம் என்னன்னா முழுக்க முழுக்க பரமேஸ்வரன் தன்னிடதிலேருந்தே சிருஷ்டி பண்ணின ஒரு குழந்தை. அதனால 'ஸ்வாதாங்கோத்பவோ மேஸி' என்னுடைய

அங்கத்துலருந்து நீ வந்துருக்கே, 'ஜீவ' நீ தீர்க்காயுசா இருன்னு எங்கிற ஸ்லோகத்துக்கு பரமேஸ்வரன் தானா ஸ்ருஷ்டி பண்ணின ஒரு குழந்தைன்னு ஒரு விசேஷ அர்த்தம் சொல்லலாம்.

அது மாதிரி பிள்ளையாரை எடுத்துண்டா, அவர் அம்பாள் தான் மட்டுமாகவே ஸ்ருஷ்டி பண்ணின ஒரு குழந்தை இல்லையா! அந்த கதை நாம கேள்வி பட்டிருக்கோம். தான் குளிக்கரதுக்கு வெச்சிருந்த அந்த மஞ்சள் பொடியை வெச்சு ஒரு குழந்தை பண்ணி, உயிர் குடுத்து, அந்த குழந்தையை தன்னோட கிருஹத்துக்கு காவலாக பார்வதி தேவி வெச்சிருந்தா. முன்னொரு தடவை நந்திகேஸ்வரரை காவலா இருக்க சொன்ன போது, பரமேஸ்வரன் வந்துட்டார். நந்திகேஸ்வரன் தன்னோட எஜமானன்னு சொல்லி உள்ளே விட்டார். பார்வதிக்கு வெட்கமா போயிடுத்து. அதனால தானே ஒரு பிள்ளையை ஸ்ருஷ்டி பண்ணி தன்னுடைய காவலுக்கு வாசல்ல நிற்க வெச்சிருந்த போது பரமேஸ்வரன் வரார். 'நீ யார்? வழிவிடு' ன்னு உடனே, நான் பார்வதியோட குழந்தை. அவா ஆணையை மீறி உன்னை விடமாட்டேன்' ன்னு சொல்றது குழந்தை. எல்லா தேவர்களும், இந்திரன், விஷ்ணு, பிரம்மா எல்லாரும் சிவபெருமானோட வந்து எல்லாருமாக அந்த பிள்ளையோடு யுத்தம் பண்றா. ஜயிக்க முடியல. கடைசீல பரமேஸ்வரன் சூலத்தைப் போட்டு, இந்த குழந்தையோட தலை கீழ விழுந்துடறது. அப்ப பார்வதி கோவிச்சுண்ட உடனே, பரமேஸ்வரன் ஒரு யானையோட தலையை எடுத்துண்டு வந்து இந்த குழந்தைக்கு பொருத்தி உயிரை கொடுக்கறார். அது தான் கணபதின்னு அந்த கதை.

முருகப் பெருமானை சிவபெருமான் தன்னோட உடம்புலேயிருந்து ஸ்ருஷ்டி பண்ண ஒரு குழந்தை. ஸனத்குமார யோகியே முருகப் பெருமானா அவதாரம் பண்ணினார்ன்னு ஒரு அழகான கதை.

सुताङ्गोद्भवो मेऽसि जीवेति षड्धा

जपन्मन्त्रमीशो मुदा जिघ्रते यान्।

जगद्भारभृद्भ्यो जगन्नाथ तेभ्यः

किरीटोज्ज्वलेभ्यो नमो मस्तकेभ्यः ॥ १६॥

இப்படி பாதரவிந்தத்துலேயிருந்து ஆறு சிரஸ் வரைக்கும் எல்லா பாகங்களையும் வர்ணனை பண்ணி, ஆச்சார்யாள், நம் மனசு முன்னாடி அந்த முருகக் குழந்தையை கொண்டு வந்துட்டார். அடுத்த ச்லோகத்துல முழு

ரூபத்தையும் வர்ணித்து, என் முன்னே வரவேணும்ன்னு பிரார்த்தனை பண்ணப் போறார். ரொம்ப அழகா இருக்கும் அந்த ஸ்லோகம். அதை நாளைக்குப் பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் –பதினேழாவது ஸ்லோகம் – முருகா! எனது முன் ஓடி வரவேணும்!</u>

இன்னிக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல பதினேழாவது ஸ்லோகம்,

स्फुरद्रत्नकेयूरहाराभिराम-

श्चलत्कुण्डलश्रीलसद्गण्डभागः ।

कटौ पीतवासाः करे चारुशक्तिः

पुरस्तान्ममास्तां पुरारेस्तनूजः ॥ १७॥

ஸ்புரத்ரத்ன கேயூரஹாராபிராம:

ஸ்சலத் குண்டல ச்ரீலஸத் கண்டபாக: |

கடௌ பீதவாஸா கரே சாருசக்தி:

புரஸ்தான் மமாஸ்தாம் புராரேஸ் தனூஜ: ||

'புரஸ்தான்' என் முன்னால் 'புராரேஸ்தனூஜ:' புராரி ன்னா முப்புரங்களை எரித்த சிவபெருமானுடைய ' தனூஜ:'ன்னா பிள்ளை, அந்த முருகப் பெருமான் என் முன்னால் எழுந்தருளட்டும். எனக்கு காட்சி கொடுக்கட்டும் ன்னு வேண்டுகிறார். 'புரதோ மம பா(4)து ஹனுமதோ மூர்த்தி:' ன்னு ஹனுமத்

பஞ்சரத்னத்துல பாடின போது அவருக்கு ஹனுமாரோட தர்சனம் கிடைச்சுதுன்னு சொல்லுவா. அந்த மாதிரி இந்த ஸ்லோகத்தை சொன்ன போது முருகப் பெருமானுடைய தர்சனம் கிடைச்சுது. திருச்செந்தூர்ல ஸ்வாமி சன்னிதி முன்னாடி தான் நின்னுண்டு பாடறார். ஸ்வாமி அவருக்கு நேராவே காட்சி கொடுத்துருப்பார்.

இந்த ஸ்லோகத்தை சொல்லும்போது ஸ்வாமிகள் 'இங்கே வா இப்போ வா எந்தன் முன்னே வா வா வா' ன்னு ஒரு பாட்டு பாடுவார். 'இதை எங்க அத்திம்பேர் பாடுவார். இந்த ஸ்லோகத்துலேயும் எந்தன் முன்னே வான்னு ஆதிசங்கரர் ப்ரார்த்தனை பன்றார். இந்த ஸ்லோகத்தையும் அந்த மெட்டுல பாடலாம்ன்னு சொல்லி

ஸ்புரத்ரத்ன கேயூரஹாராபிராம:

ஸ்சலத் குண்டல ச்ரீலஸத் கண்டபாக: |

கடௌ பீதவாஸா கரே சாருசக்தி:

புரஸ்தான் மமாஸ்தாம் புராரேஸ் தனூஜ: ||

ன்னு பாடுவார். இதுக்கு அர்த்தம் சொல்றேன் 'ரத்ன கேயூரஹாராபிராம:' ஹாரம்னா அவருடைய கழுத்துல போட்டுண்டிருக்கிற மாலை, கேயூரம்னா தோள் வளையம், ரத்னத்துனால பண்ணின மாலைகளும் கேயூரங்களும் ப்ரகாசிக்கறது. 'ஸ்புரத்ரத்ன கேயூரஹாராபிராம' அதனால, அந்த மாலைகள் எல்லாம் போட்டுண்டு, அவருடைய தோள்களும், மார்புகளும் ரொம்ப அழகா இருக்கு. ஆபரண விசேஷங்கள்லாம் சொல்றார். 'சலத் குண்டலஸ்ரீ லஸத் கண்டபாக' கண்டபாகம் ன்னா கன்னம் ன்னு அர்த்தம். காதுல போட்டுண்டிருக்க கூடிய அசையும் குண்டலிங்களின் ஒளி, அவருடைய கன்னத்துல பட்டு reflect ஆறது. கன்னம் ஒரு கண்ணாடி மாதிரி இருக்காம். அதுல பட்டு ப்ரகாசிக்கறது-ன்னு சொல்றார். 'கடௌ பீதவாஸா' கடி-ன்னா இடுப்பு. 'பீதவாஸா' பீதாம்பரம் பீதம் என்கிற வார்த்தைக்கு மஞ்சள் வர்ணம்-னு அர்த்தம். மஞ்சள் பட்டு உடுத்திண்டு இருக்கார். 'கரே சாருசக்தி' கைகளில் அழகான சக்தின்னா வேல் ன்னு அர்த்தம். பராசக்தி கொடுத்த அந்த வேலாயுதம். அந்த ஆயுதத்தையும் வச்சுண்டு 'புராரேஸ் தனூஜ'

பரமேஸ்வரனுடைய புத்ரனான குமாரஸ்வாமி ‘மம புரஸ்தாத்’ என் முன்னால் ‘ஆஸ்தாம்’ விளங்கட்டும்-ன்னு ஒரு அழகான ஸ்லோகம்.

அருணகிரிநாதர் இந்த மாதிரி நிறைய பாடல்கள்ல என் முன்னாடி வந்து நீ தர்சனம் கொடுக்கணும்-ன்னு சொல்றார்.

காரணம தாக வந்து ...... புவிமீதே

காலனணு காதி சைந்து ...... கதிகாண

நாரணனும் வேதன் முன்பு ...... தெரியாத

ஞானநட மேபு ரிந்து ...... வருவாயே

ஆரமுத மான தந்தி ...... மணவாளா

ஆறுமுக மாறி ரண்டு ...... விழியோனே

சூரர்கிளை மாள வென்ற ...... கதிர்வேலா

சோலைமலை மேவி நின்ற ...... பெருமாளே.

ஞானநட மேபு ரிந்து ...... வருவாயே – ன்னு ஒரு பாட்டு.

‘இருநில மீதில் எளியனும் வாழ எனதுமுன் ஓடி வரவேணும்’ ன்னு ஒரு பாடல்ல சொல்றார். இந்த இரண்டுமே பழமுதிர் சோலை பாட்டு. இந்த மூணாவது பாட்டுலேயும்

சீலமுள தாயர் தந்தை மாதுமனை யான மைந்தர்

சேருபொரு ளாசை நெஞ்சு ...... தடுமாறித்

தீமையுறு மாயை கொண்டு வாழ்வுசத மாமி தென்று

தேடினது போக என்று ...... தெருவூடே

வாலவய தான கொங்கை மேருநுத லான திங்கள்

மாதர்மய லோடு சிந்தை ...... மெலியாமல்

வாழுமயில் மீது வந்து தாளிணைகள் தாழு மென்றன்

மாயவினை தீர அன்பு ...... புரிவாயே

வாழு மயில் மீது வந்து தாளினிகள் தாழும் மயில்மேல் வந்து தாள் இணைகள் தாழும் எந்தன் மயில்மேல் வந்து உங்களுடைய தாள் இணைகளை பாத கமலங்களை தாழ்த்தி என்னுடைய தலையில் வெச்சு என்னுடைய மாய வினையெல்லாம் தீர்றத்துக்கு ஒரு கருணை பண்ணுங்கோங்ன்னு ஒரு ஸ்லோகம்.

சேலவள நாட னங்கள் ஆரவயல் சூழு மிஞ்சி

சேணிலவு தாவ செம்பொன் ...... மணிமேடை

சேருமம ரேசர் தங்க ளூரிதென வாழ்வு கந்த

தீரமிகு சூரை வென்ற ...... திறல்வீரா

ஆலவிட மேவு கண்டர் கோலமுட னீடு மன்று

ளாடல்புரி யீசர் தந்தை ...... களிகூர

ஆனமொழி யேப கர்ந்து சோலைமலை மேவு கந்த

ஆதிமுத லாக வந்த ...... பெருமாளே.

வாழுமயில் மீது வந்து தாளிணைகள் தாழு மென்றன்

மாயவினை தீர அன்பு ..... புரிவாயே

சோலை மலை மீது உகந்த பெருமாளேன்னு

இந்த மாதிரி அருணகிரிநாதர் அடிக்கடி ‘என் முன்னால் வந்து நீ தர்சனம் கொடுக்கணும் ன்னு வேண்டிப்பார்.

அப்படி முருகப் பெருமானை ஆசார்யாள் இந்த ஸ்லோகத்துலேயும், அதற்கடுத்த ஸ்லோகத்துலேயும் மூணாவது ஸ்லோகத்துலேயும் பரமேஸ்வரனுடனும், பார்வதியோடும் ஸ்மரிக்கறார். இதுல ‘புராரேஸ் தனூஜ’-ன்னு சொல்றார். கையில பராசக்தி கொடுத்த வேலோட எனக்கு தர்சனம் கொடுன்னு சொல்றார். இப்படி இந்த பாட்டுலேயும் பார்வதி, பரமேஸ்வராளை ஸ்மரிக்கறார். அடுத்த பாட்டுலேயும் அந்த மாதிரி பார்வதி, பரமேஸ்வராளோடு கூட இருக்கும் முருகப்பெருமான்னு ஒரு அழகான ஸ்லோகம். அதற்கடுத்த ஸ்லோகத்துலேயும் ‘குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா சக்திபாணே’ ன்னு சொல்லி ‘ஈஷஸூனோ சக்திபாணே’ ன்னு பார்வதியையும் பரமேஸ்வரனையும்

ஸ்மரிக்கிறார். முருகப் பெருமானை அப்படி தன் முன்னாடி தர்சனம் கொடுக்கும் படியா, வேண்டிண்டு அதற்கப்புறம் சில ப்ரார்தனை ஸ்லோகங்கள் வரும். ‘இஹாயாஹி வத்ஸேதி’ என்கிற ஸ்லோகத்தை நாளைக்கு பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –பதினெட்டாவது ஸ்லோகம் – மகதேவர் மனமகிழவேயணைந்து ஒருபுறமதாக வந்த மலைமகள் குமார

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்தில 17வது ஸ்லோகம்.

स्फुरद्रत्नकेयूरहाराभिरामः

चलत्कुण्डलश्रीलसद्गण्डभागः |

कटौ पीतवास करे चारुशक्ति:

पुरस्तान्ममास्तां पुरारेस्तनूज: ||

ஸ்புரத்ரத்ன கேயூரஹாராபிராம:
ஸ்சலத் குண்டல ச்லஸத் கண்டபாக: |
கடௌ பீதவாஸா கரே சாருசக்தி:
புரஸ்தான் மமாஸ்தம் புராரேஸ் தனூஜ: ||

ன்னு ஒரு ஸ்லோகம் பார்த்தோம்.அந்த ஸ்லோகத்துல 'முருகா, நீ என் முன்னாடி வந்து தரிசனம் கொடு', ன்னு ஆச்சார்யாள் பிரார்த்தனை பண்றார். அந்த ஸ்லோகத்துக்காக, முருகப் பெருமானை 'என் முன்னால வா'னு சொல்ற திருப்புகழ் பாடல்கள் தேடினேன். நிறைய இருந்தது. அதுல இன்னொரு அழகு பார்த்தேன். முக்கால்வாசிப் பாடல்கள்ல அருணகிரி நாதர் முருகப் பெருமானை 'நீ ஆடிண்டு வரணும். ஓடி வரணும்' னுலாம் வேண்டியிருக்கார். 'என் முன்னாடி தரிசனம் கொடுக்கணும்'ங்கறதை விட, 'என் முன்னாடி மயில்ல பறந்தோடி வரணும். விரைந்து வரணும். ஆடிண்டு வரணும்'னுலாம் நிறைய பாடி இருந்தார். இதை என்னன்னு யோசிச்சேன். அப்புறந்தான் 'அதல சேடனார் ஆட' ங்கற பாட்டும் கதையும் ஞாபகம் வந்தது. உங்களுக்கெல்லாம் தெரிந்ததுதான். இருந்தாலும் மஹான்களோட சரித்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லணும். திரும்பத் திரும்பக் கேட்கணும். அது தான் நமக்கெல்லாம் ஆனந்தம் இல்லையா!

அருணகிரிநாதர் காலத்தில் திருவண்ணமலையில் சம்பந்தாண்டான்னு மந்திரவாதி ஒருத்தன் இருக்கான். பிரபுடதேவ மஹாராஜா-ன்னு ஒருத்தர் திருவண்ணாமலை ராஜாவா இருக்கார். அவர் கிட்ட இந்த சம்பந்தாண்டான் ஒரு மந்திரியாட்டம், குலகுரு மாதிரி இருக்கான். அவன் காளி உபாசகன். அதனால அவன் கிட்ட சில மந்த்ர சக்திகள், சித்திகள்-லாம் இருக்கு. அதையெல்லாம் வெச்சு ராஜாவை மயக்கி வச்சிருக்கான்.

இங்க அருணகிரிநாதர் கோவில்ல முருகப் பெருமான் அருள் பெற்று அற்புதமா திருப்புகழ் பாடறார்-ன்ன உடனே நிறைய ஜனங்கள் அவர்கிட்ட பக்தர்கள் ஆயிடுறா. அவருடைய பெருமை உலகத்துக்கு தெரியறது. ராஜாவும் கோவில்ல போய் அருணகிரிநாதரை நமஸ்காரம் பண்ணி, அவருடைய அருள் முகத்தால ஈர்க்கப்படறார். இதனால சம்பந்தாண்டானுக்கு பொறாமை ஏற்படறது. உடனே அவன் ராஜா கிட்ட 'இவரப் போய் நீங்க ரொம்ப பெரியவர்னு நினைக்கிறேள். நான் கூப்பிட்டா காளி தேவி என் கண் முன்னாடி வருவா. இந்த அருணகிரிநாதர் கூப்பிட்டா முருகப் பெருமான் வருவாரா'ன்னு சொல்றான்.

உடனே நாம கேட்போமேன்னு அருணகிரி நாதர்கிட்ட ராஜா போய் ‘நான் ஸ்வாமி தர்சனம் பண்ணனும்ம்னு ஆசைப் படறேன். நீங்க முருகப் பெருமானை வரவழைக்கணும்’ன்ன உடனே சரின்னு சொல்லிடறார். ‘ஆனா நீ கோயிலுக்கு வா. உன் சபைக்கு நான் வரமாட்டேன்’னு சொல்லிடறார்.

அந்த சம்பந்தாண்டான் அன்னிக்கி ராத்திரி அம்பாள்கிட்ட ‘நான் உன்ன கோயில்ல நாளைக்கி மந்திரம் சொல்லி கூப்பிடுவேன், நீ வந்து தரிசனம் கொடுக்கணும்’ன உடனே அம்பாள் ‘நான் எல்லார் முன்னாடி வர மாட்டேன்’னு சொல்லிடறா. அப்போ இந்த சம்பந்தாண்டான் அழுது புலம்பி ‘எனக்கு அவமானமா ஆயிடுமே. எனக்காக இது ஒண்ணாவது பண்ணு. முருகப் பெருமானை அருணகிரி நாதர் கூப்பிடும் போது, அவர் வராத மாதிரி பிடிச்சி வச்சுக்கோ’ன்னு சொல்றான். ‘சரி நான் அப்படி பண்றேன்’ன்னு சொல்லி அம்பாள் முருகப் பெருமானைப் பிடிச்சு மடியில வெச்சிண்டிருக்கா.

கோவிலுக்கு வந்த போது, சம்பந்தாண்டானுக்குத் தெரியும், அம்பாள் வர மாட்டான்னு. ‘அருணகிரி நாதரை முதல்ல முருகனைக் கூப்பிடச் சொல்லுங்கோ’ன்னு சொல்றான். அருணகிரி நாதர் முருகனை தியானம் பண்றார். அவருக்குக் கைலாசக் காட்சி தெரியறது. ‘அம்பாள் முருகனைப் கெட்டியா, விடாம பிடிச்சு வச்சிண்டிருக்கா,’ ன்னு தெரியறது. உடனே அவர் ‘மயில் விருத்தம்’னு ஒண்ணு பாடறார். ரொம்ப அழகா இருக்கும். மயில் விருத்தத்தைப் பாடின உடனே, மயில் போய் அம்பாள் முன்னாடி நடனம் ஆடறது. அம்பாள் பார்த்து மயங்கி கையில முருகக் குழந்தையைக் கெட்டியாப் பிடிச்சிண்டுருக்கோம்கறதை மறந்து நழுவ விட்டுடறா. அப்போ அருணகிரி நாதர் இந்தப் பாட்டைப் பாடறார்.

அதல சேட னாராட அகில மேரு மீதாட

அபின காளி தானாட ...... அவளோடன்

றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட

அருகு பூத வேதாள ...... மவையாட

மதுர வாணி தானாட மலரில் வேத னாராட

மருவு வானு ளோராட ...... மதியாட

வனச மாமி யாராட நெடிய மாம னாராட

மயிலு மாடி நீயாடி ...... வரவேணும்

கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு

கருத லார்கள் மாசேனை ...... பொடியாகக்

கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது

கனக வேத கோடூதி ...... அலைமோதும்

உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத

உவண மூர்த்தி மாமாயன் ...... மருகோனே

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ

னுளமு மாட வாழ்தேவர் ...... பெருமாளே.

அப்படி அவர் பாடின உடனே முருகப் பெருமான் ஓடி வந்துடறார். அங்க ஒரு கம்பத்துல வந்து எல்லாருக்கும் தர்சனம் கொடுக்கறார். எல்லாரும் சந்தோஷப் படறா. திருவண்ணாமலை கோவில்ல இருக்கிற கம்பத்தில தோன்றி எல்லாருக்கும் காட்சி கொடுத்து, இன்னிக்கும் அந்த கம்பத்திலயே இருக்கார் முருகர். அந்த சன்னிதி 'கம்பத்து இளையனார் சன்னிதி' ன்னு அங்க போனா பாக்கலாம். இதுல 'கதை(Gadhai) விடாத தோள் வீமன்'னு வரும். சில பேர் தெரியாம 'கதை(Kadhai) விடாத' ன்னு பாடிடுவா. தமிழ் Phoneticஆ இல்லாததனால இப்படி ஆகிவிடும். கதை (Kadhai) விட்ற வீமன்-லாம் கிடையாது. எப்போதும் கதை(Gadhai) வச்சிண்டுருக்கான். அதனால 'கதை விடாத தோள் வீமன்' . இதுல அந்த பிரபுடதேவ மஹாராஜாவோட பேரைக் குறிப்பிடுறார். ஏன்னா முருகப் பெருமான் வந்து அந்த ராஜாவுக்கு தர்சனம் குடுத்துட்டார் இல்லையா. அதனால அந்த அளவுக்கு அவருக்கு யோக்யதை இருக்கு. மஹான்கள் மனுஷா. பிரபுடதேவ மஹாராஜா-ன்னு 10000 திருப்புகழ்ல ஒரு திருப்புகழ்ல இந்த ஒரு பேரைத் தான் Mention பண்ணியிருக்கார். அப்படி முருகன் ஓடி வந்து தரிசனம் குடுத்ததுனால எல்லாப் பாட்டிலேயும் 'எனது முன் ஓடி வரவேணும்' னு பாடி இருக்கார் போலிருக்கு.

இந்த வரவேணும் பாட்டெல்லாம் பாத்துண்டே வந்த போது, வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்னு ஒரு மஹான் இருந்தார். அவர் 'திருப்புகழ் பாராயண தவநெறி திருமுறை'னு ஒரு பஜனை பத்ததி ஏற்படுத்தினார். அதுல முதல்ல சில கந்தர் அலங்கார பாடல்கள் எல்லாம் பாடுவா. இந்த 'ஜயதேவர் அஷ்டபதி'யில ஸ்லோகங்கள் சொல்ற மாதிரி. நெஞ்சக்கனகல்லும், வாரணத்தானை, அருவமும் உருவுமாகி, அந்த மாதிரி பிள்ளையார், முருகனை எல்லாம் தியானம் பண்ற ஸ்லோகங்கள் மாதிரி, இந்த அலங்காரம், அந்தாதி, அனுபூதி எல்லாம் பாடிட்டு, கைத்தல நிறைகனி பாடி, உம்பர்த்தரு பாடி இப்படி பிள்ளையாரோட பாடல்கள். அப்புறம் அருணகிரிநாதர் மேல பாட்டு. அப்புறம் திருப்புகழ் அடியார்கள் மேல. அப்புறம், கடைகண்ணியல் வகுப்புன்னு, வாருமே நீங்கள் வாருமே, மயிலையும் அவன் திருக்கை அயிலையும் கடைக்கண் இயலையும் நினைத்து இருக்க வாருமேன்னு முடியும். நீங்க உங்களோட மத்த வேலையெல்லாம் விட்டுடுங்கோ. முருகனைப் பாடுங்கோ. முருகனுடைய மயிலையும் அவன் திருக்கை அயிலையும் கடைக்கண் இயலையும் நினைச்சிண்டு உட்காருங்கோ. உங்களுக்கு குபேரனைக் காட்டிலும் செல்வம் வரும். இந்திரனை காட்டிலும் பதவி வரும். உங்களுக்கு எல்லா சித்திகளும் வரும்னு அவ்ளோ forceful ஆ சொல்றார். அவ்ளோ நம்பிகையோட அவர் சொல்றார். அதைப் பாடி எல்லா ஜனங்களும் வாங்கோ ன்னு முருகனைப் பாட எல்லாரையும் கூப்டுண்டு, அதற்கப்பறம் அறுபடை வீடு பாடல்கள். அதுல இந்த வரவேணும்னு வரக்கூடிய பாடல்கள் எல்லாம் முதல்ல பாடுவாளாம். அதெல்லாம் வரவு பாடல்கள்னு சொல்லி அறுபடை வீட்டுலயும் வரவேணும்னு இருக்கிற பாடல்களை பாடிட்டு, அப்புறம் முருகப் பெருமான் வந்த உடனே அவருக்கு தூப, தீப, நைவேத்யம், அர்ச்சனை எல்லாத்தையும் திருப்புகழ் பாடல்களை கொண்டே பண்ணுவா. நாதபிந்து கலாதி நமோ நமோ மாதிரி நாலு அர்ச்சனை பாடல்கள் இருக்கு. அதெல்லாம் பாடி அதற்கப்புறம் அருள்வாயேன்னு நிறைய பாடல்கள் இருக்கு திருப்புகழ்ல. அந்த அருள்வாய் பாட்டெல்லாம் பாடிட்டு கடைசீல பக்தியால் யான் உன்னை, ஏறு மயிலேறி, அதெல்லாம் பாடி, மத்த தெய்வங்கள் எல்லாம் பாடி முடிக்கறதுன்னு வள்ளிமலை சச்சிதானந்த ஸ்வாமிகள் ஒரு பத்ததி போட்டு கொடுத்திருக்கார். அதை வெச்சிண்டுதான் எல்லா சபைகளிலேயும் திருப்புகழ் பாடறா. மஹான்கள்லாம் ஒத்துண்ட ஒரு பத்ததி அது.

இன்னிக்கு பதினெட்டாவது ஸ்லோகம்.

इहायाहि वत्सेति हस्तान्प्रसार्या_

ह्वयत्यादशच्छङ्करे मातुरङ्कात् ।

समुत्पत्य तातं श्रयन्तं कुमारं

हराश्लिष्टगात्रं भजे बालमूर्तिम् ॥१८॥

இஹாயாஹி வத்சேதி ஹஸ்தான் ப்ரஸார்யா

ஹ்வயத்யாதராச் சங்கரே மாதுரங்காத் |

ஸமுத்பத்ய தாதம் ஸ்ரயந்தம் குமாரம்

ஹராஸ்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் ||

இதை யாராவது சித்திரமா எழுதினா அவ்ளோ அழகா இருக்கும். 'மாதுரங்காத்' - அம்மாவான பார்வதி தேவியின் மடியில் உட்கார்ந்திருக்கும் 'பாலமூர்த்தி' – குழந்தையான முருகப் பெருமானை 'சங்கர:' சங்கரர் என்ன பண்றார்?

‘இஹாயாஹி வத்ஸ’ – குழந்தாய் இங்க என்கிட்ட வான்னு ‘ஹஸ்தான் ப்ரஸார்ய’ – இரண்டு கைகளையும் நீட்டி ‘ஆஹ்வயதி’ – கூப்பிடறார். ‘ஆதராத்’ -ரொம்ப செல்லமா கூப்பிடறார். அப்படி கூப்பிடும் சங்கரரிடத்தில், ‘ஸமுத்பத்ய’ குதிச்சு வந்து ‘தாதம் ஸ்ரயந்தம்’ – அப்பாவைக் கட்டிக்கொள்ளும், ‘குமாரம்’ அந்த குழந்தையை ‘ஹராஸ்லிஷ்டகாத்ரம்’ அப்படி ஓடி வந்த உடனே ‘ஹர:’ பரமேஸ்வரன் என்ன பண்றார், அப்படியே அணைச்சுக்கறார். அப்படி அம்மா மடியிலிருந்து துள்ளி அப்பா மடிக்கு வந்து, அப்பா கட்டியணைச்சுண்ட அந்த குழந்தையை, பால மூர்த்தியான முருகப் பெருமானை ‘பஜே’ நான் வழிபடுகிறேன்னு ரொம்ப அழகான ஸ்லோகம்.

இஹாயாஹி வத்சேதி ஹஸ்தான் ப்ரஸார்யா

ஹ்வயத்யாதராச் சங்கரே மாதுரங்காத் |

ஸமுத்பத்ய தாதம் ஸ்ரயந்தம் குமாரம்

ஹராஸ்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் ||

ன்னு ஒரு ஸ்லோகம்.

சீர்பாத வகுப்புல ரெண்டு வரிகள் இருக்கு.

இதழிவெகு முகககன நதியறுகு தறுகணர

இமகிரண தருணவுடு …… பதிசேர் சடாமவுலி

இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென

இமையமயில் தழுவுமொரு …… திருமார்பி லாடுவதும்

முருகன் மணநாறு சீறடியே

ன்னு ரெண்டு வரி. கிட்டத்தட்ட இதே அர்த்தம்.

இந்த ஸ்லோகத்தை, குழந்தை பேறு வேணும்னு ஆசைப்படறவா சொன்னா குழந்தை பிறக்கும். ஸ்வாமிகள் எழுதி கொடுத்து, படிச்சு, அவாளுக்கு குழந்தை பொறந்திருக்கு. நான் பார்த்திருக்கேன். நமக்கு நம் வினையினால் நல்ல விஷயங்களை நினைக்கறதுக்கே நம்ம மனசை தடுத்துடறது. இந்த மாதிரி ஒரு குழந்தையை கொஞ்சற காட்சியை நம்மால மனசுல நினைக்க முடிஞ்சா, அது உண்மையிலேயே நடந்துடும். ஆனா நம்மால ஏதோ வருத்தங்கள் பட

முடியறதே தவிர, அந்த கவலைகளை ஒதுக்கி நல்லதை நினைக்கவே முடியறதில்ல. அப்போ இந்த மஹான்களோட வாக்கு மந்திரமாக வேலைசெய்து இந்த வரங்களை எல்லாம் பெற்றுத் தரும். அது தான் நம்ம மதத்தோட பெருமை.

இதே போல குழந்தயாக, முருகா நீ குழந்தையா என் மடியில தவழ்ந்து எனக்கு முத்தம் கொடுக்கணும்னு அருணகிரிநாதர் ஒரு பாட்டுல சொல்லியிருக்கார்.

செகமாயை யுற்றெ னகவாழ்வில் வைத்த திருமாது கெர்ப்ப....முடலூறித்

தெசமாத முற்றி வடிவாய்நி லத்தில்திரமாய ளித்த ...... பொருளாகி

மகவாவி னுச்சி விழியாந நத்தில்மலைநேர்பு யத்தி ...... லுறவாடி

மடிமீத டுத்து விளையாடி நித்த மணிவாயின் முத்தி ...... தரவேணும்

முகமாய மிட்ட குறமாதி னுக்கு முலைமேல ணைக்க ...... வருநீதா

முதுமாம றைக்கு ளொருமாபொ ருட்குள்மொழியேயு ரைத்த ...... குருநாதா

தகையாதெ னக்கு னடிகாண வைத்த தனியேர கத்தின் ...... முருகோனே

தருகாவி ரிக்கு வடபாரி சத்தில் சமர்வேலெ டுத்த ...... பெருமாளே.

ன்னு ஒரு அழகான பாடலையும் வள்ளிமலை ஸ்வாமிகள் குழந்தை பேற்றுக்காக படிக்கச் சொல்வார்.

நாளைக்கு குமாரேசஸூனோன்னு ஆரம்பிச்சு முருகனுடய பதினொரு நாமங்களை சொல்ற ஸ்லோகம். நாமமந்திரம்னே சொல்லணும். அதைச் சொல்லி முருகனை வழிபடறார்.

குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த சேனா

பதே ஸக்திபாணே மயூராதிரூட |

புலிந்தாத்மஜாகாந்த பக்தார்த்திஹாரின்

ப்ரபோ தாரகாரே ஸதாரக்ஷ மாம்த்வம் ||

அதனுடைய அர்த்தத்தை நாளைக்குப் பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –பத்தொன்பதாவது ஸ்லோகம் – முருக நாம ஜபத்தால் மனமும் இந்த்ரியங்களும் அடங்கும்

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல பதினெட்டாவது ஸ்லோகம்,

इहायाहि वत्सेति हस्तान्प्रसार्याह्वयत्यादराच्छङ्करे मातुरङ्कात् ।

समुत्पत्य तातं श्रयन्तं कुमारं हराश्लिष्टगात्रं भजे बालमूर्तिम् ॥ १८॥

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான் ப்ரஸார்யா

ஹவயத்யாதராச் சங்கரே மாதுரங்காத் |

ஸமுத்பத்ய தாதம் ச்ரயந்தம் குமாரம்

ஹராஸ்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் ||

ன்னு பார்வதி தேவியின் மடியிலிருந்து முருகக் குழந்தையை பரமேஸ்வரன் என்கிட்ட வான்னு கூப்பிட்ட உடனே துள்ளி ஓடி அப்பா கிட்ட போன உடனே அப்பா அந்த குழந்தையை அள்ளியெடுத்து அணைக்கிறார். இந்த ரூபத் த்யானம் சோமாஸ்கந்த மூர்த்தி-ம்பா சோமாஸ்கந்த மூர்த்தி என்கிற வார்த்தை உமையோடும், ஸ்கந்தனோடும் கூடிய பரமேஸ்வரனுடைய திரு உருவம்னு அர்த்தம். எல்லா கோவிங்கள்லேயும் சோமாஸ்கந்த மூர்த்தியின் அழகழகான சிற்பங்கள், மூர்த்தங்களும் இருக்கும், அந்த சோமாஸ்கந்த மூர்த்தி த்யானம்-ன்னு இந்த ஸ்லோகத்துல சொல்றா. சாஸ்திரிகள் சொல்றார். இன்னொன்னு விசேஷமா சொல்லியிருக்கார். முருகப் பெருமானுடைய ஷடக்ஷரி மந்த்ரத்துல சரவணபவ-ங்கிறதுல. இந்த முதல் இரண்டு அக்ஷரங்கள் சர என்கிறது சக்தி கண்டம்னும் வண என்கிறது குமார கண்டம்னும், பவ என்கிறது சிவ கண்டம்னும். இந்த சிவ சக்தியோடு கூடிய குமார ஸ்வாமியை த்யானம் பண்றது தான் இந்த ஷடக்ஷரி. அப்படி அந்த ஷடக்ஷரியை ஜபம் பண்றவாளுக்கு எல்லா சௌபாக்கியங்களும் சித்திக்கும்-ன்னு சொல்லியிருக்கார். இன்னிக்கு முருகனுடைய பதினோரு நாமாவளிகளை கொண்ட ஒரு ஸ்லோகம்.

कुमारेशसूनो गुह स्कन्द सेना-

पते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन्

प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥ १९ ॥

குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா

பதே சக்தி பாணே மயூராதிரூட |

புளிந்தாத்மஜாகாந்த பக்தார்த்தி ஹாரின்

ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷமாம் த்வம் ||

ன்னு ஒரு ஸ்லோகம். இதுல 'குமார:' ங்கறது பன்னிரண்டு வயது பிள்ளையை குமாரன்னு சொல்லுவா. அப்படி முருகப் பெருமான் பிறந்து ஒரே நாள்ல குமாரனாக வளர்ந்து, தேவர்களுக்கு சேனாதிபதியா அவருக்கு பட்டாபிஷேகம் பண்ணி வச்சா. பார்வதி தேவி கொடுத்த சக்தி ஆயுதம், வேலை எடுத்துண்டு போய், அசுரர்களோடு யுத்தம் பண்ணி சூரபத்மனை வதம் பண்ணறார். அந்த குமரா என்கிறது அந்த நாமா. 'ஈஷஸூனோ' 'ஈஷ:' ன்னா உலகத்துக்கே தலைவன் பரமேஸ்வரன் ன்னு அர்த்தம். 'ஸூனு:' அவருடைய குழந்தை ன்னு

அர்த்தம். 'ஸூனு:' முதல் விபக்தி. ஹே குமார, ஹே ஈஷ ஸூனோன்னா விளி வேற்றுமை ன்னு சொல்லக்கூடிய எட்டாவது விபக்தி. 'குஹ' ன்னா ஹ்ருதய குஹையில் வசிக்கும் ஆத்ம ஸ்வரூபமான பகவான் ன்னு அர்த்தம். 'ஸ்கந்த' ன்னா பக்தர்களுடைய பாபங்களை போக்குபவர், முக்தி என்ற பரம புருஷார்த்தத்தை அளிப்பவர்ன்னு அர்த்தம். 'ஸ்கந்திர் கதி: சோஷனையோ யஹ:' ன்னு ஒரு தாதுவை எடுத்துண்டு விசேஷ அர்த்தம் சொல்லி இருக்கார் சாஸ்த்ரிகள். பொதுவாக ஸ்கந்தங்கற பதத்துக்கு கங்கா தேவி அந்த கர்பத்தை தாங்க முடியாம, அவளிடமிருந்து நழுவி இந்த சரவணப் பொய்கையில விழுந்து ஆறு குழந்தைகளா ஆனது அப்படீங்கறதுனால ஸ்கந்த என்கிற வார்த்தைக்கு நழுவறது-ன்னு அர்த்தம். அப்படி ஒரு பொருள் சொல்லுவா.

'ஸேனாபதே' தேவர்களுடைய சேனைக்கு அதிபதியா இருந்தவர் ன்னு ஒரு அர்த்தம். தேவஸேனாங்கற இந்திரனுடைய பெண், ஐராவதம் வளர்த்த அந்த தேவசேனையினுடைய பதி கணவர்ங்கற அர்த்தத்திலேயும் 'ஸேனாபதே'. 'சக்திபாணே' அம்பாள் கொடுத்த சக்தி ஆயுதம் வேலாயுதத்தை கையிலே வச்சிண்டிருக்கார். 'மயூரதிரூட' வேதமாகிய மயிலின் மேல் அமர்ந்திருப்பவரே! 'புளிந்தாத்மஜாகாந்த' புளிந்தன் என்ற வேடனுடைய பெண் புளிந்தாத்மஜா-வள்ளி. காந்தன்னா வள்ளியினுடைய கணவன். 'பக்தார்த்தி ஹாரின்' ஆர்த்தி-ன்னா கஷ்டம், பக்தர்களுடைய கஷ்டங்களை போக்குபவர். ஹே தாரகாரே: தாரகனுக்கு சத்ருவே, ஹே ப்ரபோ: ப்ரபோ-ன்னா ஸ்வாமி உடையவர். அவர்தான் நமக்கெல்லாம் தலைவர். 'மாம் ஸதா த்வம் ரக்ஷ' நீ என்னை எப்பொழுதும் காப்பாற்ற வேண்டும்.

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥ १९ ॥

இந்த நாமாவளிகளுக்கு தேதியூர் சாஸ்திரிகள் ரொம்ப விசேஷமான ஆச்சர்யமான ஒரு அர்த்தம் சொல்லியிருக்கார். அந்த மாதிரி மஹான்கள் தான் சொல்ல முடியும். நமக்கு உடம்புல மெய், வாய், விழி, நாசியொடும், செவி-ன்னு சொல்லபடுகிற ஞான இந்திரியங்கள் ஐந்து இருக்கு. ஞான இந்திரியமன்னா inputs-ன்னு புரிஞ்சுக்கலாம். கர்ம இந்திரியங்கள் என்கிறது outputs வேலை செய்யற கை, கால், வாக்கு, பாயு, உபஸ்தம் என்ற ஐந்து கர்ம இந்திரியங்கள்.

இதுக்கெல்லாம் ஒரு control மாதிரி நியாந்தா-ன்னு சொல்ற மனசு. அந்தக்கரணம்னு ஒண்ணு இருக்கு. இந்த பதினொன்னும் சேர்ந்துதான் நம்ம சரீரம். இதை அடக்கறது ரொம்ப கஷ்டம். அதுக்கு குமார ரஹஸ்யம் என்கிற மஹாமந்த்ரமாக ஸ்கந்த புராணத்துல, சங்கர சம்ஹிதையில் உபதேச காண்டத்தில் ஸனத்குமார ஸ்வாமியினால் நாரத மஹரிஷிக்கு உபதேசம் பண்ணப்பட்ட இந்த பதினோரு மந்த்ரங்களை, ஆச்சார்யாள் ரொம்ப சுலபமா இந்த்ரய நிக்ரஹம் பண்றதுக்கு ஒரு ஸ்லோகமா நமக்கு சொல்லி கொடுத்துட்டார். அப்படி ஆசார்யாளோட மஹா கருணை. அதனால இந்த நாம மந்த்ரத்தை ஒரு ஸ்லோக ரூபமா எல்லாரும் சொல்றதுக்காக பண்ணி கொடுத்திருக்கார் ன்னு சொல்றார்.

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥

மந்த்ரம்ங்கறதுனால நிறைய தடவை சொல்லலாம்னு ஆசையா இருக்கு. அப்படி இந்த இந்திரியங்களோட தொல்லையிலிருந்து என்னை மீட்டு என்னை காப்பாத்தணும்-னு அர்த்தம் சொல்றார்.

அருணகிரி நாதர் எத்தனையோ பாடல்கள்ல முருகப் பெருமானுடைய நாம மஹிமையை பத்தி சொல்லி இருக்கார்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு

மிடியாற் படியில் விதனப் படார் வெற்றிவேற் பெருமாள்

அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்

பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே. (கந்தர் அலங்காரம்)

முருகனுடைய திருநாமத்தைச் சொல்பவர்கள்,'முடியாப் பிறவிக் கடலில் புகார்'. திரும்ப வந்து இங்க பிறக்க மாட்டார்கள். அவர்கள் முக்தி அடைவார்கள்னு சொல்றார். 'முழுதும் கெடுக்கும் மிடியால் படியில் விதனப் படார்'. நம்மை முழுதும் கெடுக்கக் கூடிய வறுமையோட வாசல்ல நிற்க வேண்டிய நிலை நமக்கு வராதுன்னு ஒரு அர்த்தம். 'மிடியால் படியில் விதனப் படார்'ன்னா, வறுமை வந்தாலும் அதனால அவா துவண்டு போக மாட்டான்னு ஒரு அர்த்தமும் சொல்லலாம். ஞானிகளுக்கு அந்த மாதிரி அர்த்தம். 'வெற்றிவேல் பெருமாள் அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே' ன்னு சொல்றார்.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா

மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள் முன்புசெய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி

வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே (கந்தர் அலங்காரம்)

ன்னு முருகனோட நாமத்துல அருணகிரி நாதருக்குத் தனி அன்பு.

ஸ்வாமிகள் சொல்வார். ரமண பகவான் கிட்ட பணக்கார வக்கீல் ஒருத்தர் வந்தாராம். அவர் 'எனக்கு அநுக்கிரகம் பண்ணனும்'னு சொன்ன போது, ரமணர் மணல்ல தன் கையால 'முருகா'ன்னு எழுதினாராம். அந்த பக்தர் அந்த மணலை எடுத்துண்டு போய் பூஜை பண்ணி, முருக நாமத்தைக் கோடிக்கணக்கா ஜபம் பண்ணி, ரமணர் மாதிரியே அவரும் எல்லாத்தையும் துறந்து கௌபீனம் கட்டிண்டு சந்நியாசியா போய்ட்டாருன்னு ஸ்வாமிகள் சொல்வார்.

"முருகன், குமரன், குகன், என்று மொழிந்து

உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்"

ன்னு கந்தர் அநுபூதியில அருணகிரி நாதர் சொல்றார்.

'முருகா எனவோர் தரம் ஓது அடியார்

முடிமேல் இணைதாள் அருள்வோனே!' ன்னு சொல்றார்.

('எருவாய் கருவாய்' எனத் தொடங்கும் -திருவீழிமிழலைத் திருப்புகழ்) .

'முருகா'ன்னு ஒரு தரம் சொன்னா அவாளோட தலை மேல உன்னுடைய ரெண்டு பாதங்களையும் நீ வைப்பாயே ன்னு சொல்றார்.

"முருக சரவண மகளிர் அறுவர்முலை நுகரும்

அறுமுக குமர சரணமென அருள் பாடி ஆடிமிக

மொழி குழற அழுதுதொழுது உருகுமவர் விழியருவி முழுகுவதும் …

…. மணநாறு சீறடியே " (சீர்பாத வகுப்பு)

முருகான்னு சொல்லி அழுது தொழுது உருகறவாளோட கண் ஜலத்தில உன் திருவடிகள் நனையும்-ன்னு சொல்றார். ஸ்வாமிகள் சொல்வார்,'பக்திக்கு இது

தான் அடையாளம். இது தான் முடிவு. ஏதோ ப்ரவசனம் பண்றோம். திருப்புகழைப் பாடறோம். யாரெல்லாம் நன்னா இருக்குன்னு சொன்னா ன்னு பார்த்துண்டு போயிடாதே. முருக சரவண மகளிர் அறுவர்முலை நுகரும் அறுமுகா குமரா சரணமென மொழிகுழற அழுதுதொழுது உருகுமவர் விழியருவி முழுகுவதும் ..மணநாறு சீறடியேன்னு அருணகிரி பாடறார் இல்லையா. அதனால நீ தனியா உட்கார்ந்து முருகனைப் பாடி கண்ணுல ஜலம் வரணும். அதுதான் பக்தி 'ன்னு ஸ்வாமிகள் சொல்வார். அப்படி எல்லா மஹான்களும் நாமத்தோட மகிமையைச் சொல்லியிருக்கா.

இன்னிக்கி நாம முருகப் பெருமானுடைய 11 நாமங்களுடையப் பெருமையைப் பார்த்தோம். முருகப் பெருமானுடைய ரூப வர்ணனையைப் பண்ணி அந்த முருகனை எப்படி வழிபடணும்ன்னு இந்த ஸ்லோகத்துல 'நாம' மந்திரத்தைக் கொடுக்கிறார். இப்படி வழிபட்டா முருகன் நம்மகிட்ட சந்தோஷம் ஆயிடுவான்.

அடுத்த ஒரு அஞ்சாறு ஸ்லோகங்கள்ல சில ப்ரார்த்தனைகள் பண்றார்.

என் வீட்டில இருக்கிற எல்லாரும், என் வீட்டில இருக்கிற மிருகங்கள் கூட உன் மேல பக்தியோட இருக்கணும்ன்னு வேண்டுதல். கடைசிக் காலத்துல என்னை நீ மயில் மேல வந்து காப்பாத்தணும்ன்னு ஒரு வேண்டுதல். என்னோட துக்க பாரத்தை நீ தாங்கிக்கணும். என்னோட துக்க பாரத்தை இறக்கி வைக்கணும். என்னோட பக்திக்கு எந்த இடைஞ்சலும் இல்லாம, என் மனக்கவலை எல்லாம் போக்கணும்ன்னு ஒரு வேண்டுதல். என் கண்கள், காதுகள், என்னோட உடம்பு முழுக்க என் இந்திரியங்கள் எல்லாமே உன்னுடைய காரியத்திலேயே இருக்கணும்ன்னு ஒரு வேண்டுதல். வியாதிகள் போகணும்ன்னு ஒரு வேண்டுதல்.

அடுத்து அந்த ஸ்லோகங்கள் எல்லாம் பார்ப்போம்.

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम्

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் –இருபதாவது ஸ்லோகம் – கணத்தில் என் பயமற மயில் முதுகினில் வருவாயே</u>

ஸுப்ரமண்ய புஜங்கத்துல நேத்திக்கு

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥ १९ ॥

குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா

பதே சக்தி பாணே மயூரா திரூட |

புளிந்தாத்மஜாகாந்த பக்தார்த்தி ஹாரின்

ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷமாம் த்வம் ||

என்கிற பத்தொன்பதாவது ஸ்லோகம் பார்த்தோம். அதுல முருகப் பெருமானுடைய பதினோரு நாமங்கள், அஞ்சு கர்ம இந்திரியங்கள், அஞ்சு ஞான இந்திரியங்களையும், அதற்கு நியாந்தாவாக இருக்கக் கூடிய அந்தக்கரணம் என்கிற மனசையும் கட்டுப்படுத்தறதுக்கு, இந்திரிய நிக்ரஹம் பண்றதுக்கு இந்த பதினோரு நாமங்களும் மஹா மந்த்ரம் ன்னு ஆச்சார்யாள் சொல்லியிருக்கான்னு பார்த்தோம்.

இந்த குமரேஸ ஸூனோ -வை படிக்கும் போது இன்னொன்னு தோணித்து. பக்தி மார்கத்துல, நமக்கு எந்த இஷ்ட தெய்வமோ, அதன் ரூபத்யானம், நாம சங்கீர்த்தனம், பகவானோட கதைகளை கேட்கறது, இந்த மூணும் தான் பக்தி வளர்றதுக்கு ரொம்ப முக்கியமா, மஹான்கள் சொல்லியிருக்கா. இந்த ஸ்லோகத்துலேயே, குமரேஷஸூனோ குஹ ஸ்கந்த சேனாபதே, அந்த ஸ்லோகத்துலேயே இந்த நாமாவளிகளுக்கு உள்ளேயே முருகப் பெருமானுடைய கதைகள் எல்லாமும் வந்துடறது. அம்பாள் கிட்டேயிருந்து வேலை வாங்கிண்டு போய் சூரஸம்ஹாரம் பண்றார். அதை சக்திபாணே-ன்னு சொல்லிடறார். ஈஷ ஸூனோ-ன்னு சொல்லும்போது பரமேஸ்வரனுடைய நெற்றிக் கண்லேயிருந்து முருகப் பெருமான் அவதாரம் பண்ணினது. புலிந்தாத்மஜாகாந்தாங்கறது, வள்ளியம்மையை கடி மணம் செய்து கொண்டது. மயூராதிருட- வேதமயமான மயில் மேல ஏறி அமர்ந்திருக்கிறார். இப்படி ஸகந்தபுராணத்துல இருக்கற கதைகள் இந்த நாமத்துக்குள்ளேயே வந்துடுத்துன்னு தோணித்து.

அப்படி பகவான் எதிரிலே வந்த உடனே, அவரை நாமங்களை எல்லாம் சொல்லி ஸ்தோத்ரம் பண்ணி, சந்தோஷப்படுத்தின பின்ன சில ப்ரார்தனைகள் பண்றார். அது முதல்ல

प्रशान्तेन्द्रिये नष्टसंज्ञे विचेष्टे कफोद्गारिवक्त्रे भयोत्कम्पिगात्रे ।

प्रयाणोन्मुखे मय्यनाथे तदानीं द्रुतं मे दयालो भवाग्रे गुह त्वम् ॥ २०॥

ப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே விசேஷ்டே

கபோத்காரி வக்த்ரே பயோத்கம்பி காத்ரே |

ப்ரயாணோன்முகே மய்யநாதே ததானீம்

த்ருதம் மே தயாளோ பவாக்ரே குஹத்வம் ||

‘என்னுடைய கடைசி காலத்துல நீ என் முன்னாடி வந்து தர்சனம் கொடுத்து என்னை காப்பாத்த வேண்டும்’ ன்னு சொல்றார். இதை ஏன் முக்கியமா மொதல்ல எடுத்து சொல்றார்ன்னா, நமக்கு கடைசி காலம் என்னிக்கின்னு நமக்கு தெரியாது. இன்னிக்கு தூங்கறோம், நாளைக்கு பகவான் நினைச்சா எழுந்துப்போம். இந்த மூச்சு உள்ள இழுக்கறோம். பகவான் நினைச்சா தான் அது வெளியில வரும். நாம ரொம்ப சாஸ்வதமா இருக்கப் போறோம்னு நம்பிண்டு இருக்கோம். ஆனா நம் உயிர் பகவான் கையில தான் இருக்கு. அப்படி அந்த உயிர் பிரியறதுக்கு முன்னாடி, ‘ஜீவஸ்ய தத்துவ ஜிக்ஞாஸா’ ன்னு, இந்த ஜன்மா கொடுத்ததோட காரணமே, இதோட தத்வம் என்னன்னு விசாரிச்சு, உண்மையை உணர்ந்து காம, க்ரோத, மோகமெல்லாம் போய், பரம சாந்தமாகி உண்மையை அறிந்த பின்ன இந்த உடம்பிலேர்ந்து உயிர் பிரிந்தால், அதுக்கு மரணம்-ன்னு பேர் கிடையாது. அதற்கு பேர் அமிர்தம்-ன்னு பேரு, அந்த அமிர்தத்வத்தை அடையறதுக்காகத் தான் இந்த ஜன்மா. அப்படி நமக்கு உயிர் பிரியறதுக்கு முன்னாடி உண்மையை உணர்வதற்கு நாம முயற்சி பண்ணிண்டிருக்கணும். அந்த மாதிரி ஞானம் ஏற்படுவதற்கு முன்னாடி உயிர் பிரியாமல், அந்த கடைசி நேரத்துலேயாவது பகவத் தர்சனம் கிடைக்கணும். ஜன்மா முழுக்க நாம் பகவானை த்யானம் பண்ணிண்டு, பஜனம் பண்ணிண்டு இருந்தா தான் அந்த கடைசி நிமிஷத்துல பகவானோட ஞாபகம் வரும். அப்படி முருகா, நீ வந்து என்னை காப்பாத்தணும் என்கிறார்.

அந்த death bed-ல இருக்கும் போது, அந்த நிலைமை என்னங்கறதை வர்ணிக்கிறார். ‘ப்ரசாந்தேந்த்ரியே’ – இந்திரியங்கள் எல்லாம் அடங்கி போயிடறது. கண்ணு பார்க்கறது கிடையாது, காது கேட்கறது கிடையாது, கடைசி நேரத்துல. ‘நஷ்டஸம்க்ஞே’ – ஞாபக சக்தியும் போயிடறது. ‘விசேஷ்டே’ – கை, கால்லாம் ஒரு சேஷ்ட்டையும் பண்ண மாட்டேங்கறது. அடங்கி போயிடறது ‘கபோத்காரி வக்த்ரே’ – தொண்டையில கபம் அடைச்சுக்கிறது. பகவானோட நாமத்தை கூட, முருகான்னு சொல்றதுக்கு கூட தொண்டை வர மாட்டேங்கறது. ‘பயோத்கம்பி காத்ரே’ – எமபடர்கள் கனவுல வந்து பயமுடுத்தறா. அதனால உடம்பெல்லாம் நடுங்கறது. ‘ப்ரயாணோன்முகே’ அந்த நீண்ட யாத்திரை, உள்முகமா தயார் ஆகிடறோம், இந்த உடம்பை விடப்

போறோம், யம லோகத்துக்கு போகப் போறோம், அந்த மாதிரி நிலைமையில 'மய்யநாதே' – அனாதையான என்னிடத்தில், பிள்ளைக்கிட்ட சொல்ல முடியுமா, பொண்டாட்டிகிட்ட சொல்ல முடியுமா, யாருமே அந்த நிலையில் நாதன் கிடையாது . பகவான் ஒருத்தர் தான் நாதன்ங்கற அறிவு இருந்தாதான், அந்த நேரத்துல பகவான் வந்து காப்பாத்துவார், 'ததானீம்' – அந்த நேரத்தில் 'த்ருதம்' – வெகு விரைவாக 'மே அக்ரே' – எனக்கு முன்னாடி வந்து முருகா 'பவ த்வம்' – நீ காட்சி தர வேண்டும்ன்னு ஒரு ஸ்லோகம். இதுக்கு தாத்பர்யம் சொல்லும்போது தேதியூர் சாஸ்திரிகள் சொல்றார்.

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।

यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥

ஓமித்யேகாக்ஷரம் ப்³ரஹ்ம வ்யாஹரந்மாமநுஸ்மரந் |

ய: ப்ரயாதி த்யஜந்தே³ஹம் ஸ யாதி பரமாம் க³திம் || 8- 13||

ன்னு கீதா வாக்யம், ப்ரணவத்தை த்யானம் பண்ணிண்டு பகவானை நினைச்சுண்டு யார் உயிரை விடறாளோ அவா மோக்ஷத்தை அடைவான்னு சொல்றார். சாஸ்திரிகள் சொல்றார் முருகப் பெருமான் தான் ப்ரணவ ஸ்வரூபம், அந்த மயில் மேல் முருகன் தான் வேதத்தில் ப்ரணவ ஸ்வரூபம். அப்படி என் முன்னாடி வந்து நீ காட்சி கொடுத்தா, தானா மனசு அதுல லயிக்கும். நான் மோக்ஷம் அடைஞ்சுடுவேன். இது முக்கியமான பிரார்த்தனை எங்கறதனாலதான் முதல்ல இந்த பிரார்த்தனையைப் பண்றார். வற்புறுத்தி பகவான்கிட்ட இதை வேண்டிக்கணும். நித்தியம் வேண்டிக்கணும். ஏன்னா என்னிக்கு முடிவு வரும்ன்னு தெரியாது. அதனால ஓம்கார ஸ்மரணம் நம்மால பண்ண முடியுமோ இல்லையோ, முருகப் பெருமானுடைய ஸ்மரணத்தைப் பண்ணி பழகிண்டா, கடைசி நேரத்துல பகவான் வந்து நமக்கு தரிசனம் கொடுப்பார்ன்னு ரொம்ப அழகா சொல்லியிருக்கார்.

அருணகிரி நாதப் பெருமான் நிறைய பாடல்கள்ல இந்த மாதிரி 'எம பயத்திலிருந்து தன்னை மீட்கணும்'ன்னு சொல்றார். நிறைய இடத்துல 'முருகனை நான் நம்பி இருக்கேன். எமன் என்னை என்ன பண்ண முடியும்' ன்னும் அறைகூவல் விடறார். 'கந்தர் அலங்காரம்'ன்னு ஒரு 106 பாடல்கள் இருக்கு. அதுல நிறைய பாட்டுல இந்த மரண பயத்தைப் போக்கணும்ன்னு

வேண்டிக்கிறார். மரண பயம் எனக்கு கிடையாதுன்னும் சொல்றார். அதுல சில பாடல்கள் உங்களுக்கு சொல்றேன்.

மரண ப்ரமாதம் நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை

கிரணக் கலாபியும் வேலுமுண்டே கிண்கிணி முகுள

சரண ப்ரதாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா

பரண க்ருபாகர ஞானாகர சுர பாஸ்கரனே.

'கலாபி'ன்னா மயில். அழகான சமஸ்கிருத ஸ்லோகம் மாதிரி இருக்கு. அவ்ளோ சமஸ்கிருத வார்த்தைகள்.

தண்டாயுதமுந் திரிசூலமும் விழத் தாக்கியுன்னைத்

திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலுனக்குத்

தொண்டாகிய வென்னவிரோத ஞானச்சுடர் வடிவாள்

கண்டாயடா அந்தகா வந்து பார் சற்றென் கைக்கெட்டவே.

யமனை 'என் கிட்ட வந்து பார் 'எங்கிறார். 'வந்தேன்னா உன்னை வெட்டி விழ விடுவேன்' எங்கிறார். 'முருகப் பெருமான் பாதத்துல பக்தி பண்ணதுனால அவிரோத ஞானச்சுடர் வடிவாள் இருக்கு என்கிட்ட. நீ என்ன என்னை வந்து திரிசூலத்தை வச்சுண்டு பயமுறுத்துறது? அதெல்லாம் கீழ விழும்படியா உன்னை நான் தள்ளிடுவேன்'ங்கிறார்.நீலச் சிகண்டியிலேறும் பிரான் எந்த நேரத்திலுங்

கோலக் குறத்தியுடன் வருவான் குருநாதன் சொன்ன

சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார் சிவ யோகிகளே

காலத்தை வென்றிருப்பார், மரிப்பார் வெறுங்கர்மிகளே

ன்னு ஒரு பாட்டு. இதுல 'காலம்'ங்கிறதுதான் எமன். இந்த காலத்தை வென்று ஞான வெளியில் கலக்கறதுதான் ஜன்மாவோட நோக்கம். அதை அருணகிரி நாதர் முருகப் பெருமானுடைய அநுக்கிரகத்தினால அடைந்து அந்தப் அனுபவத்தைப் பேசறார்.

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்

பிடிக்கும் பொழுது வந்தஞ்லென்பாய் பெரும் பாம்பினின்று

நடிக்கும் பிரான் மருகா கொடுஞ் சூரனடுங்க வெற்பை

இடிக்குங் கலாபத் தனிமயிலேறும் இராவுத்தனே

இந்த இடத்துல நடிக்கிறதுன்னா டான்ஸ் ஆடறதுன்னு அர்த்தம். 'பெரும் பாம்பினின்று நடிக்கும் பிரான்', பாம்பு மேல கிருஷ்ணர் காளிங்க நர்த்தனம் ஆடினார் இல்லையா. அதைச் சொல்றார்.

பட்டிக் கடாவில் வரும் அந்தகாவுனைப் பாரறிய

வெட்டிப் புறங்கண்டலாது விடேன் வெய்ய சூரனைப்போய்

முட்டிப் பொருத செவ்வேற் பெருமாள் திருமுன்பு நின்றேன்

கட்டிப் புறப்படடா சத்தி வாளென்றன் கையதுவே

ன்னு ஒரு பாட்டு.

மாகத்தை முட்டி வரு நெடுங்கூற்றவன் வந்தாலென் முன்னே

தோகைப் புரவியிற்றோன்றி நிற்பாய் சுத்த நித்தமுத்தித்

த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப்

பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி தன் பாலகனே

ன்னு ஒரு பாட்டுல சொல்றார். இன்னிக்கி மஹா ப்ரதோஷம். "சுத்த நித்த முத்தித் த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்தகனைத் த்ரியம்பகனைப் பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி தன் பாலகனே " ன்னு மூணு பேரையும் சோமாஸ்கந்த மூர்த்தியா த்யானம் பண்ணிட்டோம். இப்படித் திருப்புகழ்ல எத்தனையோ பாடல்கள்.

கனைத்தெழும் பகடது பிடர் மிசைவரு

கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்

கதித்தடர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே

கலக்குறுஞ் செயல் ஒழிவற அழிவுறு

கருத்து நைந்து அலமுறு பொழுதளவை கொள்

கணத்தில் என் பயமற மயில் முதுகினில் வருவாயே

('உனைத் தினம்' எனத் தொடங்கும் திருப்பரங்குன்றம் திருப்புகழ்)

‘கடைசி நிமிஷத்துல என் கண் முன்னாடி, மயில் முதுகுல வந்து என்னோட பயத்தைப் போக்கணும், தர்சனம் கொடுக்கணும்’ ன்னு வேண்டறார்.

தேதியூர் சாஸ்திரிகள் சொல்ற மாதிரி அந்த க்ஷணத்துல தோகை மயில் முருகனைத் தர்சனம் பண்ணினா, பகவானோட ஒண்ணா கலந்துடலாம். மறுபிறவி கிடையாதுன்னு தெரியறது. இது முதல் பிரார்த்தனை. அடுத்த ஸ்லோகத்திலேயும், இதே மாதிரி கடைசி நிமிஷத்துல என்னை கைவிட்டுடாதேன்னு இன்னொரு தடவைப் பிரார்த்தனை பண்றார். அந்த ஸ்லோகத்தை நாளைக்குப் பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஒன்றாவது ஸ்லோகம் – உயிர் மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை வரவேணும்

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல இருபதாவது ஸ்லோகம் பார்த்தோம். அதுல என்னுடைய இந்த வாழ்வின் கடைசி நேரத்துல, நீ வந்து என் முன்னாடி தர்சனம் குடுக்கணம்னு வேண்டறார். இன்னிக்கும் கிட்டத்தட்ட அதே மாதிரி தான். நாளைக்கு ஸ்லோகத்திலயும் எமன் வரும்போது என்னை காப்பாத்துன்னு சொல்றார். ஆனால் subtle difference இருக்கு. இன்னிக்கு ஸ்லோகம்

कृतान्तस्य दूतेषु चण्डेषु कोपाद्

दहच्छिन्द्धि भिन्द्धीति मां तर्जयत्सु ।

मयूरं समारुह्य मा भैरिति त्वं

पुरः शक्तिपाणिर्ममायाहि शीघ्रम् ॥२१॥

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷுகோபாத்
தஹச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு |
மயூரம் ஸமாருஹ்ய மாபைரிதி த்வம்
புர : ஸக்திபாணிர் மமாயாஹி ஸிக்ரம் ||

க்ருதாந்த: னா எமன், 'க்ருதாந்தஸ்ய தூதேஷு' – எமனுடைய தூதர்களால், அவா எப்படி இருக்கான்னா – 'சண்டேஷு' – ரொம்ப உக்ரமா இருக்கா, பயங்கரமா இருக்கா. 'கோபாத்' – அவா கோபத்தோடு 'தஹ' – எரி இவனை. 'ச்சிந்தி' – வெட்டு, 'பிந்தி' – இவனை வெட்டி இரண்டா பிளந்து போடு. இப்படியெல்லாம் 'மாம் தர்ஜயத்ஸு' – என்னை அதட்டி பயமுறுத்தி ஹிம்ஸை பண்றா. அப்போ 'ஹே ஸ்வாமின்' – ஹே குமாரக் கடவுளே ' த்வம்' – நீ 'சக்திபாணி' கையில் வேலோடு 'மயூரம் ஸமாருஹ்ய' மயில் மேல் ஏறி என் முன்னாடி வந்து 'மா பைஹி' பயப்படாதே என்ற உபதேசத்தை பண்ணி 'இதி மம புர:' என் முன்னாடி சீக்கிரம் வா. சீக்கிரம் வந்து அபயத்தைக் கொடு. 'மா பைஹி' என்ற வார்த்தைகளைச் சொல்லி அபயம் கொடுன்னு கேட்கறார். இந்த பயப்படாதேன்னு குரு சொல்ற வார்த்தை அது சொன்ன நாள்லேயிருந்து உயிர் பிரியற நாள் வரைக்கும் கூட துணையாக நிற்கும். 'பயந்த தனிவழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே' அப்டினு சொன்னா மாதிரி அந்த 'மா பைஹி' எங்கறது ஒரு மந்திரம். அது கொடுக்கற தைரியம், எத்தனை ஜன்மா வேணா எடுக்கலாம். அவ்ளோ தைர்யம் கொடுக்கும்.

இங்க தேதியூர் சாஸ்திரிகள் இரண்டு ஸ்கந்த புராண ஸ்லோகங்களை quote பண்ணியிருக்கார். அவ்ளோ அழகா இருக்கு. மயில் மேல் ஏறி வந்து உன்னோட வேலை காண்பிச்சு 'மா பைஹி' ன்னு எனக்கு அபயம் கொடுன்னு சொன்னதுக்கு ஸ்கந்த புராணத்துலேருந்து ஒரு ஸ்லோகம் எடுத்திருக்கார்.

वेद एव मयूरस्यात् प्रणव: षण्मुखस्तथा |

ब्रह्मविद्यापि शक्तिस्यात् मोक्ष: तद्दर्शनात् स्मृत: ||

'வேத ஏவ மயூரஸ்யாத்' – வேதம் தான் மயூரம். வேதம் தான் மயில். 'ப்ரணவஹ: ஷண்முகஸ் ததா' – ஆறுமுகத்தோடு கூடிய முருகப் பெருமான் தான் பிரணவ ஸ்வரூபம். 'ப்ரம்ம வித்யாபி சக்திஸ்யாத்' – அந்த சக்தி என்கிற வேல் தான்

ப்ரம்ம வித்யை ன்னு சொல்றார். ஞானம் அது தான். 'மோக்ஷ: தத் தர்ஸனாத் ஸ்மிருத:' – இந்த மாதிரி ஸ்வாமியை தர்சனம் பண்ணா மோக்ஷம் கிடைக்கும் அப்படிங்கற ஒரு அழகான அவ்ளோ ஒரு relevant ஆன ஸ்கந்த புராண ஸ்லோகத்தை எடுத்திருக்கார். அதுல என்னன்னா இந்த மாதிரி முருகப் பெருமானோட தர்சனம் கிடைக்கணும்னா நாம விடாம முருகனை பஜனம் பண்ணணும். அதுக்கு ஆச்சரியமான ஒரு ஸ்லோகத்தை எடுத்திருக்கார். இந்த ஸ்லோகத்தை நான் கேட்டதேயில்லை.

कृतेतु ब्रह्मजिज्ञास्यं त्रेतायां जानकी पति: |

द्वापरे भगवान् कृष्ण: कलौ सक्न्द: प्रकीर्तित: ||

'க்ருதேது பிரம்மஜிக்ஞாஸ்யம்' – க்ருத யுகத்தில் பிரம்ம விசாரத்தினாலும், 'த்ரேதாயாம் ஜானகீ பதி:' – த்ரேதா யுகத்தில் ராமரை வழிபடுவதினாலும், 'த்வாபரே பகவான் கிருஷ்ண:' – த்வாபர யுகத்தில் கிருஷ்ணரை வழிபடுவதாலும் 'கலௌ ஸ்கந்த: ப்ரகீர்த்தித' – இந்தக் கலியில் ஸுப்ரமண்ய உபாசனையினாலும் மோக்ஷம் என்கிற புருஷார்த்தம் சித்திக்கிறதுன்னு கலியுக வரதன் ஸுப்ரமண்ய ஸ்வாமி, 'இந்தக் கலியில் ஸுப்ரமண்ய ஸ்வாமியைத் தான் வழிபட வேண்டும்' ன்னு அடிச்சு சொல்றார் சாஸ்திரிகள்.

அப்படி அந்த முருகப் பெருமான் ஸபரிவாரமாக மயில், வேல், வள்ளி தெய்வயானை உடன் வந்து தர்சனம் கொடுத்து ஞானத்தை அநுக்கிரகிக்கணும் அப்படிங்கிற இந்த பிரார்த்தனை. அதுக்கு நாம் இன்னியிலேயிருந்தே விடாம முருகனோட பஜனத்தைப் பண்ணனும் அப்படிங்கிறதை சாஸ்திரிகள் சொல்றார். ஸ்லோகத்துல என்னமோ 'வெட்டு, குத்து' னு வருது. அதை அவர் ரொம்ப elaborate பண்ணலை. முருக தரிசனம் மோக்ஷம் குடுக்கும் என்று கொண்டு போறார்.

இந்தக் கடைசிக் காலத்துல படுக்கையில படுத்துண்டு படற அவஸ்தை, அப்போ முருகப் பெருமான் வந்து காப்பாத்தணுங்கிற வேண்டுதல் அருணகிரி நாதரும் சில பாடல்கள்ல சொல்லியிருக்கார்.

'தலைவலி மருத்தீடு'ன்னு பழனித் திருப்புகழ் ஒண்ணு. பெரிய பாட்டு. அதுல பல விதமான வியாதிகள் வந்து அது ஒவ்வொண்ணுக்கும் பேர் வெச்சுடறா. வயசான காலத்தில காது கேட்க மாட்டேங்கிறது. கண் தெரிய மாட்டேங்கிறது.

ஒவ்வொரு பிரச்சனைக்கும் வைத்தியன் ஒரு பேர் வைக்கிறான். “அவருக்கெல்லாம் காது கேட்காது விடு விடு.” …’சரியும் வயதுக்கேது தாரீர், சொலீர்’ …அவர் கிட்டப் போய் என்ன பேச்சுன்னு சொல்லி ஜனங்கள்லாம் ஏசறா. இப்படி இருக்கும் போது,

” …உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்

வகைவகை யெடுத்தே தொடா மாலிகாபரணம்

உனதடியினிற் சூடவே நாடு மாதவர்கள் இருபாதம்

உளமது தரித்தே வினாவோடு பாடியருள்

வழிபட எனக்கே தயாவோடு தாளுதவ

உரகமதெடுத்தாடும் ஏகார மீதின்மிசை. வரவேணும் ..”

ன்னு ஒரு வேண்டுதல். அழகான பூக்களை தேர்ந்து எடுத்துத் தொடுத்து, மாலையாக பண்ணி உன்னுடைய பாதத்துல போடறதில சந்தோஷப் படற அடியவர்களுடைய திருப்பாதங்களை என்னுள்ளத்தில் தரித்து, எனக்கும் அந்த பக்தி வருமா, மோக்ஷம் கிடைக்குமா, எனக்கும் அந்த முருகப் பெருமானுடைய பக்தர்கள் கூட்டத்தில் சேர முடியுமா ன்னு ஏங்கி வேண்டிண்டு, அந்த தயவுக்காக காத்திருக்கும் எனக்கு உதவ, உரகமது (வாசுகி என்ற பாம்பை) எடுத்தாடும் அந்த மயில் ‘ஏ’கார மீதின் மிசை வரவேணும்ன்னு ஒரு பாட்டுல சொல்றார்.

திருவருணைத் திருப்புகழ் ஒண்ணு இருக்கு. அந்தப் பாட்டுல

“வீடுதவியாள வெற்றி வேல் கரமதே யெடுத்து வீறுமயில் மீதிலுற்று வருவாயே”

(‘கேதகைய பூமுடித்த’ எனத் தொடங்கும் திருவண்ணாமலை திருப்புகழ்)

ன்னு சொல்றார். ‘வீடுதவி’ன்னா மோக்ஷம். எனக்கு மோக்ஷம் கொடுக்கறதுக்கு வெற்றிவேல் கரமதே எடுத்து (கையில வேல் எடுத்துண்டு) வீறுமயில் மீதிலுற்று வரவேணும். அப்படியே அந்த

कृतान्तस्य दूतेषु चण्डेषु कोपाद् दहच्छिन्द्धि भिन्द्धीति मां तर्जयत्सु ।

मयूरं समारुह्य मा भैरिति त्वं पुरः शक्तिपाणिर्ममायाहि शीघ्रम्

அப்படிங்கிற ஸ்லோகத்துக்கு தமிழாக்கம் மாதிரி இருக்கு இது.

“வீடுதவியாள வெற்றி வேல் கரமதே யெடுத்து

வீறுமயில் மீதிலுற்று வருவாயே” ன்னு அழகான ஒரு திருப்புகழ்.

“சோதியன லாவுதித்த சோணகிரி மாமலைக்குள்

சோபைவட கோபுரத்தி ...... லுறைவோனே

சோனைமழை போலெதிர்த்த தானவர்கள் மாளவெற்றி

தோளின்மிசை வாளெடுத்த ...... பெருமாளே.

வீடுதவியாள வெற்றி வேல் கரமதே யெடுத்து

வீறுமயில் மீதிலுற்று வருவாயே”

ன்னு ஒரு பிரார்த்தனை. அதனால நாம இடையறாது முருகப் பெருமானுடைய பஜனத்தைப் பண்ணி, அந்த ஞானம் அடைஞ்சுட்டா, அதுக்கப்புறம் இந்த உலக வாழ்க்கையில அர்த்தம் ஒண்ணுமே இல்லை. அதுக்காக வேண்டனும். அந்த ஞானத்துக்காக தான் வேண்டணும். அதுக்கு இடையறாது வழிபாடு பண்ணணும்ங்கறது தான் இந்த மூணு ஸ்லோகத்தோட தாத்பர்யமா இருக்கு. கடைசி காலத்துல வந்து என்னை காப்பாத்து கை விட்டுடாதேன்னு சொல்றார், அதுக்கு இன்னியிலேர்ந்தே எனக்கு உன்னிடத்திலே மனசு வைக்க கூடிய புத்தி கொடுங்கற ப்ரார்தனையைத்தான் stress பண்ணி தேதியூர் சாஸ்திரிகள் எடுத்து கொடுக்கறார். அது தான் மஹான்களோட பெருமை. அடுத்த ஸ்லோகத்துல ‘மனாகபி உபேக்ஷா’ அந்த நேரத்துல கொஞ்சம் கூட என்னை மறந்துடாதே. அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்கறேன், என்னை வந்து காப்பாத்து முருகான்னு சொல்ற அந்த ஸ்லோகத்தை நாளைக்கு பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –இருபத்தி இரண்டாவது ஸ்லோகம் –நின் ஞான சிவமான பதம் அருள்வாயே

ஸுப்ரமண்ய புஜங்கத்துல இருபதாவது ஸ்லோகத்துல, என்னுடைய இந்திரியங்கள் எல்லாம் தளர்ந்து போய், ஒண்ணும் பண்ண முடியாம கடைசி காலத்துல நான் தவிக்கும் போது நீ என் முன்னாடி வந்து தர்சனம் கொடுக்கணும்னு ஒரு ஸ்லோகம். இருபத்தி ஒண்ணாவது ஸ்லோகத்துல எம படர்கள் வந்து என்னை பயமுறுத்தும் போது நீ கையில வேலோடு, மயில் மேல ஏறி வந்து எனக்கு தர்சனம் கொடுத்து ‘மா பைஹி’ பயப்படாதேன்னு எனக்கு

அபய வாக்கு கொடுக்கணும்னு கேட்டார். இன்னிக்கு இருபத்திரெண்டாவது ஸ்லோகம்.

प्रणम्यासकृत्पादयोस्ते पतित्वा

प्रसाद्य प्रभो प्रार्थयेऽनेकवारम् ।

न वक्तुं क्षमोऽहं तदानीं कृपाब्धे

न कार्यान्तकाले मनागप्युपेक्षा ॥ २२॥

ப்ரணம்யாஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா

ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேனேக வாரம் |

நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே

நகார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா ||

ன்னு ஒரு ஸ்லோகம்.

'ப்ரபோ' – என் துரையே, தலைவனே – ன்னு அர்த்தம். துரையப்பன் பேர் வைப்பா. முருகப் பெருமானுக்கு துரை-ன்னு பேரு. இதை சொன்ன உடனே வள்ளிமலை சச்சிதானந்த ஸ்வாமிகள் வாழ்க்கையில நடந்த சம்பவம் ஒண்ணு ஞாபகம் வர்றது. சச்சிதானந்த ஸ்வாமிகள் பன்னிரண்டு வருஷம் வள்ளிமலையில தபஸ் பண்ணிட்டு அப்புறம் சென்னைக்கு வந்திருக்கார். தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை ஆத்துக்கு வருவார். இங்க திருவல்லிகேணியில வேங்கடராவ்னு ஒருத்தர் இருந்தார். அப்படி சில பேர் அவர் கிட்ட ரொம்ப தெய்வபக்தியா இருந்தா. அங்கெல்லாம் போனா ஆறு மணி நேரம் எட்டு மணி நேரம் திருப்புகழ் பாடுவார். எல்லாரும் எல்லாவற்றையும் மறந்துட்டு அவருடைய பஜனையில ஈடுபட்டு ரொம்ப பேரனைத்துத்துல திளைச்சு இருப்பா. திருப்புகழ் மணி ன்னு பெரியவா ஒருத்தருக்கு title கொடுத்தா. அந்த கிருஷ்ணஸ்வாமி ஐயர், அவா எல்லாரும் வள்ளிமலை ஸ்வாமிகள் கிட்ட ரொம்ப பக்தியா இருந்தா.

ஒரு தடவை டிசம்பர் கடைசி வாரத்துல ஸ்வாமிகளை வள்ளிமலை போய் தர்சனம் பண்ணியிருக்கா. அப்புறம் 'நாங்க கிளம்பறோம்' ன்னு சொன்ன போது 'என்ன அவசரம்?' ன்னு ஸ்வாமிகள் கேட்டிருக்கார் . அப்ப பிரிட்டிஷ் ஆட்சி. ஒண்ணாம் தேதி ஆச்சுன்னா பிரிட்டிஷ் துரையைப் போய் பார்த்து அவாளுக்கு ஏதாவது gift கொடுத்து salute போட்டு வருவோம்னு இவாள்லாம் சொல்றா. அப்ப வள்ளிமலை ஸ்வாமிகள் சொல்றார், 'நமக்கு துரை முருகன்டா.

திருத்தணிக்கு போங்கோ. அங்க படி பூஜை பண்ணுங்கோ, 'பதியான திருத்தணி மேவி படி மீது துதித்து உடன் வாழ' னு படி பூஜை பண்ணனும்னு அருணகிரிநாதர் பாடியிருக்கார். அதனால திருத்தணிக்கு போவோம். அங்க படி பூஜை பண்ணுவோம், நீங்கள் எல்லாம் ஒண்ணாம் தேதி அங்க வந்துடுங்கோ. நானும் வந்துடுறேன்' ன்னு சொல்லி அவர் ஆரம்பிச்சது அந்த திருத்தணித் திருப்படித் திருவிழா.

இன்னிக்கும் ஜனவரி ஒண்ணாம் தேதி லட்சக்கணக்கானோர் வந்து திருத்தணியில படியில கோலம் போட்டு, காவி இட்டு கற்பூரம் ஏத்தி திருப்புகழை பாடிண்டே போய், (அங்கே 365 படிகள்) ஒவ்வொரு நாளைக்கும் ஒரு படிங்கற மாதிரி. வர வருஷம் நன்னாயிருக்கணும், முருகனோட அருள் வேணும்னு வேண்டிண்டு, மேல போய் ஸ்வாமி தர்சனம் பண்ணிட்டு வர்றதுனு ஒரு வழக்கம். அந்த மஹான் ஆரம்பிச்சு வச்சது அவ்வளோ அமோகமா நடக்கறது அது. 'துரைன்னா நமக்கெல்லாம் துரை முருகன் தான்' ன்னு அவர் சொன்னார் – ஹே ப்ரபோ 'க்ருபாப்தே' – கருணை கடலேன்னு சொல்றார். 'தே பாதயோஹோ:' உன்னுடைய சரணங்களில் 'பதித்வா' விழுந்து வணங்கி, 'ப்ரணம்ய – நமஸ்காரம் பண்ணி, 'அனேகவாரம்' – பலதடவை 'ப்ரஸாத்ய' – உன்னை சந்தோஷப்படுத்தி உன்னுடைய நாமங்களை பாடி, 'க்ருபாப்தே' கருணைக் கடலே, முருகா! நான் உன்னை என்ன வேண்டிக்கறேன்னா 'ததாநீம்' என்னுடைய பிராண வியோக காலத்துல என் உயிர் பிரியும் போது "அஹம் வக்தும் ந க்ஷமஹ" எதுவும் பேசறதுக்கு சக்தி இல்லாம போயிடுவேன் நான். 'அந்தகாலே', அந்த கடைசி காலத்துல 'மனாகபி' கொஞ்சம்கூட என் விஷயத்தில் 'உபேக்ஷா' ஒரு அலட்சியம் பண்ணிடாதே, வந்து என்னை காப்பாத்து ன்னு அழகான ஸ்லோகம்.

இந்த இடத்துல தேதியூர் சாஸ்திரிகள் சொல்றார் – 'அடிக்கடி பாகவனோட பாதாரவிந்தங்கள்ல வணங்கி நாம இந்த ப்ரார்த்தனையை பண்ணனும். பகவான் கடைசி நேரத்துல வந்து நம்மள கைவிடாம காப்பாத்தனும்னு, நம்மை அழைச்சிண்டு போகணும்' ன்னு சொல்லிட்டு ஒருநாலு ஸ்லோகங்கள் கொடுத்து இருக்கார். இந்த ஸ்லோகங்கள் ஸனத்குமாரர் சம்ஹிதையில இருக்காம்.

सुलभा: योगतत्वज्ञा: सुलभा: ब्रह्मवादिन: |

सुलभा: कर्मीटा: लोके न गुहोपासकास्तथा ||

गुहात्तु न परो देव: गुहे सर्वं प्रतिष्ठितम् |

सर्व वेतान्ततात्पर्य विषयो गुह एव स: ||

गुहास्योपासनात् सर्वे देवास्तुष्यन्ति नेतारात् |

तुष्यन्ति पितरस्सर्वे सत्यं सत्यं वदाम्यहम् ||

कलौ गुहं परित्यज्य नृणां सर्वार्थसाधकम् |

अन्वेषते परं देवं मूढधीर्नात्र संशय: ||

ஸுலபா: யோகதத்வஞா: ஸுலபா: பிரம்மவாதின: |

ஸுலபா: கர்மிடா: லோகே ந குஹோபாஸகாஸ்ததா ||

குஹாத்து ந பரோதேவ: குஹே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் |

ஸர்வ வேதாந்ததாத்பர்ய விஷயோ குஹ ஏவ ஸ: ||

குஹஸ்யோபாஸனாத் ஸர்வே தேவா: துஷ்யந்தி நேதராத் |

துஷ்யந்தி பிதர: ஸர்வே ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் ||

கலௌ குஹம் பரித்யஜ்ய குஹம் ஸர்வார்த்த சாதகம் |

அன்வேஷதே பரம் தெய்வம் மூடதீ: நாத்ர சம்ஷய: ||

‘ ஸுலபா: யோகதத்வஞா:’ உலகத்துல யோக தத்வம் தெரிஞ்சவாள், குண்டலினி யோகம் இன்னும், அஷ்டாங்க யோகம் தெரிஞ்சவாள்ளாம் இருப்பா, ஸுலபா: அவாள்ளாம் easy-யா கிடைப்பா. ‘ஸுலபா: பிரம்மவாதின:’ வேதாந்தம் பேசறவாளும் நிறைய கிடைப்பா, ‘ ஸுலபா: கர்மிடா: லோகே’ கர்மா பண்றவா, யாகம் பண்றவாளும் நிறைய கிடைப்பா. ஆனா ‘ந குஹோபாஸகாஸ்ததா’ குகனிடத்தில் உண்மையான பக்தி பண்றவா அவ்ளோ

சுலபத்தில் கிடைக்க மாட்டா. அவா ரொம்ப கொஞ்சம் பேர்தான் இருப்பா-ன்னு சொல்றார்.

‘குஹாத்து ந பரோதேவ: குஹே ஸர்வம் ப்ரதிஷ்டிதம்’ முருகனுக்கு மேலான தெய்வம் இல்லை. முருகனிடத்திலேயே எல்லாரும் உறைத்திருக்கிறார்கள். ‘ஸர்வ வேதாந்ததாத்பர்ய விஷயோ குஹ ஏவ ஸ:’ வேத வேதாந்தத்தோட தாத்பர்யம் முருகப் பெருமான்தான். ‘குஹஸ்யோபாஸனாத் ஸர்வே தேவா: துஷ்யந்தி நேதராத்’ முருகப் பெருமானை வழிபட்டால் எல்லா தெய்வங்களும் திருப்தி அடையும். ‘துஷ்யந்தி பிதர: ஸர்வே ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்’ பித்ருக்களும் திருப்தி அடைவார்கள் சத்யமாகச் சொல்றேன் அப்படிங்கறார்.

‘கலௌ குஹம் பரித்யஜ்ய ந்ருணாம் ஸர்வார்த்த தாயகம் |

அன்வேஷதே பரம் தேவம் மூடதீ: நாத்ர ஸம்ஸய: ||

அப்படி எல்லாவற்றையும் கொடுக்கக் கூடிய முருகனை விட்டு வேறொரு தெய்வத்தை வணங்குபவர்கள் புத்தி கெட்டவர்கள்ன்னு அர்த்தம். ‘ஏக பக்திர் விஷிஸ்யதே’ன்னு கீதையில பகவான் சொல்றார். நமக்கு ஒரு தெய்வம். அந்த தெய்வத்துக்கிட்ட நாம மனசு வைக்கணும். ஒரு குலமகள் எப்படி தன் கணவனைத் தெய்வமா நினைக்கிறாளோ அந்த மாதிரி நமக்கு ‘ஒரு குரு, ஒரு தெய்வம்’. அந்த குரு காண்பிச்ச வழியில, அந்த தெய்வத்துக்கிட்ட பக்தி வைக்கணும்ன்னு என்ற நோக்கத்தில் இந்த ஸ்லோகங்களை சொல்றார். அந்த மாதிரி ஒரு தெய்வத்துக் கிட்ட மனசு வைச்சா நமக்கு சுலபமா அங்க மனசு ஒருமுகப்பட்டு அந்த தெய்வத்தோட அநுக்கிரகம் கிடைக்கும். அது எந்த தெய்வமாகவும் இருக்கலாம். நாம வேற தெய்வத்தை பழிச்சுப் பேசவே கூடாது. நம் இஷ்ட தெய்வத்துக்கிட்ட உருகி, ‘அஸக்ருத்’ திரும்பத் திரும்ப பிரார்த்தனை பண்ணனும். ‘பகவானே உன்னோட பாதங்கள்ல என்னை சேர்த்துக்கோ’ன்னு. அந்த மாதிரி பிரார்த்தனை பண்றதுக்கு திருப்புகழ்ல நிறைய பாடல்கள் இருக்கு.

“காலன் எனை அணுகாமல் உனதிரு காலில் வழிபட அருள்வாயே” ன்னு ஒரு பாட்டுல இருக்கு. ஸ்வாமிமலைத் திருப்புகழ்.

பாதி மதிநதி போது மணிசடை நாத ரருளிய ...... குமரேசா

பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய ...... மணவாளா

காது மொருவிழி காக முறஅருள் மாய னரிதிரு ...... மருகோனே

கால னெனையணு காம லுனதிரு காலில் வழிபட ...... அருள்வாயே

ஆதி யயனொடு தேவர் சுரருலகாளும் வகையுறு ...... சிறைமீளா

ஆடு மயிலினி லேறி யமரர்கள் சூழ வரவரு ...... மிளையோனே

சூத மிகவளர் சோலை மருவுசுவாமி மலைதனி ...... லுறைவோனே

சூர னுடலற வாரி சுவறிட வேலை விடவல ...... பெருமாளே.

இந்த 'காதும் ஒரு விழி காகமுற அருள்' 'காது, விழி' ன்னு இருந்த உடனே காதுக்கும், கண்ணுக்கும் ஏதோ சம்பந்தம்ன்னு நினைச்சுண்டுடுவா. இந்த இடத்துல 'காதும்'ன்னா 'பிழை செய்தாலும்'ன்னு அர்த்தம். ஒரு காகம் தன்னிடத்தில் பிழை செய்த போதும் அதன் ஒரு கண்ணை மட்டும் எடுத்து, அதை உயிரோட விட்டார்ன்னு ராமரோட கதை. சீதாதேவி ஹனுமார் கிட்ட அடையாளமா சொல்றா இல்லையா, அந்த 'காக வ்ருத்தாந்தம்'. 'அருள் மாயன்' அந்த ராமரோட,'அரிதிரு மருகோனே'ன்னு, முருகனை விஷ்ணுவோட மருகன்னு சொல்றதுக்காக அந்தக் கதையைச் சொல்றார்.

இன்றைக்கு நமக்கு கிட்டத்தட்ட 1300 பாடல்கள் திருப்புகழ்ல கிடைச்சிருக்கு. அதுல பாதிக்கும் மேற்பட்ட பாடல்கள்ல 'உன்னுடைய பாதங்களை கொடு'ன்னுதான் இருக்கும். உன் பாத தர்சனம் வேணும். உன் பாதத்தை நான் புகழ்ந்து பாடணும். உன் பாதத்தை வணங்கணும்ன்னு இன்னிக்கு ஸ்லோகத்துல

ப்ரணம்யாஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா

ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேனேக வாரம் |

நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே

நகார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா ||

'அப்ப நான் சொல்ல முடியாது . இப்பவே சொல்லி வெச்சுடறேன். முருகா! என்னை கை விட்டுடாதே'. 'ததானீம் க்ருபாப்தே', நான் பண்ணின பக்திக்கு பலனா நீ கருணை பண்ணனும்ன்னு கேட்கல. நீ 'க்ருபாப்தி' – நீ கருணைக்

கடல். எனக்குத் தகுதி இல்லேன்னாலும் நீ க்ருபை பண்ணுவ. அந்த க்ருபையை என் மேல காண்பி. அது உனக்கு இயல்புன்னு சொல்றார்.

நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே

ந கார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா

ன்னு சொல்றார். முருகனுடைய பாதங்களைப் பத்தி அருணகிரி நாதர் பாடின இன்னொரு ஸ்வாமிமலைத் திருப்புகழ் இருக்கு.

நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து …… தடுமாறி

ஞானமுங் கெடஅடைய வழுவியா ழத்த ழுந்தி …… மெலியாதே

மாசகந் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து …… சுகமேவி

மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று …… பணிவேனோ

நான் உன்னுடைய பாதங்களை நின்று நிதானமாக வழிபட வேண்டும். உலகமே உன்னை புகழ்கிறது. 'மாஜகம் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து சுகமேவி' – உன்னுடைய புகழில் சிலதை நானும் பாடி சந்தோஷப்பட்டு, 'மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று பணிவேனோ' – பாதபூஜை பண்றது பொறுமையாக பண்ணனும் னு சொல்றார்.

வாசகம் புகலவொரு பரமர்தா மெச்சு கின்ற …… குருநாதா

வாசவன் தருதிருவை யொருதெய்வா னைக்கி ரங்கு …… மணவாளா

கீசகஞ் சுரர்தருவு மகிழுமா வத்தி சந்து …… புடைசூழுங்

கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்த மர்ந்த …… பெருமாளே

இந்த பிரார்த்தனையோட இன்னிக்கு பூர்த்தி பண்ணிப்போம். நாளைக்கு ஸ்லோகத்துல 'மனக்கவலைகள் என்னை வாட்டுகிறது. அதுலேர்ந்து என்னை நீ விடுவிக்கணும் னு வேண்டிக்கறார். அதை நாளைக்கு பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –இருபத்தி மூன்றாவது ஸ்லோகம் –முருக பக்தியே மனக்கவலைக்கு மருந்து

இன்னிக்கு ஸுப்ரமண்ய புஜங்கதுல இருபத்து மூணாவது ஸ்லோகம்.

सहस्राण्डभोक्ता त्वया शूरनामा

हतस्तारकः सिंहवक्त्रश्च दैत्यः ।

ममान्तर्हृदिस्थं मनःक्लेशमेकं

न हंसि प्रभो किं करोमि क्व यामि ॥ २३ ॥

ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா ஸூரநாமா

ஹதஸ்தாரக ஸிம்ஹவக்த்ரச்ச தைத்ய: |

மமாந்தர் ஹ்ருதிஸ்தம் மன க்லேசமேகம்

ந ஹம்ஸி ப்ரபோ கிம் கரோமி க்வயாமி ||

ன்னு சொல்றார். இதுல 'மமாந்தர் ஹ்ருதிஸ்தம்' : என் ஹ்ருதயத்துக்கு உள்ளே இருக்கும் 'மனக்லேசம்': மனக்கவலை என்ற அசுரனை 'ந ஹம்ஸி ப்ரபோ': நீ கொல்ல மாட்டேங்கறியே ப்ரபோ 'கிம் கரோமி' நான் என்ன பண்ணுவேன், 'க்வயாமி' யார் கிட்ட போய் கேட்பேன்-னு சொல்றார். அந்த 'கிம் கரோமி க்வயாமி' ங்கறது, எனக்கு உன்னை விட்டா யார் இருக்கா? நான் யார் கிட்ட போய் சொல்ல முடியும்? என்கிற ஒரு tone அந்த வார்த்தைகள்லேயே வர்றது. அந்த மெட்டுலயே வர்றது. ஸ்லோகத்தோட முதல் பாதில 'ஸஹஸ்ராண்ட போக்தா' இந்த உலகத்தை ஆயிரம் அண்டங்களாக செய்து ஏக சக்ராதிபதியா ஆண்டுண்டு இருக்கான் ஸூரபத்மன். அந்த ஸூரபத்மன் என்ற பெயர் கொண்ட அவனையும், தாரகனையும், ஸிம்ஹவக்த்ரனையும் நீ கொன்றாய். அந்த தைத்யர்களை எல்லாம் நீ வதம் பண்ணே. ஆனா என் மனசுக்குள்ள இருக்கற இந்த கவலைங்கற ஒரு அசுரனை மட்டும் நீ கொல்ல மாட்டேங்கறியேன்னு கேட்கறார்.

கந்த புராணத்துல வரக்கூடிய கதை இது. மூணு அசுரர்கள் இருந்தா. அவாளுக்கு பல வித மாயைகள் எல்லாம் தெரிஞ்சு இருந்துது. வெவ்வேறு உரு எடுக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். முருகர் அவாளை வதம் பண்ணினார். சூரசம்ஹாரம் ன்னு திருச்செந்தூர்ல விமர்சையா பண்ணுவா. அந்த சூரனுடைய உடம்புல, சிங்கம் குதிரைன்னு ஒவ்வொரு தலையா வச்சு கொண்டு வருவா. ஸுப்ரமண்ய ஸ்வாமியும் வருவார். அந்த அசுரனும் வருவான். இவரோட வேல் எடுத்து குத்தின உடனே அந்த தலை கீழே விழுந்துடும். அப்புறம் அவன் தலை இல்லாம பின்னாடி ஓடுவான். இந்த உத்சவம் கடற்கரையில ரொம்ப உத்ஸாகமா நடக்கும். கடைசியில அவன் மாமரமா வருவான். வேலை விட்ட உடனே அவனை இரண்டு பாகமா பிளந்து சேவலும், மயிலுமாக ஆக்கி முருக பெருமான் அருள் பண்ணுவார். சூரஸம்ஹரம்னு புராண கதையை உத்சவமாக பண்ணுவா. அசுரர்களை நீ வதம் செய்தாய் என்கிறதுக்கும் என் மனக்கவலையை போக்கு என்கிறதுக்கும், என்ன சம்பந்தம்னு சாதாரணமா

நம்மால அர்த்தம் புரிஞ்சுக்க முடியாது. ரொம்ப அழகா தேதியூர் சாஸ்திரிகள் அதை புரிய வைக்கறார். கீதையில

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मन: | काम: क्रोध: तथा लोभ: तस्मात् एतत् त्रयं त्यजेत् ||

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனம் ஆத்மன: |

காம: க்ரோதஸ் ததா லோபஸ் தஸ்மாத் ஏதத் த்ரயம் த்யஜேத் ||

ன்னு பகவான் சொல்றார். இந்த கீதா வாக்கியத்துல, தெய்வ சம்பத்துல பிறந்தவா மோக்ஷத்தை அடையறதுக்கு மூன்று எதிரிகள் இருக்கா. 'த்ரிவிதம் நரகஸ்ய த்வாரம்' நரகத்துக்கு போக மூன்று கதவுகள் இருக்கு. 'நாசனம் ஆத்மன:' அது ஆத்மாவை நாசமடையச் செய்யும். 'காமஹ க்ரோதஹ ததா லோபஹ': அதுக்கு காமம், க்ரோதம், லோபம்னு பேரு. இந்த மூன்றையும் ஒரு புத்திமானானவன் கைவிட வேண்டும். அவன் அதிலிருந்து தன்னை திருப்பிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் க்ஷேமம் அடைய முடியும், ன்னு இந்த ஸ்லோகம்.

தேதியூர் சாஸ்திரிகள் சொல்றார். நமக்குள்ள காமம், க்ரோதம், லோபம்-னு மூணு சத்ருக்கள் உள்ள இருக்கு. அது தான் இந்த தாரகாசுரன், ஸூரபத்மன், ஸிம்ஹவக்ரன்-னு புராணங்கள்ல சொல்லியிருக்கா. ஞான பண்டிதனான ஸுப்ரமண்ய ஸ்வாமி அவாளை வதம் பண்ணினா தான் நமக்கு மோக்ஷம். அந்த சாமர்த்தியம் முருகப் பெருமான் ஒருத்தருக்குத் தான் இருக்கு. அதனால 'முருகா நீ என்னை காப்பாத்து' நாம வேண்டிக்கணும், அப்படீங்கறதை தான் ஆச்சார்யாள் சொல்லிக் கொடுக்கறார். அந்த மூணும் போனா தான் மனக்கவலைகள் ஒழியும். உடம்புல வர்ற வ்யாதிக்காவது ஏதாவது மருந்து சாப்பிட்டு குணப்படுத்திக்கலாம். இந்த மனோ வியாதிக்கு முருகனோட அருள் ஒண்ணு தான் வழி. அதுக்கு வேறே மருந்தே இல்லை. நல்ல பலவானைக் கூட இந்த கவலைங்கறது உருக்கிடும். இதுக்கு பல பேர் வைக்கறா. இந்த வ்யாதியை சரி பண்ணிக்கறதுக்கு திருச்செந்தூர்ல இருக்கும் முருகன் சன்னதி தான் மருந்து. வேற உபாயமே கிடையாது. பகவனோட கடாக்ஷம்தான் அதுக்கு ஔஷதம்ன்னு சொல்றார்.

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸனம் ஆத்மனா: |

காம: க்ரோதஸ் ததா லோபஸ் தஸ்மாத் ஏதத் த்ரயம் த்யஜேத் ||

அப்படிங்கிற ஸ்லோகத்தை ஸ்வாமிகள் எனக்குப் படிச்சு காண்பிச்சு, 'அமெரிக்கா போரும்னு நினைச்சு அதை விட்டுட்டு வா' ன்னு ஒரு வார்த்தை சொன்னார். அவருடைய ஆத்ம சக்தியினால, எதோ நான் அதைக் கேட்டேன். அங்கெல்லாம் இருக்கும் போது, எல்லாம் சௌக்கியமா இருக்கிற மாதிரி இருக்கும். ஏதோ மனசுக்குள்ள கவலையும் இருந்துண்டே இருக்கும். அந்த வியாதிக்கு மருந்து மஹான்களோட சங்கம். அதன் மூலமா ஏற்படக்கூடிய 'பக்தி' அப்படிங்கறதை ஸ்வாமிகள் சொன்னார். அவருடைய கருணையினால எனக்கு அன்னிக்கு ஏதோ கேட்கணும்ன்னு தோணித்து.

இந்த ஸ்லோகத்தை பார்க்கும் போது இன்னொன்னு தோணறது. திருப்புகழ்ல நிறைய பாடல்கள்ல முதல் பகுதியில மரண பயத்தைப் பத்தியோ, பெண்களோட மயல்ல நான் விழுந்துட்டேன் காப்பாத்துன்னோ நாலு வரிகள் இருக்கும். அடுத்த நாலு வரிகள்ல முருகப் பெருமானுடைய பெருமை, ஸ்கந்தப் புராண தகவல்கள் எல்லாம் இருக்கும். அதைக் கொண்டு இந்தத் திருப்புகழே படிக்கக் கூடாது. ஏன்னா அதுல பெண்களைப் பத்தின வர்ணனை இருக்குன்னு ரொம்ப வருஷம் வச்சிருந்து இருக்கா. சேஷாத்ரி ஸ்வாமிகள், வள்ளிமலை ஸ்வாமிகளுக்குச் சொல்லி அவர் அதை மந்திரமா உரு ஏத்தின பிறகுதான், அவர் திருப்புகழை அபார கருணை பண்ணக் கூடிய தெய்வ வாக்குன்னு எல்லாருக்கும் உணர்த்தினார். நம்ம காலத்தில் பிறந்த அருணகிரிநாதர்ன்னு வள்ளிமலை ஸ்வாமிகளை கொண்டாடுவா. அப்படி அவர் அதை எல்லாரையும் பாட வெச்சதுனாலதான் நமக்கு தெரிஞ்சுது. ஒரு திருப்புகழ் பாட்டு சொல்றேன்.

"நிறைமதி முகமெனும் ஒளியாலே

நெறிவிழி கணையெனு நிகராலே

உறவுகொள் மடவர்கள் உறவாமோ

உனதிரு வடியினி அருள்வாயே

மறைபயில் அரிதிரு மருகோனே

மருவலர் அசுரர்கள் குலகாலா

குறமகள்தனை மணம் அருள்வோனே

குருமலை மருவிய பெருமாளே! "

ன்னு ஒரு பாட்டு. ‘உறவுகொள் மடவர்கள் உறவாமோ’ நாம இந்த உலகத்தில ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தரோட பழகறோம். இதெல்லாம் ஒரு உறவா. அதெல்லாம் எவ்ளோ Superficialனு சொல்றார். மஹான்கள் சொல்றது எல்லாம் Whole Truth. அதுவும் இந்த அழகைக் காண்பிச்சு மயக்கி, பணத்தை பறிக்கக் கூடிய பொது மகளிரோட உறவெல்லாம் ஒரு உறவான்னு சொல்றார் . அந்த மாதிரி உண்மையை மஹான்கள் உரக்கச் சொல்றா. அதைக் கேட்ட போது எனக்கு இந்த ஸ்லோகத்தில வர மாதிரி, காமம்,க்ரோதம், லோபம் எல்லாம் நரகத்துக்கு வாயில். இதிலிருந்து நாம திரும்பணும். முருகனிடத்தில மனதை வைக்கணும் அப்படிங்கறதைத் தான் அருணகிரி நாதர் சொல்றார். அந்த first part ல அதை விவரித்து, ‘இதுல நான் மாட்டிக்கக் கூடாது முருகா. எனக்கு ‘உனதிரு வடியினி அருள்வாயே’ன்னு சொல்றார். அதனால தான் மஹான்கள் திருப்புகழைக் கொண்டாடி, அதை உலகம் முழுக்க கோடிக் கணக்கான பேர் இன்னிக்கும் ஜபிச்சு, முருகனுடைய அருளைப் பெற்று மனக் கவலைகள் ஒழிந்து நிம்மதியா இருக்கான்னு தோணித்து.

நூறு வருஷங்களுக்கு முன்னாடி பண்டிதர்கள் எல்லாம் திருப்புகழ் படிக்க வேண்டாம், அதுல ஒண்ணும் சாரம் இல்லேன்னு வச்சிருந்ததை, பகவான் ஒரு வள்ளிமலை ஸ்வாமிகள் மூலமா வெளிப்படுத்தி, இன்றைக்கு உலகம் முழுக்க, தேவாரத்துக்கும் திருவாசகத்துக்கும் சமமா இந்த திருப்புகழை எல்லாரும் படிக்கறான்னா இது தான் காரணமா இருக்கும். திருப்புகழ் மனக்கவலைக்கு மருந்துன்னு மஹான்கள் தெரிஞ்சுண்டு, பகவானே அதை வெளிப் படுத்தியிருக்கான்னு தோணித்து.

सहस्राण्डभोक्ता त्वया शूरनामा

हतस्तारकः सिंहवक्त्रश्च दैत्यः |

ममान्तर्हृदिस्थं मनःक्लेशमेकं

न हंसि प्रभो किं करोमि क्व यामि ||

அடுத்த ஸ்லோகமும் இந்த மனோ வியாதியைப் பத்தி தான். உன்னோட பக்திக்கு இடைஞ்சலா இருக்கக் கூடிய என்னோட மனோ வியாதியை போக்குன்னு கேட்கறார். நாளைக்கு அதை பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி நான்காவது ஸ்லோகம் – மனக்கவலை ஏதுமின்றி உனக்கடிமையே புரிந்து</u>

இன்னைக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல இருபத்தினாலாவது ஸ்லோகம்,

अहं सर्वदा दुःखभारावसन्नो भवान्दीनबन्धुस्त्वदन्यं न याचे ।

भवद्भक्तिरोधं सदा क्लृप्तबाधं ममाधिं द्रुतं नाशयोमासुत त्वम् ॥ २४ ॥

அஹம் ஸர்வதா துக்கபாரா வஸந்நோ

பவான் தீனபந்து ஸ்த்வதன்யம் நயாசே |

பவத்பக்தி ரோதம் ஸதா க்லுப்த பாதம்

மமாதிம் த்ருதம் நாசயோமா ஸுதத்வம் ||

ன்னு ஒரு ஸ்லோகம். ஆதி சங்கர பகவத்பாதாள் மஹான், ஞானி. அவருக்கு ஒரு துக்கமும் கிடையாது. இருந்தாலும், நாம இருக்கற நிலைமையை உணர்ந்து, எப்படி பகவான் கிட்ட என்ன வேண்டணும் ன்னு சொல்லி கொடுக்கறதுக்காக இப்படி ஒரு ஸ்லோகம் சொல்றார். ‘அஹம்’ – நான், ‘ஸர்வதா’ – எப்பொழுதும், ‘துக்கபாராவஸந்ந:’ – துக்க பாரத்தை சுமந்துண்டு, அந்த பளு தாங்க முடியாம, பரிதவிச்சிண்டு இருக்கேன், அவஸ்த்தை பட்டுண்டு இருக்கேன். ‘பவான்’ – தாங்கள் ‘தீனபந்து’ – தீனன்னா ஏழை, அனாதை, யாரும் இல்லாதவன் ன்னு அர்த்தம். அந்த மாதிரி இருக்கறவாளுக்கு பந்து நீ தான். ‘பவான் தீனபந்து: த்வதன்யம் நயாசே’ – உன்னைத் தவிர இன்னொருதர் கிட்ட போய் நான் கேட்க மாட்டேன். இது ஒரு முக்கியமான message, பகவான் கிட்ட தான் நாம கஷ்டத்தை சொல்லி அழணும், ‘த்வம்’ – நீ, எனக்கு எப்பவும் இந்த ஹிம்ஸயை கொடுக்கக்கூடிய, ‘க்லுப்த பாதம்’ எனக்கு கஷ்டத்தை கொடுக்க கூடிய, ‘பவத்பக்தி ரோதம்’ – உன்னுடைய பக்தியை பண்ண முடியாம என்ன ஸ்ரமபடுத்தும், ‘ஆதி’ – வ்யாதின்னா உடம்புக்கு வர்ற வ்யாதி, ஆதின்னா மனசுக்கு வரக்கூடிய இந்த கவலைகள், அந்த துக்க பாரம்-ன்னு சொல்றாரே, அதெல்லாம் சேர்த்து ஒரே வார்த்தைல ஆதி-ன்னு சொல்லுவா. ‘ஆதிவ்யாதி ஹர ஆஞ்சநேய ஸ்வாமி’ ன்னு இங்க நங்கநல்லூர்-ல இருக்கார். அந்த மாதிரி ஆதின்னா மனோவ்யாதி அதை ‘த்ருதம்’ – சீக்ரமாக ‘நாஷய’ ன்னு சொல்லும்போது, இந்த இடத்துல ‘ஹே உமாஸுதா’ ன்னு சொல்றார், உமையின் மைந்தனே, பார்வதி போல அந்த கருணை உள்ளம், ஸுப்ரமண்ய ஸ்வாமிக்கும் இருக்கறதுனால, நீ எந்தன் துக்க பாரத்தை போக்கு, ன்னு சொல்றார்.

இந்த இடத்துல தேதியூர் சாஸ்திரிகள் ஒரு ஸ்லோகம் சொல்றார்.

चिता चिन्ता तयोर्मध्ये चिन्ता एव गरीयसि |

चिता दहति निर्जीवं चिन्ता जीवन्तमप्यहो ||

சிதா சிந்தா தயோர்மத்யே சிந்தா ஏவ கரீயஸி |

சிதா தஹதி நிர்ஜீவம் சிந்தா ஜீவந்தம் அப்யஹோ ||

‘சிதாவுக்கும் சிந்தாவுக்கும் தராசுல வெச்சு பார்த்தா, சிந்தா தான் ரொம்ப வந்து பலசாலியா தெரியறது. சிதை – கடைசில, இடுகாட்ல எரிப்பாளே அதுக்கு சிதைன்னு பேரு. அந்த சிதை உயிர் போன பின்ன தான் எரிக்கறது, இந்த சிந்தைங்கற கவலை, உயிரோடு இருக்கும் போதே மனிதனை எரிக்கறதே!’ ன்னு சொல்றார். அப்படி அந்த சிந்தைக்கு இடம் கொடுக்க கூடாது.

நாம துக்கப் படறோம்ன்னு நமக்கு தெரியறது, அந்த துக்கத்துக்கு காரணம் என்ன? நாம ரொம்ப பந்தத்துல மாட்டிண்டு, அதனால தான் சந்துஷ்டி இல்லாம இருக்கோம், அப்படீங்கறத எப்பயோ ஒரு சமயத்துல உணர்றோம், உணர்ந்தா கூட இதெல்லாம் எப்படி விட முடியும், இனிமே எப்படி விட முடியும், அப்படியெல்லாம் நினைச்சிண்டு, ஆசார்யாள் இங்கே சொல்ற இந்த பிராத்தனையே நாம பண்ண மாட்டேங்கறோம். இந்த ஸ்லோகத்துல ‘நான் உன்னையே வேண்டறேன், என்னை இந்த துக்கத்துலேர்ந்து மீட்டு விடு’ ன்னு பகவான் கிட்ட போய் ப்ரார்த்தனை பண்றது கூட பண்ண மாட்டேங்கறோம், ஏதோ இந்த துக்கத்துக்கு நடுவில சொட்டு சுகம் இருந்தா, அதே போறும்-னு த்ருப்தி ஆயிடறோம். அப்படி ஆகாமல், இந்த கொஞ்சம் கொஞ்சம் பண்ற பகவத் பஜனத்துல கிடைக்கக்கூடிய அந்த ருசியை புரிஞ்சிண்டு, இது அம்ருதம், இந்த அம்ருதமான வாழ்வு தான் வேணும் ன்னு வேண்டணும்.

நான் இருக்கற நிலைமை எனக்கு துக்கத்தை கொடுக்கறது, இதுலேர்ந்து நான் மீளனும், ன்னு நினைச்சா தான் மீள முடியும். வ்யாதி என்னன்னு diagnose பண்ணின பிறகு தான் மருந்து கொடுக்க முடியும். அந்த மாதிரி நம்முடைய கஷ்டத்துக்கு காரணமான பந்தங்கள்-எல்லாம் விடணும் ன்னு நாம வேண்டணும். ‘இதெல்லாம் ok. இது இப்படித்தான் இருக்கும்’ ன்னு நினைக்கக் கூடாது. ஏதோ ஒரு வேலையில பளு ஜாஸ்த்தியா இருக்கு, ஒரு இடத்துல இருக்கறது கஷ்டமா இருக்கு, இல்லை ஒரு relationship சரியா இல்லன்னா, நாம பகவான் கிட்ட வேண்டிக்கணும். ‘இந்த மாதிரி பந்தத்துல என்னை வைக்காதே, நான் மோக்ஷம் அடைஞ்சு சந்தோஷமா இருக்கணும், உன்னுடைய பக்தியை பண்ணனும்’ ன்னு நாம பகவான் கிட்ட வேண்டிக்கணும்.

ஒரு தடவை ராமகிருஷ்ண பரமாஹம்ஸர் விவேகானந்தர் கிட்ட " நீ ஒரு தேனீ-னு நினைச்சுக்கோ, ஒரு பாத்திரத்துல, உள்ள முழுக்க பகவான் என்ற தேன் இருக்கு, நீ அதை எப்படி சாப்பிடுவ?" ன்னு கேட்கறார். விவேகானந்தர் சொல்றார் "நான் விளிம்புல உட்கார்ந்துண்டு உறிஞ்சி குடிப்பேன்"-எங்கறார், ராமகிருஷ்ணர் சொல்றார் "இந்த தேன் அம்ருதம்னு சொன்னேனே. அதுக்குள்ள விழுந்துரு, அதுக்குள்ள முழுக்க விழுந்துடு. அது உன்னை கொல்லாது, அது அம்ருதத்தை கொடுக்கும் உனக்கு, சாகாத நிலைமையை கொடுக்கும், ஏன்னா அது பகவான், அதனால பயப்படாதே" ன்னு சொல்றார். அப்படி அந்த குருங்கறவர் காண்பிக்கறார். இந்த உலக விஷயத்துல, எதையாவது ஒண்ணை விட்டோம்னா அவஸ்தை படுவோமோ, ன்னு பயப்படறோம். அப்படி பயப்பட வேண்டாம். உன்னுடைய எல்லா நலன்களையும் பகவான் பார்த்துப்பார் ன்னு அருணகிரிநாதர் சொல்றார். 'மயிலையும் அவன் திருக்கை அயிலையும் அவன் கடைக்கண் இயலையு நினைந்திருக்க வாருமே' ன்னு பாடறார். உனக்கு பணம் வேணுமா. கிடைக்கும், இந்திர பதவி வேணுமா. கிடைக்கும், நீ நல்ல தமிழ் பாடல்கள் பாடணும்னு ஆசைப்படறியா, உனக்கு கிடைக்கும், எமனை விரட்டி விடணும்னு ஆசை படறியா, உன்னால முடியும் அப்படி சொல்லிட்டு, 'இவையொழிய வும்ப லிப்ப தகலவிடும் உங்கள் வித்தையினையினி விடும்பெருத்த பாருளீர்' – நீங்க ஏதோ ஒரு வித்தை வெச்சிண்டு இருக்கேள். இதனால, நான் நாலு காசு சம்பாதிச்சு சந்தோஷமா இருக்கபோறேன் ன்னு நினைக்கறேளே, அதை விட்டுடுங்கோ 'மயிலையும் அவன்தி ருக்கை அயிலையும் அவன் கடைக்கண் இயலையு நினைந்திருக்க வாருமே' பகவானோட பஜனத்தை பண்ணுங்கோ, ன்னு சொல்றார். அந்த மாதிரி, ஆச்சார்யாள் சொல்லி கொடுக்கறார் நமக்கு.

'அஹம் ஸர்வதா துக்கபாரா வஸந்நோ பவான் தீனபந்து: த்வதன்யம் நயாசே' உன்னை தவிர வேற யார் கிட்டயும் கேட்க மாட்டேன், ஹே உமாஸுதா 'பவத்பக்தி ரோதம் ஸதா க்லுப்த பாதம் மமாதிம் த்ருதம் நாசய' – உன்னுடை பக்தி பண்றதுக்கு இடைஞ்சலாய் இருக்கக்கூடிய, என்னுடைய மனக் கவலைகளை போக்கு, இடையறாது உன்னுடைய பக்தியை பண்றதுக்கு

எனக்கு நல்ல புத்தியை கொடுன்னு வேண்டிக்கறார். அருணகிரி இந்த மாதிரி நிறைய வேண்டிண்டு இருக்கார். ஒண்ணு, ரெண்டு நான் சொல்றேன்.

எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ

சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்

கந்தா, கதிர் வேலவனே, உமையாள்

மைந்தா, குமரா, மறை நாயகனே

ன்னு பாடறார், அதுலயும் 'சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனை ஆள்', 'நீதான் எனக்கு அம்மா, நீதான் எனக்கு அப்பா, என் கவலைகளை போக்கு' ன்னு கேட்கறார்.

ஒரு பழனி பாட்டுல…

"வசன மிகவேற்றி மறவாதே மனது துயர் ஆற்றில் உழலாதே
இசை பயில் சடாட்சர மதாலே இகபர சௌபாக்யம் அருள்வாயே
பசுபதி சிவாக்யம் உணர்வோனே பழநி மலை வீற்று அருளும் வேலா
அசுரர் கிளை வாட்டி மிகவாழ அமரர் சிறை மீட்ட பெருமாளே"

"ஏதோ பேச்சுகள் எல்லாம் பேசிப் பேசி உன்னை மறந்து, அதனால மனது துயர் ஆற்றில் உழன்றுண்டு இருக்கு. அதை விட்டுட்டு, 'இசை பயில் சடாக்ஷரம் அதாலே' உன்னுடைய சடாக்ஷரத்த இசையோடு கூடி இடையறாம ஜபிச்சு, அதனால 'இகபர சௌபாக்யம் அருள்வாயே'.. எனக்கு இகபர சௌபாக்யத்தைக் கொடு… பழநிமலை வீற்று அருளும் வேலா.ன்னு பாடுறார்.

இந்த மஹான்களோட ஸூக்தி விசேஷம் என்னன்னா அத படிக்கும் போதே நமக்கு அந்த தமிழும், அந்த சமஸ்கிருதமும், அதுல வரக் கூடிய அழகான கதைகளும், அந்த பஜனமே தித்திப்பா இருக்கு. அந்த பஜனத்தால கிடைக்க கூடிய சந்துஸ்டி, அத வந்து நம்ம மனசுக்கு பழக்கி கொடுக்கணும். அது சாதாரணமா எடுத்த உடனே வராது. உலக விஷயங்கள்ல இருக்கிற சந்தோஷம், அதுல நமக்கு இருக்க கூடிய taste அந்த தெய்வ வழிபாட்டில முதலில் அவ்வளவு தூரம் வராது. மொதல்ல கொஞ்சம் தான் வரும். அப்புறம் அஞ்சு நிமிஷம், பத்து நிமிஷம்னு ஜாஸ்தி பண்ணிக்கணும். ராம நாமத்தையே

ஏழு மணி நேரம் சொல்லிட்டு இருக்க நம்மால முடியலை. அதுக்காக ஸ்தோத்ரங்கள், பாராயணங்கள் ன்னு பண்ணி கொடுத்திருக்கா. அது பண்ணிண்டே வந்தா ருசி வந்துரும். அப்புறம் பக்தி வரும்.

இதே மாதிரி எனக்கு கவலையினால என் மனமும், உடலும் தளர்ந்து மெலிந்து போகிறதுக்கு முன்னாடி உன்னுடைய தரிசனம் கிடைக்கணும் ன்னு ஒரு பாட்டு. ஆனா அந்த பாட்டே எவ்வளவு அழகா இருக்கு பாருங்கோ.

பகர்தற்கரிதான செந்தமிழ் இசையிற் சில பாடலன்பொடு

பயிலப் பல காவியங்களை ......யுணராதே

பவளத்தினை வீழியின் கனியதனைப் பொருவாய் மடந்தையர்

பசலைத் தனமே பெறும்படி ...... விரகாலே

சகரக்கடல் சூழும் அம்புவி மிசையிப்படியே திரிந்துழல்

சருகொத்துளமே அயர்ந்துடல் ...... மெலியாமுன்

தகதித் திமிதா கிணங்கிண எனவுற்றெழு தோகையம்பரி

தனில் அற்புதமாக வந்தருள் ...... புரிவாயே

” நுகர்வித்தகமாகும் என்று உமை மொழியிற் பொழி பாலை உண்டிடு நுவல் மெய்ப்புள பாலனென்றிடும் இளையோனே” இந்த வரி திருஞானசம்பந்தரைப் பற்றினது.

அருணகிரி நாதருக்கு திருஞான சம்பந்தர் தான் மானசீக குரு. திருஞான சம்பந்தரை முருகராவே 100 பாடல்கள்ல பாடி இருக்கார். ‘வேல் எடுத்து சூர பத்மாவை கொன்ற திருஞான சம்பந்தரே’ன்னு பாடுவார். அப்படி அவருக்கு முருகனும் தன் குருவும் ஒன்று. அப்படி பாடி இருக்கார். இங்க அம்பாள் குடுத்த ஞானப் பாலை உண்ட திருஞான சம்பந்த முர்த்தியே ன்னு பாடுறார்.

‘நுதிவைத்த கரா மலைந்திடு களிறுக்கு அருளே புரிந்திட நொடியிற் பரிவாக வந்தவன் மருகோனே…’ இதுல ‘கரா’ன்னா முதலை . யானைக்காக முதலையை கொல்லறதுக்கு ஓடி வந்தவருடைய மருகோனேன்னு அர்த்தம்.

‘அகரப்பொருள் ஆதி யொன்றிடு முதல் அட்சரமானதின் பொருள் அரனுக்கு இனிதா மொழிந்திடு குருநாதா’ வேதத்தினுடைய முதல் அட்சரமான

பிரணவத்தின் பொருளை அரனுக்கு இனிதாக மொழிவதற்காக வந்த குருநாதா' அப்படிங்கிறார்.

அமரர்க்கிறையே வணங்கிய பழநித் திருவாவினன்குடி

அதனிற் குடியாயிருந்தருள் ...... பெருமாளே.

சகரக்கடல் சூழும் அம்புவி மிசையிப்படியே திரிந்துழல்

சருகொத்துளமே அயர்ந்துடல் ...... மெலியாமுன்

தகதித் திமிதா கிணங்கிண எனவுற்றெழு தோகையம்பரி

தனில் அற்புதமாக வந்தருள் ...... புரிவாயே

இந்தப் பாட்டைப் படிக்கிறதே, அந்த தமிழும், அந்த சந்தமும் அதுவே சந்தோஷம். அப்புறம் அதனால ஏற்பட கூடிய அருள். அதனால ஏற்பட கூடிய பக்தி. அது இன்னும் சந்தோஷத்தை கொடுக்கும்.

அப்படி 'உன்னுடைய பக்திக்கு இடைஞ்சலாக இருக்க கூடிய எல்லா மன கவலைகளையும் போக்கு முருகா' ன்னு அழகான ஒரு ஸ்லோகம்.

அஹம் ஸர்வதா துக்கபாரா வஸந்நோ

பவான் தீனபந்து ஸ்த்வதன்யம் நயாசே |

பவத்பக்தி ரோதம் ஸதா க்லுப்த பாதம்

மமாதிம் த்ருதம் நாசயோமா ஸுதத்வம் ||

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஐந்தாவது ஸ்லோகம் –நோய்கள் எனை நலியாதபடி உன தாள்கள் அருள்வாயே

ஸுப்ரமண்ய புஜங்கத்துல 23வது ஸ்லோகத்துலயும், 24வது ஸ்லோகத்துலயும், ‘என்னுடைய மனக் கவலைகள், மனோ வியாதிகளை எல்லாம் போக்கணும் முருகா’ன்னு வேண்டிண்டார். இன்னிக்கு 25வது ஸ்லோகம்.

अपस्मारकुष्टक्षयार्शः प्रमेह ज्वरोन्मादगुल्मादिरोगा महान्तः ।

पिशाचाश्च सर्वे भवत्पत्रभूतिं विलोक्य क्षणात्तारकारे द्रवन्ते ॥२५॥

அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச ப்ரமேஹ

ஜ்வரோன்மாத குல்மாதிரோஹான் மஹாந்த: |

பிஷாசாஸ்ச ஸர்வே பவத் பத்ர பூதிம்

விலோக்ய க்ஷணாத் தார காரே த்ரவந்தே ||

ன்னு ஒரு ஸ்லோகம். இந்த ஸ்லோகத்துல அபஸ்மாரம், குஷ்டம், க்ஷயார்சம், ப்ரமேஹம், ஜ்வரம்,குல்மாதி ரோகா: .. இத்தனை ரோஹங்களைச் சொல்றார்.

வலிப்பு, குஷ்டம், க்ஷயம், சுவாச ரோகம், மேஹ ரோகம், ஜ்வரம், சித்த பிராந்தி, வயிற்று வலி இப்படிப் பல விதமான வியாதிகள் உடம்பைப் படுத்தறது. மனசுல இருக்கிற கவலைகளாவது அது பாட்டுக்கு இருக்கும். நாம காரியங்கள் பண்ணிண்டு இருக்கலாம். உடம்பைப் படுத்தி கீழ தள்ளிடுத்துன்னா, வாழ்க்கையே அர்த்தம் இல்லாம இருக்கும். அதற்கப்புறம் உடம்பையும் வெச்சுண்டு, மனசையும் உற்சாகப் படுத்திண்டு காரியங்கள் பண்றதுக்குள்ள ரொம்ப திணற வேண்டியிருக்கும். அப்படி உடம்புக்கு வர்ற வியாதிகளை எல்லாம் போக்கிக்கிறதுக்கு ஒரு உபாயம் இருக்கு. அது என்னன்னா, திருச்செந்தூர்ல பன்னீர் இலைல வெச்சு ஒரு விபூதி கொடுக்கறா. அந்த விபூதியை நெத்தியில இட்டுண்டு, உடம்பெல்லாம் பூசிண்டா, அப்படி சொல்றதே அதிகப்படிங்கறார். 'பவத் பத்ர பூதிம் விலோக்ய' இந்த பத்ர பூதியைக் கண்ணால பார்த்த மாத்திரத்திலேயே பூத ப்ரேத பிசாசங்கள், ப்ரம்ம ராக்ஷசர்கள், இன்னும் எல்லா வியாதிகளும், ஒரு க்ஷணத்தில் ஓடி மறைந்து விடுகின்றன. 'க்ஷணாத் த்ரவந்தே ' ன்னு சொல்றார். அந்த பன்னீர் இலைல வச்சு கொடுக்கற விபூதிக்கு அவ்வளவு மகிமை. முதல்ல சொல்லும் போது 'தாரகாரே' – 'தாரகனுக்கு எதிரியான ஸுப்ரமண்ய ஸ்வாமியே! உன்னுடைய கோவில்ல பன்னீர் இலைல வெச்சு கொடுக்கற விபூதியை இட்டுண்டா, எல்லா விதமான வியாதிகளும்போய்டும்' ன்னு சொல்றார்.

வேதங்கள் எல்லாம் சேர்ந்து தங்களுடைய 'ஸுமனஸ்'னால அழகழகான வாசனைப் புஷ்பங்களை எல்லாம் முருகனுடைய பாதத்துல போடணும்ன்னு ஆசைப் பட்டு ஒரு வ்ருக்ஷ ரூபமா ஸ்வாமி சன்னிதியில வந்து இருக்காம். அதைத்தான் பன்னீர் வ்ருக்ஷம்ன்னு சொல்றா. அந்த பன்னீர் வ்ருக்ஷத்தோட கிளைகள் எல்லாம் வேத சாகைகள். அந்த வ்ருக்ஷத்தோட இலைகள் எல்லாம் வைதீக மந்திரங்கள். அந்த வைதீக மந்திரத்தில ப்ரணவ ஸ்வரூபமாகிய ஸ்வாமி சம்பந்தப்பட்ட விபூதியை வச்சு கொடுக்கறாதனால, அதை நாம இட்டுண்டா எல்லா உபாதைகளும் போய்டறது. ரொம்ப ஆரோக்யத்தோட தீர்க்காயுசா இருப்பா ன்னு சொல்றார்.

தேதியூர் சாஸ்த்ரிகள், புராணத்திலிருந்து எடுத்து இன்னொரு கதையும் சொல்லியிருக்கார். விஷ்வாமித்ர மஹரிஷி ராமச்சந்திர மூர்த்தியைக் கூட்டிண்டுகாட்டுக்குப் போகும் போது தாடகா வதம் பண்ணுன்னு சொல்லி காரயிதாவா இருந்தாராம். அதாவது ஒரு கார்யம் பண்ணுன்னு தூண்டி விடறது.

ஒரு ஸ்தீரி வதம் பண்றதுக்கு தூண்டி விட்டதனால அவருக்கு உடம்புக்கு வந்துடுத்து. அவர் எத்தனையோ முயற்சி பண்ணினார். அஸ்வினி தேவர்களாலக் கூட அவரை குணப் படுத்த முடியல. அப்போ அவரோட கனவுல ராமரே வந்து ‘நீங்க ஸ்ரீஜயந்திபுரம் என்கிற திருச்செந்தூருக்குப் போய், முருகப் பெருமானுடைய விபூதியை வாங்கி இட்டுக்கோங்கோ’ ன்னு சொன்னார். அதே மாதிரி விஷ்வாமித்ர மஹரிஷி வந்து அந்த பன்னீர் இலையில் விபூதியை வாங்கி இட்டுண்ட உடனே அவருக்கு எல்லா வியாதிகளும் போய்டுத்து ன்னு ஒரு புராணக் கதை சொல்லியிருக்கார்.

நமக்கு சென்னைக்குப் பக்கத்தில திருத்தணி இருக்கு. திருத்தணி முருகரையும் பவரோக வைத்யநாத பெருமாள் ன்னு சொல்லுவா. (‘நிலையாத சமுத்திரமான’ எனத் தொடங்கும் திருப்புகழ்). வியாதிகள் போகணும்ன்னு திருத்தணி முருகன் மேல அருணகிரி நாதருடைய ஒரு திருப்புகழ் பாடல் இருக்கு. அதைப் படிச்சா எல்லா வியாதிகளும் நிவர்த்தி ஆகும் ன்னு நம்பிக்கை. அந்தத் திருப்புகழைப் படிக்கிறேன்.

இருமலு ரோக முயலகன் வாத மெரிகுண நாசி ...... விடமே

நீரிழிவு விடாத தலைவலி சோகை யெழுகள மாலை ...... யிவையோடே

பெருவயிறீளை யெரிகுலை சூலை பெருவலி வேறு ...... முளநோய்கள்

பிறவிகள் தோறு மெனை நலியாத படியுன தாள்கள் ...... அருள்வாயே

வருமொரு கோடியசுரர் பதாதி மடிய அநேக ...... இசைபாடி

வருமொரு கால வயிரவராட வடிசுடர் வேலை ...... விடுவோனே

தருநிழல் மீதிலுறை முகிலூர்தி தருதிரு மாதின் ...... மணவாளா

ஜலமிடை பூவினடுவினில் வீறு தணிமலை மேவு ...... பெருமாளே.

‘நோய்கள் பிறவிகள் தோறும் எனை நலியாதபடி உன தாள்கள் அருள்வாயே!

ஜலமிடை பூவினடுவினில் வீறு தணிமலை மேவு பெருமாளே!’ ன்னு பாடல்.

ஸுப்ரமண்ய புஜங்கத்தைப் படிச்சா வியாதிகள் போகும், ன்னு மஹா பெரியவா ரெண்டு மூணு இடத்தில ‘தெய்வத்தின் குரல்’ல சொல்லியிருக்கா. ‘உடம்பு ஸ்வஸ்தம் ஆகிறதுக்கு ஸுப்ரமண்ய புஜங்க பாராயணம்’ ன்னு

சொல்லியிருக்கா. இந்த முப்பத்து மூணு ஸ்லோகத்தையும் படிக்க நேரம் இல்லேன்னா கூட அந்த,

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥१९॥

குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா

பதே சக்தி பாணே மயூரா திரூட |

புளிந்தாத்மஜாகாந்த பக்தார்த்தி ஹாரின்

ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷமாம் த்வம் ||

ன்னு முருகப் பெருமானுடைய நாமங்கள் இருக்கக் கூடிய அந்த 19வது ஸ்லோகத்தை நிறைய ஆவர்த்தி பண்ணிட்டு விபூதியை இட்டுண்டா போதும். ஒரு வாட்டி திருச்செந்தூர் போகும் போது பன்னீர் இலையில கொடுக்கற விபூதியை வாங்கிண்டு வந்து நம்மாத்து விபூதியோட சேர்த்துக்க வேண்டியது, அந்த விபூதியை இந்த ஸ்லோகத்தைச் சொல்லி இட்டுண்டா வியாதிகள் எல்லாம் போய்டும். இந்த பில்லி சூன்யம் மாதிரி எந்தக் கவலையும் இருக்காது.

முருகனுக்கு 'ஆறு'ங்கறது விசேஷமான நம்பர் என்கிறதனால ஆறு தடவை சொல்றேன்.

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥१९॥ (6 தடவை)

ஆறு தடவை ஆகிவிட்டதா தெரியலை. இன்னொரு தடவை சொல்றேன். அதிகஸ்ய அதிகம் பலம்.

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥१९॥

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி ஆறாவது ஸ்லோகம் – தலையே நீ வணங்காய்

ஸுப்ரமண்ய புஜங்கத்துல நேத்திக்கு திருச்செந்தூர்ல பன்னீர் இலையில வெச்சு கொடுக்கற விபூதியோட மஹிமையைப் பத்தி பார்த்தோம். ஆச்சார்யாள் விபூதி இட்டுக்கறதை விசேஷமா சொல்றார் என்கிறதே மனசுல வாங்கிக்க வேண்டிய விஷயம். 'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு' ன்னு தேவாரத்துலேயும் இருக்கு. மாணிக்க வாசகர் ஒரு பாட்டு பாடறார்.

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்

துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்

திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீறு

அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

ன்னு சொல்றார். சிவ பக்தர்கள் விபூதி இட்டுண்டு இருக்கறவா கிட்ட எனக்கு பயம் இல்லாம இருக்கு. பாக்கி யாரைப் பார்த்தாலும் எனக்கு பயமா இருக்கு.

அச்சப்பத்து-ன்னு ஒரு பத்துப் பாடல், பகவானோட நெருக்கம் ஏற்பட்ட பின்ன, உலக விஷயங்களைப் பார்த்தாலே பயமா இருக்குன்னு ஒரு பத்து பாடல்கள். அதுல இந்த மாதிரி ஒண்ணு சொல்றார். அந்த மாதிரி விபூதி இட்டுண்டவா போரும். வெண்ணீறு அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே ன்னு சொல்றார். விபூதிக்கு அவ்வளோ மஹிமை. ஒருத்தன் விபூதி இட்டுண்டே வந்தான்னா பஞ்சமா பாதகங்களும் போகும், கைலாசம் போவான்னு புராணங்களில் எல்லாம் இருக்கு.

இன்னிக்கு இருப்பத்திஆறாவது ஸ்லோகம்

दृशि स्कन्दमूर्तिः श्रुतौ स्कन्दकीर्ति-

र्मुखे मे पवित्रं सदा तच्चरित्रम् ।

करे तस्य कृत्यं वपुस्तस्य भृत्यं

गुहे सन्तु लीना ममाशेषभावाः ॥ २६॥

த்ருசி ஸ்கந்த மூர்த்தி: ச்ருதௌ ஸ்கந்தகீர்த்தி:

முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் |

கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்

குஹே ஸந்து லீனா மமாசேஷ பாவா: ||

ன்னு ஒரு ஸ்லோகம். இதோட அர்த்தம் சொல்றேன்.

'த்ருசி' -ன்னா – என் கண்களுக்கு எதிரில் ன்னு அர்த்தம், 'ஸ்கந்த மூர்த்தி:' முருகப் பெருமானுடைய உருவம். 'ச்ருதௌ' – என்னுடைய காதுகளில் 'ஸ்கந்த கீர்த்தி:' எப்போதும் முருகப் பெருமானுடைய கதைகளையே நான் கேட்க வேண்டும். 'முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம்' நான் ஏதாவது பேசினேன்னா, எல்லாரையும் தூய்மை படுத்தக்கூடிய, பேசறவா உட்பட எல்லரையும் தூய்மை படுத்தக் கூடிய முருகப் பெருமானுடைய அந்த திவ்ய சரித்திரத்தை மட்டுமே நான் பேச வேண்டும். 'கரே தஸ்ய க்ருத்யம்' கையை வச்சுண்டு முருகப் பெருமானுடைய அர்ச்சனையை பண்ண வேண்டும். 'வபுஸ்தஸ்ய ப்ருத்யம்' என் உடம்பு அவனுக்கு அடிமை தொழில் செய்ய வேண்டும் . ஸ்வாமி தூக்கறா இல்லையா! அந்த மாதிரி பகவானோட காரியத்தைத் தான் என் உடம்பு பண்ணனும். 'குஹே ஸந்து லீனா: மமாசேஷ பாவா:' மம அசேஷ பாவா:,

என்னுடைய எல்லா காரியங்களும் ‘குஹே ஸந்து லீனா’ முருகப் பெருமானிடத்துலேயே லயித்திருக்க வேண்டும், ன்னு ஒரு ப்ரார்த்தனை.

நமக்கு மனசு அவ்வளவு சலிக்கறது. உடம்பு, புலன்கள் அவ்ளோ தீனி கேட்கறது. பாதாம் அல்வா கொண்டு வாங்கறது, டிவி பார்க்கணுங்கறது அதையெல்லாம் எப்படித் தான் மாத்தறது? அதுலேருந்து எப்படி விடுபடறதுன்னா, forceful-ஆ கிளம்பி கோயிலுக்கு போயிடணும். அங்க போய் பக்தர்களோட சேர்ந்து எல்லாருமா பகவானை பூஜை பண்றதை பார்த்தோம்னா மனசு அங்கே திரும்பும். அப்படி மனசை மெதுவா உலக விஷயங்கள்லேர்ந்து திருப்பி பகவான்கிட்ட கொண்டு போய் ஓட்ட வைக்கணும். அதுக்கு, இந்த மாதிரி எல்லா புலன்களையும் அவனோட காரியங்கள்ல ஈடுபடுத்தி, அது மூலமா மனசு பகவான் கிட்ட போறதுக்கு எல்லா மஹான்களும் ப்ராத்தனை பண்ணியிருக்கா. திரு அங்க மாலை ன்னு தேவாரத்துல அப்பர் பெருமான் ‘தலையே நீ வணங்காய்’, ன்னு ஆரம்பிச்சு

தலையே நீவணங்காய் – தலைமாலை தலைக்கணிந்து

தலையாலே பலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்

கண்காள் காண்மின்களோ – கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை

எண் தோள் வீசி நின்றாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ – சிவன் எம் இறை செம்பவள

எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதுஞ் செவிகள் கேண்மின்களோ

மூக்கே நீமுரலாய் – முது காடுறை முக்கணனை

வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்துகண்டாய் – மத யானை யுரிபோர்த்துப்

பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான் தன்னை வாயே வாழ்த்துகண்டாய்

நெஞ்சே நீநினையாய் – நிமிர் புன்சடை நின்மலனை

மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய்

கைகாள் கூப்பித்தொழீர் – கடி மாமலர் தூவிநின்று

பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகள் கூப்பித்தொழீர்

ஆக்கை யாற்பயனென் – அரன் கோயில் வலம்வந்து

பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இல் ஆக்கையால் பயன் என்

கால்களால் பயன் என் – கறைக்கண்டன் உறைகோயில்

கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என்

உற்றார் ஆர் உளரோ – உயிர் கொண்டு போம்பொழுது

குற்றாலத்து உறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ

இறுமாந்து இருப்பன்கொலோ – ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டுச்

சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச்சென்று அங்கு இறுமாந்து இருப்பன்கொலோ

தேடிக் கண்டுகொண்டேன் – திருமாலொடு நான்முகனுந்

தேடித் தேட ஒணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டுகொண்டேன்

ன்னு பாடறார். அப்படி என் உடம்பு உன்னுடைய காரியத்தையே பண்ணணும்னு வேண்டிக்கறார்.

'நிலையேறுமாறு யெண்ணுதியேல் நெஞ்சே நீ வா' ன்னு ஒரு பதிகத்துல உன்னுடைய கோவிலுக்கு வந்து அந்த கோயிலை பெருக்கி மொழுகி துடைச்சு, பூக்கள் பறிச்சிண்டு வந்து, அதை மாலையாக கட்டி, உனக்கு போட்டு, உன் முன்னாடி தலை மேல கையை வைத்து கும்பிட்டு 'சங்கரா ஜய போற்றி போற்றி' ன்னு ஆடி பாடணும். அப்படி பண்ணா தானா மனசு அடங்கும் ன்னு ஒரு பாட்டுல சொல்லியிருக்கார் இல்லையா?

அந்த மாதிரி, மஹான்கள் ப்ரார்தனை பண்றா. மஹா பெரியவா மாதிரி ஞானிகளே கூட கடைசி வரைக்கும், பூஜை பண்றதுல, பகவானோட கதைகளை கேட்கறதுல சந்தோஷ படுவான்னு பாகவத்துல வர்ற கூடிய இடத்தை, ஸ்வாமிகள் சொன்ன போது மஹா பெரியவா, பூஜை பண்ணுவது போல அபிநயம் பண்ணினாளாம். 'கிருஷ்ணாய நம:, கமலநாதாய நம:, வாசுதேவாய நம: ன்னு அர்ச்சனை பண்ணனும்னு ஆசைப் படறா இல்லையா?' ன்னு பெரியவாளுக்கு அத்தனை வருஷம் சந்த்ரமௌளீஸ்வரர் பூஜை பண்ணி,

பண்ணி, அர்ச்சனை பண்ணி சந்தோஷப்பட்டதுனால, அந்த மாதிரி காண்பிச்சாளாம். ஸ்வாமிகள் சொல்லி சொல்லி சந்தோஷப் படுவார்.

‘முகுந்த மாலை’ன்னு குல சேகராழ்வார் ஒரு அற்புதமான ஸ்தோத்ரம் பண்ணியிருக்கார். அதுலேயும் இதே மாதிரி ஒரு பிரார்த்தனை வர்றது.

ஜிஹ்வே கீர்தய கேசவம் முராரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம்

பாணி த்வந்த்வ ஸமர்சயாச்யுதகதா: ச்ரோத்ரத்வய த்வம் ச்ருணு ।

க்ருஷ்ணம் லோகய லோசனத்வய ஹரேர்கச்சாங்க்ரியுக்மாலயம்

ஜிக்ர க்ராண முகுந்த பாத துலஸீம் மூர்தன் நமாதோக்ஷஜம் ||

‘ஜிஹ்வே கீர்தய கேசவம்’ – ஹே நாக்கே! நீ கேசவனை பாடு

‘முராரிபும் சேதோ பஜ’ மனசே! – முரனை கொன்ற அந்த விஷ்ணு பகவானை வழிபடு

‘ஸ்ரீதரம் பாணி த்வந்த்வ ஸமர்ச்சயா’ – லஷ்மியை மார்பில் தரித்திருக்கும் விஷ்ணு பகவானை, ‘என் ரெண்டு கைகளே அர்ச்சனை பண்ணுங்கோ’

‘அச்யுத கதாம் ச்ரோத்ர த்வய த்வம் ச்ருணு’ -என் காதுகள் இரண்டும் அச்சுதன் கதையைக் கேட்கட்டும்.

‘க்ருஷ்ணம் லோகய லோசனத்வய’ – என் கண்கள் இரண்டும் கிருஷ்ணனைப் பார்க்கட்டும்.

‘ஹரே: கச்சாங்க்ரி யுக்மாலயம்’ – ஹரியினுடைய கோவிலுக்கு என்னுடைய பாதங்கள் நடந்து போகட்டும்

‘ஜிக்ர க்ராண முகுந்த பாத துலஸீம்’ – முகுந்தனுடைய பாதத்தில் அர்ச்சனை செய்த துளசியை எடுத்து நான் மூக்கால் நுகருகிறேன்.

‘மூர்தன் நமாதோக்ஷஜம்’ -அதோக்ஷஜனை என் தலை வணங்கட்டும்.

ன்னு தன்னோட உடம்புல இருக்கிற ஒவ்வொரு அங்கத்துக்கும் ஆர்டர் போடறார். ‘ஹே நாக்கே, நீ கேசவனைப் பாடு. ஹே மனசே, முராரிபுவை பஜனம்பண்ணு. ‘ ன்னு சொல்றார்.

அருணகிரி நாதரும்,

“கோடாத வேதனுக்கு யான்செய்த குற்றமென் குன்றெறிந்த

தாடாளனே தென்தணிகைக் குமர நின் தண்டையந்தாள்

சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாத கையும்

பாடாத நாவுமெனக்கே தெரிந்து படைத்தனனே. “

அப்படி தன்னோட குறையைச் சொல்றார். கொடுத்த உடம்பை வச்சிண்டு நான் என்னென்னவோ பண்றேனே. நான் அப்படி என்ன பாவம் பண்ணிட்டேன் அந்த ப்ரம்மன் கிட்ட? இப்படி என்னை படைச்சிருக்கானே. அப்படின்னா என்ன அர்த்தம். ‘எனக்கு முருகனுடைய தண்டையந்தாளை சூடக் கூடிய சென்னியும், அவனை நாடும் கண்களும், அவனைத் தொழும் கைகளும், அவனைப் பாடும் நாவும் கொடு’ன்னு பிரார்த்தனை பண்றார்.

இந்த கை கால்களைக் கொண்டு பகவானுடைய வழிபாடு பண்றது. அவனுடைய காரியங்களையே எப்பவும் பண்றதுங்கறது முடியாமல் போகலாம். எப்பவும் முடிஞ்சது நம்முடைய நாக்கால அவன் நாமத்தைச் சொல்றது. அது நம்ம கூட எப்பவும் இருக்கு. எந்த ஒரு ஸ்ரமமும் இல்ல. ஊமையா இல்லாத பட்சத்தில பகவானுடைய கதைகளைப் பேசலாம். நாமத்தை சொல்லலாம். இருக்கிறதுக்குள்ள இது ரொம்ப சுலபமானது. ஒரு அர்ச்சனை பண்ணனும்னாக் கூட புஷ்பம் வேணும். அப்படி இல்லேன்னாக் கூட ‘ஸ்தவைஹி அர்ச்சேந் நரஸ் ஸதா’ ன்னு பீஷ்மாச்சார்யாள் சொன்ன மாதிரி இந்த ஸ்தோத்ரத்தினாலேயே பகவானை அர்ச்சனை பண்ணலாம். அதுல அதிகமா திருப்தி ஆகிறார்ன்னு வேற சொல்றார். அருணகிரி நாதரும்,

“ஆசைகூர் பத்தனேன் மனோ பத்ம

மான பூ வைத்து …… நடுவேயன்

பான நூலிட்டு நாவிலே சித்ர

மாகவே கட்டியொரு ஞான

வாசம் வீசி ப்ரகாசியா நிற்ப

மாசிலோர் புத்தி யளிபாட

மாத்ருகா புஷ்ப மாலை கோல ப்ர

வாள பாதத்தில் அணிவேனோ ………

ன்னு ஒரு அழகான பாடல். என்னுடைய ஆசையோடு கூடிய ‘மனசு’தான் தாமரை. அந்தப் பூவை வச்சுண்டு ‘அன்பு’ என்கிற நூலிட்டு (என்னோட அன்புதான் நூல்), என் நாக்கைக் கொண்டு மாலையாகக் கட்டறேன். சித்ரக் கவி மாலையாக அதைக் கட்டி, ஞானம் தான் அதோட வாசனை, ‘மாசிலோர் புத்தியளி பாட’, தூய்மையான புத்தி உள்ளவர்கள் என்ற தேனீக்கள் இந்த மாலையில வந்து குடி இருக்கிறார்கள். மாத்ருகா புஷ்ப மாலை. 51 அக்ஷரங்களுக்கு மாத்ருகா அக்ஷரங்கள் ன்னு பேரு. அந்த மாத்ருகா அக்ஷரங்களைக் கொண்டு ஒரு புஷ்ப மாலை பண்ணி ‘கோல ப்ரவாள பாதத்தில் அணிவேனோ’ உன்னோட அழகான பாதத்தில நான் போட மாட்டேனா’ ன்னு இங்க வேண்டிக்கறார்.

கந்தர் அநுபூதியில ‘நெஞ்சக் கனகல்லு’ ன்னு ஆரம்பிச்சு 51 பாடல்கள் இருக்கு. அந்த 51 பாடல்களும், இந்த 51 மாத்ருகா அக்ஷரங்களைக் கொண்டு செய்தது. ஒவ்வொரு பாட்டுலயும் ஒரு பீஜாக்ஷரம் இருக்குன்னு மஹான்கள் சொல்லுவா. முன்ன வேண்டிண்ட மாதிரியே அருணகிரி நாதர் அந்த கந்தர் அநுபூதியைப் பாடி, மாத்ருகா புஷ்ப மாலையை முருகப் பெருமானுடைய கோல ப்ரவாள பாதத்தில் அணிவித்தார் ன்னு மஹான்கள் சொல்லுவா. பாக்கி பாடலையும் பாடிடறேன்.

மூசுகா னத்து மீதுவாழ் முத்த

மூரல்வே டிச்சி …… தனபார

மூழ்குநீ பப்ர தாபமார் பத்த

மூரிவே ழத்தின் …… மயில்வாழ்வே

வீசுமீ னப்ப யோதிவாய் விட்டு

வேகவே தித்து …… வருமாசூர்

வீழமோ திப்ப ராரைநா கத்து

வீரவேல் தொட்ட …… பெருமாளே. “

அப்படி மஹான்கள் எல்லாருமே, ‘பண்ண வேண்டிய காரியம் முருகனுடைய வழிபாடு’ ன்னு சொல்றா. நமக்கும் ஒரு நாள் அதோட பெருமை புரியணும், ஈடுபட்டு பக்தி பண்ணனும்ன்னு வேண்டிப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –இருபத்தி எழாவது ஸ்லோகம் – என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட பன்னிரு தடந்தோள் வள்ளல்

ஸுப்ரமண்ய புஜங்கத்துல இருப்பத்தியாறு ஸ்லோகங்கள் பார்த்திருக்கோம். நேத்திக்கு இருபத்தி ஆறாவது ஸ்லோகத்துல

दृशि स्कन्दमूर्तिः श्रुतौ स्कन्दकीर्तिः मुखे मे पवित्रं सदा तच्चरित्रम् ।

करे तस्य कृत्यं वपुस्तस्य भृत्यं गुहे सन्तु लीना ममाशेषभावाः ॥ २६॥

த்ருசி ஸ்கந்த மூர்த்தி: ச்ருதௌ ஸ்கந்தகீர்த்தி:

முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் |

கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்

குஹே ஸந்து லீனா மமாசேஷ பாவா: || ன்னு

என் கண்கள் உன்னுடைய மூர்த்தியையே பார்க்கட்டும். என் காதுகள் உன் கீர்த்தியைக் கேட்கட்டும். என்னுடைய வாய் உன் பெருமையையே பேசட்டும். முருகா என் கைகள் உன்னையே அர்ச்சனை பண்ணட்டும். என் உடம்பு உன் கோயிலை சுத்தம் பண்ணட்டும். என் மனசு, புலன்கள் எல்லாம் உன்னுடைய காரியத்துலேயே லயிச்சு இருக்கட்டும் ன்னு ஒரு ப்ரார்த்தனை பண்றார். உலக விஷயங்கள்ளேயிருந்து மனசை திருப்பி பாகவனோட பாதங்கள்ல வைக்கறதுக்கு, இப்படி எல்லா புலன்களையும் பகவானோட காரியத்துல ஈடுபடுத்தறது என்கிற ப்ரார்த்தனை. அது தான் ஜன்ம சாபல்யத்தை கொடுக்கும்னு, மஹான்கள் அப்படி வேண்டிக்கறதுக்கு சொல்லித் தர்றா.

இன்னைக்கு ஸ்லோகம்.

मुनीनामुताहो नृणां भक्तिभाजामभीष्टप्रदाः सन्ति सर्वत्र देवाः ।

नृणामन्त्यजानामपि स्वार्थदाने गुहाद्देवमन्यं न जाने न जाने ॥ २७॥

முனீனா முதாஹோ ந்ருணாம் பக்தி பாஜாம்

அபீஷ்டப்ரதா ஸந்தி ஸர்வத்ர தேவா: |

ந்ருணாமந்த்ய ஜாநாமபி ஸ்வார்த்ததானே

குஹாத்தைவமன்யம் நஜானே நஜானே ||

ன்னு சொல்றார். இது ஒரு வித்யாசமான ஸ்லோகம். 'ஸர்வத்ர' – எல்லா உலகங்களிலும் தேவா: – தெய்வங்கள், 'முனீனாம், பக்தி பாஜாம் ந்ருணாம் ' – முனிவர்களுக்கும், தன்னிடம் பக்தி செலுத்தும் மனிதர்களுக்கும் 'அபீஷ்ட ப்ரதா: ஸந்தி' – அவா மனோரதங்களை பூர்த்தி பண்றதுக்கு வரங்களை கொடுக்கிறார்கள். ஆனால் 'அந்த்யஜாநாமபி" – கீழ் ஜாதியில் பிறந்தவரா இருந்தாலும் 'ந்ருணாம்' – மனிதர்களுக்கும், 'ஸ்வார்த்த தானே' – விரும்பியதை கொடுப்பதில் 'குஹாத் அன்யம் தேவம்' – முருகப் பெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை 'நஜானே நஜானே' – நான் காணவில்லை, நான் காணவில்லை ன்னு சொல்றார்.

இந்த ஸ்லோகத்தை படிச்ச போது தேதியூர் சாஸ்திரிகள் நந்தனார் சரித்திரம் மாதிரி ஒரு சரித்திரம் சொல்லியிருக்கார். சண்டளானா பிறந்த ஒருத்தன் தினமும்

கார்த்தாலே எழுந்து வேலாயுதா, முருகான்னு சொல்லிண்டிருந்தான். அவன் திருச்செந்தூர்ல ஸ்வாமி சன்னிதியில வந்து பகவானோட ஐக்யம் ஆயிட்டான். அவனுடைய பெருமையை உலகத்துக்கு புரிய வச்சார் ன்னு.

எனக்கு என்ன தோண்றதுன்னா, ஒரு எழுவது, எண்பது வருஷங்களுக்கு முன்னாடி சாஸ்திரிகள் இதை எழுதியிருக்கார். இன்னிக்கு உலகம் ரொம்ப மாறிப் போய் எல்லாருடைய மனப்பான்மையும் மாறியிருக்கு. இப்போ அந்த மனு தர்ம சாஸ்திரத்துல சொல்லியிருக்கிற வர்ணாஸ்ரமத்தின்படி குலங்கள், அதோட குணங்கள் எல்லாம் இருக்கான்னு தெரியலை. சிவன் சாரோட ஏணிப்படிகளில் மாந்தர்கள் என்கிற ஆச்சர்யமானா புஸ்தகத்துல அவர் ஒரு படிக்கட்டு போட்டிருக்கார். தற்காலத்தில் ஜனங்கள் எப்படியிருக்கா ன்னு அதுல சொல்றார்.

பல விதமான பாபங்களை பண்ணுகிறவர்கள், பஞ்சமாபாதங்களை பண்றவர்களை 'பாபி'ங்கரார்.

'பாமரன்' ன்னு ஒரு category போட்டிருக்கார் 99.99% of the population வந்துடும். சாதாரண பிழைகளையும் தவறுகளையும் இழைத்துண்டு பணம், பெண் இதுல ஆசைப்பட்டுண்டு, நான் என்னோடதுன்னு ரொம்ப தன்னலமா இருந்துண்டு வாழ்க்கையை நடத்திண்டு போகக் கூடிய ஜனங்கள் எல்லாரும் பாமரன் எங்கறார் அவர். அவன் படிச்சவனா இருந்தாலும் சரி, ரொம்ப புத்திமானா இருந்து, ரொம்ப சம்பாதிச்சு சாமர்த்திய சாலியா இருந்து, திறமைகள் இருந்தாலும் சரி, வைதீகாளா இருந்தாலும் சரி, சந்யாசியா இருந்தாலும் சரி, பணத்தாசை இருந்தா பாமரன் தான். சார் சொல்லி இருக்கற விவேகி, சாது, சிறந்த விவேகி, முற்றின விவேகியெல்லாம் படிச்சு பார்க்கணும். அப்பத்தான் அந்த உயர்ந்த நிலைமைகளோட பெருமை புரியும். அந்த நிலைமைகள் எல்லாம் அடையாத வரைக்கும் அவன் என்ன வேஷம் போட்டாலும் அதெல்லாம் உதர நிமித்தம் தான். அதனால அவனை நீங்க பெரியவனா நினைச்சுடாதீங்கோ. அவாளுடைய நோக்கம் என்ன என்கிறதை புரிஞ்சிக்கோங்கோ. காமினி காஞ்சனத்துல இருந்தா அவா பாமரர்கள் தான். நீங்க அவாளோட பழகினா, நம்ம level-ல இருக்கறவாளோட பழகினா நாம அந்த level-ல தான் இருப்போம். மேல போக முடியாதுன்னு ஒரு strong warning கொடுக்கறார்.

‘விவேகி’ங்கறது எது right wrong-ன்னு தெரிஞ்சு, முடிஞ்ச வரைக்கும் நாம ரைட்டா நடந்துக்கணும். ஏதோ ஒரு சந்தர்ப்ப வசத்துல எப்பவோ ஒரு தப்பு பண்ணினா பரவாயில்லை. பிராயச்சித்தம் பண்ணிக்கலாம். ஆனா எது right wrong-ன்னு தெரியாம தப்பே பண்ணிண்டு இருந்தா அவா பாமரர்கள் ன்னு சொல்றார். அந்த ஒரு right wrong-ஆவாது தெரிஞ்சு, எப்போதும் நேர்மையாக நல்லவனா இருக்கறவன் விவேகிங்கறார்.

தன்னலமில்லாதவர்களை ‘ஸாது’ங்கறார். ‘சிறந்த விவேகி’, ‘முற்றின விவேகி’ என்கிறது men of wisdom, வைராக்கியம் வந்தவாளை அப்படி சொல்றார்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் மாதிரி பகவானுக்காக எதையும் விடறதுக்கு தயாராக, அவ்வளோ தெய்வத்துக் கிட்ட பாசம் வந்தவாளை ‘தெய்வ சாது’ ன்னு சொல்றார்.

ஒரு வாட்டி ‘வருண ஜபம்’ பண்ணா மழை கொட்டும் என்கிற அளவிற்கு, தெய்வத்தோட நேரா பேசக் கூடியவாளா இருந்த அந்த காலத்து பிராமணர்கள், அவாளை ‘தெய்வ விவேகி’ன்னு சொல்றார்.

அதுக்கும் மேல பகவானோடயே எப்பவும் லயிச்சு இருக்கிறவாளை ‘மஹான்’னு சொல்றார்.

அத்வைத ஞானத்தை அடைவதற்கு ரொம்ப நெருங்கி இருக்கிறவாளை ‘துறவி’ங்கறார்.

அத்வைத ஞானத்தில உட்கார்ந்து (நிலை பெற்று) இருக்கிறவாளை ‘ஞானி’ங்கறார். இப்படி ஒரு Gradation போட்டிருக்கார்.

இந்த Gradation தான் இந்த காலத்துல வசதி நமக்கு. ஏன்னா ‘எல்லா குலங்களிலும், எல்லா விதமான ஜனங்களும் பிறக்கறதுக்கு பகவான் வழி வகுத்து விட்டார். இந்த காலத்துல 99% of the people பாமரன், அல்லது பாபியாகத் தான் இருக்கா. அதனால நமக்கு ஒரு வேளை சாப்பாடு கிடைக்கிறது, மழை பெய்யறதே பகவானுடைய கருணைன்னு நீங்க புரிஞ்சிக்கணும்ன்னு ரொம்ப ஸ்ட்ராங்கா ஆ சொல்றார். ஆனா அவர் சொல்றது உண்மையான வார்த்தை.

அதனால, நான் என்ன நினைக்கிறேன்னா 'ந்ருணாமந்த்ய ஜாநாமபி ஸ்வார்த்ததானே' கீழான மனிதர்களுக்கும் ஆசைப் பட்டதைக் கொடுக்கிறவர். அவாளுக்கு ஷேமத்தைக் கொடுக்கறவர் அப்படிங்கற போது நான் என்னையே அப்படி நினைச்சுக்கிறேன்.

தேதியூர் சாஸ்திரிகள் பெரிய வித்வானாகவும், அனுஷ்டாதாவாகவும், தெய்வ விவேகி நிலைமையில இருந்ததுனால அவர் கீழ் ஜாதியில பொறந்தவாளுக்கும் முருகப் பெருமான் அருள் பண்றார்ன்னு சொல்றார். எனக்கு வந்து 'எனக்கும் முருகன் அருள் பண்றார்'ன்னு இந்த ஸ்லோகத்துக்கு அர்த்தம் எடுத்துக்கலாம்ன்னு தோண்றது.

நாம மஹான்களுடைய ஸங்கத்துனால உலக விஷயங்கள்ல இருந்து மனசு திரும்பறதுக்கு பிரார்த்தனை பண்ணனும். 'நான்.....என்னுது ... எனக்கு வேண்டியத சேர்த்து வைக்கிறது..' இப்படியே ஓயாம திரும்பத் திரும்ப ஜன்மம் எடுத்து, திரும்பத் திரும்ப இதே காரியங்களைப் பண்ணி, வெட்கமே இல்லாம நான் திரிஞ்சிண்டு இருக்கேனே. மஹான்களோட ஸங்கத்துல சேர்ந்து, அவா 'திருப்புகழை' 'பகவானோட பெருமை'யைப் பேசறத காதுல வாங்கிண்டு, அதை அங்க அவாளோட ஸங்கத்துல இருக்கும் போது மட்டும் காதுல வாங்காம, அங்கேயிருந்து வந்த பிறகும், அதைத் தன்னோடு எடுத்துண்டு வந்து அந்த போதத்தைக் (ஞானத்தை) பிரியாமல், அந்த பகவானோட குளிர்ச்சியும், அழகும், நிறைந்த அந்தப் பாதங்களை எப்பவும் தொழுது, நான் நல்ல வழியில, சார் சொல்கிற ஏணிப் படிகளில் உயர்ந்த நிலைமையை அடைவேனா' ன்னு ஒவ்வொரு நாளும் ஏங்கணும்' ன்னு இந்த ஸ்லோகத்துக்கு எனக்கு அர்த்தம் தெரியறது.

இதே மாதிரி திருப்புகழ் பாடல் ஒண்ணு இருக்கு. அதை நான் பாடறேன்.

எனக்கென யாவும் படைத்திட நாளும்

இளைப்பொடு காலந் தனிலோயா

எடுத்திடு காயந் தனைக்கொடு மாயும்

இலச்சையிலாதென் பவமாற

உனைப் பலநாளுந் திருப்புகழாலும்

உரைத்திடுவார் தங்குளி மேவி

உணர்த்திய போதந்தனைப் பிரியாதொண்

பொலச்சரணானுந் தொழுவேனோ

'உனைப் பல நாளும் திருப்புகழாலும் உரைத்திடுவார்' முருகா! எப்பொழுதும் உன்னுடைய பெருமையைப் பேசக்கூடிய, உன்னுடைய புகழைப் பாடக் கூடிய மஹான்களுடைய

'தங்குளி மேவி' அவா இருக்கிற இடத்தைத் தேடித் தேடிப் போய், தர்சனம் பண்ணி, 'உணர்த்திய போதம்' அவா 'இதுதான் ஜன்மத்தோட பலன் .இதுக்கு நீ பண்ண வேண்டிய காரியம் இது'ன்னு அவா சொல்லிக் கொடுத்த அந்த ஞானத்தை, அந்த போதத்தை, 'தனைப் பிரியாது' அதை அங்கேயிருந்து இறங்கின உடனே மறந்து போயிடக் கூடாது. அதைப் பிரியாமல் 'ஒண் பொலச்சரண் நானும் தொழுவேனோ' உன்னுடைய ஒளி பொருந்திய பாதங்களை நானும் தொழுவேனோ ன்னு வேண்டிக்கறார்.

வினைத் திறமோடன்றெதிர்த்திடும் வீரன்

விழக்கொடு வேள் கொன்றவனீயே

விளப்பென மேலென்றிடக் கயனாரும்

விருப்புற வேதம் ...... புகல்வோனே

சினத்தொடு சூரன் தனைக்கொடு வேலின்

சிரத்தினை மாறும் ...... முருகோனே

தினைப் புன மேவுங் குறக்கொடி யோடுந்

திருத்தணி மேவும் ...... பெருமாளே.

அந்த மாதிரி சாதுக்கள் யாரையாவது நாம பார்த்தோம்னா அவாள்ட்டப் போய் service பண்ணனும். ஸார் வேடிக்கையா சொல்றார் 'அவாளப் பாத்து சல்யூட் அடிச்சிட்டு வந்தாப் போறாது. அவாளோட எளிய தேவைகளை நாம பூர்த்தி பண்ணனும்.' என்கிறார்.

நம்ம மதத்துலதான் அந்த உண்மையைத் தேடறவாளை ஆதரிக்கறதுங்கற ஒரு குணம் இருக்கு. அதை நாம கைவிடாமல் அவாள்ட்ட தோஷத்தைப் பாக்காம,

உலக விஷயங்கள்ல இருந்து மனசைத் திருப்பி பகவான்கிட்ட வச்சிருக்கான்னு, அந்த குணத்தைப் பார்த்து அவாளுக்கு வேணுங்கறதைப் பண்ணி, அவா கிட்டே இருந்து இந்த ஞானத்தை நாம தெரிஞ்சிக்கணும். ஸார் சொல்றார்,' இந்த காலத்தில் விவேகிகளே விரல் விட்டு எண்ணுகிற அளவுலதான் இருக்கா ' அப்படிங்கறார். அதுனால உண்மையான சாதுக்களை பார்த்தால், அவாளைப் போய் நமஸ்காரம் பண்ணி, சாதுக்களையோ அதுக்கு மேல உயர்ந்த விவேகிகள் யாராவது கோடியில ஒருத்தர் இருப்பா. அப்படி இருக்கிறவாளை நமஸ்காரம் பண்ணி அவாளுடைய தேவைகளை நாம பூர்த்தி பண்ணினா தான் நம்முடைய வினைகள் அகலும். வேற இந்த காலத்துல வினை போறதுக்கு பல விதமான உபாயங்கள் விக்கறா. அதெல்லாம் ஒண்ணும் பலிக்காதுன்னு ஸார் சொல்றார்.

அது மாதிரி ஸாதுக்களை நாம நினைப்போம். ஒரு நாளைக்கு முருகன் நமக்கும் அந்த மாதிரி விவேகத்தையும், தன்னலம் இல்லாத உயர்ந்த பக்தியையும் அருள வேண்டும்ன்னு பிரார்த்திப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – இருபத்தி எட்டாவது ஸ்லோகம் – சகல செல்வ யோக மிகக் பெருவாழ்வும் சிவஞான முக்தியும் நீ குடுத்து உதவ வேண்டும் முருகா

ஸுப்ரமண்ய புஜங்கத்துல இருபத்தியேழு ஸ்லோகங்கள் பார்த்திருக்கோம். நேத்திக்கு இருபத்தியேழாவது ஸ்லோகத்துல, கடையனுக்கும் கடைத்தேற்றம் என்கிற மாதிரி, முருகப் பெருமான் எந்த பேதமும் இல்லாம, எல்லாருக்கும் அனுக்ரஹம் பண்ணக் கூடிய தெய்வம் அப்படிங்றதை பார்தோம். அதனால நமக்கு யோக்யதை இல்லேன்னா கூட முருகன் கிட்ட நாம நெருங்காலம்ங்கற சௌலப்யத்தை புரிஞ்சுண்டோம்.

இன்னிக்கு அழகான ஒரு ஸ்லோகம்.

कलत्रं सुता बन्धुवर्गः पशुर्वा

नरो वाथ नारि गृहे ये मदीयाः ।

यजन्तो नमन्तः स्तुवन्तो भवन्तं

स्मरन्तश्च ते सन्तु सर्वे कुमार ॥ २८॥

களத்ரம் ஸுதா பந்துவர்க பசுர்வா

நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா |

யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்

ஸ்மரந்தஸ்ச்ச தே ஸந்து ஸர்வே குமார ||

இதோட அர்த்தம் சொல்றேன். 'ஹே குமாரா:' – குமரக் கடவுளே 'க்ருஹே:' – என்னுடைய வீட்டில் உள்ள 'களத்ரம்', – என்னுடைய மனைவி, 'ஸுதா:' – என் பிள்ளைகள் 'பந்துவர்க:' – அப்பா, அம்மா, அண்ணா தம்பி, இன்னும் பந்து வர்கத்துல இருக்கறவா, 'பசுர்வா:' – வீட்டுல இருக்கற மிருகங்கள், 'நரோவாத நாரீ வா:' – மத்த மனிதர்கள், பெண்களோ, புமான்களோ 'யே மதீயா:' – என்னைச் சேர்ந்தவான்னு நான் நினைக்கக் கூடிய யாரா இருந்தாலும், அவா என்னுடைய நண்பர்களாக இருந்தாலும் சரி, என்னுடைய தொழில்ல கூட வேலை செய்யறவாளா இருந்தாலும் சரி, எனக்கு சம்பத்தப்பட்ட எல்லாரும், 'தே ஸர்வே' – அவா எல்லாரும் முருகா, 'பவந்தம்' – உன்னை, 'யஜந்த:' – பூஜை பண்றவாளாகவும் 'நமந்த:' – உன்னை நமஸ்காரம் பண்றவாளாகவும் 'ஸ்துவந்த:' – உன்னை ஸ்தோத்ரம் பண்றவாளாகவும் 'ஸ்மரந்த:' – உன்னையே ஸ்மரிக்கறவர்களாகவும் 'ஸந்து' – இருக்கட்டும்ன்னு அழகான ஒரு ஸ்லோகம்.

இதுல இந்த பசுர்வான்னு சொன்னதை 'எனக்கு தெரிஞ்ச பசுக்கள் கூட உன்கிட்ட பக்தியா இருக்கணும்' என்கிற போது, குருவாயூர் கேசவன்-னு ஒரு யானை ஞாபகம் வரது. அந்த யானை குருவாயூரப்பனுக்கு அறுவது வருஷம் service பண்ணித்து. அப்புறம் ஒரு குருவாயூர் ஏகாதசி அன்னிக்கு, அன்னிக்கு நாளெல்லாம் ஒண்ணும் சாப்பிடாம இருந்து, அந்த ஸ்வாமி சன்னதியைப் பார்த்துண்டு, தன் தும்பிக்கையை மேல தூக்கி, ஒரு வாட்டி பிளறிட்டு உயிரை விட்டது. அந்த யானை மேலே ஸ்வாமியை வச்சுண்டு யாராவது வந்தா ஸ்ரீவேலிம் போது ஏறாலமே தவிர வேற யாரும் ஏற முடியாது. அது ஏற விடாது. அப்பப்போ அதை கட்டி வெச்சுருக்கற இடத்துலேயிருந்து கிளம்பி, நேரா ஸ்வாமி சன்னதிக்கு வந்து கோயிலை ப்ரதக்ஷிணம் பண்ணிட்டு போகும்.

இப்படி ஒரு அற்புதமான யானை. அதுக்கு கஜராஜன்-னு தேவஸ்வத்துலேர்ந்து title கொடுத்திருந்தா. பூர்வ ஜென்மத்துல பக்தி பண்ணின வாசனைனால, எவ்வளவு மிருகங்கள் கூட பகவானோட பக்தி பண்றது.

இப்ப கூட பார்க்கறோம். ராமாயணம் நடக்கறதுன்னா தீடிர்னு எங்கயிருந்தோ ஒரு வானரம் வந்து அந்த ராமாயணத்தைக் கேட்டுட்டு பழத்தை எடுத்துண்டு போறதுன்னு எல்லாம் சொல்றா. பசுக்கள் பால் கொடுக்கறது ஸ்வாமி புஜைக்குன்னா நிறைய யதேஷ்டமா பால் கொடுக்கறது நம்மாத்துல நாம பார்த்திருப்போம். அப்படி என்னுடைய வீட்டுல இருக்கற பசுக்கள் கூட உன்கிட்ட பக்தியா இருக்கணும் ன்னு வேண்டிக்கறார்.

ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்துல மனுஷாள்ல பல விதமான gradations இருக்கு ன்னு நேத்திக்கு ஒரு விஷயம் சொல்லிண்டிருந்தேன் இல்லையா? இந்த காலத்துல நாம வந்து பிறக்கும் போதே, நாமளும், நம்மளைச் சுத்தி எல்லாருமே பாமரர்களாகத் தான் இருக்கா. நாம ஏதோ ஒரு ஸத்சங்கத்துனால வாழ்க்கையோட பயன் என்னன்னு புரிஞ்சுண்டு, பகவானை அடையணும் ன்னு நினைச்சு ஏதோ ஒரு சின்ன முயற்சி பண்ணும் போது மனைவி குழந்தைகள் support வேணும். Sir book-ல கேளிக்கை காட்சிகளை பார்க்க விரும்புகிறவன் பாமரன்-னு போட்டு இருக்கார். பையன் 'வாப்பா சும்மா சும்மா திருப்புகழ் பஜனை போகணும் எங்கற. சினிமா போகலாம்' ன்னு கூட்டிண்டு போய்ட்டா முடிஞ்சுது. Sir book-ல தன் குழந்தைகளையும் மத்தவா குழந்தைகளையும் ஒரே மாதிரி நினைக்கறவன் "விவேகி". தன் குழந்தைகளுக்கு செல்லம் கொடுக்கறவன் "பாமரன்" அப்படிங்கறார். பிள்ளைகள் தப்பு பண்ணினா, chain-ல வெச்சு கட்டி, அல்லது பட்டினி போட்டு அப்படி திருத்தணும், அப்படி பண்ணினா விவேகிங்கறார். எங்க இருக்கோம் நம்ப? நாம பாமரர்களா இருக்கோம்னு சொல்ல வரேன். அவர் என்ன சொல்றார், நூத்தி எண்பது (விளக்கங்களை) 'பாமரர்கள்'னு லிஸ்ட் பண்ணிட்டு, இதுல நூத்தி எழுபத்தொண்பதுல நீ 'விவேகி'யா இருந்து, ஒண்ணுல பாமரனா இருந்தாலும் நீ பாமரன் தான் என்கிறார். அதனால நாம ரொம்ப பயப்பட வேண்டிய ஒரு காலமா இருக்கு. நாம ஏதோ கொஞ்சம் நல்ல வழியில இருக்கணும்ன்னு நினைச்சாலும், நாம நினைக்கிறதே அபூர்வம், சுத்தி இருக்கிறவாளும் அப்படி நினைக்கணும். மனைவி வசதியா வாழணும்ன்னு தீவிரமா ஆசைப் பட்டா, நாம

என்னென்னவோ பஞ்ச மாபாதகங்கள் பண்றவா கிட்ட இருந்து கெட்ட பணத்தை வாங்கி தான் அந்த மாதிரி வசதியா வாழ முடியும். எளிமையா வாழணும், தெய்வ பக்தி பண்ணனும், தான தர்மங்கள் பண்ணனும் ன்னு நினைச்சா, சுத்தி இருக்கிறவாளும், மனைவியும் கூட நினைச்சா தான் நாம ஒரு சத்ஸங்கத்துல ஈடுபட முடியும். பஜனம் பண்ண முடியும். அப்படியெல்லாம் இருக்கு. அதனால இந்த பிரார்த்தனை அவ்ளோ முக்கியமான பிரார்த்தனை. அவ்வளவு அழகா, ஸந்நியாசியா இருந்த ஒரு ஆச்சார்யாள் நம்ம நிலைமையை புரிஞ்சிண்டு நமக்காக இப்படி ஒரு ஸ்லோகத்தை எழுதிக் கொடுத்திருக்கார்.

களத்ரம் ஸுதா பந்துவர்க பசுர்வா

நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா |

யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்

ஸ்மரந்தஸ்ச்ச தே ஸந்து ஸர்வே குமார || ன்னு கேட்கறார்.

ஸ்வாமிகள் திருவல்லிக்கேணியில இருந்தார். அப்போ பக்கத்துல வேற ஒரு ஸ்வாமிஜி இருந்தார். அவர் இமயமலையில இருபத்தி நாலு கோடி காயத்ரி ஜபம் பண்ணிட்டு வந்திருக்கார்ன்னு சொல்லுவா. அந்த ஸ்வாமிஜிக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவருக்கு அந்த பிள்ளை மேல ஒரு பாசம். அதனால அந்த பையன் வந்து அவரைப் பாக்கணும்ன்னு, அவர் ஐயாயிரம் ரூபா கொடுக்கணும். அவரை வந்து பார்த்தவுடனே அவன் ஏதாவது கஷ்டத்தைச் சொன்னா, உடனே அவர் வந்து ஏதோ பிரார்த்தனை பண்ணுவார். ஹோமம் பண்ணுவார். கஷ்டம் சரியா போயிடும்ன்னு ஒரு நம்பிக்கை. அவன் நன்னா சம்பாதிச்சான் . ஊருக்குத் தள்ளி ஒரு இடத்துல ஆஸ்ரமம் கட்டிண்டான். தலையில இருந்து கால் வரைக்கும் தங்க நகைகள் போட்டுண்டு இருப்பான் . ஸ்வாமிகள் வருத்தப்படுவார், 'இவ்வளவு தபஸ் பண்ணினவர்ன்னு சொல்றா. அப்படி தபஸ் பண்ணி அந்த பகவானோட அனுபவம் கிடைச்சவர், பாவம் இந்த பையன் கிட்ட வந்து மாட்டிண்டார் பாரு. யாராவது அவ்ளோ பெரிய தெய்வானுக்ரஹம் கிடைச்ச பின்ன இந்த உலக விஷயங்கள்ல போய் விழுவாளா. வாந்தி பண்ணதை எடுத்து சாப்பிடற மாதிரி இல்லையா அது. அதுனால நாம ஜாக்ரதையாக இருக்கணும். நாம இந்த ஸ்லோகத்தை சொல்லி பிரார்த்தனை பண்ணனும். நாம ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும். சில சமயம் சிஷ்ய கோடிகளா வந்து சேர்றவா நம்ம பேரை யூஸ் பண்ணி ஒரு சங்கம் ஆரம்பிச்சிடுவா. அப்படியெல்லாம் danger இருக்கு, ஜாக்கிரதையா இருக்க

வேண்டிய ஒரு காலம். அது நம்ம புத்தியினால ஓரளவு தான் ஜாக்கிரதையா இருக்க முடியும் . நாம அதுக்கு பகவான் கிட்டதான் வேண்டிக்கணும்.

களத்ரம் ஸுதா பந்துவர்க பசுர்வா

நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா |

யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்

ஸ்மரந்தஸ்ச்ச தே ஸந்து ஸர்வே குமார ||

ன்னு இந்த ஸ்லோகத்த சொல்லி வேண்டிக்கணும். அதுக்கும் மேலே இந்த மாதிரி உலக விஷயங்கள்ல ரொம்ப பாசம் வெச்சு அல்லல் படாமல் இருக்கணும் னும் வேண்டிக்கணும். கூட இருக்கறவா எப்படி இருக்காளோ அது ஒண்ணும். நாம

வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்

தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?

கிளைபட்டு எழு சூர் உரமும், கிரியும்,

தொளைபட்டு உருவத் தொடு வேலவனே. (கந்தர் அநுபூதி)

மக மாயை களைந்திட வல்ல பிரான்

முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே

அகம் மாடை, மடந்தையர் என்றயரும்

சகமாயையுள் நின்று தயங்குவதே. (கந்தர் அநுபூதி)

‘முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே’ ‘மாடை’ னா தங்கம், பணம். ‘மடந்தையர்’ னா பெண்கள். இதுலேயே என் மனசு தயங்கி தயங்கி அங்கேயே நிக்கறது. அதை உதறவே மாட்டேங்கறதே. ‘முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே!’ ‘ஆறுமுகம் ஆறுமுகம்’ ன்னு சொல்றேன். இதெல்லாம் இன்னமும் ஒழிய மாட்டேங்கறேதே ன்னு பிரார்த்தனை பண்றார். அதே மாதிரி

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்

பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?

தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்

நிட்டூர நிராகுல, நிர்பயனே. (கந்தர் அநுபூதி)

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே

சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ

சூர் வேரொடு குன்று தொளைத்த நெடும்

போர் வேல, புரந்தர பூபதியே. (கந்தர் அநுபூதி)

ன்னு நம்மைச் சேர்ந்தவா நமக்கு அனுகூலமா இருக்கணும். அப்படி இல்லேன்னா நாம ரொம்ப ஈஷிண்டு, ரொம்ப கஷ்டப் படாம இருக்க நமக்காவது ஒரு ஞான வைராக்யம் வரணும் அப்படிங்கற பிரார்த்தனை இந்த ஸ்லோகத்துல இருக்கு. அதை நாம பண்ணி நல்ல friends, நல்ல பந்துக்கள், நாம வளர்க்கற மிருகங்களோ, நமக்கு வர்ற boss, நமக்கு வர்ற வேலைக்காராளோ, எல்லாரும் முருக பக்தியோட இருக்கணும்னு வேண்டிப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் –இருபத்தி ஒன்பதாவது ஸ்லோகம் –அயிலும் மயிலும் அழகும் உடைய பெருமாளே

ஸுப்ரமண்ய புஜங்கத்துல நேத்திக்கு, 'முருகா! என்னைச் சேர்ந்த எல்லாரும் உன் கிட்ட பக்தியோட இருந்து, உன்னுடைய ஸ்தோத்திரத்தைப் பண்ணணும், உன்னுடைய பூஜையைப் பண்ணணும், உன் கிட்ட ஸ்நேஹத்தோட இருக்கணும், உன்னை நமஸ்காரம் பண்ணணும்ன்னு' ஒரு ஸ்லோகத்துல வேண்டிண்டார்.

कलत्रं सुता बन्धुवर्गः पशुर्वा

नरो वाथ नारि गृहे ये मदीयाः ।

यजन्तो नमन्तः स्तुवन्तो भवन्तं

स्मरन्तश्च ते सन्तु सर्वे कुमार ॥ २८॥

களத்ரம் ஸுதா பந்துவர்க பசுர்வா

நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா |

யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்

ஸ்மரந்தஸ்ச்ச தே ஸந்து ஸர்வே குமார ||

ன்னு ஒரு ஸ்லோகம் பார்த்தோம்.

இன்னிக்கு இருபத்தி ஒன்பதாவது ஸ்லோகம். முருகப் பெருமானுடைய கையில இருக்கிற வேலுடைய மஹிமை.

मृगाः पक्षिणो दंशका ये च दुष्टास्तथा व्याधयो बाधका ये मदङ्गे ।

भवच्छक्तितीक्ष्णाग्रभिन्नाः सुदूरे विनश्यन्तु ते चूर्णितक्रौञ्जशैल ॥ २९॥

ம்ருகா: பக்ஷிணோ தம்சகா யே ச துஷ்டா:

ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே |

பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா: ஸுதூரே

விநச்யந்து தே சூர்ணித க்ரௌஞ்ச சைல ||

க்ரௌஞ்ச மலையை வேலால் பொடிப் பொடியாக ஆக்கியவரேன்னு கூப்பிட்டு 'மதங்கே' என்னுடைய உடம்பில் 'யே' – எந்த கஷ்டங்கள் – பலவிதமான உடம்புக்கு வரக் கூடிய ஆபத்துக்களை சொல்றார். 'ம்ருகா:' – கொடிய மிருகங்களால் கஷ்டம் வரலாம், 'பக்ஷிண:' – தீடிர்னு ஏதாவது பக்ஷி வந்து தாக்கலாம். 'தம்சகா:' – பலவிதமான பூச்சிகள், கொசுக்கள் அதெல்லாம் வந்து கடிக்கலாம். 'ததா' – அப்படியே, 'துஷ்டா: வ்யாதய:' – ரொம்ப கஷ்டப் படுத்தக் கூடிய வ்யாதிகள் 'பாதகா:' – இதெல்லாம் என்னை ஹிம்சை பண்றது. அவற்றையெல்லாம், 'பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா:' உன்னுடைய சக்தி ஆயுதம், உன்னுடைய வேலாயுதத்தைக் கொண்டு, அது தீக்ஷ்ணமா இருக்கு. கூராக இருக்கு. அதை வெச்சு நீ மலையையே பிளந்தாய். இந்த வ்யாதிகள் மாதிரி எனக்கு வர கூடிய கஷ்டங்களை எல்லாம், அந்த வேலின் கூர் முனையால வெட்டி போட்டுடு. பின்னம் பண்ணி போட்டுடு, 'ஸுதூரே விநச்யந்து' – அதையெல்லாம் எங்கேயோ தூரத்துல கொண்டு போய் தள்ளி நாசம் பண்ணிடுன்னு ஒரு ஸ்லோகம். அப்படி அந்த ஸுப்ரமண்ய

ஸ்வாமியோட வேலை வெச்சுண்டு பூஜை பண்றவாளுக்கு எந்த ஒரு கஷ்டமும் அண்டாதுங்கற ஸ்லோகம். இந்த ஸ்லோகத்தை படிச்ச உடனே, கந்தர் அலங்காரத்துல பலஸ்ருதியா ஒரு ஸ்லோகம் சொல்றார்.

சலங்காணும் வேந்தர் தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்

துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்

கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்

அலங்கார நூற்று ளொருகவி தான் கற்றறிந்தவரே.

இந்த அலங்காரத்துல இருக்கற நூறு பாடல்கள்ல ஏதாவது ஒரு பாட்டு தெரிஞ்சவா கூட புலியோ, கரடியோ, யானையோ அதுக்கெல்லாம் கலங்க மாட்டார்கள்னு ஒரு பலஸ்ருதி சொல்லியிருக்கார். இந்த கந்தர் அலங்காரத்துல நூறு பாடல்கள் சொல்லி பலஸ்ருதியும் சொன்ன பின்ன 'திருவடியும் தண்டையும்' மாதிரி ஆறு அழகான பாடல்கள் இருக்கு. பலஸ்ருதியும் சொன்ன பின்ன என்ன ஒரு ஆறு பாடல்ன்னு யோசிச்சேன். வாரியார் ஸ்வாமிகள் அதுக்கு அழகான விளக்கம் கொடுத்து இருக்கார். ஒரு மாலை இருக்கு. அதை கட்டி முடிச்ச பின்னே கிழே ஒரு தொங்கல்-னு சின்னதா டாலர் மாதிரி ஒண்ணு தொங்கவிடுவா இல்லையா? அருணகிரி நாதர் இந்த நூறு பாடலை வச்சு ஒரு மாலை பண்ணின உடனே இன்னொரு ஆறு பாடல் வச்சு ஒரு தொங்கல் பண்ணியிருக்கார் ன்னு சொல்றார். அப்படியெல்லாம் அனுபவிக்கிறது என்பது பெரியவாளுக்குத் தான் தெரியறது.

ஹனுமான்பிரசாத் போத்தார்ன்னு ஒரு மஹான், பசுமாட்டோடு பெருமை பத்தி கீதா பிரஸ்-ல ஒரு book போட்டிருக்கார். அதுல 1st chapter -லயே கோபிகைகள் என்ன பக்தி பண்ணினாளோ, அவாளுக்கு கிருஷ்ணனே கிடைச்சான். கோபிகைகள் அப்படி என்ன தான் புண்ணியம் பண்ணினாளோ, பகவானே கிடைச்சான் ன்னு சொல்றா. அவா தான் பசு மாட்டை பார்த்துண்டாளே. இதுக்கு மேல என்ன புண்ணியம் பண்ணனும்! அவாளுக்கு கிருஷ்ணன் கிடைச்சுதல என்ன ஆச்சர்யம்ன்னு ஆரம்பிக்கறார். அது மாதிரி மஹான்களுக்கு தனியான ஒரு அர்த்தம் தோண்றது.

அலங்காரத்தோட இந்த ஸ்லோகத்தை படிச்ச பின்ன இந்த கந்தர் அலங்காரத்துல, மயிலை பத்தியும், கொடியையும், சேவலைப் பத்தியும் சில பாடல்கள் வர்றது. ஆனால் வேலைப் பற்றி நிறைய பாடல்களில் வரது.

அதனால இன்னிக்கு, இந்த கந்தர் அலங்காரத்துல இருந்து, வேலைப் பத்தி வரக்கூடிய கந்தர் அலங்கார பாடல்கள் சிலது படிக்கலாம்ன்னு ஆசைப் படறேன்.

தேர் அணி இட்டு புரம் எரித்தான் மகன் செம் கையில் வேல்

கூர் அணி இட்டு அணுவாகிக் கிரௌஞ்சம் குலைந்து அரக்கர்

நேர் அணி இட்டு வளைந்த கடகம் நெளிந்தது சூர்ப்

பேர் அணி கெட்டது தேவேந்திர லோகம் பிழைத்ததுவே

தேரை அலங்கரித்துச் செலுத்தி, ['ஆணவம்-மாயை-கன்மம்' என்னும்] மூன்று கோட்டைகளைத் [தம் திருப்பார்வையினாலேயே] எரித்து அருளிய சிவபெருமானுடைய திருக்குமாரர் திருமுருகப்பெருமானின் சிவந்த கையில் உள்ள கூர்மையான வேலாயுதத்தால் தைக்கப்பட்ட கிரௌஞ்ச மலையானது அணு அணுவாக துகள்பட்டு அழிந்தது. ஆரம்பத்தில் நேராக அணி வகுத்து வந்து பின்னர் வட்ட வடிவில் வளைந்து கொண்ட அசுரர்களின் சேனை தளர்ந்து ஓடியது; சூரபன்மனுடைய பெரிய நடுச்சேனையும் அழிந்தது. தேவர்களின் உலகமான அமராவதியும் அசுரர்களிடமிருந்து உய்வு பெற்றது.

வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்

நொய்யிற் பிளவு அளவேனும் பகிர்மின்கள் நுங்கட்கு இங்ஙன்

வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறு நிழல் போல்

கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே

கூர்மையான ஒளிவீசும் அழகான வேலையுடைய திருமுருகப் பெருமானைத் துதித்து ஏழைகளுக்கு எப்போதும் நொய்யில் பாதி அளவாவாயினும் பங்கிட்டுக் கொடுங்கள். உங்களுக்கு இவ்விடத்து வெய்யிலுக்கு ஒதுங்கி நிற்க உதவாத இந்த உடலின் பயனற்ற நிழலைப் போல மரணகாலத்தில் ஆன்மா புறப்பட்டுச் செல்லும் இறுதி வழிக்கு உங்கள் கையிலுள்ள பொருளும் துணை செய்ய மாட்டாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே

வைவைத்த வேற்படை வானவனே மறவேனுனை நான்

ஐவர்க்கிடம் பெறக் காலிரண்டோட்டி அதிலிரண்டு

கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே.

தெய்வீகம் பொருந்தியதும் அழகானதுமான மலையாகிய திருச்செங்கோட்டில் வசிக்கும் செழுமையைத் தரும் சோதியே! கூர்மையான வேலை ஆயுதமாகக் கொண்ட தெய்வமே! உனை அடியேன் மறவேன். ஐம்புலன்களுக்கு இடமாகும்படி இரண்டு கால்களை நிறுத்தி அங்கு இரண்டு கைகளை அமைத்துள்ள இல்லம் போன்ற இந்த உடம்பு அழிவதற்கு முன்னரே தேவரீர் அடியேனுக்கு முன் தோன்றிக் காப்பாற்றியருள்வீராக!

பாலென்பது மொழி பஞ்சென்பது பதம் பாவையற்கண்

சேலென்பதாகத் திரிகின்ற நீ செந்திலோன் திருக்கை

வேலென்கிலை கொற்ற மயூரம் என்கிலை வெட்சித்தண்டைக்

காலென்கிலை மனமே எங்ஙனே முத்தி காண்பதுவே.

பாலை ஒத்தது [பெண்களின்] சொல், பஞ்சை ஒத்தது பாதம், கண்கள் கெண்டை மீனை ஒத்தவை என்று எண்ணி மயங்கித் திரிகின்ற மனமாகிய நீ, திருச்செந்தூர்த் திருமுருகப்பெருமானின் திருக்கையில் விளங்கும் வேலாயுதமே என்று சொல்கின்றாயில்லை; வெற்றி பொருந்திய மயில் என்றும் சொல்கின்றாயில்லை; வெட்சி மலரையும் தண்டையையும் அணிந்த திருவடிகள் என்கின்றாயில்லை. [ஆதலால்] நீ முத்திப் பேற்றை அடைவது எங்ஙனமோ?

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை

மொண்டுண்டு அயர்கினும் வேல் மறவேன் முதுகூளித்திரள்

டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டுடுண்டு

டிண்டிண்டெனக் கொட்டியாட வெஞ்சூர்க் கொன்ற ராவுத்தனே.

கற்கண்டைப் போன்ற சொற்களையுடையவரும் மென்மையானவருமான பெண்களின் காமப் புணர்ச்சியாகிய மதுவினை நிரம்பவும் மொண்டு குடித்து அவ்வெறியால் அறிவு மயங்கினாலும் தேவரீரின் வேலாயுதத்தை அடியேன் மறவேன். முதிர்ந்த பேய்க் கூட்டங்கள் 'டுண்டுண் டுடுடுடு …' என்னும் ஒலியை உண்டாக்கிக் கொண்டு பறையடித்துக்கொண்டு கூத்தாடுமாறு வெய்ய சூரபன்மனைக் கொன்று அருளிய சேவகனே.

சேல்பட்டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்

மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்

வேல்பட்டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும் அவன்

கால்பட்டழிந்தது இங்கென் தலை மேல் அயன் கையெழுத்தே.

சேல் என்னும் மீன்கள் குதித்துத் திரிவதனால் திருச்செந்தூரில் உள்ள வயல்கள் அழிந்துபோயின; மலர்க்கொடி போன்ற பெண்களின் மனமானது சோலையிலுள்ள இனிமையான கடப்ப மலர்மாலையை விரும்பியதால் அழிந்துபோயிற்று. பெருமை தங்கிய மயில் வாகனத்தையுடைய திருமுருகப்பெருமானது வேலாயுதம் பட்டதால் கடலும் சூரபன்மனும் கிரௌஞ்ச மலையும் அழிந்து போயின. இவ்வுலகில் கந்தவேளின் திருவடிகள் அடியேனின் தலைமீது பட்டதால் பிரம்மதேவனால் எழுதப்பட்டிருந்த ['விதி' என்னும்] கையெழுத்தும் அழிந்துபோயிற்று.

சூரிற் கிரியிற் கதிர் வேலெறிந்தவன் தொண்டர்குழாஞ்

சாரிற் கதியன்றி வேறிலை காண் தண்டு தாவடிபோய்த்

தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்

நீரிற் பொறி யென்றறியாத பாவி நெடுநெஞ்சமே.

ஓ' மனமே, சூரபன்மன் மீதும் கிரௌஞ்சமலை மீதும் ஒளிவீசும் வேலை விடுத்து அருளிய திருமுருகப்பெருமானின் அடியார்களது திருக்கூட்டத்தை அடைவதைவிட சிறந்த கதி வேறு ஒன்றும் எங்கும் இல்லை என்பதைக் காண்பாயாக. படைகளுடன் பிரயாணம் செய்து, தேரின் மீதும் யானையின் மீதும் குதிரையின் மீதும் ஏறி உலாவுகின்ற [அரசர்களுடைய] செல்வம் முழுவதும் நீரின்மீது எழுதிய எழுத்துக்கு ஒப்பாகும் என்று நீ உணரவில்லையே, நீண்ட காலப் பாவியாகிய மனமே!

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்

வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்குவள்ளி

காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்

சாந்துணைப் போது மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே.

சிவந்த திருமேனியையுடைய சேந்தனை, கந்தப்பெருமானை, திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியிருப்பவரை, சிவந்த வேலுக்குத் தலைவரை, செந்தமிழ் நூல்கள் பரவும்படி செய்பவரை, விளங்குகின்ற வள்ளியம்மையின் கணவரை, பரிமளம் மிகுந்த கடப்ப மலரால் ஆகிய மாலையை அணிந்தவரை, மழையைப்

பொழியும் மேகத்தைக் கண்டு மகிழ்கின்ற மயிலை வாகனமாக உடையவரை, உயிர் பிரியும்வரை மறவாதவர்களுக்கு எந்த ஒரு குறையும் உண்டாகாது.

தொண்டர் கண்டண்டி மொண்டுண்டிருக்குஞ் சுத்த ஞானமெனுந்

தண்டையம் புண்டரிகந்தருவாய் சண்ட தண்டவெஞ்சூர்

மண்டலங் கொண்டு பண்டண்டர் அண்டங்கொண்டு மண்டிமிண்டக்

கண்டுருண்டு அண்டர் விண்டோடாமல் வேல்தொட்ட காவலனே. (பாடல் 92)

தேவரீரின் தொண்டர்கள் [தம் ஞானக் கண்ணால்] பார்த்து, முகந்து, பருகி இன்புற்று இருக்கின்ற தேனையொத்த மெய்ஞ்ஞானத்தைத் தரவல்லதாகிய தண்டை அணிந்த அழகிய தாமரை மலர் போன்ற தேவரீரின் திருவடிகளை அடியேனுக்கும் தந்தருள்வீராக! வேகத்தையுடையவனும் தண்டாயுதத்தைக் கொண்டவனுமாகிய வெய்ய சூரபன்மன் முற்காலத்தில் மண்ணுலகையும் தேவருலகையும் கைப்பற்றி நெருங்கியதைப் பார்த்த தேவர்கள் அச்சத்தினால் கீழே விழுந்து உருண்டு தமது உலகை விட்டு ஓடாதபடி வேலாயுதத்தை விடுத்து அருளிய இரட்சக மூர்த்தியே!

கதிதனை யொன்றையுங் காண்கின்றிலேன் கந்த வேல்முருகா

நதிதனை யன்ன பொய் வாழ்விலன்பாய் நரம்பாற் பொதிந்த

பொதிதனையுங் கொண்டு திண்டாடுமாறெனைப் போதவிட்ட

விதிதனை நொந்து நொந்திங்கே யென்றன்மனம் வேகின்றதே. (பாடல் 98)

கந்தப் பெருமானே, வேலாயுதத்தையுடைய திருமுருகப் பெருமானே! முக்திவீட்டை அடைவதற்குரிய நெறியொன்றையேனும் காண்கின்றேன் இல்லை. ஆற்றுநீர்ப் பெருக்கு போல [நிலையற்ற] பொய்யான உலக வாழ்க்கையில் பற்றுடையவனாகி, நரம்புகளால் கட்டப்பட்ட உடலாகிய மூட்டையைச் சுமந்து கொண்டு துன்புறுமாறு பிறக்கச் செய்த விதியினை நினைத்து உள்ளம் நொந்து நொந்து அடியேனின் மனம் வேதனைப் படுகின்றது.

ஒரு சில பாடல்கள் நான் படிச்சேன். இதே கந்தர் அலங்காரத்துல வேலோட மஹிமையை இன்னும் எத்தனையோ பாடல்கள்ல சொல்றார். திருப்புகழ்ல கேட்கவே வேண்டாம். நூற்றுக்கணக்கான திருப்புகழ் பாடல்கள்ல ‘வேல்முருகா’ ன்னு கூப்பிடறார். வேலோட பெருமையைப் பேசறார்.

அருணகிரி நாதர் திருப்புகழ் பாடியிருக்கார். அலங்காரம், அனுபூதி எல்லாம் பாடியிருக்கார். எல்லாத்துலேயுமே இந்த 'பெண்கள் மையல் போகணும். மரண பயத்துல இருந்து என்னை மீட்கணும்' ன்னு எல்லாம் வேண்டுதல் இருக்கு. 'திருவகுப்புகள்' னு பண்ணியிருக்கார். அதுல ரொம்ப highest philosophy and பக்தி. அதுல அந்த மாதிரி லௌகீக பிரார்த்தனைகள் இல்லாம, முழுக்க முருகனுடைய ஸ்தோத்திரமா இருக்கும். அது ரொம்ப ஆனந்தமா இருக்கும். அதுல 'வேல் வகுப்பு' ன்னு ஒண்ணு பண்ணியிருக்கார். அதுல சில வரிகளைச் சொல்றேன்.

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை

கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி விழிக்கு நிகராகும்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலைவிருத்தன்

என(து) உளத்தில் உறை கருத்தன்மயில் நடத்து குகன் வேலே

வள்ளியம்மையோட கண்கள் வேல் மாதிரி இருக்குன்னு சாதாரண அர்த்தம் சொல்லலாம். வள்ளிமலை சச்சிதானந்த ஸ்வாமிகள் இதுக்கு விசேஷமா அர்த்தம் சொல்லி இருக்கார். இந்த 'பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கறுத்தகுழல் சிவத்தவிதழ்' ங்கறதுக்கு, அம்பாள் பண்ணக்கூடிய அஞ்சு காரியங்கள் 'ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், திரோதானம், அனுக்ரஹம்' ன்னு அர்த்தம் சொல்லி இருக்கார். மேலும் எப்படி அம்பாளோட கடாக்ஷம் அனுக்ரஹம் பண்ணுமோ, அந்த மாதிரி வேல் அனுக்ரஹம் பண்ணும் ன்னு அவ்வளவு அழகா சொல்லி இருக்கார்.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்

இசைக்(கு)உருகி வரைக்குகையை இடித்துவழி காணும்

இது நக்கீரருக்காக – அந்த கற்கிமுகி பூதத்தைக் கொன்னு 1000 புலவர்களை விடுவிச்ச அந்தக் கதை.

துதிக்கும் அடியவர்க்(கு)ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின்

அவர் குலத்தை முதல் அறக்களையும் எனக்(கு)ஓர் துணை ஆகும்

'பகைக் கடிதல்' ன்னு எதிரிகள் எல்லாம் காணாம பண்ணிடும், இந்த ஒரு 'வேல் வகுப்பு' பாராயணம். வள்ளிமலை ஸ்வாமிகள் இத 64ஆக மாத்தி மாத்தி

போட்டு ‘வேல்மாறல்’ன்னு ஒண்ணு பண்ணியிருக்கார். அது பாராயணம் பண்றதுக்கு ஒரு 20 நிமிஷம் ஆகும். நிறைய பேர் அதை தினம் பாராயணம் பண்ணுவா. ஸ்வாமிகள் சொல்லியே நிறைய பேர் வேல் மாறல் பாராயணம் பண்றா.

தருக்கி நமன் முருக்கவரின் எருக்குமதி

தரித்தமுடி படைத்தவிறல் படைத்த இறை கழற்கு நிகராகும்

‘தருக்கிநமன் முருக்கவரின்’ – எமன் எருமை மாட்டு மேல ரொம்ப கர்வத்தோட வந்து பாசக் கயிறைப் போட்டு முறுக்கும் போது, மார்க்கண்டேயன் கழுத்துல பாசக் கயிறு போட வந்த போது, ‘எருக்கு, மதி’ இதெல்லாம் தலையில வச்சிண்டு இருக்கற சிவபெருமானுடைய கழல் என்ன பண்ணித்தோ,அதை இந்த வேல் பண்ணும் ன்னு சொல்றார். அதற்கு நிகரான காரியத்தை செய்யும்.

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுணவழைப்பதென

மலர்க் கமல கரத்தின் முனை விதிர்க்கவளை வாகும் “

உலகத்தில் உள்ள எல்லார்க்கும் உணவளிக்கும் – ன்னு, வேலை உபாசனை பண்ணா நிறைய அன்னதானம் பண்ணலாம்.

‘தனித்துவழி நடக்குமென திடத்துமொருவலத்தும்

இருபுறத்தும் அருகடுத்திரவு பகற்றுணையதாகும்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலைவிருத்தன்

என(து) உளத்தில் உறை கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே’

தனியா போயிண்டிருக்கும் போது, ‘தனித்து வழி நடக்கும் எனது ஒரு இடத்தும். ஒரு வலத்தும் இரு புறத்தும் அருகு அடுத்து இரவு பகல் துணையதாகும்’ – ன்னு – இதெல்லாம் மஹாமந்திரங்கள்.. ஒரு வைசியன் காட்டுல போயிண்டிருக்கும் போது ஒரு பிரம்மராட்சஸ் எதிரில வந்தது. அப்போ அவன் வெத்தலை பாக்கை கையில எடுத்தான். அந்த வெத்தலைக் காம்பைக் கிள்ளி, இந்த ‘தனித்துவழி வழி நடக்கும்..’ சொல்லி பிரம்மராட்சஸ் மேல போட்டான். அந்த வெத்தலைக் காம்பு வேலா பாய்ஞ்சு அந்த பிரம்மராட்சசை விரட்டிடுத்து ன்னு கதைகள்

இருக்கு. அருணகிரிநாதர் திருச்செங்கோடுக்கு காட்டு வழியில போகும் போது பயந்தார். அப்ப இந்த, ‘தனித்து வழி நடக்கும் எனது இடத்தும் ஒரு

வலத்தும் இரு புறத்தும் இரவு பகல் துணையதாகும்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை

விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே’

என்கிறதை சொன்ன உடனே, எட்டு திக்குலேயும் ஒளி மயமா முருகனுடைய வேல் வந்து அவருக்கு வழி காண்பிச்சு அவரைக் கொண்டு போய் திருச்செங்கோடுல சேர்த்தது ன்னு ஒரு புராணம் இருக்கு. அப்படி ‘வேல்’ங்கறது பயத்தைப் போக்கும். மிருகங்கள் கிட்ட இருந்தோ, வியாதியில் இருந்தோ நமக்கு வர்ற பயத்தை போக்கறதுக்கு ‘வேல் வழிபாடு’ உற்ற வழி, ன்னு ஆச்சார்யாளும் சொல்லியிருக்கார். அருணகிரிநாதரும் நிறைய சொல்லியிருக்கார்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸூப்ரமண்ய புஜங்கம் – முப்பதாவது ஸ்லோகம் – எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ

நேத்திக்கு ஸுப்ரமண்ய புஜங்கத்துல வேலுடைய மஹிமையைப் பார்த்தோம்.

ம்ருகா பக்ஷிணோ தம்சகா யே ச துஷ்டா:

ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே |

பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா: ஸுதூரே

விநச்யந்து தே சூர்ணித க்ரௌஞ்ச சைல ||

ன்னு 'முருகனுடைய வேல் பயங்களைப் போக்கும்' அப்படிங்கிற விஷயத்தைச் சொன்னார். இந்த வேலைக் கொண்டு சூரபத்மாவை வதம் பண்ணினார் அப்படிங்கிறதுக்கு 'சூரபத்மன்'ங்கறது ஆணவம், 'வேல்'ங்கிறது ஞானம். இந்த ஞானத்தினால ஆணவம் என்கிற மலத்தைப் போக்கிண்டு முருகனோட ஒன்றாக ஆகிவிடலாம். இரண்டற கலந்திடலாம் ன்னு சொல்லுவா. இந்த வேலை, அம்பாள் முருகப் பெருமானுக்கு கொடுத்தா அப்படிங்கிற விஷயத்தை

அருணகிரிநாதர் நிறைய பாடறார். தேவேந்திர சங்க வகுப்பு 'தரணியில் அரணிய' ன்னு ஆரம்பிக்கும். அதுல,

"இடுபலி கொடுதிரி யிரவலர் இடர்கெட இடுமன

கரதல ஏகாம்பரை யிந்திரை மோஹாங்க சுமங்கலை

எழுதிய படமென இருளறு சுடரடி இணைதொழு மவுனிகள்

ஏகாந்த ஸுகந்தரு பாசாங்குச சுந்தரி...:"

அப்படின்னெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணிட்டு,

"அரணெடு வடவரை அடியொடு பொடிபட

அலைகடல் கெடஅயில் வேல்வாங்கிய செந்தமிழ் நூலோன் குமரன் குகன்"

அந்த அம்பாள்கிட்டயிருந்து வேலை வாங்கிண்டு போய் சூரஸம்ஹாரம் பண்ணினார் ன்னு சொல்றார். அந்த அம்பாளுடைய ஸ்மரணை வந்த உடனே அடுத்த ஸ்லோகம் இன்னிக்கு,

जनित्री पिता च स्वपुत्रापराधं

सहेते न किं देवसेनाधिनाथ ।

अहं चातिबालो भवान् लोकतातः

क्षमस्वापराधं समस्तं महेश ||

ஜநித்ரீ பிதாச ஸ்வபுத்ரா பராதம்

ஸஹேதே ந கிம் தேவசேனாதி நாத |

அஹம் சாதிபாலோ பவான் லோக தாத:

க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேச ||

ன்னு ஒரு ஸ்லோகம். 'ஹே தேவசேனாதி நாதா' – தேவர்களுடைய சேனைக்கு அதிபதியே. 'ஜநித்ரீ' – அம்மாவோ, 'பிதாச' – அப்பாவோ, 'ஸ்வபுத்ராபராதம்' – தன் குழந்தைகள் செய்த அபராதத்தை, 'ஸஹேதே ந கிம்' – பொறுத்துக்கிறது இல்லையா? பொறுத்துக் கொள்வார்கள். 'ததா' – அப்படியே, 'அஹம் சாதிபால:' – நானோ ரொம்ப சின்னக் குழந்தை, 'பவான் லோக தாத:' – நீங்கள்

உலகத்துக்கே அப்பா, ‘ஹே மஹேச’ – பரமேஸ்வரா, ‘ஸமஸ்தம் அபராதம் க்ஷமஸ்வா’ – என்னுடைய எல்லா அபராதங்களையும் பொறுத்துக் கொள்ளுங்கள் ன்னு ஒரு க்ஷமாபராதம் வேண்டி பகவான் கிட்ட சரணாகதி பண்றார்.

இந்த பரமேஸ்வரனும், பார்வதி தேவியும் ‘அம்மையும் அப்பனுமாக’ இருக்கா. அவா இரண்டு பேருமே ஆச்சார்யாளுக்கு இந்த முருகப் பெருமான் கிட்டேயே தெரியுறதுனால, ‘முருகப் பெருமானே! நீயே என்னுடைய அம்மை அப்பன் ’ ன்னு சொல்லி, ‘உங்கிட்ட நான் வேண்டிக்கிறேன். என்னுடைய பிழைகளைப் பொறுத்து எனக்கு அநுக்கிரஹம் பண்ணு’ ன்னு சொல்றார்.

பகவானை அம்மை அப்பனா பார்த்து அவா பண்ண அநுக்கிரஹத்த நினைக்கிறது நிறைய மஹான்கள் பண்ணி இருக்கா. திருவாசகத்துல நிறைய அந்த மாதிரி பாடல்கள் வரும்.

அம்மையே! அப்பா! ஒப்பு இலா மணியே! அன்பினில் விளைந்த ஆர் அமுதே!

பொய்ம்மையே பெருக்கி, பொழுதினைச் சுருக்கும், புழுத் தலைப் புலையனேன் தனக்கு,

செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே! சிவபெருமானே!

இம்மையே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்; எங்கு எழுந்தருளுவது, இனியே?

ன்னு ஒரு பாடல். அந்தப் பதிகத்திலயே,

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து, நீ, பாவியேனுடைய

ஊனினை உருக்கி, உள் ஒளி பெருக்கி, உலப்பு இலா ஆனந்தம் ஆய

தேனினைச் சொரிந்து, புறம் புறம் திரிந்த செல்வமே! சிவபெருமானே!

யான் உனைத் தொடர்ந்து, சிக்கெனப் பிடித்தேன்; எங்கு எழுந்தருளுவது, இனியே?

அழுதா பால் கொடுக்கிற அம்மா ஒரு வகை. ‘பால் நினைந்தூட்டும் தாயினும்’, குழந்தைக்கு பசிக்குமேன்னு நினைச்சு பால் கொடுக்கிற அந்த தாய் உயர்ந்தவள். அவளைக் காட்டிலும் சாலப் பரிந்து – அதைக் காட்டிலும் பரிந்து,

எனக்கு நீ உடம்பெல்லாம் தேன் ஊறும் படியாக அப்படி ஆனந்தத்தைக் கொடுத்தியே!. நான் உன்னைப் பிடிச்சிண்டேன். இனிமே உன்னை விட மாட்டேன் ன்னு சொல்றார்.

இன்னொரு பாடல்ல,

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை,

பத்தி நெறி அறிவித்து, பழ வினைகள் பாறும்வண்ணம்,

சித்த மலம் அறுவித்து, சிவம் ஆக்கி, எனை ஆண்ட

அத்தன் எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே! (‘அச்சோப் பதிகம்’)

‘அத்தன்’ னா அப்பான்னு அர்த்தம். மூர்க்கர்களோடு இருந்த என்னை பக்தி நெறி அறிவித்து, என்னுடைய சித்த மலத்தைப் போக்கி என்னை சிவமாக்கிட்டயே நீ, இந்த மாதிரி அநுக்கிரஹம் யாருக்குக் கிடைக்கும் ன்னு சொல்றார்.

இராமலிங்க அடிகளார் இந்த மாதிரி ‘அம்மையே அப்பா’ன்னு பாடியிருக்கார். இராமலிங்க அடிகளாருக்கு full & full inspiration மாணிக்கவாசகர் தான்.’திருவாசகத் தேன்’ அப்படிம்பார். அப்படி அவர் இதே மாதிரி ஒரு பாடல் சொல்லியிருக்கார். ரொம்ப அழகா இருக்கும்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்

தன்னைநிகர் இல்லாத தனித்தலைமைத் தெய்வம்

வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்

மலரடி என் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்

காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்

கருணைநிதித் தெய்வம்முற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்

சேயாக எனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்

சிற்சபையில் ஆடுகின்ற தெய்வமதே தெய்வம்.

(திருவருட்பா: ‘அருட்ஜோதி நிலை’)

வள்ளலார் இன்னொரு பாடல்ல ரொம்ப கருணை ஏற்படும் படியாச் சொல்றார்.

“தடித்தஓர் மகனைத் தந்தை ஈண்டடித்தால் தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்

பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்

பொடித் திருமேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை

அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மைஅப்பா இனி ஆற்றேன்.”

(திருவருட்பா: ‘பிள்ளைச் சிறு விண்ணப்பம்’)

ன்னு சொல்றார். ‘க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேச’ ன்னு ஆச்சார்யாள் சொல்ற மாதிரி இவரும் சொல்றார். அருணகிரி நாதரும் கந்தர் அநுபூதியில,

எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ

சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்

கந்தா, கதிர் வேலவனே, உமையாள்

மைந்தா, குமரா, மறை நாயகனே.

ன்னு வேண்டறார் இல்லையா!

நல்ல அப்பா அம்மா இந்த உலகத்துல கிடைச்சாலே, அவாளுடைய அன்பு, கண்டிப்பு இரண்டும் சேர்ந்து நமக்கு கிடைக்கும் போது அதுவே ஒரு தெய்வ அனுபவம். அந்த பாக்யம் இருந்தா,தானா நமக்கு அந்த தெய்வம்ங்கிறது என்ன அப்படிங்கிறதோட முதல் taste இல்லையா. ‘அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்’. அப்படி அம்மை அப்பனாக நாம அந்த பகவானை உணர ஆரம்பிக்கிறோம். இந்த biological parents, அவாளுக்கு, அவாளுடைய வினைகள் படி அவா வாழ்க்கை போயிண்டு இருக்கும். நமக்கு அதுக்கும் மேலான முக்தி நெறிய காண்பிக்கக் கூடிய நல்ல சத்குருவும் கிடைச்சா, அது ஒரு பெரிய பாக்கியம். அப்படி ‘அம்மை அப்பனா’ முருகனை அருணகிரிநாதர் நிறையப் பாடுறார். அதுல ரொம்ப இரக்கத்தோட, ரொம்ப கருணை வரும் படியான ஒரு பாட்டு இருக்கு.

“தகப்பன் முன்.மைந்தனோடிப்

பால்மொழிக் குரல் ஓலமிட்டிடில்

யாரெடுப்பதெனா வெறுத்தழ

பார் விடுப்பர்களோ எனக்கிது...... சிந்தியாதோ ”

அப்பா முன்னாடி போய் குழந்தை அழுதுதுன்னா உலகத்துல விட்டுடுவாளா ? நீதான எனக்கு அப்பா, என்னை ஆதரிக்கணும் ன்னு ஒரு பாட்டு. இது முழுக்கவே ரொம்ப அழகா இருக்கும். இந்த பாட்டை நான் பாடறேன்.

“ஏது புத்தி ஐயா எனக்கினி

யாரை நத்திடு வேன் அவத்தினிலே

இறத்தல் கொலோ எனக்குனி...... தந்தை தாயென்றே

இருக்கவு நானு மிப்படியே

தவித்திடவோ சகத்தவர்

ஏசலிற் படவோ நகைத்தவர்...... கண்கள்காணப்

பாதம் வைத்திடையா தேரித்தெனை

தாளில் வைக்க நியே மறுத்திடில்

பார் நகைக்குமையா தகப்பன் முன்...... மைந்தனோடிப்

பால்மொழிக் குரல் ஓலமிட்டிடில்

யாரெடுப்பதெனா வெறுத்தழ

பார் விடுப்பர்களோ எனக்கிது...... சிந்தியாதோ

ஓத முற்றெழு பால் கொதித்தது

போல எட்டிகை நீசமுட்டரை

யோட வெட்டிய பாநு சத்திகை...... யெங்கள்கோவே

ஓத மொய் சடையாட வுற்றமர்

மான் மழுக்கர மாட பொற்கழ

லோசை பெற்றிடவே நடித்தவர்...... தந்தவாழ்வே

மாதினைப் புனமீதிருக்குமை

வாள் விழிக்குறமாதினைத் திரு

மார்பணைத்த மயூர அற்புத...... கந்தவேளே

மாரன் வெற்றிகொள் பூ முடிக்குழ

லார் வியப்புற நீடு மெய்த்தவர்

வாழ் திருத்தணி மாமலைப்பதி...... தம்பிரானே."

தன்னுடைய அப்பா அம்மாவா முருகனை நினைச்சு ஆச்சார்யாள் சரணாகதி பண்றார். அடுத்த ஸ்லோகத்துல, உனக்கு நமஸ்காரம். உன்னுடைய சேவலுக்கு நமஸ்காரம். உன்னுடைய வேலுக்கு நமஸ்காரம். உன்னுடைய மயிலுக்கு நமஸ்காரம் ன்னு நமஸ்காரம் பண்றார். அடுத்ததுல ஜய கோஷம் பண்ணறார். 'ஜயாநந்தபூமன் ஜயாபாரதாமன் 'ன்னு. அப்புறம் 'முக்திதான ஈச ஸூனோ' – எனக்கு முக்தியை அளிப்பவனே ன்னு அந்த வார்த்தையோட முடிக்கறார். அதுக்கு அப்புறம் பல ஸ்ருதி. அந்த ஸ்லோகங்கள்லாம் அடுத்து பார்ப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

<u>ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பத்து ஒன்றாவது ஸ்லோகம் – குஹ! ஸ்கந்த! நமஸ்தே நமோஸ்து</u>



ஸுப்ரமண்ய புஜங்கத்துல நேத்தி முப்பதாவது ஸ்லோகத்துல

जनित्री पिता च स्वपुत्रापराधं

सहेते न किं देवसेनाधिनाथ ।

अहं चातिबालो भवान् लोकतातः

क्षमस्वापराधं समस्तं महेश ॥ ३०॥

ஜநித்ரீ பிதாச ஸ்வபுத்ரா பராதம்

ஸஹேதே ந கிம் தேவசேனாதி நாத |

அஹம் சாதிபாலோ பவான் லோக தாத

க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேச ||

ன்னு நான் ‘அஹம் சாதிபால’ சின்ன குழந்தை, நீ எல்லாருக்கும் அப்பா. உலகத்துக்கே அப்பா. நான் பண்ண தப்பெல்லாம் மன்னிச்சு என்னை ஏத்துக்கோ ன்னு சொல்றார். நமக்கு ஒரு அம்பது வயசு ஆகும் போது, வேண்டியது எல்லாம் இருக்கு. மனைவி, குழந்தைகள், பணம், வேலை, car, வீடு ஆனா மனசு ஒரு குறையை உணர்றது. எதோ அல்லல் படறது. குழந்தையாக இருந்த போது ரொம்ப சந்தோஷமா இருந்தோம் ன்னு தோன்றது, இல்லையா? அம்மா அப்பா பாத்துண்டா. ஏதவாது வேணும்ன்னு கேட்டா உடனே வாங்கி கொடுப்பா, அதோட முடிஞ்சுது. இப்ப நம்ப இது வேணும் அது வேணும்னு பாடுபட்டு, நல்ல college-ல seat கிடைக்கணும், நல்ல வேலை கிடைக்கணும், கல்யாணம் ஆகணும், குழந்தைள் வேணும், வீடு வேணும், car வேணும், பதவி வேணும் எல்லாம் கேட்டு கேட்டு எல்லாம் கிடைச்சிடுத்து, ஆனா ஒரு மனசுல வந்து ஏதேதோ பாமரத்தனமான கவலைகள். என் மனைவி மதிக்க மாட்டேங்கறா. குழந்தைள் அவ்ளோ அன்பா இல்லை. அவா யாரோடயோ போயிண்டு இருக்கா, இப்படி எல்லாம் கவலை பட்டுண்டு உட்கார்ந்து இருக்கோம். நம்ம ஏன் திரும்பவும் குழந்தை மாதிரி ஆகக்கூடாது? ஆகலாம் அப்படீங்கறார் ஆதிசங்கரர், ‘அஹம் ச அதி பால:’ நான் சின்ன குழந்தை. நீ அப்பா, அந்த மனப்பக்குவம், நம்ம ஒரு அளவு சரணாகதி பண்றதுக்கு வேண்டிய பக்குவம் என்னன்னா,

‘அபராத சஹஸ்ரபாஜனம் பதித பீம பாவர்னவோதரே |

அகதிம் சரணாகதம் ஹரே க்ருபயா கேவலம் ஆத்மஸாத் குரு ||

ன்னு ரொம்ப அழகான ஒரு ஸ்லோகம். ”அபராத சஹஸ்ரபாஜனம்’ ஆயிர கணக்கான தப்புகளை பண்ணி, நான் இந்த பவக்கடலின் மத்தியில் விழுந்துட்டேன். எனக்கு யாருமே கதி இருக்கா மாதிரி தெரியலை, ஏதோ அல்லல் படறேன், எனக்கு நீ தான் துணை, உன் க்ருபை ஒன்றை மட்டும், காரணமா வெச்சுண்டு என்னோட ஒரு யோக்கியதையும் பாக்காத, ‘க்ருபயா கேவல ஆத்மஸாத் குரு’ என்னை உன்னை சேர்ந்தவனா நினைச்சுக்கோ ன்னு சொல்றார். இதுலே ஹரே-னு வர்றது, குஹ ன்னு சொல்லலாம் முருக பாக்தாளா இருந்தா, குரு பக்தின்னா, குரோ ன்னு சொல்லலாம்.

அபராத சஹஸ்ரபாஜனம் பதித பீம பாவர்னவோதரே |

அகதிம் சரணாகதம் குரோ க்ருபயா கேவல ஆத்மசாத் குரு ||

ன்னு இந்த எண்ணத்தை நாம அடைஞ்சாதான், நாம பாமரனா இருக்கோம், இந்த மனக் கவலைகள் எல்லாம் போகணும்னா, பகவானைத் தான் பிடிச்சுக்கணும் அப்படீங்கிற எண்ணம். அவரைச் சேந்தவனா நாம ஆனா தான், நம்மோட தூய்மைனாலதான் சந்துஷ்டி வர போகிறது என்ற இந்த அறிவுதான் first-step. அந்த first-step-க்கு ஆச்சார்யாள் ஆழகான ஒரு ஸ்லோகம் சொல்றார். அவருக்கு இருக்குற பரிபக்குவத்துனால, என் பாபங்களை எல்லாம் மன்னிச்சு என்னை உன்னை சேர்ந்தவனா ஆக்கிக்கொள், ன்னு இந்த 'பவான் லோக தாத க்ஷமஸ்வாபராதம் சொன்ன உடனே முருகப்பெருமான் அவரை அணைச்சுண்டு விட்டார் அப்போ அவருக்கு அந்த சந்தோஷம் உடனே,

नमः केकिने शक्तये चापि तुभ्यं

नमश्छाग तुभ्यं नमः कुक्कुटाय ।

नमः सिन्धवे सिन्धुदेशाय तुभ्यं

पुनः स्कन्दमूर्ते नमस्ते नमोऽस्तु ॥ ३१॥

நம கேகினே சக்தயே சாபி துப்யம்

நமச்சாக துப்யம் நம குக்குடாய |

நம ஸிந்தவே ஸிந்து தேசாய துப்யம்

புன ஸ்கந்த மூர்த்தே நமஸ்தே நமோஸ்து ||

ன்னு நமக்கு ஒருத்தரை ரொம்ப பிடிச்சு சந்தோஷம் ஆயிடுதுன்னா அவாளை நமஸ்காரம் பண்றோம். பெரியவா படத்தை வெச்சுண்டு நமஸ்காரம் பண்றோம்னா பாத்து பாத்து சந்தோஷம், அந்த தண்டத்துக்கு ஒரு பொட்டு, அந்த கமண்டலத்துக்கு ஒரு பொட்டு, உட்கார்ந்து இருக்குற பலகாய்க்கு ஒரு பொட்டு, தோள்களுக்கு, பாதங்களுக்கு இப்படி பண்ணி, சந்தோஷம் படறோம் இல்லையா. ஹனுமாரோட வால்ல போட்டு வைப்பா, ஹனுமார் பக்தி இருக்கறவா.முருகப்பெருமான் வேல்ல வைப்பா, ராமரோட வில்லு மேல. அந்த மாதிரி இவர் வந்து

‘நம: கேகினே’ – உன்னுடைய மயிலுக்கு நமஸ்காரம், ‘சக்தயே சாபி’ – உன்னுடைய வேலுக்கு நமஸ்காரம், துப்யம் நம: உனக்கு நமஸ்காரம், ‘நமச்சாக துப்யம்’ – உன்னுடைய ஆட்டுக்கு நமஸ்காரம், அவருக்கு யுத்தத்தின் போது ஆடு ஒரு வாஹனம், ‘நம குக்குடாய’ – உன்னுடைய சேவலுக்கு நமஸ்காரம், உன்னுடைய கொடிக்கு நமஸ்காரம், ‘நம ஸிந்தவே’ – இந்த கடலுக்கு நமஸ்காரம், இந்த கடற்கரையில நீ இருக்கியே, ‘ஸிந்து தேசாய துப்யம்’ – இந்த கடற்கரை வாசியா நீ இருக்கறதுனால இந்த க்ஷேத்ரத்துக்கு ஒரு நமஸ்காரம் அப்படீங்கறார். ‘தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்’ ன்னு, திருத்தொண்ட தொகையில சுந்தரமூர்த்தி நாயனார் பாடின மாதிரி, ‘செந்தில்வாழ் வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்’ – ன்னு ஒரு பாட்டு இருக்கு சேய்தோண்ட தொகைன்னு ஒரு மஹான் பாடியிருக்கார், அப்படி அந்த க்ஷேத்ரத்துக்கு ஒரு நமஸ்காரம், அங்கு இருக்கிறவாளுக்கு எல்லாம் நமஸ்காரம் ன்னு, தன்னை பகவான் ஆட்கொண்டுவிட்டார், அப்படீங்கிற சந்தோஷத்துல நமஸ்காரம் பண்றார்.

இந்த நமஸ்காரம் பண்றது தான் சரணாகதில next-step, நாம லாயக்கு இல்லை, பகவான் தான் க்ருபை பண்ணணும், ஏதேதோ பாபங்கள் பண்ணி இந்த நிலமைல இருக்கோம், இதுலேர்ந்து விடுபடறதுக்கு, பக்தி தான் வழி, ன்னு அந்த நெறியை புரிஞ்ச உடனே, அடுத்தது பகவான் கிட்ட சரணாகதி பண்றோம், அதுக்கு நமஸ்காரம். நமஸ்காரம்ங்கறது ஆரம்பம் தான், நம்ம பண்றது physical நமஸ்காரம். அந்த பாவனையோட எனக்கு இனிமே எந்த பொறுப்பும் கிடையாது, நீ அந்த பொறுப்பை எடுத்துக்கோ ன்னு பண்றது தான் ultimate நமஸ்காரம். அந்த மாதிரி ஆதிசங்கரர் பண்ணி, அடுத்த ஸ்லோகத்தில ‘ஜயாநந்த பூமன்-ன்னு இன்னும், முருகப்பெருமானோட பெருமையை புகழ்ந்து ஆடி பாடறார் சந்தோஷத்துல, அது பெரிய பக்தி. நம்ம தினம் நமஸ்காரம் பண்ணணும், அந்த மாதிரி பக்தி ஏற்படறவரைக்கும் நாம நமஸ்காரம் பண்ணிண்டே இருக்கணும்.

யோசிச்சு பார்த்தா, ஸ்ரீமத் பாகவதத்துல

கிருஷ்ணாய வாசுதேவாய ஹரயே பரமாத்மனே |

ப்ரணதக்லேஷ நாசாய கோவிந்தாய நமோ நமஹ ||

ன்னு ஒரு ஸ்லோகம் இருக்கு.

நமஸ்காரம் பண்ணுவர்களுடைய க்லேஷத்தை போக்கும் கோவிந்தனுக்கு நமஸ்காரம், ன்னு அர்த்தம். இந்த ஸ்லோகம் பாகவத காயத்ரிம்பா, அப்படீ அவ்வளோ ஏத்தம், இந்த முப்பத்திரெண்டு எழுத்து இருக்கிற ஸ்லோகத்தை சொன்னாலே பாகவதத்தை சொன்ன புண்ணியம்,

கிருஷ்ணாய வாசுதேவாய ஹரயே பரமாத்மனே |

ப்ரணதக்லேஷ நாசாய கோவிந்தாய நமோ நமஹ ||

ன்னு நமஸ்காரத்துக்கு அவ்வளோ பெருமை.

ராமாயணத்தை எடுத்துண்டா விபீஷணன் வந்து நமஸ்காரம் பண்ண உடனே, ராமர் கொடுத்த வாக்கு.

ஸக்ருதேவ பிரபன்னாய தவாஸ்மீதி ச யாசதே |

அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி எதத் வ்ரதம் மம ||

என்னை வந்து நமஸ்காரம் பண்ணா, நான் அவனுக்கு அபயம் கொடுக்கறேன் என்று பகவான் ராமர் கொடுத்த வாக்கு. இது அந்த ராமாயணத்தோட சாரமாக சரணாகதியை சொல்றா.

அருணகிரி நாதர் பண்ண எல்லாத்துலேயும், திருவகுப்பு ரொம்ப ஒசத்தி, அதுல சீர்பாத வகுப்பு ரொம்ப ஒசத்தி, அந்த சீர்பாத வகுப்புல நடுநாயகமா,

முருக சரவண மகளிர் அறுவர் முலை நுகரும்

அறுமுக குமர சரணம் என அருள் பாடி ஆடி மிக

மொழி குழற அழுது தொழுது உருகுமவர் விழி அருவி

முழுகுவதும் வருக என அறை கூவி ஆளுவதும்

அந்த குமர சரணம், ன்னு சரணாகதி பண்றவாளை, ‘வருகவென அறைகூவி ஆளுவதும்’, அவளை வான்னு கூப்பிட்டு, ஆட்கொள்வார் முருகப் பெருமான், ன்னு சொல்றார். அப்படி அருணகிரி நாதரோட எல்லா புஸ்தகங்களின் சாரம்-

ன்னு பார்த்தா. இந்த முருகப் பெருமானோட பாதங்கள்ல சரணாகதி பண்றதுதான் ன்னு தோண்றது.

நம்ம பெரியவா பக்தியா இருந்தா

‘அபரா கருணாஸிந்தும் ஞானதம் சாந்த ரூபிணம் |

ஸ்ரீ சந்திரசேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம் ||

ன்னு ஒரு ஸ்லோகம் இருக்கு. அதைச் சொல்லி நமஸ்காரம் பண்ணலாம். அப்படி பகவானை நமஸ்காரம் பண்ணி அவனை சேர்ந்தவனா ஆகறதுக்கு, ஒவ்வொரு நாளும் முயற்சி பண்ணனும், என்னிக்காவது ஒரு நாள், இந்த உடம்பை வெச்சிண்டு பண்ற நமஸ்காரம், அது கூட வாக்கும் சேர்ந்துக்கும், கூட மனசும் சேர்ந்துக்கும். அப்போ, அந்த பாகவனோட அந்த கருணையும் அதுல சேர்ந்து, அந்த சரணாகதியை அவர் ஏற்று நமக்கு அருள் பண்ணுவார், அதுக்கப்பறம்

जयानन्दभूमञ्जयापारधामञ्जयामोघकीर्ते जयानन्दमूर्ते ।

जयानन्दसिन्धो जयाशेषबन्धो जय त्वं सदा मुक्तिदानेशसूनो ॥ ३२॥

ஜயாநந்த பூமன் ஜயாபார தாமன்

ஜயாமோக கீர்த்தே ஜயாநந்த மூர்த்தே |

ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷபந்தோ

ஜயத்வம் ஸதாமுக்திதானேசஸூனோ ||

ன்னு இது கடைசி பாட்டு, அப்பறம் பலஸ்ருதி, அப்படி நாம பகவானை ஆனந்தமா பாடிண்டு, இருக்கிற ப்ராரப்த காலத்தை கழிச்சிட்டு போயிடலாம். அப்படி இந்த நமஸ்காரத்தோட பெருமை.

வெற்றி வேல் முருகனுக்கு ...ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பத்து இரண்டாவது ஸ்லோகம் – வெற்றி வேல் முருகனுக்கு, ஹர ஹரோ ஹர

ஸுப்ரமண்ய புஜங்கத்துல முப்பத்திரெண்டாவது ஸ்லோகம்,

जयानन्दभूमञ्जयापारधामञ्जयामोघकीर्ते जयानन्दमूर्ते ।

जयानन्दसिन्धो जयाशेषबन्धो जय त्वं सदा मुक्तिदानेशसूनो ॥ ३२॥

ஜயாநந்த பூமன் ஜயாபார தாமன்

ஜயாமோக கீர்த்தே ஜயாநந்த மூர்த்தே |

ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷபந்தோ

ஜயத்வம் ஸதாமுக்திதானேசஸூனோ ||

அப்படி முருகப்பெருமானுடைய திருச்செந்தூர் க்ஷேத்ரத்தை தெரிஞ்சுண்டு, அங்க வந்து, ஒவ்வொரு சன்னதிலேயும் போய் நமஸ்காரம் பண்ணி, அந்த ஸ்வாமியோட சன்னிதியில் வந்து, பாதாதிகேசம் வர்ணனை பண்ணி, ஸ்வாமியை நம்ம கண் முன்னாடி கொண்டு வந்து, அவருடைய லீலா விநோதங்கள் எல்லாம் சொல்லிட்டு, நாமங்களை சொல்லி அவரை ஸ்தோத்ரம் பண்ணி, அப்பறம் சில பிரார்த்தனைகளை எல்லாம் வைச்சார். அதுக்கப்பறம் நீ தான் எனக்கு தந்தை தாய், நான் உன் குழந்தை. நான் உன்னை நமஸ்காரம்

பண்றேன், என்னோட அபராதங்கள் எல்லாம் மன்னிச்சு என்னை ஏத்துக்கோ ன்னு சொன்னார். அப்பறம் நமஸ்காரம், நமஸ்காரம் ன்னு பலமுறை வணங்கி தன்னுடைய சரணாகதியை தெரிவிச்சிண்டார்.

அந்த சரணாகதி பகவான் ஏத்துண்டார் அப்படீங்கறது உத்தம பக்தர்களுக்கு புரியறது, 'ந மே பக்த ப்ரணஷ்யதி' – என்னுடைய பக்தன் ஒரு நாளும் குறைவு பட மாட்டான். அவனுடைய எல்லா யோக க்ஷேமத்தையும் நான் பார்த்துகிறேன் ன்னு பகவான் சொன்ன வார்த்தை, நமக்கெல்லாம் புஸ்தகத்துல இருக்கு. அவாளுக்கு அனுபவமா இருக்கு. அதனால அவாளோட சந்தோஷத்தை தெரிவிக்கறா. அதுக்கு அப்புறம் என்ன காரியம்னா, பண்றதுக்கு ஒரே காரியம் தான். அந்த பகவானோட குணங்களை பேசறது. பீஷ்மாச்சார்யாள் கடைசியா கிருஷ்ண பகவானை பார்த்துண்டே முக்தி அடையறத்துக்கு முன்னாடி என்ன பண்ணினார்ன்னா, அவ்வளவு நீண்ட ஆச்சர்யமான வாழ்க்கையோட முடிவுல, விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொன்னார்.

அந்த மாதிரி இந்த ஸ்தோத்திரத்தோட முடிவுல, 'ஜயாநந்த பூமன்' ஸ்லோகம். சந்தோஷத்தை வெளிப்படுத்துற மாதிரி இந்த ஸ்லோகம் இருக்குன்னு நான் ஏன் சொல்றேன்னா, ஆனந்தம்ங்கற வார்த்தையையே பல தடவை உபயோகப் படுத்தறார், ஆனந்தத்தின் வடிவமாக விளங்கவும் முருகப்பெருமானே. உனக்கு வெற்றி, உனக்கு மங்களம். ஜயாபார தாமன் – தாமம்னா ஒளின்னு அர்த்தம், அபாரமான ஒளியே பரஞ்சோதியே, நீ வெற்றியோடு விளங்கட்டும். உலகத்துல அமோகமான கீர்த்தி படைத்தவனே, உனக்கு வெற்றி, ஆனந்த மூர்த்தியே உனக்கு வெற்றி, ஆனந்தக் கடலே, 'ஆனந்தஸிந்தோ' உனக்கு வெற்றி, 'அசேஷபந்தோ' – உலகத்துல எல்லாருக்கும் நீ தான் பந்து, நான் புரிஞ்சிண்டு இருக்கேன், இன்னும் எல்லாரும் புரிஞ்சிக்கல. ஆனால் எல்லாருக்கும் நீ தான் பந்து, உனக்கு வெற்றி. ஈசஸூனோ – அந்த பரமேஷ்வரனுடைய குழந்தையே உனக்கு மங்களம். முக்திதான – முக்தியை அளிப்பவனே உனக்கு மங்களம் ன்னு சொல்றார்.

இந்த ஸ்லோகத்தை சொன்னா நமக்கும் உலகத்துல எல்லா கார்யங்களையும் மங்களங்களும் வெற்றியும் ஏற்படும். இதே மாதிரி மூகபஞ்சசதியில,

ஜய ஜய ஜகதம்ப சிவே ஜய ஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரிஸுதே |

ஜய ஜய மஹேசதயிதே ஜய ஜய சித்ககனகௌமுதீதாரே ||

ன்னு ஒரு ஸ்லோகம் வரும். ஸ்வாமிகள் ஒரு முக்கியமான கார்யம் ஆத்துல கல்யாணம், அந்த மாதிரி இருந்தா 'ஜயதி கிருஷ்ண:' ன்னு சொல்லிண்டே எல்லா ஏற்பாடும் செய்யுங்கோ, நல்லபடியா முடியும் ன்னு சொல்லுவார். அந்த மாதிரி அந்த ஜய சப்தத்துக்கு அவ்ளோ power, அந்த பகவானோட வெற்றியை நாம பாடினா, நமக்கு வெற்றி கிடைக்கும். இந்த ஸ்லோகம் இதோட இந்த ஸ்தோத்ர பூர்த்தி, நாளைக்கு இதோட பலஸ்ருதி சொல்றார். அதை நாளைக்கு பாப்போம்.

வெற்றி வேல் முருகனுக்கு ஹர ஹரோ ஹரா.

மஹாபெரியவா ஒரு தடவை, வெற்றி வேல் முருகனுக்கு! ஹரோ ஹரா! என்று சொன்னதை, ஸ்வாமிகள் பார்த்துட்டு சொன்னார் "நான் அந்த மாதிரி பெரியவா excited-அ emotional-அ சொன்னதை பார்த்ததே கிடையாது. வெற்றி வேல் முருகனுக்கு! ஹரோ ஹரா! ன்னு ஒரு நாள் ரொம்ப வாட்டி பெரியவா சொல்லிண்டே இருந்தா. ரொம்ப ஆச்சர்யமா சந்தோஷமா இருந்தது" ன்னு சொன்னார், அந்த மாதிரி நாமளும் வெற்றி வேல் முருகனுக்கு! ஹரோ ஹரா! ன்னு பாடுவோம்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

ஸுப்ரமண்ய புஜங்கம் – முப்பத்து மூன்றாவது ஸ்லோகம் – தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்



எங்கள் அப்பா 50 வருடங்கள் பூஜித்த முருகப் பெருமான்

கடந்த முப்பத்திரெண்டு நாட்களாக ஸுப்ரமண்ய புஜங்கத்துல தினமும் ஒரு ஸ்லோகத்தை எடுத்துண்டு அதோட அர்த்தத்தை சிந்தனை பண்ணி சந்தோஷப் பட்டுண்டு இருந்தோம். இன்னிக்கு கடைசி ஸ்லோகம், முப்பத்தி மூணாவது ஸ்லோகம், இந்த பலஸ்ருதி ஸ்லோகம். அதை படிக்கறதுக்கு முன்னாடி sense

of gratitude ன்னு சொல்றாளே, நம்மை பகவான் இந்த அளவுல வெச்சுருக்கான் அப்படீங்கிற திருப்தியும் அதனால ஒரு நன்றி உணர்ச்சியும் இருந்தாலே நமக்கு, மேலும் மேலும் அனுக்ரஹமும் க்ஷேமமும் ஏற்படறது. ஸ்தோத்ரங்களோட purpose-ஏ அதுதான். நாம எதுக்கு பகவானை ஸ்தோத்ரம் பண்ணணும்? பகவானுக்கு நைவேத்தியம் பண்ணணும்னா, அவருக்கு சாப்பட்றதுக்கு கொடுக்க போறது இல்லை, எனக்கு சாப்படறதுக்கு இன்னிக்கு நீ இந்த அன்னத்தை கொடுத்தியே, இன்னிக்கி இந்த பழங்களை கொடுத்தியே, ன்னு அவர் முன்னாடி படைச்சு நமஸ்காரம் பண்ணி, அந்த நன்றியோட அதை அவருடய ஆசீர்வாதமா ஏத்துக்கறதுங்கறது தான் நைவேத்தியம். பகவானை ஸ்தோத்ரம் பண்றதுன்னா, அந்த நன்றி உணர்ச்சியால வர்ற வார்த்தைதான் ஸ்தோத்ரம்ங்கறது. அப்பேற்பட்ட ஸுப்ரமண்ய புஜங்கம், எவ்வளவு ஒரு ஆச்சர்யமான ஒரு ஸ்தோத்ரம். எனக்கே கொஞ்சம் ஆழ்ந்து படிச்ச போது, நான் நிறைய தெரிச்சிண்டேன். அந்த நன்றியோடு இந்த முப்பத்தி மூணாவது ஸ்லோகத்தை சொல்லி பூர்த்தி பண்றேன்.

भुजङ्गाख्यवृत्तेन कॢप्तं स्तवं यः

पठेद्भक्तियुक्तो गुहं सम्प्रणम्य ।

सपुत्रंकलत्रं धनं दीर्घमायु-

र्लभेत्स्कन्दसायुज्यमन्ते नरः सः ॥ ३३॥

புஜங்காக்யவ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம் ய:

படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய |

ஸபுத்ரம் களத்ரம் தனம் தீர்கமாயுர்

லபேத் ஸ்கந்தஸாயுஜ்யமந்தே நரஸ்ஸ: ||

'ஆக்யா' னா பேர்-னு ன்னு அர்த்தம், 'புஜங்காக்ய' -புஜங்கம் என்ற பெயரைக் கொண்ட, வ்ருத்தத்தில் அமைந்து இருக்கும், 'வ்ருத்தேன க்லுப்தம்' – வ்ருத்தத்தில் அமைந்து இருக்கும், 'ஸ்தவம்' – இந்த ஸ்தோத்ரம், 'ய: படேத்' – யவன் ஒருவன் இதை 'பக்தியுக்த:' பக்தியோடு கூட படிக்கிறானோ, 'குஹம் ஸம்ப்ரணம்ய' – முருகப் பெருமானை வணங்கி இந்த ஸ்தோத்ரத்தை, இந்த

ஸுப்ரமண்ய புஜங்கதை எவன் ஒருவன் படிக்கிறானோ, 'ஸம்ப்ரணம்ய' – அப்படீங்கற வார்த்தை இருக்கறதுனால, நமஸ்காரம் பண்ணி, ஒவ்வொரு ஸ்லோகத்துக்கும் நமஸ்காரம் பண்ணி, இதை பாராயணம் பண்றதுன்னு ஒரு முறை இருக்குன்னு சொல்லுவா பெரியவா. அவன் 'ஸபுத்ரம் களத்ரம்', அவன் பிள்ளைகளோடும், மனைவியோடும் 'தனம்' –செல்வத்தோடும் 'தீர்க்கம் ஆயுஹு' – நீண்ட ஆயுசோடும் 'லபேத்' – இவை எல்லாவற்றையும் அடைந்து, 'அந்தே' முடிவில் 'ஸ: நரஹ' – அந்த மனிதன், 'ஸ்கந்தஸாயுஜ்யம்' அடைவான். அவன் முருகப் பெருமானுடைய சாயுஜ்ய பதவியையும் அடைவான், ன்னு ஒரு ஸ்லோகம்.



இந்த ஸ்லோகத்துல சொல்லி இருக்கறது சத்யம் அப்படீங்கறது, என் கண் முன்னாடி நான் எங்க அப்பாவை பார்த்து இருக்கேன். எங்க அப்பா எண்பது வருஷங்கள் வாழ்ந்தார். அவருக்கு நல்ல health இருந்தது. தீர்க்காயுசா, கடைசி வரைக்கும் நன்னா திருப்தியா சாப்டுண்டு, வ்யாதிகள் எல்லாம் ரொம்ப அவரை தொல்லை பண்ணல, கடைசி ஒரு வருஷத்துல கொஞ்சம் கொஞ்சம் ஸ்ரமங்கள் இருந்தது. ஆனா அதுவரைக்கும் அவரால தன் கார்யங்கள் எல்லாம் தானே பண்ண முடிஞ்சுது. புத்தி ரொம்ப தெளிவா இருந்துது. எல்லார் கிட்டேயும் அளவற்ற அன்போடு, கருணையோடு இருந்தார்.

எங்க அப்பா பேர் சுந்தரேச சர்மா, சுந்தரம்-ன்னு கூப்பிடுவா. அவர் தினமும் காத்தால சிவ பஞ்சாயதன பூஜை பண்ணுவார். ஒரு ரெண்டு மணி நேரம் நிதானமா சிவ பூஜை பண்ணுவார். சாயங்காலத்துல திருப்புகழ் பாராயணங்கள் பண்ணுவார். திருவல்லிகேணில முருகன் திருவருட் சங்கம், ன்னு ஒரு சங்கம். அதோட founder member எங்க அப்பா. அறுபத்தியெட்டு வருஷங்களா இருக்கு. அந்த சங்கத்துல வாரா வாரம் ஒரு பஜனையாவது ஏற்பாடு பண்ணுவா. விடாமல் அந்த திருப்புகழ் பஜனைல போய் கலந்துப்பார். திருப்புகழ்ல ரொம்ப அவருக்கு இஷ்டம். திருநெல்வேலியில பிறந்தவர், அதனால திருச்செந்தூர் குலதெய்வம். அடிக்கடி திருச்செந்தூருக்கு போயிருக்கோம். அவருக்கு இந்த ஸ்லோகத்துல சொன்ன மாதிரி, மனைவி, குழந்தைகள், பணம், அந்தகாலத்துல பணம்னா, மனுஷா bank-ல லக்ஷம், கோடி சேர்த்தா தான் பணம்னு நினைக்கல. ‘அடியவர் இச்சையில் யவை உற்றன அவை தருவித்தருள் பெருமாளே’ ன்னு அருணகிரி நாதர் பாடறார். அந்த மாதிரி பையன் college-ல சேரணுமா அதுக்கு பணம் இருந்ததா சரி. குழந்தைக்கு கல்யாணமா, அதுக்கு அப்போ பணம் கையில வந்து சேர்ந்துதுன்னா, ‘ஆஹா முருகா!’ ன்னு தான் அவா பணத்தை நினைச்சாளே தவிர, நிறைய சேர்த்து வெச்சுண்டாத் தான் பணம்னு நினைக்கல. அப்படி எங்க அப்பா பணக்காரரா இருந்தார். கொஞ்சம் கொஞ்சம் நாங்க எல்லாமும் வேலைக்கு போய் சேர்ந்து பணம் கொடுத்த பின்ன, நிறைய தான தர்மங்கள் பண்ணார். அந்த மாதிரி பணம், இல்லாத போதே பரோபகாரம் பண்ணுவார், கொஞ்சம் கையில பணம் வந்த போது தாராளமா, நல்ல கார்யங்கள் பண்ணினார். நிறைய வைதிகாளுக்கும் கோவில்களுக்கும் குடுப்பார். ஏழைகளுக்கும் கொடுப்பார். அன்னதானம் பண்றதுல அவருக்கு ரொம்ப ஆசை. நிறைய ஆத்துலயே கூப்பிட்டு சாப்பாடு போடறதும் பண்ணுவார். கோவில்ல அன்னதானதுக்கும் கொடுப்பார். அப்படி தனம், தீர்க்காயுசு எல்லாம் இருந்தது. முடிவுல அவர் அன்னிக்கு சாயங்காலம் சித்தி அடைந்தார்ன்னா, கார்த்தால என் கிட்ட

‘மாகத்தை முட்டி வரும் நெடும் கூற்றன் வந்தால் – என்முன்னே

தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்’

ன்னு சொன்னார். அன்னிக்கு ஹாஸ்பிட்டல்ல இருந்த போது, பக்கத்து ரூம்ல bedஐ சாய்க்கலாம் ன்னு சொல்லி பக்கத்து Room க்கு மாத்தினா. அந்த ரூம்ல படுத்துண்டு இருந்த போது, அவர் கண்ணுக்கு முன்னாடி, ஒரு நூறு வருஷ பழைய ஒரு அறுமுக ஸ்வாமி படம், எதிர்ல அருணகிரிநாதர் நின்னு கை கூப்பிண்டு இருக்கற மாதிரி, பின்னாடி பார்வதி பரமேஸ்வரா, அந்த படத்தப் பாத்துண்டே இருந்தார். ‘தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்’ என்கிற வார்த்தை சொன்னார். அப்படி அவர் ஸ்கந்த சாயுஜ்யம் அடைந்தார்ங்கறதை நேராகப் பார்த்தோம்.



இதுல என்னனா ‘குஹம் ஸம்ப்ரணம்ய’ – மிகவும் வணக்கத்தோடு இந்த ஸ்தோத்திரத்தை பண்ணுபவன் ன்னு வருது. இந்த மாதிரி பூஜைகள் பண்றவா, முருக பக்தியோடு இருக்கிறவா இருக்கா. ஆனா ஸ்வாமிகள் சொல்லுவார் ‘முருக பக்தி பண்ணினா எப்படி இருக்கணுமோ அப்படி உங்க அப்பா இருக்கார். நீ அவரைப் பாத்துக்கோ’ என்பார். அதாவது, ஸ்வாமிகள் பெரிய மஹானாக, ஞான வைராக்கியத்தோட, உலக பாசங்கள் எல்லாம் விட்டு இருந்தார். எங்க அப்பா பேரன்,பேத்திகளைக் கொஞ்சிண்டு அவருக்கு கிடைச்ச வரங்களெல்லாம் அனுபவிச்சிண்டு இருந்தார். நான் இப்படி புரிஞ்சிண்டேன். ‘என் அளவுக்கு நீ ஞான வைராக்கியம் அடையல்லைன்னாலும், உங்க அப்பா வாழ்க்கையை அனுபவிக்கும் போது, மனசை முருகர் கிட்டயே வைச்சுண்டு இருக்கார். அதைத் தவிர அவருக்கு ஆத்ம குணங்கள் இருக்கு. இதெல்லாம் பாத்துண்டு, இந்த ஜன்மத்துல, இந்த அளவுக்கு நீ வந்தாலே, உனக்கு ரொம்ப ஒரு பெரிய பாக்கியம்’ ன்னு சொல்றார்ன்னு நான் புரிஞ்சுண்டேன்.

எங்க அப்பாவோட ஆத்ம குணங்கள் எல்லாம், ரொம்ப ஆச்சரியம். அவர் நித்யம் அனுஷ்டானங்கள், பூஜை எல்லாம் பண்ணினார், திருப்புகழ் பாராயணம் பண்ணினார். அதுக்கும் மேல ஆகார நியமம். வெங்காயம், பூண்டு சாப்பிட மாட்டார். ஹோட்டல்ல சாப்பிட மாட்டார். ரொம்ப ‘நன்னா’ சாப்பிடுவார். திருப்தியா சாப்பிடுவார். என்ன என்ன சமைக்கலாம்ன்னு plan போட்டு கறிகாய் வாங்கிட்டு வந்து அம்மா சமைத்து, டேஸ்ட்டா இருக்குன்னு சொல்லி சாப்பிடுவார். ஆனா அநாசார வஸ்துக்களைச் சேர்க்க மாட்டார்.

கவர்ன்மென்ட்ல வேலை பார்த்தார். ஒரு பைசா லஞ்சம் வாங்கினது கிடையாது. ஆனா அவருக்கு பரபரப்பே கிடையாது. எந்த ப்ரமோஷனோ. ட்ரான்ஸ்பரோ வேண்டாம்ன்னு சொல்லி அந்த க்ளர்க் வேலைல சேர்ந்து க்ளர்க் வேலையிலேயே ரிட்டயர் ஆனார். ஆனா எல்லார்கிட்டயும் நல்ல பேர். சத்யம். பொய்யே பேச மாட்டார். பொறாமையே தெரியாது.

அதிகம் பேசவே மாட்டார். ரொம்ப மௌனி. முனிவர் மாதிரி தான் அவர். நான் பிறந்து எனக்கு நாற்பத்தெட்டு வயசுக்குள்ள என் கிட்டயே ஒரு பத்து வார்த்தைகள்தான் பேசி இருப்பார்ன்னு தோணும். அவ்வளவு கொஞ்சமா பேசுவார். ஆனா பேசினா ரொம்ப இனிமையாப் பேசுவார். ஒருத்தரை புண் படுத்த மாட்டார். ஒருத்தர் மேல குத்தம் சொல்ல மாட்டார். குற்றங்களை பார்க்கவே மாட்டார். எப்படித் தான் இப்படி இருக்காரோன்னு ஆச்சரியமா

இருக்கும். நாம ஒரு நாள் காத்தாலே இருந்து சாயங்காலம் வரை ‘என்னடா பேசினோம்’ ன்னு யோசிச்சு கணக்கு எடுத்து பார்த்தா, நூத்துக்கு தொண்ணூறு மத்தவா மேல குத்தம் சொல்வதா இருக்கு. மத்த பத்து sentence வந்து எதோ factஐ சொல்வதாக இருக்கே தவிர, மத்தவாள பாராட்டி encourage பண்ணி இனிமையா பேசிறதுங்கறது, ரொம்ப பெரிய ஒரு முயற்சியா இருக்கு. ஆனா எங்கப்பாவுக்கு அது இயல்பா வந்தது. எல்லார் கிட்டயும் ஒரு நல்லதைப் பார்த்து, அதை எடுத்துச் சொல்லி, அவாள encourage பண்ணுவார். அதை அவா life time புடிச்சிண்டு follow பண்ணுவா, பாத்துருக்கேன்.

ரொம்ப எளிமையான வாழ்க்கை. அவர் வேஷ்டி தான் கட்டிண்டு இருந்தார். life முழுக்க pant போட்டது கிடையாது. வேஷ்டி, அங்கவஸ்திரம். ஆபிஸ் போகும் போது கொஞ்ச நாள் சட்டை போட்டு இருந்தார். ரிட்டயர் ஆன பின்ன, கடைசி வரைக்கும் இருபது வருஷம் சட்டையே போடல. இருக்கிற இடமும் ரொம்ப சிம்பிளான இடத்துல தான் இருப்பார். அவருடைய தேவைகள் ரொம்ப கம்மி. அதிகமான பொருள் சேர்க்க மாட்டார். Life முழுக்க அவர் சினிமா பார்த்தது கிடையாது. கெட்ட பழக்கங்கள், சீட் ஆடறதோ, புகையிலை போடறதோ, அதெல்லாம் ஒண்ணுமே கிடையாது. சாத்விகம்னா அவ்வளவு சாத்விகமா இருந்தார்.

தான் ஆச்சாரமா இருப்பார். மத்தவாளை, ‘இங்க நிக்கிறயே,அங்கே நடக்கறயே, இதை தொட்டயே.. கை அலம்பு’ ன்னு பேசவே மாட்டார். அவர் கிட்ட வந்து சொல்லுவா,’நீங்க ஷஷ்டி பூஜை பண்ணும் போது இவாள்ளாம் வர்றா’ ன்னு. அதுக்கு அவர் சொல்லுவார்,’எனக்கு புஷ்பம் இருக்கு. முருகன் இருக்கான். நான் குளிச்சிட்டு வந்து பூஜை பண்றேன். எல்லாரையும் திருத்தறதுக்கு எனக்கு நேரம் இல்லையப்பா’ ன்னு சொல்லிடுவார். யாராவது ரொம்ப ஆச்சாரமா இருக்கிறவா வந்தா, ‘உனக்கு முடிஞ்சா பழகு. இதெல்லாம் பகுளந்தான். நீ பாத்துக்கோ’ ன்னுடுவார். அப்படி அவர், தன் கண்ல ‘முருகன், புஷ்பம், அர்ச்சனை’ ன்னு பண்ணிண்டுருந்தார். ரொம்ப தயாள குணம், ரொம்ப பரோபகாரம். இதே நேரத்துல, நான் சொன்ன மாதிரி, பேரன் பேத்திகளோட கொஞ்சிண்டு ரொம்ப சொலப்யமாவும் இருந்தார். ரொம்ப humble ஆ, ரொம்ப

சிம்பிளாவும் இருந்தார். அப்படி சிவன் சார் புக்ல சொல்ற மாதிரி ‘ஸாது’ குணங்கள் எல்லாம் அவர் கிட்ட இருந்தது.

இந்த காலத்து SSLC தான் அவர் படிச்சார். அதோட short hand கத்துண்டு வேலைக்கு போய்ட்டதால அதுலயே ரிட்டயர்ட் ஆனார். ஆனால் இந்த காலத்து படிப்பு படிக்கலயே தவிர, வேதம் படிச்சிண்டே வந்தார். நாலு காண்டம் வேதம் படிச்சார். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சூர்ய நமஸ்காரம் பண்ணுவார். ஒவ்வொரு ஏகாதசிக்கும் பவமானம் படிப்பார். துவாதசிக்கு ‘தைத்ரீய உபநிஷத்’ பாராயணம் பண்ணுவார். நித்யம் ருத்ரம், சமகம், ஸூக்தாதிகள் சொல்லி பூஜை பண்ணுவார். அப்படி எது உண்மையான படிப்போ அதைப் படிச்சிருந்தார். எழுபத்தி அஞ்சு வயசுல ‘கந்தர் அலங்காரம்’ முழுக்க மனப்பாடம் பண்ணார். ‘புத்தியை வாங்கி நின் பதாம்புயத்தில் புகட்டி அன்பால் முக்தியை வாங்க அறிகின்றிலேன்’ ன்னு சொல்ற மாதிரி, புத்தியை பகவான் எதுக்குக் குடுத்திருக்கான்னா,பகவானோட காரியத்தப் பண்ணி முக்தியை வாங்கறதுக்குத் தான் குடுத்திருக்கான். அது அவர் பண்ணிணார். இந்த உலகப் படிப்பை அவர் ரொம்ப சட்டை பண்ணல. அப்படி ஒரு பெரியவர். முருக பக்தியினால இந்த பல ஸ்ருதியில சொன்ன எல்லாம் அவருக்கு கிடைச்சுது அப்படிங்கறத நான் நினைச்சுப் பாக்கறேன். அவருக்குப் பிள்ளையா பிறந்தது ஒரு பாக்யம். அவர்,

களத்ரம் ஸுதா பந்துவர்க பசுர்வா

நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா: |

யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்

ஸ்மரந்தஸ்ச்ச தே ஸந்து ஸர்வே குமார ||

‘என்னைச் சேர்ந்தவா எல்லாரும் முருக பக்தியோட இருக்கணும்’ ன்னு வேண்டிண்டு இருந்தார். அதுனால தான் இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தை படிச்சு புரிஞ்சுண்டு, அதை எடுத்து பேசறதுக்கு ஒரு வாய்ப்பு கிடைச்சுது. முப்பத்துமூணு நாட்கள் நடந்த இந்த உபன்யாசத்தை அவருக்கு செலுத்திய அஞ்சலியாக நினைக்கிறேன்.

வெற்றி வேல் முருகனுக்கு …ஹர ஹரோ ஹரா

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते

शक्तिपाणे मयूराधिरूढ ।

पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन्

प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥